Bulletin of the Tamil Department No. 4

# TAMIL KAVYAS:

## THEIR NATURE AND HISTORY

BY

Vidvan K. V. JAGANNATHAN

*(Research Student, Tamil Dept. 1934-1937)*

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

UNIVERSITY OF MADRAS

1940

*Price Rs. 1-4-*

Printed at the
'TAMIL KADAL' PRESS
180, Govindappa Naick Street,
G. T., MADRAS.

Bulletin of the Tamil Department No. 4

GENERAL EDITOR

Rao Sahib S. VAIYAPURI PILLAI, B.A., B.L.,

*(Reader in Tamil)*

# TAMIL KAVYAS:

## THEIR NATURE AND HISTORY

# தமிழ்க் காப்பியங்கள்:

## இலக்கணமும் இலக்கியமும்

சென்னை ஸர்வகலாசாலைத்
தமிழ் ஆராய்ச்சித் துறை மாணவர் (1934-1937)
வித்வான் கி. வா. ஜகந்நாதன்
எழுதியது

சென்னை ஸர்வகலாசாலை
சென்னை
1940

விலை ரூபா. 1-4-0

# முகவுரை

'தமிழ்க்காப்பியங்கள்' என்னும் இப்புத்தகம் சென்னை ஸர்வ கலாசாலையில் நான் தமிழ் ஆராய்ச்சி மாணுக்கனுக இருந்தகாலத்தில் செய்த ஆராய்ச்சியின் விளைவாக எழுதப்பட்டது. காப்பிய இலக்கணங்களின் வரலாற்றையே தலைமையாகக்கொண்டது இது.

காப்பியங்களின் அமைப்புமுறை, கவிச்சுவை ஆகிய விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து எழுதப்பெற்ற புத்தகங்கள் பல பிறமொழிகளில் உள்ளன. அத்தகைய விமரிசங்கள் தமிழில் அதிகமாக இல்லை. தமிழ் மொழியின் சரித்திரம் மிக விரிந்தது; நீண்டகால அளவை உடையது. அதை ஆராய்ந்து தக்கவண்ணம் விரித்து எழுத ஆராய்ச்சியாளர் முற்படுவரேல் அச்சரிதம் பெரும்பயனுடையதாக விளங்குமென்பதில் தடையில்லை.

தமிழ்இலக்கிய வரலாறு, இலக்கணங்களின் வளர்ச்சிமுறையாகியவை தனித்தனியே ஆராய்ச்சி செய்தற்குரியன. தமிழ் இலக்கணம் நாளடைவில் விரிந்துகொண்டே வருகின்றது. அதன் பிரிவுகளில் ஒவ்வொன்றும் தனித்தனியே பல கிளைகளை உடையதாக விரிகின்றது. தொல்காப்பியத்தில் உள்ள எழுத்திலக்கணத்திலும் சொல்லிலக்கணத்திலும் காணப்படாத பல புதிய அமைப்புக்கள் பின்பு புகுந்தன; பல பழைய மரபுகள் வழக்கொழிந்தன. அவ்வாறே பொருள், யாப்பு என்பவற்றிலும் உண்டான வேறுபாடுகள் பல. அணியிலக்கணம் தனிப்பிரிவாகத் தொல்காப்பியத்திற் சொல்லப்படவில்லை. வடமொழியின் தொடர்பு மிகுதியான பின்னரே அதனைத் தனியே வரையறை செய்யும் நூல்கள் தமிழில் எழுந்தன. ஆயினும் பழங்காலத்து இலக்கணங்களில் அணியிலக்கணத் தொடர்புடைய செய்திகள் பல உண்டு. அவை நாளடைவில் பெருகி உருப்பெற்றன.

தமிழ் இலக்கணப் பிரிவுகளில் ஒவ்வொன்றன் வரலாறும் தனித்தனியே ஆராய்ந்து அமைத்தற்குரியதேயாகும். அவற்றுள் அணியிலக்கண வரலாற்றை ஒருவாறு எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழணி யிலக்கணம் வடமொழிச் சார்புபற்றியே வளர்ந்ததாதலின் அம்மொழியிலுள்ள அணியிலக்கண வரலாற்றை நன்கு தெளிந்த பின்னரே இதனை உணர்தல்கூடும். இத்துறையில் ஸ்ரீமான் டாக்டர் சுசீலகுமார தே எழுதிய 'வடமொழி அணியிலக்கண வரலாறு' என்னும் புத்தகமும் ஸ்ரீமான் சங்கரன் எழுதிய 'ஸம்ஸ்கிருத இலக்கிய விமரிசத்தில் சில துறைகள்' என்னும் ஆராய்ச்சியும் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

6465a

இதில் உள்ள முதல் ஐந்து பிரிவுகளும் காப்பிய இலக்கண வரலாறாகும். மேலுள்ள இரண்டு பிரிவுகளும் காப்பிய இலக்கியங்களைப்பற்றியனவாம். காப்பிய இலக்கியங்களைப்பற்றிய பகுதிகளில் பிற்காலத்துப் புராண காப்பியங்களைப்பற்றித் தனித்தனியே உரைக்கப்புகுந்தால் அது மிக விரியுமாதலால் அத்துறையில் நான் புகவில்லை. தமிழ்க்காப்பிய இலக்கியங்களின் விமரிசமாக இப்பகுதியை நான் எழுதவில்லை. இலக்கியங்கள் வரவர வளர்ந்துவந்த முறையையும் அவற்றின் சுவை வேறுபாடுகளையும் ஆராய்ந்து எழுதப் புகுந்தால் அதுவே மிகப் பெரிய புத்தகமாகிவிடும். ஆதலின் காப்பிய இலக்கியங்களில் பொதுவாக எத்தகைய வளர்ச்சி நாளடைவில் உண்டாயிற்று என்பதைமாத்திரம் ஒருவாறு காட்ட முயன்றுள்ளேன். ஐம்பெருங் காப்பியங்களென்னும் வழக்குப் பிற்காலத்ததென்பதும் அத்தொகுப்பு எவ்வகை ஒப்புமையையும் கருதி அமைக்கப்பட்டதன்றென்பதும் என் கருத்து. இதனை இப்பகுதியில் கூறியுள்ளேன்.

'இந்த ஆராய்ச்சி நிரம்பியதன்று; பல குறைகளையுடையது; பல வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமளிப்பது' என்பதை நான் உணர்கின்றேன்; ஆயினும் இத்துறையில் முதல் முறையாக இதனைச் செய்யத் துணிந்தேனென்ற கருத்தே அந்த உணர்ச்சிக்கிடையே ஓர் ஆறுதலை அளிக்கின்றது.

'கடல்கண் டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்.'

என்னுடைய ஆராய்ச்சிக்கு நெறிவகுத்துதவி அவ்வப்போது நான் நூல்களை ஆராய்ந்து செய்திகளைத் தொகுக்கவேண்டிய முறையை உரைத்து நான் எழுதுவனவற்றைக் கண்காணித்துத் திருத்தங்கள் செய்து இக்கட்டுரை நிறைவேறியகாலத்துப் பார்வையிட்டு ஆசீர்வதித்தருளிய என் ஆசிரியப் பெருமானாகிய பிரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கு நன்றிகூற என் உள்ளம் முந்துகின்றது; ஆயினும் உள்ளத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. இக்கட்டுரையில் அறிவின் கூறுபாடு எங்கெங்கே இருப்பதாகத் தோற்றுகிறதோ அவை யாவும் அவர்கள் அளித்த பிச்சை; ஏனையவை என் பேதைமையின் விளைவுகள்.

என்னை மூன்று வருஷங்கள் ஆராய்ச்சி மாணாக்கனாக இருக்கச் செய்து இந்த கட்டுரை எழுதுவதற்கு வாய்ப்பையளித்து, இது நிறைவேறியவுடன் புத்தகமாக வெளியிட்ட சென்னை ஸர்வகலாசாலையாரது பேருதவியை என்றும் மறவேன். அவர்களுக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

திருவல்லிக்கேணி,
29—4—40.

கி. வா. ஜகந்நாதன்

# முன்னுரை

ஸ்ரீ வித்வான் கி. வா. ஜகந்நாதையர், சென்னை ஸர்வ கலாசாலையில் ஆராய்ச்சி மாணவராக இருந்த காலத்தில் அவருடைய வேலையைக் கவனிக்கும் பொறுப்பு எனக்கு இருந்தது. அவருடைய பேருழைப்பின் பயனாக வெளிவந்துள்ள **'தமிழ்க் காப்பியங்கள்'** என்னும் இக் கட்டுரை பல துறைகளில் சிறப்புற்று விளங்குகின்றது.

அவ்வப்போது விஷயங்களைக் கேட்டுவந்த எனக்கு எல்லாவற்றையும் ஒருங்கே இவ்வடிவத்திற் பார்க்கையில் மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது.

வடமொழி யலங்கார சாஸ்திரங்களிலும் ஆங்கில நூல்களிலும் உள்ள அருமையான விஷயங்கள் இந்நூலில் ஆங்காங்கு ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், யாப்பருங்கலவிருத்தி, வீரசோழியம் முதலிய அனேக நூல்களில் காப்பிய இலக்கணங்களைப்பற்றி ஒவ்வோரிடத்தில் காணப்படும் விஷயங்களை யெல்லாம் நன்காராய்ந்து ஒழுங்குபடுத்தி இக் கட்டுரையில் தொகுத்தமைத்திருப்பது புலவர் பெருமக்களால் மிகவும் பாராட்டத்தக்கது.

இப்புத்தகத்தைப் படித்துப் பார்த்தால், ஜகந்நாதையருடைய பலதிறப்பட்ட பேராற்றலும், நூலாராய்ச்சி வன்மையும், தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் அவருக்குள்ள பரந்த ஞானமும், ஞாபக சக்தியும் நன்கு புலனாகும்.

இவ்வகையான நூல் இதுவரை தமிழில் ஒருவராலும் எழுதப்படாததால் தமிழ்நூல் பயில்வோருக்கும் ஆராய்ச்சியாளர்க்கும் இது பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

இங்ஙனம்

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை,
சென்னை 4—4—'40.

வே. சாமிநாதையர்

# உள்ளுறை

## I காப்பியங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| இலக்கியமும் காலப்போக்கும் | .... | 1 |
| இலக்கியங்கள் எவை? | .... | 1 |
| நூல்களின் வகை | .... | 3 |
| காப்பியத்தின் சிறப்பு | .... | 4 |


## II காப்பிய இலக்கண நூல்கள்


| | | |
|---|---|---|
| பொருட்டொடர்நிலை | .... | 6 |
| நூல்வகை | .... | 6 |
| இலக்கணம் | .... | 6 |
| பாட்டு | .... | 7 |
| காப்பிய இலக்கண நூல்கள் | .... | 7 |
| காப்பிய இயல்பை உணர்த்தும் நூல்கள் | .... | 8 |
| 1. நாடகத்தமிழ் இலக்கணம் | .... | 9 |
| அகத்தியம் | .... | 10 |
| பிற நாடகத் தமிழ்நூல்கள் | .... | 11 |
| 2. யாப்பிலக்கண நூல்கள் | .... | 13 |
| தொல்காப்பியம் | .... | 14 |
| மாபுராணம் — பூதபுராணம் | .... | 15 |
| அவிநயம் | .... | 16 |
| பல்காப்பியம் | .... | 16 |
| பல்காயம் | .... | 17 |
| காக்கை பாடினியம் | .... | 17 |
| சிறுகாக்கை பாடினிம் | .... | 19 |
| கையனார் யாப்பு | .... | 19 |
| நத்தத்தர் யாப்பு | .... | 19 |
| சங்க யாப்பு | .... | 20 |
| மயேச்சுரர் யாப்பு | .... | 20 |
| வேறு சில பழைய நூல்கள் | .... | 20 |
| யாப்பருங்கலமும் காரிகையும் | .... | 21 |

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| வீரசோழியம் | .... | 22 |
| இலக்கண விளக்கம் | .... | 22 |
| தமிழ்நெறி விளக்கம் | .... | 23 |
| தொன்னூல் | .... | 23 |
| முத்துவீரியம் | .... | 23 |
| 3. அணியிலக்கணங்கள் | .... | 23 |
| அணியியல் | .... | 24 |
| வேறோர் அணியிலக்கணம் | .... | 26 |
| தண்டியலங்காரம் | .... | 27 |
| மாறனலங்காரம் | .... | 31 |
| குவலயானந்தம் | .... | 32 |
| தண்டியலங்கார ஸாரம் | .... | 32 |
| அணியிலக்கணமல்லாத அலங்காரங்கள் | .... | 32 |
| 4. பாட்டியல் நூல்கள் | .... | 33 |
| பன்னிரு பாட்டியலும் பாட்டியல் மரபும் | .... | 33 |
| வச்சணந்தி மாலை | .... | 35 |
| வேறு சில பாட்டியல்கள் | .... | 35 |
| சிதம்பரப் பாட்டியல் | .... | 35 |
| பிரபந்தத் திரட்டு | .... | 36 |
| பிரபந்த தீபம் | .... | 36 |
| இலக்கண விளக்கப் பாட்டியல் | .... | 36 |
| பிற நூல்கள் | .... | 37 |


## III காப்பிய இலக்கணங்கள் (1)


| | | |
|---|---|---|
| காப்பியப் பெயர்கள் | .... | 38 |
| காப்பியவகை | .... | 39 |
| தோல்காப்பியம் | .... | 41 |
| வனப்பிலக்கணமும் காப்பிய வகையும் | .... | 41 |
| அம்மை | .... | 42 |
| அழகு | .... | 42 |
| தொன்மை | .... | 43 |
| தோல் | .... | 44 |
| காப்பியமும் கதையும் | .... | 45 |
| விருந்து | .... | 46 |
| இயைபு | .... | 47 |
| புலன் | .... | 48 |

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| இழைபு | .... | 49 |
| வண்ணங்கள் | .... | 49 |
| குற்றமும் குணமும் | .... | 52 |
| உவமையளவையும் அணியும் | .... | 54 |
| ஏனையுவமம் | .... | 55 |
| உவமைகளின் வகை | .... | 56 |
| உவம உருபுகளின் வரையறை | .... | 57 |
| உள்ளுறை யுவமம் | .... | 58 |
| மெய்ப்பாட்டியல் | .... | 60 |
| நாடகச் சுவை | .... | 61 |
| தொல்காப்பியத்தில் உள்ள மெய்ப்பாடுகள் | .... | 64 |
| சுவைகளின் தொகை | .... | 64 |
| உவகைச் சுவை | .... | 66 |
| சிருங்கார வகை | .... | 66 |

## IV காப்பிய இலக்கணங்கள் (2)

| | | |
|---|---|---|
| நாடக இலக்கணங்கள் | .... | 68 |
| நாடகக் கவிஞன் | .... | 68 |
| கூத்து வகை | .... | 69 |
| நாடக உறுப்புக்கள் | .... | 69 |
| நாற்பொரு ளமைதி | .... | 69 |
| கதையமைப்பு | .... | 70 |
| விருத்தி | .... | 70 |
| கதைத் தொடர்ச்சி | .... | 71 |
| சுவை | .... | 72 |
| நாடகச் சாதி | .... | 72 |
| குறிப்பு முதலியன | .... | 73 |
| சேதம் | .... | 73 |
| வீரசோழியத்திற் கண்ட செய்திகள் | .... | 74 |
| நாடகச் சிறப்பு | .... | 74 |
| இயற்றமிழ்க் காப்பிய இலக்கணங்கள் | .... | 75 |
| காப்பியத்தின் பகுப்பு | .... | 75 |
| பெருங்காப்பிய இலக்கண ஆராய்ச்சி | .... | 78 |
| கடவுள் வாழ்த்து | .... | 78 |
| உறுப்புக்களின் பெயர்கள் | .... | 80 |
| நாற்பொருள் | .... | 83 |
| வருணனைகள் | .... | 83 |

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| ஐந்திணை வளம் | .... | 86 |
| பொழுது வருணனை | .... | 87 |
| இருசுடர்த் தோற்றமும் மறைவும் | .... | 88 |
| இன்பச் செய்திகள் | .... | 88 |
| அரசியல் | .... | 89 |
| சுவையும் பாவமும் | .... | 91 |
| காப்பியத்தின் யாப்பு | .... | 91 |
| பன்னிருபாட்டியல் கூறுவன | .... | 93 |
| மாறனலங்காரம் கூறுவன | .... | 94 |
| வச்சணந்திமாலையும் சிதம்பரப் பாட்டியலும் | .... | 94 |
| காப்பியமும் இலக்கண வரம்பும் | .... | 94 |


## V காப்பிய அலங்காரங்கள்


| | | |
|---|---|---|
| அலங்கார வகை | .... | 98 |
| நெறி | .... | 98 |
| பாகங்கள் | .... | 100 |
| குண அணிகள் | .... | 102 |
| பொருளணிகள் | .... | 103 |
| பாவிகம் | .... | 106 |
| சொல்லணிகள் | .... | 108 |


## VI காப்பிய இலக்கியங்கள்


| | | |
|---|---|---|
| சங்ககாலத்துக் காப்பியங்கள் | .... | 111 |
| தொல்காப்பியத்துக்கு முன்னர் உண்டானவை | .... | 112 |
| ஐம்பெருங் காப்பியங்களென்னும் வழக்கு | .... | 113 |
| பருப்பதம் | .... | 117 |
| கலியாணன் கதை | .... | 118 |
| புராண சாகரம் | .... | 118 |
| இராமாயணம் | .... | 118 |
| பாரதம் | .... | 119 |
| தகடூர் யாத்திரை | .... | 119 |
| சிலப்பதிகாரம் | .... | 120 |
| மணிமேகலை | .... | 121 |
| பௌத்த காவியங்கள் | .... | 122 |
| விம்பசார கதை | .... | 123 |
| குண்டலகேசி | .... | 123 |

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| ஜைனசமயக் காப்பியங்கள் | .... | 126 |
| பெருங்கதை | .... | 127 |
| சிந்தாமணி | .... | 127 |
| வளையாபதி | .... | 128 |
| சூளாமணி | .... | 130 |
| பிற காப்பியங்கள் | .... | 131 |
| இதிஹாச புராணங்கள் | .... | 132 |
| பாரத வெண்பா | .... | 132 |
| அருணிலை விசாகர் பாரதம் | .... | 132 |
| வில்லிபுத்தூரார் பாரதம் | .... | 133 |
| பிற பாரதங்கள் | .... | 133 |
| இராமாயணங்கள் | .... | 133 |
| புராணங்கள் | .... | 135 |
| தல புராணங்கள் | .... | 136 |
| சரித்திரக் காப்பியங்கள் | .... | 136 |
| மொழிபெயர்ப்புக்கள் | .... | 137 |
| புதுக் காப்பியங்கள் | .... | 137 |

## VII பழமையும் புதுமையும்

| | | |
|---|---|---|
| பண்டைக்காலக் காப்பியங்களின் வளர்ச்சி முறை | | 138 |
| சிலப்பதிகாரக் காப்பியச் சிறப்பு | .... | 139 |
| மணிமேகலையின் அமைப்பு | .... | 139 |
| பெருங்கதைச் சோலை | .... | 140 |
| சிந்தாமணியில் தொடங்கிய விருத்த யாப்பு | .... | 141 |
| சமய உணர்ச்சியும் காப்பிய கதியும் | .... | 141 |
| வருங்காலக் காப்பியம் | .... | 142 |
| துணையாக இருந்த நூல்கள் | .... | 145 |
| சிறப்புப்பெய ரகராதி | .... | 149 |

# I

# காப்பியங்கள்

## இலக்கியமும் காலப்போக்கும்

ஒரு பாஷையிலுள்ள நூல்கள் அவ்வக் காலத்தின் நாகரிகத்திற் கேற்ப மாறுபடுகின்றன. ஒரு நூல் இயற்றப்படுங்காலத்தில் எவை எவை நாகரிகமாகவும் அறிஞர்களுடைய செயல்களாகவும் வியக்கத்தக்க செய்தி களாகவும் உணரப்பட்டனவோ அவற்றை அங்ஙனமே ஆசிரியர் தம் நூலில் புலப்படுத்தி யிருப்பார். பண்டைத் தமிழ் நூல்களில் அகமும் புறமுமாகிய வரையறைக்குட்பட்டு ஆயிரக் கணக்கான செய்யுட்கள் புல வர்களால் இயற்றப்பட்டன. அகத்துறைச் செய்யுட்கள் அளவின்றி யெழுந் தன. அக்காலத்தில் அவற்றிற்குச் சிறந்த மதிப்பு இருந்து வந்தது. பிற் காலத்தில் வந்த புலவர்கள் அத்தகைய செய்யுட்களைப் பாடவில்லை. அதன் பின்பு வடமொழியிலுள்ள நூற்றுக்கணக்கான புராணங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. தலங்களைப் பற்றிய ஆராய்ச்சியும் தலவழிபாடும் மலிந்திருந்த அக்காலத்துக் கவிஞர்களுக்கு அத்தகைய இலக்கிய சிருஷ் டியே ஊக்கத்தை உண்டாக்கியது.

இக்காலத்தில் ஆங்கில அறிவின் தொடர்பினால் இலக்கிய சிருஷ்டி வேறுபட்டிருக்கின்றது. ஆங்கிலமறிந்த தமிழ்ப் புலவர்கள் வொர்ட்ஸ் வொர்த்தினுடைய பாக்களை மொழி பெயர்ப்பதிலும், ஷெல்லியின் கவிகளைத் தழுவிச் செய்யுள் இயற்றுவதிலும் முனைந்து நிற்கின்றனர். இத்தகைய வேறுபாடுகள் நிகழ்வதற்குக் காரணமென்ன ? காலதேசவர்த்த மானங்களுக்கு ஏற்ப மனிதனுடைய நடை உடை பாவனைகள் மாறி வருகின்றன ; அவற்றிற் கேற்ப அவன் நோக்கங்களும் விருப்பமும் மாறுகின்றன; அவனால் இயற்றப்படும் நூல்களும் வேற்றுமை அடை கின்றன.

## இலக்கியங்கள் எவை ?

நூல்கள் என்னும் பெயருக்குத் தகுதியான புத்தகங்கள் தக்க அறிவுச் செல்வம் உடையவராலேயே இயற்றப் படுகின்றன. பழைய கால முதற்கொண்டே நூல்கள் இயற்றுபவர்கள் பலவகையான சிறப்புக்களை யும் அறிவாற்றலையும் உடையவர்களாக இருந்தனர். யாவரும் நூலியற்ற

லென்பது இயலாத செயல். மனிதர்களுள்ளும் அறிவால் நிரம்பியவர் மிகச் சிறு தொகையினரே ஆவர்.

> " ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
> வார்த்தை பதினா யிரத்தொருவர் "

என்ற வெண்பா, புலவர்களின் அருமையை வெளியிடுகிறது. ஆகவே நூல்களும் அருமையாகவே இயற்றப்பட்டன. இக்காலத்தில் யாரும் புத்தகம் எழுதும் வழக்கத்தைப் பெறுகின்றனர். அவர்கள் இயற்றியவை அனைத்தும் நூல்களாகா; மனிதனுடைய அறிவிற்குப் பயன்படுவன எவையோ அவையே நூல்கள். 'மாந்தர் மனக்கோட்டம் தீர்க்கும் நூல்' என்பது அறியத்தக்கது.

இக்காலத்தில் ஆயிரக்கணக்காக வெளியிடப்படும் சமாசாரப் பத்திரிகைகளும் மாதப் பத்திரிகைகள் முதலியனவும் நாவல்களும் மனிதர்கள் படிக்கும் வழக்கத்தை மிகுதிப் படுத்தி யிருக்கின்றன. ஆயினும் அவர்களுடைய மனத்தில் ஒன்றும் தங்குவதில்லை; எல்லாம் அடுத்த கணத்தில் மறந்துபோய் விடுகின்றன. நம்முடைய கிராமத்து ஜனங்கள் திண்ணையிற் கூடித் தினமும் வம்பளக்கிறார்கள். அவர்களுடைய பேச்சுக்களில் எவ்வளவோ பழமைகளும் புதுமைகளும் வெளிவருகின்றன. எவ்வளவோ உவமைகள், பழமொழிகள், உதாரணங்கள் மலர்கின்றன. எவ்வளவோ கதைகள் கிளைக்கின்றன. அவ்வளவும் அந்தத் திண்ணையிலிருந்து இறங்கிய மறுகணத்தில் மறக்கப்படுகின்றன. இந்நிலையிலேதான் இக்காலத்திலுள்ள படிப்புப் பயிற்சி உள்ளது. மனிதன் படிப்பனவற்றுள் சக்கையைத்தான் அதிகமாக ஏற்றுக்கொள்ளுகிறான்.

இவ்வளவு மிகுதியாக உள்ள புத்தக வெளியீடுகளில் மனிதன் உள்ளத்துள் ஊடுருவிச் சென்று பதிவன சிலவாகத்தான் இருக்கும். அவையே இலக்கியங்கள். இலக்கியத்திற்குத்தான் மனிதனுடைய உள்ளுணர்ச்சியைக் கிண்டிவிடும் ஆற்றல் உண்டு. இலக்கியந்தான் மனித வாழ்வுக்கு அரண்கோலிப் பாதுகாக்கும். மனிதவாழ்வுக்குரிய சட்டங்களாகிய வேதங்களும், பைபிளும், கொரானும் உயிர்க்குறுதி பயக்கும் பேரிலக்கியங்களாகப் பேரறிஞர்களால் கொண்டாடப்படுகின்றன வல்லவா? எந்தப் புத்தகத்தைப் படித்தபிறகு மீண்டும் பலமுறை படிக்கும் வேட்கை உண்டாகின்றதோ அதுதான் இலக்கியம்; எந்தப் புத்தகம் படிக்குந்தோறும் பன்முறை முன்பே படித்ததாக இருந்தாலும் புதுப்புதுச் சுவையை உண்டாக்குகிறதோ அதுதான் இலக்கியம்.

> " ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருந்தமிழ் "
>
> " தேருந் தொறுமினி தாந்தமிழ் "

என்று கூறிப் போந்த புலவர்களுடைய உள்ளக் கருத்தைச் சிந்தித்துப்

பார்த்தால் இவ்வுண்மை புலப்படும். தோறுந் தோறும் இன்பந் தருவதுதான் தமிழ்; அந்நூலே தமிழிலக்கியம்.

"நவிறொறும் நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு" (வள்ளுவர்)

என்ற வாய்மொழியே நமக்கு உரையாணி. பயிலுந்தொறும் நயம் பயவர் தாயின் அது நூலன்றென்று தெள்ளத் தெளியக் கூறிவிடலாம். அதற்கு வள்ளுவரே ஆதாரம்.

ஒரு முறை படித்த மாத்திரத்தில் இன்பந்தரும் புத்தகங்கள் சில உண்டு. அவற்றை மீண்டும் படிப்பதென்றால் அருவருப்பு உண்டாகும். இத்தகையவை இலக்கியங்களாகா. ஒரு முறை படித்த மாத்திரத்திலேயே பொருள் புலப்படாமல், நுணுகி ஆராய ஆராயச் சுவை பயக்கும் நூல்கள் உள்ளன. அவை இலக்கியங்களே. அவை 'நுனியிற் கரும்பு தின்றற்றே' என்பது போல வரவர இனிப்பவை யாகும். பண்புடையாளர் தொடர்புக்கு இலக்கணமாகிய அது நூற்றொடர்புக்கும் இலக்கணமேயன்றோ? முதன்முறை தொடங்கினதுமுதல் ஆயுளுள்ளவரையிற் படித்தாலும் வெறுப்பில்லாச் சுவை பயப்பன இலக்கியங்களில் உயர்தரமானவை. மனிதனுடைய அறிவுக்கு அவைதாம் அமுதம். அவற்றைக் கற்றலின் இனிமையை உணர்ந்தே திருவள்ளுவதேவர்,

"...... ...... என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்று இரங்கி யிருக்கவேண்டும்.

எத்தனை தடவை படித்தபோதும் விளங்காதவை உளவேல் அவை புத்தகங்களே அல்ல. அவற்றை நூல் வரிசையிற் சேர்ப்பதிற் பயனில்லை. 'புல்லிதழ் பூவுக்கு முண்டு' என்றது போல் இலக்கியச் சோலையிலே அவற்றை முண்மரமாகவும் புல்லிதழாகவும் கருதவேண்டுமேயன்றி வேறன்று.

## நூல்களின் வகை

நூல்களை வகைப்படுத்தவந்த ஸாஹித்ய மீமாம்ஸை யென்ற வடமொழி நூலாசிரியர் அவற்றை வாங்மயமென்னும் பெயராற் குறிக்கின்றனர். அவ்வாங்மயம் சாஸ்திரமென்றும், காவியமென்றும் இருவகைப்படும். சாஸ்திரத்தை மேல்நாட்டார் 'ஸயன்ஸ்' (Science) என்றும், காவியத்தை 'லிடரேசர்' (Literature) என்றும் கூறுகின்றனர். தமிழில் இவற்றை முறையே நூல் என்றும் பா என்றும் வழங்கினரெனத் தெரிகின்றது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் பயக்கும் நூல்கள் அப்பொருள்களை வெளியிடும் முறைகளுள் வேறுபாடுகள்

உண்டு. அறத்திற்குரிய விதிகளையும் விலக்குகளையும் நேரே நீதியாகப் புலப்படுத்தும் நூல்கள் உள்ளன. அவற்றையே உவமைமுகத்தாலும் உதாரண முகத்தாலும் புலப்படுத்தும் நூல்களும் உள்ளன. கதைப்போக்கிலே அந் நீதிகளைக் குறிப்பிற் புலப்படுத்திச் செல்லும் நூல்களும் இருக்கின்றன. எல்லா நூல்களும் உயர்ந்த கருத்துக்களை வெளியிடுவனவாயினும் கற்போருக்கு அக்கருத்துக்களை எளிய முறையில் இன்பம் பயப்பச் சொல்லும் நூல்கள் ஒருவகை. காப்பியங்கள் இவ்வகையைச் சேர்ந்தனவே.

வடமொழியாளர் வேதத்தைப் பிரபு ஸம்மிதையெனவும், ஸ்மிருதிகளை ஸுஹ்றுத்ஸம்மிதை யெனவும்,[1] புராண இதிகாசங்களைச் சிசுஸம்மிதை யெனவும், காவியங்களைக் காந்தாஸம்மிதை[2] யெனவும் கூறுவர்.

அவ்வகையில் காவியமானது மனைவியின் உரைக்கு இணையாகச் சொல்லப்பட்டுள்ளது. கணவனுக்குத் தனது கருத்தை யறிவிக்கப் புகும் மனைவி, மிக இனிய சொற்களால் மனங்கவரும் முறையில் மெல்ல அறிவித்தலைப் போல, காவியங்கள் உயர்ந்த நீதிகளைச் சொற்பொருள் நயங்களோடு மனம் கவரும் வண்ணம் புலப்படுத்துகின்றன. பிரபுஸம்மிதையாகிய வேதம் கட்டளையிடுகிறது; ஸுஹ்றுத் ஸம்மிதையாகிய ஸ்மிருதி அறவுரை கூறுகின்றது; காவியம் இன்பமொழியில் கருத்துக்களைச் சொல்கின்றது; சிசுஸம்மிதையாகிய புராணம் அறியாதாருக்குக் கட்டுரை கூறுகின்றது.

## காப்பியத்தின் சிறப்பு

இவற்றுள் இன்பந்தோன்ற நிற்பது மனைவியின் உரைக்கு ஒப்பாகிய காவியமேயாகும். காவியமே மொழியின் சிறப்பையும் அணிகளையும் புலப்படுத்துகின்றது. காவிய இலக்கணங் கூறும் நூலை வேதாங்கங்களோடு ஒப்ப மதிப்பர் வடநூலார். காவிய மீமாம்ஸையென்னும் வடநூலில், ராஜசேகரமகாகவி என்பவர் அதனை ஏழாவது அங்கமாக வகுத்துள்ளார். அன்றியும் கலைமகள் இறைவனை நோக்கி நெடுந்தவம் புரிந்து காவ்யபுருஷனைப் பெற்றனளென்றும், அவனுடைய மனைவி 'ஸாஹித்ய வித்தை' என்றும் உருவக வகையால் ஒரு வரலாற்றை அமைக்கின்றார். அவ்வரலாற்றால் ஏனைய நூல்கள் யாவற்றிலும் காவியமே சிறந்ததென்னும் அவரது கொள்கை அறியப்படும்.

வனப்பினைப்பற்றிக் கூறவந்த பேராசிரியர், 'அதனாற் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப்பென்னும் பெயர்ப்பகுதி வகையான் ஏற்பதென்பது' என்று கூறுகின்றார். வனப்பு—அழகு. இதனால் ஒரு மொழியின் வனப்புக்களை அம் மொழியிலுள்ள

[1] மித்ர ஸம்மிதை யென்று கூறுவதும் உண்டு—ஏகாவளி.

[2] Mammata : Kavya Prakasika, cited in History of Sanskrit Poetics, Vol. II, pp. 50, 51.

தொடர்நிலைச் செய்யுட்களாகிய காப்பியங்களினால் அறிந்துகொள்ளலா மென்பதும், காப்பியங்களைப்போல வனப்பினைப் புலப்படுத்துவதில் தலைமை யுடையன பிறவல்ல என்பதும் கொள்ளக்கிடக்கின்றன.

அறிவாலமைந்த புலவர்கள் இயற்றும் நூல்கள் யாவற்றினும் தலைசிறந்தது காப்பியமேயாகும். அது நடையினாலும் பொருளினாலும் இன்பத்தையும், பயனால் உறுதிப்பொருளையும் பயப்பதுபோலப் பிறவகை நூல்கள் பயப்பதில்லை.

'கவியாற் பாடப்படுவனவெல்லாம் காப்பியமல்லவோ, பொருட் டொடர்நிலையைக் காப்பியமென்றதென்னை எனின், சேற்றுட்டோன்றுவன வெல்லாம் பங்கயமெனப் பெயர்பெறுமாயினும் அப்பெயர் தாமரை யொன்றன்மேற்றே யாயினவாறுபோல இப்பெயர் பொருட்டொடர் நிலைக்கேயாயிற்று' என்று தண்டியலங்கார உரையாசிரியர் கூறுகின்றார். கவியாற் செய்யப்படுவனவற்றுள் பொருட்டொடர்நிலைக்கே சிறப்பாகக் காப்பியமென்னும் பெயர்வந்த காரணத்தைத் தெரிவிக்கும் இவர் கூற்றால் கவியாற் செய்யப்படுவனவாகிய பலவற்றுள்ளும் காப்பியமே,

"மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை" (மணி. iv : 7-9)

போன்று ஒரு தனியோங்கி நிற்பதென்பது புலனாகின்றதன்றோ?

# II

# காப்பிய இலக்கண நூல்கள்

## பொருட்டொடர் நிலை

காப்பியமென்பது காவ்யமென்னும் ஆரியச்சொல் திரிந்த மொழி. கவியாற் செய்யப்படுவது காவியம். எனவே, பொதுவாகச் செய்யுளெல்லாம் காவியமென்றே கூறத்தகும்.[1] ஆயினும் தமிழ் வழக்காற்றில் பெரும்பாலும் பொருட்டொடர் நிலைக்கே அப்பெயர் வழங்குவதாயிற்று.

## நூல் வகை

தமிழ்ச் செய்யுளைத் தொல்காப்பியனார் ஏழுவகையாக்கினர். அவை முறையே (1) பாட்டு (2) உரை (3) நூல் (4) வாய்மொழி (5) பிசி (6) அங்கதம் (7) முதுசொல் என்பன.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கத முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்" (தொல். செய்யுள். 79.)

இவற்றுள் தலைமையுடையன முதலிற் கூறிய மூன்றுமாம்.

## இலக்கணம்

நூலென்பது இலக்கணம். இவ்வகையில் வடமொழியாளர் கூறும் சாஸ்திரமும், மேல்நாட்டார் கூறும் ஸயன்ஸும் அடங்கும். பழங் காலத்தில் நூலென்னும்[2] சொல் இலக்கணத்திற்கே வழங்கப்பட்டு வந்தது.

---

[1] 'காப்பியமாவது விழுமிய பொருள்கொண்டு விளங்கிய சொற்றொடையாம்.........செய்யுளெனினும் காப்பியமெனினும் ஒக்கும், செய்யுளென்னும் தொழிற்பெயர் கவியின் செய்கையாலாகிய பிரபந்தத்திற்காயிற்று. காவியம் என்னும் வடமொழிக்கும் இதுவே பொருள். இதனை யாப்பிற்கும் கட்டுரைக்கும் கொள்க.'

(தண்டியலங்காரஸாரம், ப. 3.)

[2] தொல். செய்யுள். 165—172.

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூறா மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின்" (தொல். மரபு. 93)

என்னும் சூத்திர உரையிற் பேராசிரியர், 'இது மேற் கூறப்பட்ட மரபு வழக்கிற்கேயன்றி இலக்கணஞ் செய்வார்க்கும் வேண்டுமெனவும் அவ் விலக்கணம் இனைப்பகுதித்தெனவும் கூறுகின்றது' எனக் கூறுமுகத்தால் நூலென்றது இலக்கண மென்பதைப் புலப்படுத்துகின்றார்.

மொழிக்கு இலக்கணம் கூறுவதன்றிப் பிறபொருள்களுக்கு இலக் கணம் கூறும் சாஸ்திரங்களும் இலக்கணமெனவும் நூலெனவும் படும்; 'மாணிக்க மணியினைச் செவ்வண்ணம் முதலாயின சில இலக்கணங் கூறிய நூல் கிடப்பக் கருவண்ண முதலாயினவும் அதற்கிலக்கணமென்று ஒருவன் எதிர் நூல் என்பதோர் நூல் பிற்காலத்துச் செய்யுமாயின் அஃது அதன் இலக்கணமெனப் படாதாகலா னென்பது' (தொல். மரபு. 93, பேர்.) என்னும் பேராசிரியர் உரைக்கண் மணியினது இலக்கணங்கூறும் சாஸ்திரத் தையும் நூலெனவே குறித்தலைக் காண்க. இலக்கணச் சூத்திர யாப்பை நூற்பா வென்று வழங்குவதும் இலக்கணம் நூலென்னும் பெயராற் குறிக்கப்படும் வழக்கத்தை உணர்த்தும்.

## பாட்டு

பாட்டென்பது காவியமென்றும் 'பொயட்ரி' (Poetry) யென்றும் பிறமொழிகளில் வழங்கப்படுகின்றது. பாவென்றும் தமிழில் வழங்கும்.

பாவினைத் தனிநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள், நாடகச் செய்யுள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவற்றை ஆங்கில மொழி யில் முறையே 'லிரிக்' (Lyric), 'எபிக்' (Epic), 'டிராமா' (Drama) என்று கூறும் பாகுபாட்டோடு ஒருவாறு ஒப்பிடலாம். வடமொழியிலுள்ள காவியப் பிரிவுகளையும் இம்மூவகையிலே அடக்கிவிடலாமென்பர்.[1]

## காப்பிய இலக்கண நூல்கள்

கவிஞரால் இயற்றப்படும் காவியத்துக்குரிய இலக்கணங்களைக் கூறும் நூல்கள் வடமொழியில் அளவிறந்தனவாக உள்ளன. அலங்கார சாஸ்திரங்கள் யாவும் காவியத்தினுடைய இலக்கணங்களைத் தெரிவிப்பனவே யாகும். ஆங்கில முதலிய மொழிகளில் கவிச்சுவையைப் பற்றியும் காவியங் களைப்பற்றியும் பேரறிஞர்கள் பலர் ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். பழங் காலத்திலே அரிஸ்டோட லென்னும் கிரேக்கப் பேரறிஞர் காவிய

1 P. V. Kane: History of Alamkara Literature, Introduction, p. CLVIII. 'The divisions of poetry': "As in modern works poetry is divided into Epic, Lyric, Dramatic so in Sanskrit works also it is divided."

கதியைப்பற்றிக் கூறும் நூலொன்றை இயற்றியிருக்கின்றனர். வடமொழியைத் தழுவி இலக்கணம் அமைத்துக்கொண்ட இந்திய நாட்டு மொழிகள் பலவற்றிலும் அணியிலக்கணங்களும் காவிய இலக்கணங்களும் உள்ளன.

தமிழில் மிகப் பழங்காலத்தில் செய்யுளிலக்கணத்தையும் காவிய இலக்கணத்தையும் தனியே வரையறுத்துரைக்கும் நூல் இல்லையென்றே தோற்றுகின்றது. ஆயினும் அக்காலத்திலெழுந்த இலக்கண நூல்களில் அங்கங்கே சிலபகுதிகள் காவியங்களின் இயல்பை வரையறுத்துக் கூறுகின்றன.

## காப்பிய இயல்பை உணர்த்தும் நூல்கள்

தலைச் சங்கத்தில் எண்ணிறந்த புலவர்கள் ஒன்றுகூடித் தமிழாராய்ந்தன ரென்றும், அவர்கள் பல இலக்கண இலக்கியங்களை இயற்றினரென்றும் நாம் அறிகின்றோம். முத்தமிழும் மிக விளங்கப்பெற்றுத் திகழ்ந்த அக்காலத்தில், விரிந்திருந்த இலக்கியப் பரப்புக்கேற்பப் பெரும் பிண்டமாக முத்தமிழின் இலக்கணங்களையும் தெரிவிக்கும் இலக்கணநூலொன்றை அகத்தியர் இயற்றியருளினார். அகத்தியமென அது வழங்கியது. முதற் சங்ககாலத்தினும் இடைச்சங்க காலத்தில் இலக்கியப்பரப்பு மிக விரிவடைந்திருக்கவேண்டும். அவ்விலக்கியங்கள் அனைத்திற்குமுரிய இலக்கணங்களை ஒரே நூலில் அமைப்பதென்பது அரிய செயலாயிற்று. அக்காலத்தில் ஒவ்வொரு தமிழுக்கும் தனித்தனியே இலக்கணங்கள் தோன்றின. இயற்றமிழுக்கு இலக்கணமாகத் தொல்காப்பியமும் இசை நாடகங்களுக்கு இலக்கணமாக வேறு சில நூல்களும் எழுந்தன. இங்ஙனம் இலக்கியங்கள் விரிய விரிய இலக்கணங்களும் புதுமையும் விரிவும் பெற்றன. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரத்துள் தமிழுக்குரிய ஐவகை இலக்கணங்களும் கூறப்பட்டன. பிற்காலத்தில் பொருள், யாப்பு, அணி யென்பவற்றிற்குத் தனித்தனியே இலக்கணங்கள் எழுந்தன; அவற்றுள்ளும் அகப்பொருள் புறப்பொருளெனவும், யாப்பு பாட்டியல் எனவும் ஒன்றற்கே சில பிரிவுகள் உண்டாயின. இவ்வளவும் இலக்கணங்கள் நாளடைவிற் பெருகி வருவதைக் காட்டுகின்றன.[1]

காப்பிய இலக்கணத்தோடு தொடர்புடைய தமிழிலக்கணப் பகுதிகளை நான்கு வகையாக்கலாம்.

1. நாடகத் தமிழிலக்கணம்.
2. யாப்பிலக்கணம்.

---

[1] தமிழ்நெறி விளக்கம், முகவுரை, ப. vi–vii.

3. அணியிலக்கணம்.

4. பாட்டியல்கள்.

இந்நால்வகை யிலக்கணங்களும் உள்ள நூல்கள் தமிழிலே பல வுள்ளன. அவற்றைக் கொண்டு கவியின் இயல்பையும் காப்பியத்தின் தன்மையையும் தமிழ்ப் புலவர்கள் வரையறுத்த முறையை உணர்ந்து கொள்ளலாம். இந்நால்வகை இலக்கணங்களையும் கூறும் நூல்களைப்பற்றி இனி ஆராய்வோம்.

## 1. நாடகத் தமிழ் இலக்கணம்

வடமொழியில் நாட்டியசாஸ்திரம் இயற்றிய பரதமுனிவர் அந் நூலில் நாடகத்திற்கு அங்கமாகிய அவிநயங்களுள் ஒன்றாகும் வாசிகாபிநய மென்பதைப்பற்றி விரித்துக் கூறுமிடத்துக் காப்பியங்களுக்கு அழகு செய் யும் அலங்காரங்களைப்பற்றிய இலக்கணங்களை அமைக்கின்றார். காப்பியத் துக்குரிய அலங்காரங்கள், பத்துக்குணங்கள், பத்துக்குற்றங்கள், 36 இலக் கணங்களாதியவற்றை அவர் எடுத்துரைக்கின்றார்.[1]

பாமஹரும் தண்டியாசிரியரும் காப்பியத்தின் வகைகளில் நாட கத்தையும் அமைக்கின்றனர். தமிழிலும் மணிமேகலையாசிரியர்

"நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" (xix : 80)

என்று நாடகத்தையும் காப்பியமாகக் கூறுதல் காண்க.

'இரண்டென்னுது இயலுமென்ற மிகையால் பத்துவகைப்பட்ட நாடகச்சாதியும், கோவையும் பொருட்டொடர் நிலைப்பாற் படுமெனக் கொள்க' (தண்டி. உரை) என்பதும் இதனை வலியுறுத்தும். நாடகத்தைத் திருசிய காவியமென்னும், பொருட்டொடர்நிலையைச் சிராவிய காவிய மென்றும் வடநூலார் வழங்குவர்.[2]

நாடகத்தில் இனிமையை உண்டாக்குவதற்குக் கருவிகளாகக் காப்பிய அலங்காரங்கள் பயன்படுகின்றன. இவற்றைப் பரதமுனிவர் 14-20-ஆம் அத்தியாயங்களில் விரித்துரைக்கின்றார்.

நாடக இலக்கியங்கள் ஒரு கதையினைக் கூறுவதாக இருக்கவேண் டும். அக்கதை பொருட்டொடர்நிலைச் செய்யுளேயாம்.

'நாடகம் - கதை தழுவிவரும் கூத்து' (சிலப். ப. 80)

---

[1] S. K. De: Studies in the History of Sanskrit Poetics, pt. II, p. 1.

[2] R. Shama Sastry : Introduction to the edn. of Kavyaprakasa of Mammata, p. ix.

இக்காரணங்களால் நாடக இலக்கணத்திலும் காப்பியத்துக்குரிய இலக்கணங்கள் கலந்திருத்தல் இயல்பேயாகும். நாடக இலக்கண நூல்களில் காப்பிய இலக்கணத்தை உரைக்கும் பகுதிகள் உண்டென்பதற்குப் பரத முனிவர் இயற்றிய வடமொழிநாடக நூலே சான்றாகும். அதனைப் போலவே தமிழிலும் நாடக இலக்கண நூல்களில் பொருட்டொடர் நிலைகளுக்குரிய இலக்கணங்கள் இருத்தல் வேண்டுமென்று கொள்ளுதல் பிழையன்று.

## அகத்தியம்

இப்பொழுது அறியப்படுவனவற்றுள் மிகப் பழமையானதும் தமிழின் வகைகளாகிய இயல், இசை, நாடகமென்னும் மூவகைக்கும் இலக்கணம் வகுப்பதுமாகிய நூல் அகத்தியமாகும். அது தண்டமிழ் முனிவரெனச் சிறப்பிக்கப்பெறும் அகத்தியரால் இயற்றப்பெற்றது. அது மூவகைத் தமிழுக்கும் இலக்கணங் கூறுதலின் பிண்டத்தை அடக்கிய பெரும்பிண்டமெனப்படும்.

'தொன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப வென்றதனாற் பிண்டத்தினையும் அடக்கி நிற்பது வேறு பிண்டமுளதெனக் கொள்க. அது முதனூலாகிய அகத்தியம்போலும். என்னை? அஃது இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின்.' (தொல். செய்யுள். 172, பேர்.) அந்நூல் மூன்று சங்கத்தார்களுக்கும் இலக்கணமாயமைந்து பல புலவர்களாலும் பெரிதும் போற்றப்பட்ட முதனூலாகவும் எண்ணப்பட்டுவந்தது.[1] அதன் சிறப்பு,

"வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்திய னென்னும்
அருந்தவ முனிவ னுக்கிய முதனூல்"

என்னும் பன்னிருபடலப் பாயிரச் சூத்திரத்தாலும், 'அகத்தியமே முற்காலத்து முதனூலென்பதூஉம் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம்' (தொல். மரபு. 94, பேர்.), 'தமிழ் நாட்டு வழக்கிற்கு முதனூலாகிய அகத்தியத்துள்' (தொல். மரபு. 107, பேர்.) என்பனவற்றாலும் விளங்கும்.

அவ்வகத்தியத்தில் நாடகத் தமிழிலக்கணம் கூறப்படும் இடத்திலன்றிச் செய்யுளிலக்கணம் கூறும் பகுதியிலும் காப்பியத்துக்குரிய இலக்

[1] மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் : சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப. 7.

கணங்கள் அமைந்திருத்தல் வேண்டும். அகத்தியத்துள் மிக விரிவாகச் செய்யுளிலக்கணம் கூறப்பட்டிருந்ததென்பது,

'செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்து கிடந்ததவை'
(தொல். மரபு. 95 பேர்.)

என்னும் பேராசிரியர் கூற்றால் வெளிப்படுகின்றது. இப்பொழுது அகத்தியம் கிடைத்தலின்மையின் காப்பியத்தின் இலக்கணங்களாக அதிற் கண்ட செய்திகளும் அறிதற்கு இயலாவாயின.

## பிறநாடகத் தமிழ் நூல்கள்

தனியே நாடகத் தமிழுக்கு இலக்கணம் வகுத்த நூல்கள் எண்ணிறந்தன தமிழிலே இருந்தன. நாடகத் தமிழ் வழக்கு இந்நாட்டில் அருகியமையின் அதற்குரிய இலக்கணங்களும் மறைந்தன. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் 'நாடகத் தமிழ் நூல்களாகிய பரதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியமென்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்' (உரைப்பாயிரம்) என இரங்கு முகத்தாற் சில நூற் பெயர்களை வெளியிடுகின்றார். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு உரை இயற்றுதற்குத் துணையாக இருந்த நாடகத் தமிழ் நூல்கள் பரத சேனாபதீயம் மதிவாணர் நாடகத் தமிழ் நூலென்பன. அவையும் இக்காலத்திற் கிடைத்தில.[1]

பெயரளவில் சிலப்பதிகார உரையினால் தெரிந்த நாடகத் தமிழ் நூல்கள் (1) பரதம் (2) முறுவல் (3) சயந்தம் (4) குணநூல் (5) செயிற்றியம் (6) பரதசேனாபதீயம் (7) மதிவாணர் நாடகத் தமிழ் நூலென்னும் ஏழுமாம்.

இவற்றுள் பரதமென்பது அடியார்க்கு நல்லார் காலத்தே கேள்வியளவாக நின்றதொரு பழைய நூலென்று தெரிகிறது. இது வடமொழியிலுள்ள பரத முனிவரது நாட்டிய சாத்திரத்தின் மொழிபெயர்ப்போ, அன்றித் தனித் தமிழ்நூலோ இன்னதென்று துணிந்து கூறுதற்கில்லை. வடமொழி நாட்டிய நூலின் மொழிபெயர்ப்பாயின் இத்தமிழ்நூல் வடமொழி நூலுக்குப் பிந்தியதென்று கொள்ளவேண்டும். பரத முனிவருடைய காலத்தைப்பற்றி அறிஞர் பலவாறு கூறுகின்றனர். கிறிஸ்து சகாப்த ஆரம்பமென்றும்,[2] கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி யென்றும்[3]

---

[1] சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப. 45.

[2] A. B. Keith : Sanskrit Drama, p. 81.

[3] A. Sankaran : Some aspects of literary criticism in Sanskrit, p. 10.

பலதிறப்பட்ட கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. தொல்காப்பியத்துக்குப் பிற்பட்டனவாகவே மேற்குறித்த காலங்கள் அமைகின்றன. அடியார்க்கு நல்லாரால் அகத்தியத்துக்கு முன்னர் வைத்துப் பேசப்படும் இத்தமிழ்நூல் தொல்காப்பியத்துக்கு முன்பு இயற்றப்பட்டதாகக் கோடலே ஏற்புடையதாகும்.

முறுவலென்பதும் அடியார்க்கு நல்லார் காலத்தே பெயர்க்கேள்வியளவில் நின்ற நூலென்று தெரிகின்றது.

சயந்தமென்பது அடியார்க்கு நல்லாரால் மேற்கோளாகக் காட்டப்படும் நூல்களுள் ஒன்று. இந்நூலிற் சில சூத்திரங்கள் அவர்காலத்தே வழங்கிவந்தன. இந்திரன் குமாரனாகிய சயந்தன் என்பவன் நாடகத்தோடு தொடர்புடைய வரலாறுடையவன். ஆதலின் அவன் பெயரால் இந்நூல் இயற்றப்பட்டது போலும். "அகத்தெழு சுவையா னகமெனப் படுமே" என்பதொரு சூத்திரம் இந்நூலில் உள்ளதாகத் தெரியவருகின்றது.

குணநூல் என்பதும் சயந்தத்தைப்போல எண்ணப்படுவது. நாடக உறுப்பாகிய அகச்சுவையைப் பற்றி விரிவாகக் கூறும் நூலென்று தோற்றுகிறது. "குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே" என்பது இந்நூற் சூத்திரங்களுள் ஒன்று.

செயிற்றியம் : இது செயிற்றியனாரென்னும் ஆசிரியரால் சூத்திரயாப்பில் இயற்றப்பட்டது. இதிலிருந்து சில சூத்திரங்களைச் சிலப்பதிகார அரும்பதவுரை ஆசிரியரும் அடியார்க்கு நல்லாரும் இளம்பூரணரும் எடுத்துக் காட்டுகின்றனர். பேராசிரியர் மெய்ப்பாட்டியல் உரையில் ஒரு சூத்திரத்தை மேற்கோள் காட்டினர்.

பரதசேனாபதீயம் : இந்நூல் ஆதிவாயிலா ரென்னும் ஆசிரியரால் வெண்பாவாற் செய்யப்பட்டது. சிலப்பதிகார உரை எழுதுவதற்கு அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் கொண்ட நூல்களுள் ஒன்று.[1]

மதிவாணர் நாடகத் தமிழ்நூல் : இது சூத்திரப் பாவாலும், வெண்பாவாலும் மதிவாணனாரென்னும் பாண்டிய ரொருவராற் செய்யப்பட்ட நாடகத் தமிழ் நூல். இதை அடியார்க்கு நல்லார், கடைச்சங்க மிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த, முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தியன்ற மதிவாணர்

[1] சிலப்பதிகாரம், அரும்பத முதலியவற்றின் அகராதி.

நாடகத் தமிழ்நூல்[1] என்று சிறப்பிப்பார். இதற்குக் கூத்த நூலென்னும் ஒரு பெயர் உண்டுபோலும்.[2]

சிலப்பதிகார உரையில் நாடகத் தமிழ்த் தொடர்புடைய செய்திகளில் நாடகத்திற்குரிய கதையைப் பற்றியும் அதனை அமைக்கும் முறையைப்பற்றியும் சில செய்திகள் கிடைக்கின்றன. அவை பின்னர் ஆராயப்படும். வீரசோழிய உரை, தொல்காப்பிய உரை, யாப்பருங்கல விருத்தியுரை என்பவற்றிலும் சில செய்திகள் காணப்படுகின்றன.

## 2. யாப்பிலக்கண நூல்கள்

நாடகத் தமிழ் இலக்கணத்திற் காப்பிய வரையறையோடு தொடர்புடைய செய்திகள் சொல்லப்படுதல் போல இசைத் தமிழ் இலக்கணத்தில் இல்லையென்றே தோற்றுகின்றது. இயற்றமிழிலக்கணப் பகுதிகளுள் பிற்காலத்தே வடமொழியைப் பின்பற்றியெழுந்த அணியிலக்கணங்களையன்றிப் பழங்கால இலக்கணங்களிலுள்ள பொருளதிகாரமும் யாப்பதிகாரமும் காப்பியத்தைப் பற்றிச் சில விடங்களில் ஆராய்கின்றன. சொல்லதிகாரத்துக் கூறப்படும் பொருள்கோள் வகைகளில் நிரனிறை, விற்பூட்டு முதலியனவும் பிற்காலத்தில் அலங்காரங்களாக வழங்கப்படுகின்றன. ஆதலின் அவற்றைப்பற்றிக் கூறும் பகுதிகளும் அணியிலக்கணத் தொடர்புடையனவேயாம். அகப் பொருளிற் கூறப்படும் பொருள் வகைகளும் புறப்பொருளில் விரித்துரைக்கப்படும் துறைகளும் காப்பியங்களுக்கு உபகாரப் படுவனவேயாம். இங்ஙனம் வடமொழியாளரால் காப்பிய இலக்கணம் கூறுவதாகத் தனியே நூலாக்கப்பட்ட அணியிலக்கணம் (Poetics) தமிழ் இலக்கணங்களுள் சொல், பொருள், யாப்பென்னும் மூன்றிலும் காணப்படும் சில பொருள்களின் தொகுதியெனவே கூறத்தகும். இக்கருத்தையே அணியிலக்கணமெனத் தனியே ஒன்று தமிழுக்கு வேண்டுவதன்று என்னும் கொள்கையை யுடைய பேராசிரியர் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் விளக்குகின்றார்.[3]

---

[1] சிலப்பதிகாரம், ப. 10.

[2] சிலப்பதிகாரம், ப. 155.

[3] 'இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையுஞ் சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கணி யென்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும் தாம் காட்டிய இலக்கணத்திற் சிதையா வழியு மென்பது.........அல்லதூஉம் பொருளதிகாரத்துட் பொருட் பகுதிகளெல்லாம் செய்யுட்கு அணியாகலான் அவை பாடலுட் பயின்றவை யெனப்பட்டன.

## தொல்காப்பியம்

செய்யுளின் இலக்கணத்தை உரைக்கும் தமிழ் நூல்கள் மிகப்பல. அகத்தியத்தின் செய்யுளிலக்கணப் பகுதி மிக விரிந்திருந்ததென்பது முன்னர்க் கூறப்பட்டது.

அகத்தியத்தின் பின்னரெழுந்த நூல்களுள் தலைமை பெற்றது தொல்காப்பியம். அகத்தியத்தின் வழிநூலாகவே அது கருதப்படுகின்றது. தொல்காப்பியத்தின் சிறந்த அமைப்பே பிற்காலத்தில் அகத்தியம் வழக்கொழிந்து வீழ்வதற்குரிய காரணமென்று கருதுவாரும் உளர்.[1]

தொல்காப்பியம் அகத்தியத்தின் பின்னர் உண்டாகிய நூல்களுள் தலைமை பெற்றதென்பது, 'அகத்தியர் வழித் தோன்றிய ஆசிரியரெல்லாருள்ளும் தொல்காப்பியனாரே தலைவரென்பது எல்லா ஆசிரியரும் கூறுப என்பது' (தொல். மரபு. 94, உரை) என்னும் பேராசிரியர் கூற்றாலும்,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த"

(புறப்பொருள் வெண்பாமாலை, சிறப்பு.)

என்பதன்கண், அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் தொல்காப்பியனாரை முதற்கண் வைத்துக் கூறும் முறையினாலும் விளங்கும்.

தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் முழுவதும் ஒருவகையிற் காப்பியத்துக்குரிய இலக்கணத்தைப் புலப்படுத்துவதேயாகும். அவ்வதிகாரத்திற் சிறப்பாக மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் என்பனவற்றிலுள்ள பல செய்திகள் காப்பியப் பொருள் வரையறை செய்யப் பெரிதும் பயன்படுவன. காப்பியச் சுவைகளோடு தொடர்புடைய செய்திகளை மெய்ப்பாட்டியலும், காப்பிய அலங்காரங்களோடு இயைபுடையவற்றை உவம இயலும், காப்பிய வகை காப்பிய நடை ஆதியவற்றைச் செய்யுளியலில் வனப்பு வண்ணமென்னும் செய்யுளுறுப்புக்களைக் கூறும் பகுதிகளும்

என்றதனான் அவை யெல்லாந் தொகுத்து அணியெனக் கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில் கூற்று மென்பது.

'இனி அவற்றைப் பொருளுறுப் பென்பதல்லது அணியென்பவாயிற் சாத்தனையும் சாத்தனால் அணியப்பட்ட முடியும் கொடியும் முதலாயவற்றையும் வேறுகண்டாற்போல அவ்வணியுஞ் செய்யுளின் வேறாகல் வேண்டுமென்பது.

'இனிச் செய்யுட்கு அணி செய்யும் பொருட்படை யெல்லாம் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக் கூறலாமென்பது.' (தொல். உவம. 37, உரை.)

[1] ராவ்ஸாஹெப் மு. இராகவையங்கார் : தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 2.

வருக்கின்றன. அவை பின்னர் ஆராயப்படும். மரபியலிலும் இன்ன பொருளை இன்ன சொல்லாற் கூறுகவென்னும் தொல்லோர் ஆட்சி வரையறையும் ஒருவாறு காப்பியத்துக்குப் பயன்படுவதேயாகும். அன்றியும் நூற்குக் கிளந்த ஈரைங்குற்றமும்[1] அவற்றை எதிர்மறுத்து உணரும் திறத்தனவாகிய குணங்களும்[2] காப்பியங்களுக்கும் ஏற்புடையனவேயாம். வடமொழி[3] தென்மொழி யிலக்கணங்களுள் குணமுங் குற்றமும் தனித் தனியே ஆராயப்படுகின்றன.

நுதலியதறிதல் முதலியனவாகக் கூறப்படும் முப்பத்திரண்டுவகை உத்திகளும்[4] காப்பிய அலங்காரங்களைப் போன்றனவேயாம்.

> "தந்திர வுத்தி குணமக மேயுரை தர்க்கந்தன்னில்
> வந்திய லெண்கோண் முதலா யுளமாலை மாற்றுமுன்னு
> வந்தியல் சித்திர மென்றின் னவுமலங் காரமென்றே
> தந்திய லச்சிலர் சொன்னு ரவற்றையுஞ் சார்ந்தறியே"
>
> (அலங்காரப் படலம், 38)

என்னும் வீரசோழியக் காரிகையும் அதன் உரையும் இக்கருத்தைத் தெளிவுறுத்தும்.

## மாபுராணம் பூதபுராணம்

யாப்பிலக்கணங்களில் மாபுராணம் பூதபுராணம் என்பன இரண்டு. மிகப் பழையனவாகக் கேட்கப்படுகின்ற இலக்கணநூல்களுக்குப் புராணமென்னும் பெயரமைந்திருக்தல் ஒரு புதிய செய்தி. அக்கினி புராணத்தில் ஒரு பகுதியில் அணியிலக்கணம் அமைக்கப்பட்டதேயன்றி நூல் முழுவதும் இலக்கணமன்று.

'படர்ந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம், பூதபுராணம் என்பன சில் வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படாமையின்' (தொல். மரபு. 97) என்னும் பேராசிரியர் கூற்றினுல் இவ்விரண்டு நூல்களும் விரிந்த பொருள்களை யுடையனவென்பது போதரும்.

பூதபுராணத்தைப்பற்றி நாம் வேறு ஒன்றும் அறியக்கூடவில்லை. மாபுராணத்தினின்றும் பல சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக ஆளப்படுகின்றன. அவ்வுரையில் வந்துள்ள,

---

1 தொல். மரபு. 108.

2 தொல். மரபு. 109.

3 Bharata: Natya Sastra, ch. xvi.

4 தொல். மரபு. 110.

"கழிநெடி லசையுங் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழூவென மொழியும் மாபுரா ணம்மே"

என்னும் மேற்கோளை நோக்குகையில் அம் மாபுராணம் பண்டைக்காலத்திற் பெரிதும் போற்றப்பட்டுவந்த நூலென்பது விளங்கும். மாபுராணத்தில் ஒவ்வோர் இலக்கணப்பகுதியும் மிக விரிவாக ஆராயப்பட்டனவென்பது யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் அங்கங்கே உரைக்கும் உரைப்பகுதிகளால் தெரியவருகின்றது.

## அவிநயம்

யாப்பருங்கல விருத்தியுரையில் அவிநயம் என்ற பேரிலக்கணத்தினின்று பல சூத்திரங்கள் காட்டப்படுகின்றன. நன்னூல் மயிலைநாதருரையிலிருந்து இதற்குத் தண்டலங்கிழவனார் இராசபவித்திரப் பல்லவதரையரென்பவர் உரையெழுதி யிருப்பதாகத் தெரியவருகின்றது. இது தொல்காப்பியத்திற்கும் முந்தியதென்பர் சிலர்.[1]

இதன்கண் உள்ள யாப்பதிகாரம் மிக விரிவானதாகவே இருக்குமென்று தோற்றுகின்றது. இவ் யாப்பதிகாரத்திற்கு அங்கமாக நாலடி நாற்பதென்ற நூலொன்றுண்டு.[2] அதிலுள்ள வெண்பாக்கள் சில யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக வருகின்றன.

## பல்காப்பியம்

தொல்காப்பியர் காலத்தை யடுத்துத் தனியாகச் செய்யுளிலக்கணத்தைச் சில ஆசிரியர்கள் இயற்றினார்கள். அவருள் பல்காப்பியனாரென்பவர் ஒருவர்.

'தொல்காப்பியம் கிடப்பப் பல்காப்பியனார் முதலியோர் நூல் செய்தது எற்றுக்கெனின் அவரும் அவர் செய்த எழுத்துஞ் சொல்லும் பொருளு மெல்லாஞ் செய்திலர், செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்து கிடந்ததனை இவ்வாசிரியர் சுருங்கச் செய்தலின் அருமை நோக்கிப் பகுத்துக் கூறினாராகலானும்' (தொல். மரபு. 95, பேர்.) என்னும் பேராசிரியர் உரையால், பல்காப்பியம் செய்யுளிலக்கணம்மட்டுங் கூறுவதென்பது பெறப்படும்.

பல்காப்பியம் தொல்காப்பியத்தின் வழிநூலென்பதும் பேராசிரியர் கூற்றினால் விளங்கும் (தொல். மரபு. 95, உரை.) பல்காப்பியத்தின்

[1] சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப. 241.
[2] யா. கா. 1, உரை.

புறநடைச் சூத்திரம் ஒன்று பேராசிரியரால் எடுத்தாளப்படுகின்றது. அது வருமாறு :

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த லொல்காப் பியன்றன்
ஆணையிற் றமிழறிந் தோர்க்குக் கடனே."

## பல்காயம்

தொல்காப்பியத்தின் வழிவந்த யாப்பு நூல்களுள் இஃதும் ஒன்று. தொல்காப்பியத்தில் விரித்துக் கூறப்பட்ட இலக்கணங்கள் பல்காயனாரால் பகுத்து உரைக்கப்பட்டன. அவை காக்கைபாடினியாரால் பிறகு தொகுத்து உணர்த்தப்பட்டன.

"தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னார்பகுத்துப் பன்னினார் - நல்யாப்புக்
கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்
சொற்றார்தந் நூலுட் டொகுத்து" (யா. வி. ப. 20)

என்பது காண்க. இதிலிருந்து பல சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக வந்துள்ளன.

"இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வளாகத்
தமிழியல் வரைப்பிற் றமினிது விளங்க
யாப்பிய றனே யாப்புற விரிப்பின்
எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கொ
டிழுக்கா மரபி னிவற்றொடு பிறவும்
ஒழுக்கல் வேண்டு முணர்ந்திசி னோரே" (யா. வி. ப. 18)

என்பது இதன் முதற்சூத்திரம் போலும்.

## காக்கை பாடினியம்

காக்கைபாடினியார் என்ற பெண் புலவரால் இயற்றப்பெற்றது இந் நூலென்பது இதன் பெயரினால் தெரியவருகின்றது. பாடினி என்பது பெண்பாற் பெயராகும்.[1]

முன்னே காட்டிய வெண்பாவின்படி காக்கை பாடினியார் தொல்காப்பியத்திலுள்ள செய்யுளிலக்கணப் பகுதிகளைத் தொகுத்துக் கூறினரென்பது அறியப்படும். அவ்வெண்பாவில், "கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்" என்று இவர் பாராட்டப் பெற்றிருத்தலைக்கொண்டு இவர் கலைப்புலமை நிரம்பிய சான்றோரென்பதும் பல நூற்பயிற்சியும் அதனால்

1 இவர் காக்கைபாடினியார் நச்செள்ளையாராக இருத்தல் கூடும். இந் நச்செள்ளையார் 'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே' (குறுந். 210) என்று பாடியுள்ளார்.

உண்டான நுண்ணறிவும் வாய்ந்தவரென்பதும் ஊகித்தறிதற்குரிய செய்தி களாம்.

இக் காக்கைபாடினியார் மிகப் பழைய காலத்திலே இருந்தவர். இவர் காலத்தே தெற்கே குமரியாறு கடல் கொள்ளப்படாமல் இருந்தது. இவருடைய பழமையைப் புலப்படுத்தவந்த பேராசிரியர்,

'வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலத னுண்மை வாலிதின் விரிப்பின்

எனக் கூறி வடவேங்கடந் தென்குமரியெனப் பனம் பாரனுர் கூறிய வாற்றானே எல்லைகொண்டார் காக்கைபாடினியார்'[1] என்றார். நச்சினார்க் கினியர், தொல்காப்பியரோடு ஒரு சாலை மாணாக்கராகக் காக்கை பாடினி யாரைக் குறிப்பர்.[1]

'காக்கைபாடினியார் முதலிய தொல்லாசிரியர் தம் மதம்பற்றி ஈண்டு நாலசைச்சீர் எடுத்தோதினார்' (யா. வி. ப. 58)

'........காக்கைப்பாடினியார் முதலிய மாப்பெரும் புலவர் ; அவரது துணிபே இந்நூலுள்ளுந் துணிபு' (யா. வி. ப. 96)

"காக்கை பாடினி யார்முத லாகிய
மாக்க விப்புல வோர்" (யா. வி. ப. 408)

என்பவற்றால் யாப்பிலக்கண முறைத்த புலவர்களுள் பெருந் தகுதியும் பழ மையும் வாய்ந்தவர் இப்பெண்புலவ ரென்பதும், அமித சாகரமுனிவர் தம் யாப்பருங்கல நூலுக்கு மேற்கோளாகக் கொண்ட நூல்களுள் காக்கை பாடி னியம் ஒன்றென்பதும் அறியப்படும்.

யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியர் காக்கை பாடினியார் யாப் பிலக்கணத்திலிருந்து பல சூத்திரங்களை மேற்கோள் காட்டுகின்றனர். அவற் றின் நடையை ஆராய்கையில் மிகப் பழமையுடையனவாகத் தோற்றவில்லை. பல வடமொழிச் சொற்கள் அவற்றிற் பயின்று வந்துள்ளன. அன்றியும் தொல்காப்பியனாரால் கூறப்படாத தளையிலக்கணமும் தாழிசை துறை விருத்தமென்னும் பாவினங்களும் அவற்றிற் சொல்லப்படுகின்றன.

ஆனால், காக்கை பாடினியார் தளையிலக்கணம் செய்தாரல்லர் என்று பேராசிரியர் கூறுகின்றார்.[1]

இதனால் காக்கை பாடினியார் இயற்றியனவாக யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் காட்டப்படும் சூத்திரங்கள் பழங்காலத்திலிருந்து

---

[1] தொல். செய். 1, உரை.

காக்கைபாடினியாரால் இயற்றப்பட்டன வல்லவென்னும் கொள்கை இருந்துவந்தமை புலப்படும்.

## சிறுகாக்கை பாடினியம்

பிற்காலத்தே காக்கைபாடினியாரென்ற ஒரு புலவர் யாப்பிலக்கணம் இயற்றினுர். அவரைச் சிறு காக்கை பாடினியார் என்று குறிப்பர். அவர் பிற்காலத்தவரென்பதைப் பேராசிரியர் பின்வருமாறு எடுத்துரைப்பர் :

'ஒழிந்த காக்கை பாடினியத்து, வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத், தென்றிசையுள்ளிட் டெஞ்சிய மூன்றும் எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தாரல்லரென்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவ தன்றென்பதூஉம் பெற்றும். பெறவே, அவர் இவரோடு (— தொல்காப்பியனுரோடு) ஒரு சாலை மாணுக்கரல்லரென்பது எல்லார்க்கும் உணரல்வேண்டுமென்பது.' (தொல். செய்யுள். 1, உரை.)

பின் ஓர் இடத்தில் அவர், 'பிற்காலத்துக் காக்கை பாடினியாரும் தொல்காப்பியரோடு பொருந்தவே நூல் செய்தா ரென்பது' (மரபு. 95, உரை) எனக் கூறுவதனுல் இச் சிறுகாக்கை பாடினியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றியே இயற்றப்பட்டதென்று கொள்ளலாகும்.

இந்நூலிலிருந்தும் பல சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாக வந்துள்ளன. அவற்றுல் அவர் பாவினங்களுக்கும் இலக்கணம் உரைத்தன ரென்பது தெரியவருகின்றது.

## கையனூர் யாப்பு

யாப்பருங்கல விருத்தியுரையில் கையனுரென்னும்புலவரால் இயற்றப்பெற்ற நூலிலிருந்து பல சூத்திரங்கள் காட்டப்படுகின்றன. சில விடங்களில் அவ் வுரையாசிரியர் எழுதிய குறிப்புக்களால் இந்நூலுக்கு உதாரணங்கள் காட்டிய உரையொன்றும் கையனுரால் இயற்றப்பட்டிருத்தல் கூடுமென்பதும்[1] இந்நூலிற் சில பகுதிகள் தொல்காப்பியர் கருத்தோடு ஒப்ப நடப்பன வென்பதும்[2] அறியலாகும்.

## நத்தத்தர் யாப்பு

நத்தத்தனுர்[3] என்ற புலவரொருவர் தொல்காப்பியத்தின் வழி நூலாக ஒரு யாப்பிலக்கணம் செய்தார்.[4] இதன்கண் செய்யுளிலக்கணம்

1 யா. வி. ப. 136.
2 யா. வி. ப. 129, 389.
3 (பி. ம்.) நற்றத்தனுர்.
4 தொல். செய். 105, பேர்.

பலவகைப்படுத்திச் சொல்லப்பட்டது. நூல், உரை, பா என்பவற்றைப் பற்றிய வரையறையும் இருந்தது.[1] ஆதலின் தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பியத்தைப்பற்றிய செய்திகளும் இதில் சொல்லப்பட்டிருத்தல் வேண்டும்.

## சங்க யாப்பு

இது பெரும்பாலும் கடைச்சங்க காலத்தே தனியே யாப்பைப் பற்றி விரித்துரைக்கப்பட்ட நூலாக இருத்தல் கூடும். இந்நூலில் பாவினங்களைப் பற்றிய செய்தி இருப்பதாகத் தெரிகின்றது.[2] ஆதலின் இது தொல்காப்பியத்தினும் சில பகுதிகளில் மாறுபட்டதென்று கொள்ளலாம்.

## மயேச்சுரர் யாப்பு

மயேச்சுரர் என்னும் புலவர் ஒருவர் மிக விரிவாக யாப்பு நூலொன்று இயற்றினர். அதன்கண் வடநூல்களிலுள்ள செய்திகளும் சொல்லப்பட்டனபோலும்.[3] யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் இவரை அடைமொழிகளோடு சிறப்பித்துப் பாராட்டுவர். 'பிறை நெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியனார்' (ப. 53), 'நீர்மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்' (ப. 110), 'வாமமேகலை மாதையோர் பாகனார் நாம மகிழ்ந்த நல்லாசிரியர்' (ப. 127), 'திரிபுர மெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்' (ப. 159), 'திரிபுரமெரித்த விரிசடை நிருத்தர் பேர் மகிழ்ந்த பேராசிரியர்' (211) எனவருவனவற்றைக் காண்க. யாப்பருங்கலத்திற்கு மூலமாக இருந்த இலக்கணங்களுள் இதுவும் ஒன்றென்றே தோற்றுகின்றது.

## வேறு சில பழைய நூல்கள்

யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப்படும் யாப்பிலக்கண நூல்கள் வேறு சில உண்டு. பரிமாணனார், பனம்பாரனார், நல்லாறனார், வாய்ப்பியனார், கடிய நன்னியார், பாடலனார் என்னும் ஆசிரியர்கள் இயற்றிய நூல்களிலிருந்து பல சூத்திரங்கள் வந்துள்ளன. பெரியபம்மம் என்றதொரு நூல் யாப்பிலக்கணம் கூறுவதாகத் தெரிகின்றது. இவற்றையன்றிச் செய்யுளியல், யாப்பியலென்னும் பெயர்களோடு சில சூத்திரங்கள் உள்ளன. அவை தொல்காப்பியச் செய்யுளியலிற் காணப்படவில்லை; ஆதலின் அவை தனியே செய்யுளியலென்னும் பெயரோடும் யாப்பியலென்னும் பெயரோடும் வழங்கிவந்த நூல்கள்போலும்.

---

[1] யா. வி. ப. 406.

[2] யா. வி. ப. 115.

[3] யா. வி. ப. 48.

'ஒழிந்த விகற்பங்கள் கவிமயக்கறையுள்ளும், பிறவற்றுள்ளும் கண்டுகொள்க'[1] என்பதன்கண் கவிமயக்கறை என்னும் நூலொன்று குறிக்கப்பட்டுள்ளது. கவி முதலிய நால்வரது இலக்கணம் உணர்த்தும் இடத்தில் இது காணப்படுகின்றது. ஆதலின் கவிமயக்கறை என்னும் நூலுள் கவிஞர்களின் வகையைப்பற்றிய செய்திகள் இருத்தல் வேண்டுமென்பது ஊகித்தறியப்படும்.

பாடுதன் மரபின் விரிவைப் பெரியமுப்பழம் என்னும் நூலிற் கண்டுகொள்ளலாமென்பது[2] ஓரிடத்திற் காணப்படுகின்றது. அந்நூலும் யாப்பின் வகைகளைக் கூறுவதென்றே கொள்ளவேண்டும். 'குலனும் விச்சையும் ஒழுக்கமும் பருவமும் என்றிவற்றிற்குத் தக்க வகையாற் பாட்டுடைத் தலைமகனையும் அவன் சின்னங்களையுமே பாடுதலும், கிளவிப் பொருளல்லவற்றோடு பாட்டுடைத் தலைமகனைப் பெயரும் ஊரும் முதலிய உறுப்புக்களையும் சார்த்திப் பாடுதலும்' போன்ற செய்திகள் அந்நூலிற் காணப்படும்.

தக்காணியம் என்பதொரு நூலின் பெயர், தொல்காப்பியம் அவிநயம் முதலிய நூல்களோடு சேர்த்துக் கூறப்படுகின்றது.[3] அதனால் அந்நூலும் அவ்விரண்டைப்போலத் தமிழிலக்கணத்துள் எழுத்திலக்கணம் முதலிய அனைத்தையும் வரையறுக்கும் நூலெனவே கொள்ளல் ஏற்புடையதாகும்.

## யாப்பருங்கலமும் காரிகையும்

மேலே எடுத்துக்காட்டிய பல நூற்பெயர்களிலிருந்து பழங்காலத்தில் தமிழில் யாப்பிலக்கணம் எவ்வளவு விரிவாக இருந்ததென்பதை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். அந்நூல்களிலிருந்து கிடைக்கும் சூத்திரங்களைக் கொண்டு ஆராயுங்கால் யாப்பிலக்கணத்திற் சிலவகைக் கொள்கைகள் ஒன்றோடொன்று மாறுபடுவனவாக இருந்தனவென்பது தெரியவரும். அசைகளை நேர்பு நிரைபெனப் பிரிப்பதும் அடிக்கு எழுத்தெண்ணிக் கட்டளையடிகளாகக் காட்டுவதும் தளையிலக்கணம் கூறுதொழிவதும் பாவினங் கூறுமையுமாகிய சில கொள்கைகள் பிற்காலத்தே மாறிவிட்டன. தொல்காப்பியத்தைப் பின்பற்றியும் அதற்கு வேறுபட்டும் பல நூல்கள் பழங்காலத்தில் இருந்தன. ஆயினும் நாளடைவில் வடமொழித் தொடர்பு மிகுதிப்படவே யாப்பிலக்கணத்தில் ஒருவகைக் கொள்கையே தமிழ் நாட்டில் நிலைபெறுவதாயிற்று. தளையிலக்கணம் கொள்ளப்பட்டது.

---

1 யா. வி. ப. 513.

2 யா. வி. ப. 516.

3 யா. வி. ப. 537.

கட்டளையடி மறைந்துபோயிற்று. பாக்களைவிடப் பாவினங்கள் கவிஞர்களால் மிகுதியாக மேற்கொள்ளப்பட்டன. பலவகைச் சந்தங்களையமைத்து விருத் தங்கள் பாடத்தொடங்கினர்.

இந்த வகையில் யாப்பின் மரபை வரையறுத்த நூல்களுட் சிறந்தது அமிதசாகர முனிவர் இயற்றிய யாப்பருங்கலமாகும். அவ் யாப்பருங்கலத்துக்கு அங்கமாய் அவரே யாப்பருங்கலக் காரிகையை இயற்றினர். அது யாப்பருங்கலத்தைக் காட்டிலும் சிறந்ததாகத் தமிழ் நாட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காரிகை இயற்றியதற்காகக் குளத்தூரென்னும் ஊரை அரசன் அளித்தான். அது முதல் அவ்வூர் காரிகைக்குளத்தூரென்றே வழங்கலாயிற்று.

யாப்பருங்கலத்துக்கு ஒரு பழைய விருத்தி உரை உண்டு. அதன் கண் கூறப்பட்ட செய்திகள் மிக அருமையானவை. பல பழைய சூத்திரங் களும் நூற்செய்யுட்களும் அதன்கண் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக் கின்றன. அதனல் பழைய காலத்து நூற்பெயர்களும், தமிழின் விரிவும் விளங்குகின்றன.

யாப்பருங்கலத்தின் இறுதிச் சூத்திரத்தில் மாலைமாற்று முதலிய சொல்லணிகளும் உருவகமாதி விரவியலீறாகவுள்ள அலங்காரங்களும் பிறவும் தொகுத்துக் கூறப்படுகின்றன. அச்சூத்திரத்தின் உரையில் உரையாசிரியர் அதன்கண் உள்ளவற்றை விளக்கியிருக்கின்றார். காப்பிய அலங்காரங்களைப் பற்றிய செய்திகளும் பிறவும் அவ்வுரைப் பகுதியிலே காணலாம்.

## வீரசோழியம்

இது வீரசோழனென்னும் அரசனது பெயரைச் சார்த்தி அவன் காலத்தே இயற்றப்பெற்றதொரு நூல். பெரும்பாலும் வட மொழிச் சார்புபற்றியே இதிலுள்ள இலக்கணங்கள் அமைந்துள்ளன. இதில் தனியே யாப்புப்படலம் ஒன்றும் அலங்காரப் படலம் ஒன்றும் இருக்கின்றன. இதனை இயற்றியவர் பொன்பற்றி காவலராகிய புத்தமித்திர ரென்பவர். இந்நூலுக்குப் பெருந்தேவனர் என்ற ஒருவர் உரை யியற்றியிருக்கின்றார். இதன் அலங்காரப் படலம் தண்டியாசிரியர் வட மொழியில் இயற்றியுள்ள 'காவ்யாதர்சம்' என்ற நூலைப் பின்பற்றி இயற்றப் பெற்றது. உரையாசிரியர் உரைச் சூத்திரமாகச் சில அலங்கார இலக்கணங் களை உரைப்பர்.

## இலக்கண விளக்கம்

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு திருவாரூர்த் திருக்கூட்டத் தில் தமிழ்க் கிலக்காக விளங்கிய வைத்தியநாத தேசிகரென்பவர் ஐந்திலக்

கணத்தையும் கூறும் நூலாகிய இலக்கண விளக்கத்தை இயற்றினர். அதன்கண் யாப்பு, அணி, பாட்டியல் என்னும் மூன்று பகுதிகள் தனித் தனியே இருக்கின்றன. அணியிலக்கணப் பகுதி தண்டியலங்கார சூத்திரங் களை அப்படி யப்படியே எடுத்தமைத்துக் கொண்டதாகும்.

## தமிழ்நெறி விளக்கம்

தமிழ் இலக்கணப் பகுதிகள் அனைத்தையும் உடைய நூல்களுள் தமிழ்நெறி விளக்கமென்பதும் ஒன்று. இதன் பொருளியலில் ஒரு பகுதி மாத்திரம் இப்பொழுது கிடைத்துள்ளது. இதன்கண் யாப்பைப் பற்றிக் கூறும் இயல் ஒன்று இருத்தல்கூடுமென்று ஊகித்தற்கு இடமுண்டு.[1]

## தொன்னூல்

இது வீரமாமுனிவ ரென்னும் மறுபெயர் பூண்ட பெஸ்கி பாதிரி யாரால் இயற்றப்பெற்றது. செய்யுளியல் அணியியல் என்னும் தனிப் பிரிவுகள் இதன்கண் உள்ளன. இதன்கண் உள்ள அணியிலக்கணம் பெரும் பாலும் தண்டியலங்காரத்தையே பின்பற்றி அமைந்துள்ளது.

## முத்துவீரியம்

முத்துவீருப் புலவரென்பவரால் சென்ற நூற்றாண்டில் இயற் றப்பட்ட இந்நூல் ஐந்திலக்கணங்களையும் உரைப்பது. யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் அமைந்தது.

# 3. அணியிலக்கணங்கள்

இதுகாறும் கூறிய செய்திகள் பெரும்பாலும் யாப்பிலக்கணங் களைப்பற்றியனவாகும். காப்பியங்களைப்பற்றித் தனியே எடுத்துக் கூறும் இலக்கணம் அணியிலக்கணமாகும். வடமொழியில் இம்முறையைக் காண லாம். தமிழில் அணியிலக்கணம் தனியாகப் பழங்காலத்தில் இருக்கவில்லை. வடமொழித் தொடர்பினால் இவ்விலக்கணம் தமிழிலும் தனியே உளதாயிற் றென்பதில் ஐயமில்லை.

இறையனாரகப் பொருள் உரையில் வரும், ‘தமிழ்தான் நான்கு வகைப்படும் எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்புமென’ (1, உரை) என்னும் பகுதியால் அக்காலத்தில் தமிழ் இலக்கணத்தின் பிரிவு யாப்பிேனாடு

1 தமிழ்நெறி. முகவுரை, ப. vi.

கின்றிருந்ததென்று தெரிகின்றது. ஆதலின் அக்காலத்தின் பின்னரே அணியிலக்கணம் தமிழில் தனியே அமைக்கப்பட்டதென்று கூறலாம்.

## அணியியல்

அணியியலென்னும் நூலொன்று தமிழில் இருந்தது. அதன் சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியராலும் நேமிநாத உரையாசிரியராலும் காட்டப்பட்டிருக்கின்றன. அடியார்க்கு நல்லாரும் சில சூத்திரங்களை அணியியலென்னும் பெயரோடு எடுத்துக் காட்டு கின்றார். அவர் கூறுவன யாவும் தமிழ்த் தண்டியலங்காரத்தில் உள்ளவை. ஆதலின் அவர் தண்டியலங்காரத்தையே அணியியலெனக் கொண்டா ரென்று தோற்றுகின்றது. முற்குறிப்பிட்ட இரண்டு ஆசிரியர்களும் காட்டும் சூத்திரங்கள் தண்டியலங்காரத்திற் காணப்படவில்லை. ஆதலின் அணியியலென்னும் பெயரோடு பழைய தமிழ் நூலொன்று இருந்த தென்றே கொள்ளவேண்டும். அந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திலே வழக்கொழிந்து வீழ்ந்ததுபோலும்.

அணியியலுக்கு உரை யொன்று உண்டென்று எண்ண இடமிருக் கின்றது. அதன்கண் செய்யுட்களின் வகை, சொற்பொருளணிகள், சித் திரகவிகள், நூல்வகை முதலிய பல செய்திகள் சொல்லப்பட்டனபோலும்.

'அணியியலுடையாரும்

இயன்ற செய்யுட் கியைந்த பொருளை
உயர்ந்த நடையால் உணரக் கூறலும்
அருங்கல மொழியால் அரிறபக் காட்டலும்
ஒருங்கிரண் டென்ப வுயர்நடைப் பொருளே

என்னும் சூத்திரத்துள் ஒருங்கிரண்டு என்புழி ஆற்றலாற் போந்த பொருளை என்ப என்னும் முற்றுச் சொல்லோடு புலவரென்னும் பெயர் கூட்டிப் பொருளுரைத்தாராகலின்' (யா. வி. ப. 99) என்பதிலிருந்து அணியியலுக்கு ஓர் உரையுண்டென்பது தெரியவரும்.

'இஃது அகவல் வெண்பா வென்று அணியியலுடையார் காட்டிய பாட்டு' (யா. வி. ப. 219) என்பதனால் அந்நூல் செய்யுள் வகைகளைப் பற்றியும் ஆராய்வதென்று புலப்படுகின்றது.

"உருவக மாதி விரவிய வீறு வருமலங் காரமும்" என்னும் யாப் பருங்கலச் சூத்திர உரையில், உரையாசிரியர், இருபத்தேழு அணிகளை எடுத்துரைத்து, 'அவை அணியியலுட் கண்டுகொள்க' என எழுதுகின்றார். அதனால், அணியியலில் அவ்விருபத்தேழு அணிகளைப்பற்றிய இலக்கணங்கள் அமைந்ததாகக் கொள்ளல் தகும்.

மற்றோரிடத்தில்[1] அவ் வுரையாசிரியர் செய்யுள் வகையைப்பற்றிக் கூறுகையில்,

"செய்யு டாமே மெய்பெற விரிப்பிற்
றனிநிலைச் செய்யு டொடர்நிலைச் செய்யுள்
அடிபல தொடுத்த தனிப்பாச் செய்யுள்
உரையிடை மிடைந்த பாட்டுடைச் செய்யுள்
இசைநுவன் மரபி னியன்ற செய்யுள்
நயநிலை மருங்கிற் சாதியோடு தொகைஇ
அவையென மொழிப வறிந்திசி னோரே"

என்ற சூத்திரத்தைக் காட்டி 'என்றோதப்பட்ட வெல்லாம் அணியியலுட் காண்க' என உரைத்தார். மேலே காட்டிய சூத்திரம் அணியியற் சூத்திரம் போலும்.

தொல்காப்பியனார் கூறும் செய்யுள் வகைக்கும் இச் சூத்திரத்துக் கண்ட வகைக்கும் வேறுபாடு உண்டு. அவர் இயற்றமிழ்ச் செய்யுளைமட்டும் ஏழு வகையாகப் பிரித்தனர். இவரோ, இயல், இசை, நாடகம் என்னும் மூவகையையும் பற்றிக் கூறினர். அவற்றுள் இயற்றமிழ்ச் செய்யுட்கள் (1) தனிநிலைச் செய்யுள் (2) தொடர்நிலைச் செய்யுள் (3) அடிபல தொடுத்த தனிப்பாச் செய்யுள் (4) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தொடர்நிலைச் செய்யுளும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளும் காப்பியங்களாகும்.

இசைநுவன் மரபின் இயன்ற செய்யுளென்பது இசைப்பாட்டுக்குரிய பாட்டாகும். அதனை வடமொழியாளர் ஸாஹித்தியம் என்று கூறுவர். நயநிலை மருங்கிற் சாதியென்பது நாடகச் சாதிகளைக் குறிக்கும். 'நய நிலைப் படலமாவது நாடகம்; கூத்துமார்க்க மென்பதும் அது' (வீர. ப. 86) என்று வீரசோழிய உரையாசிரியர் கூறுதல் காண்க. ஆதலின் நயநிலைச் செய்யுளென்னும் நூல்கள் நாடகக் காப்பியங்களாகும். அவற்றையும் காப்பியங்களோடு சேர்த்தலே முறை.

இங்ஙனம் தொகுத்துக் கூறப்பட்ட சூத்திரம் உள்ளது கொண்டு, இதிற் கூறப்பட்ட செய்யுள்வகைகளைப் பற்றிய இலக்கணங்களைத் தனித் தனியே வகுத்துக் கூறும் சூத்திரங்களும் அணியியலில் இருத்தல் வேண்டுமென்றே தெளியலாம். தொல்காப்பியனார் ஏழுவகைச் செய்யுட்களைத் தொகுத்துக் கூறிப் பின்னர்த் தனித்தனியே ஒவ்வொன்றன் இலக்கணத்தையும் வகுப்பது காண்க.

'இந்த இருது வருணனை அணியியலுட் காண்க'[2] என்று பிறிதோரிடத்தில் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் எழுதுவர். அதனால் காப்பிய

[1] ப. 525.
[2] ப. 532.

இலக்கணங்கள் விரிவாக அணியியலிற் சொல்லப்பட்டனவென்று கருத நேர்கின்றது. இருது வருணனை காப்பியங்களிற் சொல்லப்படும். அதனைச் சொல்லும் மரபு முதலியன அணியியலில் வகுக்கப்பட்டிருப்பதாக மேலே காட்டிய உரைப்பகுதி தெரிவிக்கின்றது. இங்ஙனமே காப்பியங்களுக்குரிய வருணனைகள் பிறவும் தனித்தனியே அந்நூலின்கண் சொல்லப்பட்டிருத்தல் வேண்டுமென்றே?

## வேறோர் அணியிலக்கணம்

அணியியல் என்னும் பெயரை யுடைய நூலையன்றி வேறு சில அலங்கார நூல்களும் தமிழில் உண்டாகி வழக்கொழிந்தனபோலும். தொல்காப்பியம் மரபியலின் உரையில்[1] பேராசிரியர் கூறியது கூறல், மாறுகொளக் கூறல், குன்றக்கூறல் என்னும் மூவகைக் குற்றங்களும் உடையதாக ஓர் அணியிலக்கண நூலைக் குறிப்பாற் புலப்படுத்துவர். அவ்வுரைப் பகுதியை ஆராய்கையில் அவர் தம் மனத்தில் ஒரு நூலைக் குறிக்கொண்டே அதனை எழுதினு ரென்று தெளிவாகின்றது. அவர் அங்கே காட்டும் மூன்று சூத்திரங்கள் அவ்வணி யிலக்கணத்தில் உள்ளவை யென்றே எண்ணுதற்குரியன. அம்மூன்றும் வருமாறு:

"தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப்பொருள் வைப்பு வேற்றுமை எனுஅ"

"உருவக முவமை வழிநிலை மடக்கே
விரிசுடர் விளக்கென மரீஇ வருவன"

"தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப்பொருள் வைப்பு வேற்றுமை யென்றாங்
கெண்வகை யியல செய்யுட் கணியென
மையறு புலவர் வகுத்துரைத் தனரே."

இவற்றுள் மூன்றுஞ் சூத்திரத்துட் காணப்படும் அணிகளின் பெயர்கள் தண்டியலங்காரத்தும் காணப்படுகின்றன. அவற்றின் பெயர்கள் வீரசோழிய அலங்காரப் படலத்தில் வேறுபட்டுள்ளன. இதனால் தண்டியலங்கார நூலார் தாம் நூல் செய்யப்புகுங்கால் இங்கே குறித்த அணியிலக்கண நூலில் வழங்கிய பெயர்களை எடுத்து அமைத்துக்கொண்டாரென்று தோற்றுகின்றது.

எனினும், தண்டியலங்காரத்திற் கூறப்பட்ட அலங்காரத்தொகையும் இந்நூலிற் கூறப்பட்டவற்றின் தொகையும் ஒன்றாக இல்லை. இந்நூல் எட்டு அணிகளைக் கூறுவதுபோலும். தண்டியாசிரியர் முப்பத்தைந்து கூறுவர்.

1 தொல். மரபு 108, உரை.

## தண்டியலங்காரம்

இக்காலத்தில் பயின்று வழங்குவது தண்டியலங்காரமாகும். அது காவ்யாதர்ச மென்னும் வடமொழிநூலின் வழிநூலாகும். வடமொழி நூலின் ஆசிரியர் தண்டி யென்பவர்.

வடமொழிக் காவ்யாதர்ச மென்பது மிகச் சிறப்புடைய நூலாகும். அலங்கார சாஸ்திரங்களில் பாமஹாலங்காரத்தை அடுத்துத் தோன்றியது. பாமஹாலங்காரத்துக்கு முன்பே இயற்றப்பட்டதென்று சிலர் சொல்வர். காவ்யாதர்சத்தின் காலத்தைப்பற்றிப் பலவகையான கொள்கைகள் இருந்து வருகின்றன. ஆறும் நூற்றாண்டென்று சிலரும்,[1] ஏழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி என்று சிலரும்,[2] எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி யென்று சிலரும்[3] கூறுவாராயினர். அந்நூலுக்குப் பதின்மூன்றுக்கு மேற்பட்ட உரைகள் உள்ளனவென்றும், அவற்றுள் இரண்டு உரைகாரர்கள் தமிழ் நாட்டின ரென்றும் கூறுவர்; அவர்கள் தம் உரையில் தமிழ்த் தொகை நூல்களை உதாரணமாகக் காட்டுகின்றனராம்.[4]

காவ்யாதர்சத்தை இயற்றிய தண்டியாசிரியரும் தமிழ்நாட்டினரே யென்று சிலர் கூறுவதுண்டு. தமிழில் அவர்நூலை இருவர் மொழிபெயர்த் தமை அவர்பால் தமிழ் நாட்டாருக்குள்ள நன்மதிப்பை உணர்த்தும். கன்னடமொழியிலுள்ள கவிராஜமார்க்கமென்னும் அலங்காரநூல் காவ்யா தர்சத்தை அடியொற்றி இயற்றப்பட்டதாகக் கூறுவர்.

தமிழ்த் தண்டியலங்காரம் வீரசோழியத்திற்குப் பின்னரே இயற்றப்பட்டிருத்தல்கூடும். அதன் ஆசிரியர் இன்னாரென்பது குறித்துத் தெளிவான செய்திகள் தெரியவில்லை. அதற்குரிய சிறப்புப் பாயிரமாகச் சில பிரதிகளிற் காணப்படும் செய்யுள் வருமாறு :

"வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் றன்பா லருந்தமி ழுணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி பல்காப் பியத்தும்
அணிபெறும் இலக்கணம் அரிதினிற் றெரிந்து

---

[1] Dr. R. Pischel : Introduction to the edn. of Rudrata's Srngaratilaka and Ruyyaka's Sahrdaya lila, p. 13; M. R. Kale : Dasakumara Charita.

[2] A. Sankaran, M. A. Ph. D. : The Theories of Rasa and Dhvani, p. 24.

[3] History of Sanskrit Poetics, Vol. I. p. 70.

[4] V. Narayana Iyer : Introduction to the edn. of Dandin's Kavyadarsa, p. iii.

வடநூல் வழிமுறை மரபினில் வழாது
ஈரிரண் டெல்லையி னிகவா மும்மைப்
பாரத விலக்கணம் பண்புறத் தழீஇத்
திருந்திய மணிமுடிச் செம்பிய னவையத்
தரும்பொருள் விளங்க யாப்பின் வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரிய லம்பி காபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென் பவனே."

இதனால் தண்டியலங்கார நூலாசிரியர் சோழநாட்டினரென்பதும் அம்பிகாபதி யென்பவருடைய குமாரரென்பதும் தெரியவருகின்றன. தண்டியாசிரியரால் வடமொழியில் இயற்றப்பெற்ற காவ்யாதர்சத்தைத் தமிழில் இயற்றியவருக்கும் தண்டியென்னும் பெயரே இயற்பெயராக அமைந்ததென்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. சண்டேசநாயனார் பெயர் தண்டியென்று வழங்குவதுண்டு. தண்டியடிகள் நாயனாரென்றே ஒரு சிவனடியார் முன்பு இருந்தார். இவற்றால், தண்டி யென்னும் பெயர் தமிழ் நாட்டில் வழங்கியதாகத் தெரியினும் வடமொழி நூலாசிரியரும் அதை மொழி பெயர்த்தோரும் தண்டியென்ற ஒரே பெயருடையாரென்பது அமையாது. தமிழ் நூலாசிரியருடைய இயற் பெயர் பிறிதொன்றாகவே இருத்தல் வேண்டும். தண்டியலங்கார மொழிபெயர்ப்பாக வீரசோழியம் அலங்காரப் படலம் இருப்பினும் அதனைத் தமிழர் போற்றவில்லை. இத் தமிழாசிரியர் இயற்றிய நூல் அதனினும் சிறந்து தமிழுக்கே பெருமை யுண்டாக்குவதாக அமைந்தமையின் அப்பெருமைபற்றி இவர் மூல கிரந்தகர்த்தாவின் பெயரையே தமக்குச் சிறப்புப் பெயராகப் பெற்றாரென்று கொள்வதே ஏற்புடையதாகும். நாளடைவில் இவருடைய இயற்பெயர் வழக்கொழிந்து சிறப்புப்பெயரே நிலவுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களில் இயற்பெயர் தெரியாமல் சிறப்புப்பெயரால் அறியப்படுவோர் பலராவர்.

இத் தண்டியாசிரியர் தொல்காப்பிய முதலிய நூல்களிலும் வடநூல்களிலும் பயிற்சியுடையவர். நாட்டிய சாஸ்திரங்களிற் பேரறிவுடையவர்.

'ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்'

என்பதிலுள்ள நாடக நவிற்று மென்னும் அடையைப் புலவனுக்குரியதாக்கி இவர் கனகசபையில் கூத்துப் பயிலும் தொழிலுடையாரென்று ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள் எழுதியுள்ளார்கள்.[1] அவ்விசேடத்தை வடநூலுக்காக்கிக் கூத்துப் பயில்வதற்குரிய இலக்கண முணர்த்தும் வடநூலை

---

[1] சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 89.

உணர்ந்தவனென்று கொள்ளல் பிழையாகாதென்று தோற்றுகின்றது. நாடக நூலிலும் அணியிலக்கணங்கள் காணப்படுமென்பது முன்னர்க் கூறப்பட்டது. ஆதலின் தமிழில் அணியிலக்கணம் செய்யப்புகுந்த ஆசிரியர் வடமொழியில் உள்ள நாடக இலக்கணங்களை ஆராய்ந்தாரென்று கொள்ளுதல் பொருந்துமன்றோ?

இச்சிறப்புப் பாயிரம் தண்டியலங்கார முதல்நூலாகிய 'காவ்யா தர்ச'த்தைப் பற்றிச் சிறிதும் குறிப்பிடவில்லை. சிறப்புப் பாயிரத்தை மாத்திரம் படித்தவர் 'இவர் நாடக நூல்களைப் பயின்று அவற்றில் உள்ள அலங்காரங்களையும் தமிழ்நூலிற் பயின்றுவரும் அணிகளை ஆராய்ந்து அவற்றையும் அமைத்துத் தமிழ்நூல் இயற்றினார்' என்றே கருத நேரும். தண்டியலங்காரம் வடமொழிக் 'காவ்யாதர்ச'த்தின் மொழிபெயர்ப்பென்பதில் ஐயமேயில்லை. அதற்கும் இதற்கும் உள்ள வேற்றுமை மிகச் சிறிதளவேயாகும். ஒரு மொழியிலுள்ள நூற்பொருளுக்கு இலக்கணம் வகுக்கும் நூலை வேறு மொழிக்கு இலக்கணமாக மாற்றும்பொழுது இத்தகைய மாறுபாடுகள் அமைதல் இயல்பேயாகும்.

இங்ஙனம் உள்ள தலைமையான செய்தியை இச் சிறப்புப் பாயிரம் கூறாமையினாலும், ஆசிரியர் இயற்பெயரைத் தெரிவியாததனாலும் இது பிற்காலத்தில் ஒருவரால் செய்யப்பட்டதென்றும், இதிற் கூறப்பட்ட செய்திகள் அப்படியே மேற்கொள்ளற் குரியனவல்லவென்றும் தோற்றுகின்றது.

தண்டியலங்காரத்துக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அதனைத் திருவாவடுதுறை யாதீனத்தில் 14-ஆம் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இயற்றியதாகச் சிலர் பதிப்பித்தனர். அது பிழை. அது பழைய காலத்திலேயே இயற்றப்பட்டதென்று தெரிகின்றது. அவ்வுரையில் உள்ள மேற்கோள்களிற் சில பழைய செய்யுட்கள். புதியனவாகக் காட்டப் பெற்ற செய்யுட்கள் தண்டியலங்கார நூலாசிரியராலேயே இயற்றப்பட்டன. பிரயோக விவேக நூலாசிரியரும் இக்கருத்தைக் கொண்டவரென்பது, 'தண்டியாசிரியர் மூலோதாரணமுங் காட்டினாற் போல, யாமும் உரை யெழுதியதல்லது மூலோதாரணமுங் காட்டினோம்' என்னும் அவர் கூற்றால் தெரிகின்றது.

தண்டியலங்கார உதாரணச் செய்யுட்கள் மிக அழகானவை. அவற்றிற் பல செய்யுட்கள் அனபாயனென்னும் சோழ அரசனைப் பாராட்டுகின்றன. முதல் உதாரணச் செய்யுளிலே அனபாயன் புகழ் வருகின்றது;

"என்னேய் சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யனபாயன் பொன்னெடுந்தோள் — முன்னே
தனவேயென் றோளும் சயமடைந்த தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு"

என்பது காண்க.

வாழ்த்தணியின் உதாரணம் கூறுமுகத்தால் ஆசிரியர்,

"மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர் — காவிரிநாட்
டன்ன லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மன்னுலகில் வாழி மழை"

என்று அனபாயனை வாழ்த்துகின்றார். இவற்றால் இவ்வாசிரியர் அனபாய சோழன்காலத்தில் வாழ்ந்து அவனால் ஆதரிக்கப் பெற்றவ ரென்று ஊகிக்க லாம். அனபாயனென்னும் சிறப்புப்பெயர் இரண்டாங் குலோத்துங்கனுக் குரியது. அவன் கி. பி. 1133 முதல் கி. பி. 1146 வரையில் அரசுபுரிந்தவன். அதனால் தண்டியாசிரியருடைய காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற் பகுதி யென்று கூறலாம்.

தண்டியாசிரியருடைய காலத்தில் அனபாய சோழனது அவைக் களத்தில் தலைமைப் புலவராக வீற்றிருந்தவர் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர். அவரைத் தண்டியாசிரியர்,

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள் — ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு"

என்னும் செய்யுளிற் பாராட்டியிருக்கின்றனர். அதனால் இவர் கூத்தருடைய மாணாக்கரோ என்று கருதவும் இடமுண்டு.

கூத்தர் கலைமகளுக்கு அடியவர். "ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே" எனத் தாம் இயற்றிய தக்கயாகப் பரணியில் சொல்லின் கிழத் தியை வாழ்த்துகின்றார். தண்டியாசிரியரும்,

"சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே"

என்று தம் நூலைத் தொடங்குகின்றார். பொருளணியியலின் தொடக்கத்தி லும் கலைமகள் துதியொன்றை அமைத்தார். இவற்றால் இவரும் தம்முடைய ஆசிரியரைப் பின்பற்றுவாராகிக் கலைமகள் உபாஸனை செய்தாரென்று புலப் படுகின்றது.

தண்டியலங்கார நூலுக்கு அப்பெயர் பிற்காலத்தே வழங் கியது போலும். 'காவ்யாதர்ச' மென்ற முதனூற்பெயரை இந்நூல் பெறவில்லை. தண்டியலங்கார உரையில், 'இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், அணியினது இலக்கணம் உணர்த்தினமை யான், அணியதிகாரமென்னும் பெயர்த்து' என வருவதனால் இதற்கு அணியதிகாரமென்ற பெயரே முற்காலத்தில் வழங்கியதென்று தெரிகின்

றது. அணியதிகாரம் என்பது ஓர் அதிகாரப் பெயராதலின் அதனை நூலின் பெயராக உரைத்தல் பொருந்தாதெனின், இறையனார் களவியலைப் பொருளதிகாரம் என்று சில உரையாசிரியர் வழங்குவதனால், முழு நூலையும் அங்ஙனம் வழங்குதல் பொருந்துமென்றே கொள்க. கணக்கதிகாரம் என்ற நூற்பெயரைக் காண்க. இவ்வாறே நூல் உறுப்புக்குரிய பெயராலேயே சில நூல்கள் பெயருடையனவாதலைப் பன்னிரு படலம், பன்னிரு பாட்டியல், தாளவகை யோத்து என்னும் நூற்பெயர் வழக்காலறிக.

தண்டியலங்காரம் தமிழ் நாட்டினராற் பெரிதும் பாராட்டப் பட்டமைக்கு இந்நூலாசிரியர் வடநூலாசிரியர் பெயராலே வழங்கப்பட்டமையே ஓர் அடையாளமாகும். பிற்காலத்தில் நூலியற்றிய இலக்கண விளக்க ஆசிரியர் தம் நூலில் தண்டியலங்காரச் சூத்திரங்களை அப்படி யப்படியே அமைத்துக்கொண்டார். தண்டியலங்கார மேற்கோட் செய்யுட்கள் பலவற்றை வீரசோழிய உரையாசிரியர் எடுத்து உதாரணம் காட்டினர். இவை தண்டியாசிரியர் சிறப்பை விளக்குகின்றன.

## மாறனலங்காரம்

தண்டியலங்கார நூலைப் பெரும்பாலும் பின்பற்றியும், தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல்களிற் கண்ட பல செய்திகளை அமைத்தும், இலக்கியங்களிற் காணும் பொருள்களை ஓர்ந்து பழைய அணிகளோடு சில புதிய அணிகளையமைத்தும் இயற்றப்பட்டது மாறனலங்காரம். காப்பிய இலக்கணத்தை இந்நூல் விரிவாகக் கூறுகின்றது.

இதனை இயற்றியவர் ஆழ்வார் திருநகரித் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவர். இவர் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.[1] நம்மாழ்வார் புகழ்கூறும் உதாரணச் செய்யுட்களைப் பெரும்பாலும் அமைத்து இந்நூலை இயற்றியுள்ளார். இவர் ஆழ்வார் திருநகரியிற் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ நம்மாழ்வாருடைய ஆஸ்தான கவிராயராதலால் தாம் இயற்றிய இந்நூலுக்கு ஆழ்வார் பெயரால் மாறனலங்காரம் என்னும் பெயரமைத்தார். மாறனென்பது நம்மாழ்வாரின் திருநாமம். தண்டியலங்கார நூலாசிரியரைப்போலவே இவரும் மூலோதாரணங்களை இயற்றினர்.

இந்நூலுக்குச் சிறந்ததோர் உரையுண்டு. அது தென்திருப் பேரையிலிருந்த காரிரத்ன கவிராய ரென்பவரால் இயற்றப்பட்டது. அவர் உரையினாலும் காப்பிய சம்பந்தமான பல அரிய செய்திகள் அறியப்படும். இந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

---

1 மாறனலங்கார வரலாறு, மாறனலங்காரப் பதிப்பு, ப. 20.

## குவலயானந்தம்

வடமொழியிலுள்ள குவலயானந்தத்தை மொழி பெயர்த்து ஆக்கப்பட்ட அணியிலக்கணநூல் இது. வடமொழிநூல் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரால் சந்திராலோகமென்னும் நூலுக்கு வியாக்கியானம் செய்யுமுறையில் இயற்றப்பெற்றது. அதனைத் தமிழில் இயற்றிய ஆசிரியர் மாணிக்க வாசகர் என்பவர். இச் செய்யுள் நூலையன்றி வடமொழிக் குவலயானந்தத்திற் கண்ட இலக்கணத்தையே தமிழ் வசனத்தில் அமைத்து ஏற்ற உதாரணங்களோடு அணியிலக்கண வினாவிடை என்ற நூலொன்று சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த விசாகப் பெருமாளைய ரென்பவரால் இயற்றப் பட்டது. வடமொழிக் குவலயானந்தத்துக்கு மூலமாகிய சந்திராலோகத்தின் அலங்காரத் தொகைச் செய்யுள் இராமநாதபுரத்தில் வாழ்ந்திருந்த முத்துசாமி ஐயங்கா ரென்பவரால் மொழிபெயர்த்து இயற்றப்பெற்றது.

## தண்டியலங்கார ஸாரம்

சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்தவரும் சென்னை அரசாங்கக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவருமாகிய தி. ஈ. ஸ்ரீநிவாச ராகவாசாரியா ரென்பவர் தண்டியலங்காரஸாரம் என்றதொரு வசன நூலை இயற்றியிருக்கின்றார். காப்பிய இலக்கணத்தைப் பற்றி வடமொழி நூல்களிற் கண்ட பல செய்திகளை அவர் அதன்கண் வெளியிட்டிருக்கின்றனர்.

## அணியிலக்கணமல்லாத அலங்காரங்கள்

கண்டனலங்காரம் என்னும் பெயரையுடைய பழைய நூலொன்றிலிருந்து சில செய்யுட்கள் 'களவியற் காரிகை'[1] யுரையிற் காட்டப்படுகின்றன. அந் நூற்பெயர் தண்டியலங்காரம், மாறனலங்கார மென்னும் நூற்பெயர்களைப்போல அமைந்திருத்தலைக் கொண்டு அதனை அணியிலக்கண நூலென்று கொள்ள இடமில்லை. அதிலிருந்து எடுத்துக் காட்டப்பெற்ற செய்யுட்கள் அகத்துறைக்கு இலக்கியங்களாக வுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையில் புறப்பொருளிலக்கணத்துக்கு இலக்கியமாக உள்ள வெண்பாக்களின் தொகுதி யிருத்தலைப்போல, கண்டனலங்காரத்திலும் அணியிலக்கணத்துக்கு இலக்கியமாக வெண்பாக்கள் உண்டென்றும், அவற்றிற் பல அகத்துறை யமைதியுடைமையின் அகப்பொருளிலக்கணத்திற்கு உதாரணமாகக் 'களவியற்காரிகை' யுரையாசிரியரால் எடுத்துக் காட்டப்பட்டன வென்றும் சிலர் கருதுதல் கூடும். அலங்காரமென்னும் பெயரால் அணியிலக்கணமல்லாத நூல்களும் உண்டு. அருணகிரிநாதர் இயற்றிய கந்தரலங்காரமென்ற பிரபந்தம் இதற்கு ஒரு சான்றாகும். எனவே அலங்காரமென்ற பெயரைக்கொண்டு கண்டனலங்காரத்தை அணியிலக்கணமும் இலக்கியமும் அமைந்த நூலாக நிச்சயிக்க இடமில்லை.

---

[1] ஸ்ரீ ராவ்ஸாஹெப் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பதிப்பு.

# 4. பாட்டியல் நூல்கள்

இதுகாறும் யாப்பணி இலக்கண நூல்களைப்பற்றி ஆராய்ந்தோம். இனி, காப்பிய இலக்கணங்களைப்பற்றிய செய்திகளைச் சிறிதளவு கூறும் பாட்டியல் நூல்களைப்பற்றி ஆராய்வோம்.

பாட்டியல் என்பதற்குப் பொருள் பாட்டின் இலக்கணமென்பது; செய்யுளிலக்கியங்களின் இலக்கணமென்றும் கூறலாம். பெரும்பாலும் பாட்டியல்களில் பத்துவகைப் பொருத்தங்களும் செய்யுளிலக்கணங்களிற் சிலவும் பிரபந்தங்களின் இலக்கணங்களும் காணப்படும்.

இவ்வகை நூல்கள் பிற்காலத்திலே எழுந்தன. ஆயினும் பழங் காலத்திலும் பாட்டியல்நூல்கள் இருந்தனவென்று சிலர் கொள்வர்.

## பன்னிரு பாட்டியலும் பாட்டியல் மரபும்

இப்பொழுது கிடைக்கும் பாட்டியல்நூல்களிற் பழையது பன்னிரு பாட்டியலென்பது. அந்நூல் அகத்தியர் முதலியோரால் இயற்றப் பெற்றதன்றென்பதும் பிற்காலத்தில் இயற்றப்பெற்றதென்பதும் ஆராய்ச்சி யாளர் கொள்கை. தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியவர்கள் எழுதியுள்ள சில குறிப்புக்களால் அவர்கள் காலத்தே பாட்டியல் நூல் வழக்கில் இருந்ததென்றும், ஆயினும் அஃது அவர்களுக்கு உடன்பாடன்றென்றும் தெரியவருகின்றது. பேராசிரியர் பாட்டியன் மரபு என்னும் நூலை நின்று பயனின்மை யென்னும் குற்றத் துக்கு உதாரணமாக்குவர்.[1]

இப்பாட்டியன் மரபென்பது பன்னிரு பாட்டியலினின்றும் வேறான தென்றே தெரிகின்றது. யாப்பருங்கல விருத்தி யுரையாசியரிர் பாட்டியன் மரபுடையார் சூத்திரமென்று இரண்டை மேற்கோளாகக் காட்டுவர். அவை பன்னிருபாட்டியலிற் காணப்படவில்லை. ஆதலின் பாட் டியன் மரபென்றே ஒரு நூல் தனியே இருந்ததென்று கொள்ளவேண்டும். அது பாவையும் பாவினங்களையும் பிரபந்தங்களையும் காப்பியங்களையும் பற்றிய இலக்கணங்களை வரையறுத்துக் கூறுவது போலும். அது பன்னிரு பாட்டியலுக்கு முந்தியதோ பிந்தியதோ தெரியவில்லை.

பன்னிரு பாட்டியல் 358 சூத்திரங்களோடு பதிப்பிக்கப்பட் டிருக்கின்றது.[2] அச் சூத்திரங்கள் பல ஆசிரியர்களால் இயற்றப்பட்

---

[1] தொல். மரபு. 109, உரை.

[2] மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

டவை. சில சூத்திரங்களுக்கு இயற்றியோர் பெயர் காணப்படவில்லை. இப்பொழுது தெரிந்தவரையில் கையனார், இந்திரகாளியார், அவிநயனார், பரணர், அகத்தியர், கல்லாடனார், கபிலர், சேந்தம்பூதனார், கோவூர் கிழார், மாபூதனார், சீத்தலையார், பல்காப்பியனார், பெருங்குன்றூர் கிழார் என்பவர்களுடைய பெயர்களாற் பல சூத்திரங்கள் இதில் உள்ளன. அப்பெயர்களை யுடைய பழம்புலவர்களே அவற்றை இயற்றியிருப்பார்களென்பது நம்புதற்குரியதன்று. இந்நூலின் நடையும், இதிற் கூறப்பட்ட செய்திகளும் பிற்காலத்தாரது வழக்கைத் தழுவியமைந்தன. திருவள்ளுவமாலை முதலிய நூல்களைப் போல இது வேறு யாராலோ இயற்றப்பெற்றுப் பழைய புலவர்கள் பெயரைப் பொய்யே கொண்டு வழங்குவதாகும்.

இதில் அகத்தியர் பாட்டியல் என்ற பெயரோடு ஒரு சூத்திரம் காணப்படுகின்றது. இந்திர காளியாரென்னும் புலவர் பெயரோடு காணப்படும் சூத்திரங்களில் ஐந்தை வச்சணந்திமாலை யுரைகாரர் எடுத்துக் காட்டி, 'இவை இந்திர காளியம்' என்று உரைக்கின்றார். அன்றியும் இந்திரகாளிய மென்னும் நூலின் வழிநூலாக அதனைக் கூறுவர். இவற்றால் அகத்தியர் பாட்டியல், இந்திரகாளியம் என்பனபோன்ற பெயர்களையுடைய பாட்டியல் நூல்கள் பல தமிழ் நாட்டில் உலவினவென்றும், அவை வழக்கொழிந்ததனாலோ, மிக்க விரிவுடையனவாக இருந்தமையாலோ அவற்றிலுள்ள சூத்திரங்களைத் தொகுத்து யாரோ ஒருவர் பன்னிரு பாட்டியலை அமைத்திருக்க வேண்டுமென்றும் தோற்றுகின்றது.

பன்னிரு பாட்டிய லென்னும் பெயரிலுள்ள பன்னிரண்டென்பது எதைக் குறிக்கின்றதென்பது விளங்கவில்லை. பன்னிரண்டு ஆசிரியர்களால் இயற்றப்பட்டதென்பர் சிலர்.[1] பன்னிரு படலமென்றதொரு புறப்பொருள் இலக்கணநூல் முன்பு இருந்ததென்றும் அகத்தியர் மாணவர் பன்னிருவருள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு படலம் இயற்ற அவற்றைத் தொகுத்து அந்நூல் அமைக்கப்பட்டதென்றும் கூறுவர். அத்தகைய வரலாற்றைப் பன்னிரு பாட்டியலுக்கும் கூறுதலின் பொருத்தம் ஆராய்தற்குரியது. சில சூத்திரங்களின் ஆசிரியர் பெயர் தெரியாத இந்த நிலையிலும் பதின் மூவர் பெயர்கள் காணப்படுகின்றன.

இந்நூல் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று பிரிவையுடையது. இனவியலில் காப்பியங்களைப்பற்றிய செய்திகள் உள்ளன.

பன்னிரு பாட்டியலின் காலத்தை வரையறுக்க ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

---

[1] வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்: பரணர், ப. 65.

## வச்சணந்தி மாலை

பன்னிருபாட்டியலின் பின்பு எழுந்த பாட்டியல் நூல்களுள் சிறந்தது வச்சணந்திமாலை யென்பது. இது வெண்பாப் பாட்டியலென்றும் வழங்கும். இதனை இயற்றிய ஆசிரியராகிய குணவீர பண்டிதரென்பவர் இந் நூலைத் தம் ஆசிரியராகிய வச்சணந்தியின் பெயரோடு வழங்கவைத்தார். இந்நூல் இயற்றப்பட்ட காலம் திரிபுவன வீரனென்னும் அரசனது காலம். கி. பி. 1179-ஆம் ஆண்டு முதல் 1216-ஆம் ஆண்டு வரையில் அரசாண்ட மூன்றாங் குலோத்துங்கனே இப்பெயருடையவனாதலின்[1], இது பன்னிரண் டாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பெற்ற தென்பது போதரும்.

## வேறு சில பாட்டியல்கள்

வாருணப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், தத்தாத்திரேயப் பாட்டியல் என்பன வேறு சில பாட்டியல்கள்.[2] இவற்றுள் நவநீதப்பாட் டியல் மட்டும் இப்பொழுது உள்ளது. மற்றவை வழக்கொழிந்தன. நவநீதப் பாட்டியல் நவநீத நடனார் என்பவரால் இயற்றப்பெற்றது. அதில் காப் பியங்களைப் பற்றிய செய்தி ஒன்றும் காணப்படவில்லை.

## சிதம்பரப் பாட்டியல்

இந்நூல் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த புராணத் திருமலைநாதரென்னும் புலவர்பிரானுடைய குமாரராகிய பரஞ்சோதி யென் பவரால் இயற்றப்பெற்றது.[3] இந்நூலாசிரியருடைய தந்தையார் சிலகாலம் சிதம்பரத்திலிருந்து சிதம்பரபுராணம் முதலிய நூல்களை இயற்றினார். அக்காலத்தில் இவரும் சிதம்பரத்திலே வாழ்ந்திருந்தார்போலும் அன்றி இவருடைய ஊரே சிதம்பரமாதலுங் கூடும். சிதம்பரத்திலே இயற்றப் பட்டமையாலும்,

"பூமேவு திசைமுகனுஞ் செங்கணெடு மாலும்
புத்தேளிர் கணங்களுமா தவத்தோரும் போற்றத்
தேமேவு குழலுமையாள் கண்டுவப்ப மன்றிற்
றிருநடஞ்செய் பேரொளியைச் சிந்தைதனில் வைத்து"

எனத் தொடங்குவதனாலும் இது சிதம்பரப்பாட்டியலென்னும் பெயருடைய தாயிற்று.

---

1 சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 84.

2 சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப. 28.

3 சொக்கநாதருலா, முகவுரை.

"பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவேன் யானே"

என்று இந்நூலாசிரியர் கூறுதலின் இவர்காலத்தே அகத்தியர் பெயரால் இருந்த பாட்டியல் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. இஃது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. முதல் மூன்று இயல்களும் யாப்பருங்கலக் காரிகையைப் பின் பற்றியும் பின் இரண்டும் வச்சணந்திமாலையை அடியொற்றியும் காணப்படு கின்றன. மரபியலில் பிரபந்தங்களின் இலக்கணங்கள் சொல்லப்படுகின்றன. காப்பிய இலக்கணமும் ஒரு செய்யுளிற் கூறப்படும்.[1] இந்நூலின் முதல் மூன்று இயலுக்கு ஓர் உரை உண்டு. அவ்வுரை பெரும்பாலும் யாப்பருங் கலக் காரிகையுரையின் துணை கொண்டு எழுதப்பட்டதாகப் புலப்படு கின்றது.

## பிரபந்தத் திரட்டு

இது காறும் வெளிவராத சில பாட்டியல் நூல்களில் இஃதும் ஒன்று. இதில் முதலில் 96 வகைப் பிரபந்தங்களின் இலக்கணங்கள் சொல் லப்பட்டுள்ளன. மற்றப் பாட்டியல் நூல்களில் உள்ள பிரபந்தங்களிற் சிலவற் றிற்கும் வேறு புதிய பிரபந்தங்கள் சிலவற்றிற்கும் இந்நூல் இலக்கணம் வரையறுக்கின்றது. இதிற் கூறப்பட்ட பல பிரபந்தங்களின் இலக்கண மேனும் இலக்கியமேனும் வேறு வகையாற் புலப்படவில்லை.

இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதன் பிற் பகுதிகள் சாதி, புலவர் மரபு முதலிய பல செய்திகளைப்பற்றி விரிவாகக் கூறுகின்றன.[2]

## பிரபந்த தீபம்

இப் பெயரினதாகச் சென்னை அரசாங்கத் தொன்னூல் நிலயத்தில் ஒரு நூல் காணப்படுகின்றது. அதுவும் பிரபந்தங்களின் இலக்கணங்களைக் கூறும் நூல் போலும். அதன் பெயரிலிருந்தே இச் செய்தி பெறப்படும்.

## இலக்கண விளக்கப் பாட்டியல்

வச்சணந்திமாலையைப் பின்பற்றியும் சில புதிய பிரபந்தங்களின் இலக்கணங்களைக் கூட்டியும் இயற்றப்பட்டது இந்நூல். பத்துவகைப் பொருத்த இலக்கணங்களும் பலவகைப் பிரபந்தங்களின் இலக்கணங்களும் இதில் உள்ளன.

---

[1] சிதம்பரப்பாட்டியல், 41.

[2] இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்துக் குறிப்பெடுத்துக்கொள்ள ஸ்ரீ மகா மகோபத்தியாய டாக்டர் ஐயரவர்கள் அனுமதித்தார்கள்.

## பிற நூல்கள்

காப்பிய இலக்கணங்களை நேர்முகமாகக் கூறுவிடினும் பல இலக்கணச் செய்திகளை அமைக்கும்போது காப்பியத்துக்குரிய இலக்கணங்களும் இடையிடையே சொல்லப்படும் நூல்களில் எழுத்து, சொல், முதலியவற்றை உணர்த்தும் இலக்கண நூல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். செய்யுளின் இலக்கணத்தை வழக்கிலக்கணம் உணர்த்துமிடத்துக் கூறவந்த நன்னூலார்,

> "பல்வகைத் தாதுவி னுடற்குயிர் போற்பல
> சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
> வல்லோர் அணிபெறச் செய்வது செய்யுள்"

என்ற சூத்திரத்தை அமைக்கின்றார். இதனைக் காப்பிய இலக்கணங்களுள் ஒன்றாகக் கருதலாமல்லவா? இங்ஙனமே காப்பிய அலங்காரங்களுள் சேர்க்கப்படும் நிரனிறை முதலிய பொருள்கோளின் இலக்கணங்களும் காப்பிய சம்பந்த முடையனவே யாகும்.

இலக்கண நூல்களுக்கு உரையெழுதிய ஆசிரியர்கள் பலர் அங்கங்கே காப்பிய இலக்கணங்கள் சிலவற்றை உணர்த்திச் செல்கிறார்கள். அங்ஙனமே இலக்கிய நூல்களின் உரையாசிரியர்கள் உரிய இடங்களில் உணர்த்தும் சில இலக்கணங்கள் காப்பிய இலக்கணங்களாதலைக் காண்கின்றோம்.

இலக்கியங்களிலும் திருத்தக்க தேவர், கம்பர், தமிழ்விடுதூது ஆசிரியர் ஆதியோர் தமிழைப்பற்றியும் புலவர்களைப்பற்றியும் பாராட்டியுள்ள இடங்களில் காப்பிய இலக்கணச் செய்திகள் காணப்படுகின்றன. பிற இலக்கண நூல்களால் அறிய இயலாத பல அரிய செய்திகள் அத்தகைய இலக்கியங்களால் தெரிய வருகின்றன. ஆதலின், அவையும் காப்பிய இலக்கணத்தைத் தொகுக்கப் புகுங்கால் மிகப் பயன்படும்.

இதுகாறும் கூறிவந்த செய்திகளால் காப்பிய இலக்கணங்களை அறிதற்குப் பயன்படுந் தமிழ் நூல்களைப் பின்னுள்ளபடி பிரிக்கலாம்.

1. நாடகத் தமிழ் நூல்கள்.
2. யாப்பிலக்கண நூல்கள்.
3. அணியிலக்கண நூல்கள்.
4. பிற இலக்கணங்கள்.
5. உரைகள்.
6. இலக்கியங்கள்.

இனி, மேலே கூறிய நூல்களால் அறிந்த இலக்கணச் செய்திகளை ஆராய்வோம்.

# III

# காப்பிய இலக்கணங்கள் (1)

## காப்பியப் பெயர்கள்

காப்பியமென்பது காவ்யமென்னும் வடசொல்லின் திரிபு என்பது முன்னர்க் கூறப்பட்டது. அதனைத் தமிழில் பொருட்டொடர்நிலைச் செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தொடர்நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள் எனப் பலபடியாக வழங்குவர்.

நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி உரையில் அந்நூலைத் தொடர் நிலைச் செய்யுளென்றே கூறவேண்டு மென்றும் காப்பியமென்று கூறுதல் தகாதென்றும் உரைத்தார். 'மூந்து நூல்களிற் காப்பியமென்னும் வட மொழியால் தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மை' அவர் அங்ஙனம் உரைத்ததற்கு ஒரு காரணம்.

அடியார்க்கு நல்லார் பெருங்கதையினும் சீவக சிந்தாமணியி னும் மணிமேகலையினும் காப்பியமென்னும் பெயர் வந்ததை எடுத்துக் காட்டி, 'சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலை யென்னும் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியமென்று பெயர் கூறுதலும் ஆசிரியர் கருத்தென உணர்க'[1] என்று கூறியுள்ள பகுதி நச்சினார்க்கினியர் கூற்றுக்கு ஏற்ற மறுப்பை உணர்த்துகின்றது.

பெருங்கதையில், "காப்பியக் கோசமும்"[2] என்று பிறிதோரிடத்திலும் காப்பியமென்னும் சொல் காணப்படுகின்றது. சிலப்பதிகார அரும் பத உரையாசிரியர் அந்நூலைக் காவிய மென்றே கூறுவர்:

'இளங்கோவடிகள் தாம் துறந்து இக்காவியம் செய்தார்.'[3]

'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - பாட்டும் உரையும் கலந்து வந்த காவியம்.'[4]

---

1 சிலப். ப. 6-8.

2 பெருங். 1. xxxviii : 167.

3 பதிகம், 2, உரை.

4 பதிகம், 87, உரை.

வீரசோழியக்காரர் காப்பியமென்னும் பெயரை வழங்குவர்.[1]

"கோப்பிற் பொருளன காப்பிய மாகும்"

என்பது அவர் சூத்திரம். அந்நூலின் உரையாசிரியர் 'காப்பியமாவது பெருநூலாம்' என்பர். பிறிதோரிடத்தில் அகலக் கவியென்றும் குறிப்பர். பொருட்டொடர்நிலை மிகவும் விரிவுடையதென்பர் மாறனலங்கார உரையாசிரியர்.[2] தண்டியலங்கார ஆசிரியர் காப்பியம், தொடர்நிலைச் செய்யுள் என்னும் இரண்டையும் ஒன்றன் பெயராகவே அமைப்பர். அவரைப் பின்பற்றியே ஏனை இலக்கணநூலார் கூறுவர்.

தக்கயாகப்பரணி உரையாசிரியர் ஓரிடத்தில் 'முன்னர்ப் பாட்டில் இன்னதனால் இன்னது கெட்டதென்று உணர்தலாகாததை இப்பாட்டிற் கண்டுகொள்க, தொடர்நடைச் செய்யுளாதலின்'[3] என்றார்.

இங்கே தொடர்நடைச் செய்யுளென்றதும் காப்பியத்தையேயாகும். பல செய்யுளுங் கூடிப் பொருட்டொடர்புடைமை காப்பியத்தின் இலக்கணமாதலின் இப்பெயர் வந்தது.

வடமொழித் தண்டியாசிரியர் தம் காவ்யாதர்சத்தில் மகா காவியத்திற்குச் சருக்கபந்தமென்னும் பெயர் ஒன்று கூறுவர். பல சருக்கங்களை உடைமையின் இங்ஙனம் அமைத்தனரென்று தோற்றுகின்றது.

## காப்பியவகை

வடமொழியிற் காப்பியமென்று கூறப்படும் நூல்களைத் தமிழில் பொருட்டொடர் நிலைச் செய்யுளென்று வழங்குதலே பெரும்பான்மை வழக்கம். நூல் முழுவதும் தொடர்ச்சியான பொருளுடைமையின் இப்பெயர் பெற்றன. கதை தழுவாத மலைபடுகடாம் போன்ற சில நூல்களையும் பொருள் தொடர்ச்சியாக அமைந்த அமைப்புக் கருதிப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாக உரையாசிரியர் கூறிப் போந்தனர். இங்ஙனம் வரும் முருகாற்றுப்படை முதலியவற்றையும் கோவை, உலா, தூது முதலியவற்றையும் ஒருவகையில் பொருள் அறாது தொடர்ந்து வருவது நோக்கிப் பொருட்டொடர்நிலைச் செய்யுளென்று கூறல் பொருந்தும். தண்டியலங்கார உரையாசிரியர் கோவையைக் காப்பியங்களிலே சேர்த்து எண்ணுகின்றார். வடமொழியிலும் தமிழ்த் தூது நூல்போன்றமேக சந்தேசம் முதலியன சிறந்த காப்பியங்களாகக் கருதப்படுதல் காண்க.

---

1 அலங்காரப். 36.

2 மாறனலங். 71, உரை.

3 தாழிசை, 636.

6465a
மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1 சென்னை-1

பொருள் தொடர்ந்து வருதலும் பல அடிகளாலேனும் பல செய்யுட்களாலேனும் அமையும் அமைப்பும் பொருட்டொடர்நிலையின் இயல்புகளாம்.

இங்ஙனம் அமைந்த பொருட்டொடர் நிலைகளைச் சிறப்பு நோக்கி மூன்றுவகையாகப் பிரிக்கலாம்.

1. பொருள்மட்டும் தொடர்ந்து கதை தழுவாது வரும் தொடர் நிலைச் செய்யுள்.

2. பொருள் தொடர்ந்து கதை தழுவி வருவனவற்றுள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கனுள் சிலவற்றையே பயனாக உடையன.

3. கதை தழுவிவருவதோடு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் கூறுவன.

மேற்கூறியவற்றுள் முதல்வகையில் பத்துப்பாட்டும் பொருட் டொடர்பை உடைய பிரபந்தங்களும் அடங்கும்.

இரண்டாவது வகையில் மணிமேகலை, நீலகேசி, பெரியபுராணம், புராணங்கள் முதலியன அடங்கும்.

மூன்றும் வகையில் பெருங்காப்பியங்களும் நாடகக் காப்பியங் களும் அடங்கும்.

முதல் இரண்டு வகைகளையும் காப்பியமென்னும் பெயரால் வழங்குவர். மூன்றுவகை முடிபொருட் டொடர்நிலை என்பர். அகலக் கவி என்பதும் இதுவே.

இரண்டும் மூன்றும் கதைச் செய்யுளென்னும் பகுப்பில் அமை வன. பிற்காலத்து எழுந்த காப்பியங்கள் யாவும் இப் பகுப்பு இரண்டனுள் அமைவனவேயாம்.

இத்தகைய காப்பியங்களின் இலக்கணங்களை அறிவதற்குத் துணைபுரியும் நூல்களைப்பற்றிய செய்திகள் முன்னர்க் கூறப்பட்டன. அவ் விலக்கண நூல்களால் அறியப்படும் செய்திகளை இனி ஆராய்வோம்.

வடமொழியில் காப்பிய இலக்கணங்களை விளக்கும் நூல்களிற் பெரும்பாலும் காப்பியத்தின் பொது இலக்கணம், காப்பியங்களின் வகை, காப்பியத்தில் அமையும் அணிகள், சுவைகள், குணம், குற்றம் என்பன ஆராயப்படும். தமிழ் நூல்களில் இந்த முறை இல்லாவிடினும் இத்தகைய இலக்கணங்கள் அங்கங்கே கூறப்படுகின்றன.

# தொல்காப்பியம்

தொல்காப்பியத்தில் காப்பிய இலக்கணங்களாகக் காணப்படும் செய்திகளில் இங்கே கூறப்பட்ட அமைப்புக்களில் பெரும்பாலனவை உள்ளன. முன்பு தொல்காப்பியத்திற் காணப்படும் நூல் வகைகள் இன்னவென்பது கூறப்பட்டது. அவற்றுள் பா எனப்படும் காப்பிய வகைகளைப் பற்றிய செய்திகளைச் செய்யுளியலில் வனப்பைப் பற்றிக் கூறும் பகுதியில் காணலாம். அப்பகுதியிலுள்ள சூத்திரங்களும் அவற்றின் உரைகளும் ஆராய்தற்குரியன.

## வனப்பிலக்கணமும் காப்பிய வகையும்

தொல்காப்பியம் செய்யுளியலில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டுவகை வனப்புக்கள் கூறப்படுகின்றன. அவற்றைச் செய்யுள் உறுப்பெனக் கூறுவர்.[1]

இவ்வெட்டும் தொடர்நிலைச் செய்யுட்கண்ணே வருவன வென்பது உரையாசிரியர்கள் கொள்கை. அவ்வனப்பென்னும் தலைப்பின்கீழ்க் கூறப்படும் இலக்கணங்களிற் பெரும்பாலன தொடர்நிலைச் செய்யுளோடு தொடர்புடையனவே.

'இவை பல செய்யுளும் திரண்டவழி இவ் வெண்வகையும் பற்றித் தொகுக்கப்படும் எனக் கூறப்பட்டதாகலானு மென்பது. இவற்றை வனப்பென்று கூறப்படுமாறு என்னை? அச்சூத்திரத்துப் பெற்றிலமாலெனின், வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலின் அவ்வாறு கோடும். அதனாற் பலசெய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப்பென்னும் பெயர்ப்பகுதி வகையான் ஏற்பதென்பது. அஃதேல் இவ் வெட்டும் தனிவரும் செய்யுட்கண் வந்தால் அழகு செய்யாவோ வெனின் அவைபோல் இவை செய்யுட்கு மாகும் என்றற்கன்றே அவ்விருபத்தாறு உறுப்போடும் இவற்றை ஓரினப் படுத்து ஓதிய தென்பது. அஃது இயைபிற்கு ஒப்ப வாராதென்பது முன்னர்ச் சொல்லுதும். இதனானே முன்னை யுறுப்புக்கள் தொடர்நிலைச் செய்யுட்கு வருமென்பதூஉங் கொள்க. அல்லாக்கால் மாத்திரை முதலாகிய ஒரோ உறுப்பான் அழகு பிறவாதாகிய செல்லும், இவற்றையே வனப்பென்று ஒரோ செய்யுட்கே கொள்ளினென்பது[2]' என்று பேராசிரியர் கூறுவது காண்க. நச்சினார்க்கினியரும் இக்கருத்தை யுடையவரே.[3]

---

[1] தொல். செய்யுள். 1.

[2] தொல். செய்யுள். 234, உரை.

[3] சீவக. உரை.

வனப்பு என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். அணி என்பதும், அலங்காரமென்பதும் அத்தகைய பொருளுடையனவேயாம். ஆதலின் வனப்பென்பதையும் அலங்காரமாகவே கொள்ளலாம். 'அம்மை முதலாயின வனப்பலங்காரமும்' என்று இவற்றை ஒருவகை அலங்காரமாகவே சொல்லுவர் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர்.[1] தொடர்நிலை முழுவதும் அமைந்த அலங்காரம் வனப்பு.

## அம்மை

அம்மை முதலிய எட்டுவகை வனப்புக்களுள் அம்மையென்பது அடிநிமிர்வில்லாத செய்யுட்கள் பல தொடர்ந்த நூலின் அமைதியாகும். அவை அறம், பொருள், இன்பம், வீடென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுமென்றும் பதினெண்கீழ்க் கணக்கு அவ்வனப்பமைந்த நூல்களென்றும் கூறுவர்.[2] 'அமைதிப்பட்டு நிற்றலின் அம்மையாயிற்று' என்பது பேராசிரியர் கூறும் சொற்காரணம். இந்த வனப்பையுடைய நூல்கள் நீதிநூல்கள். வடமொழியிலும் நீதி சாஸ்திரங்கள் உள்ளன. அவை காப்பியங்களாகக் கொள்ளப்படவில்லை.

## அழகு

இரண்டாவது வனப்பு அழகு எனப்படுவது.

"செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே" (செய். 236)

என்பது சூத்திரம்.

'திரிசொற் பயிலாது செய்யுளுட் பயின்று வரும் மொழிகளாற் சீரறுத்துப் பொலிவுபட்ட யாப்பின் பொருள் அழகு என்றவாறு[3]' என்பது இதன் உரை. இவ்வனப்புக்கு எட்டுத்தொகை நூல்களை உதாரணங் காட்டுவர். செய்யுளின் நடையழகு நோக்கி அமைந்தது இவ்வனப்பு. அம்மை தாய பனுவலென்றும் அழகு அத்தகையதன்றென்றும் அம்மையைப்போல அறம் பொருள் இன்பமென மூன்றும் சொல்லப்படுவன அல்லவென்றும் பேராசிரியர் கூறுவர். இவ்வனப்புக்குக் காட்டிய உதாரணம் பற்றி ஆராய்ந்தால் இதுவும் காப்பியத்துக்குரிய தன்றென்று தெரிகின்றது.

---

1 யா. வி. ப. 199.

2 தொல். செய்யுள். 235, பேர்.

3 'அழகாவது செய்யுட் சொல்லாகிய திரிசொல்லின்றல் ஓசை இனியதாக நன்கினிது யாக்கப்படுவது' எனக் கூறுவர், யா. வி. ஆசிரியர் (ப. 377.)

அம்மையும், அழகும் தனிநிலைச் செய்யுட்கள் தொகைநிலைச் செய்யுட்கள் என்பவற்றில் அமைந்த இலக்கணமென்று கொள்ளுதலும் பொருந்தும்.

## தொன்மை

மேல் உணர்த்தப்படும் தொன்மை தோல் விருந்து என்னும் மூன்றும் தொடர்நிலைச் செய்யுட்களுள் மூன்று வகையில் அமைந்த அமைப் பென்று தோற்றுகின்றது.

"தொன்மை தானே
உரையோடு புணர்ந்த பழமை மேற்றே"

என்பது தொன்மையின் இலக்கணம். 'தொன்மையாவது உரைவிராய்ப் பழமையவாகிய கதைபொருளாகச் செய்யப்படுவது' என்பது உரை.

தொடர்நிலைச் செய்யுட்களில் இடையிடையே உரை விரவிவருவன பழங்கால முதல் இருந்தன. அவற்றைத் தொன்மை என்னும் இவ் வனப்புடையதாக அமைப்பர். இவ்வனப்புக்கு உதாரணமாகப் பேராசிரியர் பாரதம் தகடூர் யாத்திரை என்பவற்றையும், இளம்பூரணர் இராமசரிதம் பாண்டவசரிதம் முதலாயினவற்றின் மேல்வரும் செய்யுட்களையும், நச்சினார்க்கினியர் பாரதம் தகடூர் யாத்திரை சிலப்பதிகாரம் ஆகியவற்றையும், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் பாரதம், இராமாயணம் என்பவற்றையும் எடுத்துரைப்பர். இவற்றுள் இப்பொழுது வழக்கிலுள்ளது சிலப்பதிகாரம். அது சிறந்த காப்பியமேயாகும். அதன் இடையிடையே உரை வந்துள்ளது. ஆதலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்றே அதற்கு ஒரு பெயர் வழங்குகின்றது. பிற்காலத்தில் வடநூலின் வழியெழுந்த தண்டியலங்காரமும்,

"உரையும் பாடையும் விரவியும் வருமே"

என்று காப்பிய இலக்கணம் அமைக்கின்றது.

தொல்காப்பியர் காலத்தே உரையிடையிட்ட பாட்டுடைத் தொடர்நிலைகள் மிகுதியாக வழங்கிவந்தன போலும். இல்லையெனின், அவற்றைத் தனியே ஒரு பிரிவாகப் பிரித்துக் கூறாது பின்வருவனவற்றோடு சேர்த்துக் கூறியிருத்தல் கூடுமன்றோ? உரையின் இலக்கணம் வகுக்குங் காலும் தொல்காப்பியர் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளை நினைவுறுத்துகின்றார்.[1]

---

1 தொல். செய்யுள். 173.

முற்காலத்திருந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களின் பெயர்கள்கூட இப்பொழுது தெரிந்தில. சங்ககாலத் தெழுந்தவை முன்னர்க் கூறிய இராமாயணம், பாரதம், தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம். இவை தொன்மைக்கு உதாரணங்கள். பிற்காலத்து எழுந்த பாரதமொன்று உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்துள்ளது. அது பாரத வெண்பாவென வழங்கும்.

## தோல்

தொடர்நிலைச் செய்யுளின் இரண்டாவதுவகையாகிய தோலென்பதன் இலக்கணம்,

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"[1]

என்பதிற் சொல்லப்படும்.

இச் சூத்திரத்தின் உரையினுல் தோலென்பது பல பாட்டுக்களாலேனும் தொடர்ந்துவரும் ஆசிரியப்பாவினுலேனும் இயற்றப்பெறும் காப்பியம் என்பது பெறப்படும். இழுமென்மொழி, பரந்தமொழி என்பன யாப்பையும் நடையையும் பற்றிய இலக்கணம். விழுமியது நுவலுதல் பொருள் அமைப்பின் இலக்கணம். அறம் பொருள் இன்பம் வீடு என்பன விழுமிய பொருளாகும். இந் நான்கையும் பொருளாக உடையது தோல் என்னும் காப்பிய அமைப்பு. பிற்காலத்தில் எழுந்த பெருங்காப்பிய இலக்கணமும் இங்ஙனமே அமைகின்றது காண்க. நச்சினர்க்கினியர் இச் சூத்திர உரையில் தோலுக்குச் சிந்தாமணியை உதாரணங் காட்டுவர்.[2] பேராசிரியரும் நச்சினர்க்கினியரும் இச் சூத்திர உரையில் தோலென்பது ஒரு கதைமேல் தொடுக்கப்படுவதென்று குறித்தனர்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையின்கண், தொல்காப்பியமே சிலப்பதிகாரத்திற்கு இலக்கணமென்று உரைத்து அப்பால், 'இழுமென்.........................ஒழுகினும் என்பதனுல், குவிந்து மெல்லென்ற சொல்லானும், பரந்து வல்லென்ற சொல்லானும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேற் கொச்சகத்தானும், ஆசிரியத்தானும், வெண்பாவானும், வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோன்ன செய்யுட்களானும் கூறுக வென்றமையின், இத்தொடர்நிலைச் செய்யுள் அங்ஙனங் கூறிய தொடர்நிலையென வுணர்க' எனத் தோலின் இலக்கணச் சூத்திரப் பொருளை விரித்து உரைப்பர்.

---

1 தொல். செய்யுள். 238.

2 சீவக. 1, உரையையும் நோக்குக.

யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியரோ, 'தோலென்பது, இழுமென்ற மெல்லிய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களோடுங் கூடிய பல அடிகளை உடையனவாய்க் கிடப்பனவும் என இரண்டு வகைப்படும்' எனக் கூறி இவற்றிற்கு முறையே மார்க்கண்டேயனார் காஞ்சி, மலைபடுகடாம் என்பவற்றை உதாரணங் காட்டுவர்.

தொன்மையும் தோலும் பொருளமைப்பில் ஒருவகையினவே; யாப்பு முறையில் வேறுபாடுடையனவென்று கோடலே பொருந்தும். தொன்மை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாதலின் அது தனியே வகுக்கப்பட்டது. தோல் பல குறுஞ் செய்யுட்களால் அமைந்தது, சில நெடுஞ் செய்யுட்களால் அமைந்தது என இருவகைப்படும். இவற்றைப் பற்றியே உரையாசிரியர்கள் பலவாறு கூறுகின்றனர்.

தொன்மையும் தோலும் ஒரு பழங்கதை பொருளாக இயற்றப் படுவன. ஆதலின் அவை கதைச் செய்யுளாகும்.[1]

## காப்பியமும் கதையும்

ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய பழைய கதைகள் பல அவ்வந் நாட்டில் வழங்கி வருவதும் அவற்றைக் கவிகள் காப்பியங்களாக அமைப்பதும் இயல்பு.[2] கிரேக்க நாட்டினரால் வழங்கப்பட்டு வரும் பழங்கதைகள் ஹோமரென்னும் கவியால் காப்பியங்களாக்கப்பட்டன. புராணக் கதைகள் பல வடமொழிக் கவிஞர்களால் காப்பியங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இராமாயணம், பாரதம், பிருஹத் கதை முதலியன அத்தகையனவே.[3]

பொருள் தொடர்ந்து வருவதற்குக் கதையே ஏற்புடையதாகும். கதையை விரிக்கும் வழி விரித்தும் தொகுக்கும்வழித் தொகுத்தும் பல வகைச் சொற்பொருள் நயங்களை யமைத்தும் காப்பியங்களாக்குதல் எளிது. அறம் பொருள் இன்பம் வீடென்னும் நாற்பொருளையும் தனியே நீதி வாயிலாக எடுத்துக் காட்டுதலினும் கதையில் அமைத்துக் காட்டுதலே கவர்ச்சியைத் தரும். ஆதலின் காப்பியம் கதைமேற் படர்வதாயிற்று. வித்தாரகவி கதை முதலாகிய செய்யுளைப் பாடும் வன்மையுடையானென்று யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் கூறுவர்.[4] அக்கவிஞனுடைய வித்தார மான கவித்துவ ஆற்றல் கதை பொருளாகச் செய்யும்பொழுதுதான்

[1] தொல். பொ. செய்யுள். 237, 238, பேர்.

[2] M. Winternitz : Some Problems of Indian Literature, p. 47.

[3] F. Lacote : Essay on Gunadhya and the Brhat Katha, translated by Raja Sabha Bushana The Rev. A. M. Tabard, M. A. M. R. A. S. p. 12.

[4] ப. 513.

வெளிப்படும். கிரேக்க மொழியிற் பேரறிஞராக விளங்கிய அரிஸ்டோடில் என்பார் காப்பியங்களிற் சிறந்ததாக 'ட்ராஜெடி' என்பதை அமைப்பர். அதனைக் 'கருணப்ரதான காவியம்' என்று கூறலாம். அதற்கு ஜீவனும் உயிர்நிலையுமாக இருப்பது கதை யமைப்பே என்று அவர் கூறுவர்.[1] இதிஹாசங்களிலுள்ள கதை பொருளாகக் காப்பியங்கள் செய்யப்பட வேண்டுமென்று பாமஹ ஆசிரியரும் கூறினர்.[2]

ஆதலின் பழங்கதை பொருளாகக் காப்பியங்கள் உண்டாதல் நாகரிக மிக்க நாடுகளில் வழக்கமென்பதும் அத்தகைய பயிற்சி தண்டமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே இருந்ததென்பதும் அது பற்றியே தொல்காப்பியர் இவ்விலக்கணம் அமைத்தனரென்பதும் அறியக் கிடக்கின்றன. பிற்காலத்தில் ஜைனர்களுக்குள் வழங்கிவந்த பழங்கதையைச் சீவக சிந்தாமணி யென்னும் காப்பியமாகத் திருத்தக்க தேவர் இயற்றியிருத்தல் காண்க.

## விருந்து

தொன்மை, தோல் என்னும் பெயர்களில் பழமை யென்னும் பொருட்குறிப்பு அமைந்துள்ளது. அவ்விரண்டும் பழங்கதையைப் பொருளாக உடையன. இனி, புதுவது புனைந்த கதையைப் பொருளாக உடைய காப்பியத்தைத் தொல்காப்பியர் விருந்தென்னும் வகையில் அடக்குவர்.

"விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"[3]

என்பது சூத்திரம். இதற்கு, 'விருந்து தானும் புதிதாகத் தொடுக்கப்படும் தொடர்நிலை மேற்று' என்று உரைகூறிச் சில பிரபந்தங்களை உதாரணங் காட்டுவர் பேராசிரியர். நச்சினார்க்கினியரும் பிரபந்தங்களையே உதாரணங் காட்டினர். இளம்பூரணர், 'விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறி போயப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு. புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல் வழியன்றித் தானே தோற்றுவித்தல்' என்பர். 'விருந்து என்பது புதியவாயினவற்றின் மேற்று; அவை இப்பொழுதுள்ளாரைப் பாடும் பாட்டு' என்பது யாப்பருங்கல விருத்தியாசிரியர் கூறுவது.

இங்ஙனம் உரை கூறப்படினும், விருந்தென்பது புதிய கதையைப் புனைந்துரைத்த செய்யுளின்மேற்று என்று உரைகோடலே பொருத்தமாகுமென்று தோற்றுகின்றது. பழங்கதை அமைந்த காப்பியங்களுக்கு வகை

1 Aristotle : The Art of Poetry—Translated by Ingram Bywater, p. 21.

2 Bamaha, I. 9.

3 தொல். செய். 239.

கூறியவர் அவற்றோடு ஒத்த இனமாகிய புதுக்கதை அமைந்த காப்பியங்களுக்கும் வகை கூறவேண்டுமன்றோ? புதுமைக்கதைகளை இக் காலத்தில் புதியனவென்னும் பொருள் தரும் 'நாவல்' (Novel) என்னும் பெயரால் ஆங்கிலத்திற் குறிக்கின்றார்கள். விருந்தென்பது அப் புதுமையைக் குறிப்பதாகக் கொள்வதாற் குறை என்ன?

புதிய புதிய கதைகளை அமைத்துப் புதிய புதிய காப்பியங்களை இயற்றும் வழக்கு மற்ற மொழிகளில் விரிவாகக் காணப்படுகின்றது. ஆங்கிலநாடகக் காப்பியங்களிற் பெரும்பாலன இம் முறையிலேயே அமைந்தன. புதுவது புனைந்த காப்பியங்கள் வடமொழியிலும் உண்டு. பாமஹரும் (1 : 17) ருத்ரடரும் அத்தகைய காப்பியங்கள் உண்மையைக் குறிப்பர்.[1] தமிழ்மொழியில் பிற்காலத்தில் இத்தகைய காப்பியங்கள் இயற்றப்படவில்லை. ஆயினும் தொல்காப்பியர் காலத்தில் அத்தகைய செய்யுட்கள் இருந்தன வென்றே கொள்ளுதல் வேண்டும்.

புதுவது புனைந்த கதைகள் தமிழர்களுக்குப் புதியனவல்ல. சிறுகுரீயுரை, தந்திரவாக்கியம் முதலியன புதியன புனைந்த உரை நடை நூல்கள். அவற்றைப் போலப் புதியன புனைந்த செய்யுள் நடை நூல்களும் முன்பு இருந்திருத்தல் ஏற்புடையதேயன்றோ?

சீவலமாறன் கதை முதலிய அரசர்கள் சரிதையைக் கூறும் காப்பியங்களை விருந்தென்னும் வகையில் அமைக்கலாம். 'இப்பொழுதுள்ளாரைப் பாடும் பாட்டு' என்று யாப்பருங்கல விருத்தியாசிரியர் உரைப்பது இங்கே நினைத்தற்குரியது. ஸ்ரீ ராஜராஜ விஜயம், வீரணுக்க விஜயம், குலோத்துங்க சோழசரிதை[2] என்னும் வரலாற்றுக் காப்பியங்கள் அவ்வக் காப்பியத் தலைவர்கள் காலத்தே பாடப்பெற்றனவாதலின் அவை விருந்தே யாகும்.

## இயைபு

தோல் தொன்மை விருந்து என்பன மூன்றும் கதைச் செய்யுளாகிய காப்பியத்தின் வகைகளாதலை அறிந்தோம். அடுத்த வனப்பு இயைபு எனப்படுவது.

> "ஞகாரை முதலா ளகாரை யீற்றுப்
> புள்ளி யிறுதி யியைபெனப் படுமே"

என்பது அதன் இலக்கணம் உரைக்கும் சூத்திரம். 'ஞணநமன யரலவழள வென்னும் பதினொரு புள்ளி யீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ்

[1] Dr. J. Nobel : The Foundations of Indian Poetry and their Historical Development, pp. 150—151.

[2] சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 47.

செய்யுள் பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது இயை பெனப்படும் என்றவாறு' என்பது பேராசிரியர் உரை. இதற்கு மணி மேகலையையும் பெருங் கதையையும் அவர் உதாரணமாகக் காட்டுவர்.

இச்சூத்திரம் பொருட்டொடர் நிலையில், ஒவ்வொரு பாட்டின் இறுதியும் அமைந்த முறைபற்றி வகுக்கப்பட்டது. இப்பொழுது னகர ஈற்றால் இற்ற காப்பியங்களே அறியப்படுகின்றன. அவையும் தொல்காப் பியர் காலத்துக்குப் பின்னர் எழுந்தன. இச்சூத்திரத்திற் கூறிய இலக்கணத் திற்கு இலக்கியம் அவர் காலத்திற்கு முன்னரே வழங்கியிருத்தல் வேண்டும். இக்கருத்தை உட்கொண்டே, 'மற்றை யீற்றான் வருவனவற்றுக்கும் ஈண்டு இலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கொள்க; இப்பொழுது அவை வீழ்ந்தனபோலும்' என்று பேராசிரியரும், 'ஒழிந்த ஒற்றுக்களுக் கும் இலக்கணம் உண்மையின் இலக்கியம் இக்காலத்து வீழ்ந்தனபோலும்' என்று நச்சினார்க்கினியரும் கூறினர்.

இயைபென்ற பெயரை நினைந்து சொல் இயைபையும் இலக்கண மாக அமைத்தனர் உரையாசிரியர்கள். அவ்வியைபு செய்யுளந்தாதி என்றும் சொற்றொடர்நிலையென்றும் சொல்லப்படும். அந்தாதி, கலம்பகம் முதலிய பிரபந்தங்கள் சொற்றொடர் நிலைகளாகும். அவற்றில் சொல் மாத்திரம் தொடர்ந்து வந்திருக்கும். பொருட்டொடர் நிலைக்கண் இச் சொற்றொடர்ச்சி அமைந்ததற்கு உதயணன்கதையை உதாரணமாகக் கொள்க. கலியாணன் கதை என்பதும் அத்தகையதே.[1] இவ் வியைபிலக்கணத்தை நினைவிற் கொண்டே தண்டியலங்கார உரையாசிரியர்,

"பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை"[2]

என்னும் சூத்திர உரையில், 'இரண்டென்றது வகையென்ற மிகையான், மூன்றாவது பொருளினாலுஞ் சொல்லினாலுந் தொடர்வதும் உண்டெனக் கொள்க' என்று அமைத்தார். அவ்வாறே மாறனலங்கார உரையாசிரி யரும்[3] கூறினர்.

## புலன்

அடுத்ததாகிய வனப்பு, புலன் என்பது. அதன் இலக்கணத்தை உரைக்கும் சூத்திரம் வருமாறு:—

"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே."

---

[1] யா. வி. ப. 195.

[2] தண்டி. 6.

[3] மாறன். 70, உரை.

இதன் உரையிற் பேராசிரியர் 'சேரிமொழி யென்பன பாடி மாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணுமைப் பொருட்டொட ரானே தொடுத்துச் செய்வது புலனென்று சொல்லுவர் புலனுணர்ந்தோர் என்றவாறு. அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வனவென்பது கண்டுகொள்க' என்பர். திரிசொல்லின்றி எளிதாகச் செய்யப்படுவது புலனென்பது யாப்பருங்கல விருத்தியாசிரியர் கொள்கை.

தன்கட் கூறிய பொருள் வெளிப்படையாகத் தோன்றும்படி சேரி மொழியால் அமைவது பற்றி இக்குறியீடு அமைந்ததுபோலும்.

"உரையும் பாடையும் விரவியும் வருமே"

என்று காப்பிய இலக்கணத்திலும் இப்புலனுக்குரிய சேரி மொழியாகிய பாஷை வருதல் காண்க. நாடகச் செய்யுளில் கூற்றுக்குரியாருக்கு ஏற்ற வாறு சொல் அமையவேண்டிச் சேரிமொழி விரவிவரவேண்டும். வடமொழி நாடகக் காப்பியங்களில் பாகதம் விரவிவருதலைப்போல இதனைக் கொள்ளு தல் பொருந்தும்.

## இழைபு

எட்டாவது வனப்பாகிய இழைபென்பது, 'இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தது' என்பர். ஆதலின் காப்பியச் செய்யுட்கு உரிய தன்று அவ்விலக்கணம்.

இதுகாறும் கூறியவற்றால் அம்மை, அழகு, இழைபு என்னும் மூன்றனையும் ஒழித்து ஏனைய வனப்புக்களுக்குரிய இலக்கணங்கள் காப்பியங்களோடு தொடர்புடையன வென்பதை அறியலாம். அவற்றுள் இயற்றமிழ்க் காப்பியங்களுக்கு நான்கு வனப்புக்களும், நாடகக் காப்பியங் களுக்கு ஒன்றும் கூறப்படுகின்றன. இது தொல்காப்பியத்திற் கண்ட காப்பியவகை இலக்கணம்.

பிற்காலத்தில் வடமொழி யிலக்கணம் பற்றி யெழுந்த தமிழ் நூல்களில் பெருங்காப்பியம், காப்பியம் என்பவைமாத்திரம் சொல்லப்பட் டன. அவற்றைப் பிறகு ஆராய்வோம்.

## வண்ணங்கள்

காப்பியங்களில் உள்ள நடையை[1] நெறியென்றும் மார்க்கமென் றும் கூறுவர். வீரசோழியமும் தண்டியலங்காரமும் இந்நெறியை வட

[1] Diction or Style.

நூலாகிய காவ்யாதர்சத்தைப் பின்பற்றி இரண்டாக்கி உரைக்கும். மாறனலங்காரம் மூன்றென்னும். காப்பியத்துக்கு அமைந்த அணிகள் குண அணி, பொருள் அணி, சொல்லணியென மூவகைப்படும். இவற்றில் குண அணியைக் காப்பியத்தின் நடையைக் குறிக்கும் இலக்கணமாகக் கொள்வர். அவற்றைக் காப்பியங்களின் ஆவியென்பர் வீரசோழியக்காரர். "வண்ண நிரைநிறமா" என்பது வீர சோழியம்.[1] வண்ணங்கள் காப்பியமாகிய புருஷனுக்கு நிறம் போன்றன. அவை இருபது ஆகும். அவற்றைத் தொல்காப்பியனார் செய்யுளியலிற் கூறுவர்.

"வண்ணந் தாமே நாலைந் தென்ப" (செய்யுள். 212)

என்னுஞ் சூத்திர உரையில் பேராசிரியர் 'வண்ணமென்பது சந்த வேறுபாடு. நூல் பலவாகி வேறுபடினும் அவை ஈண்டு அடங்குமென்பதூஉம், அவ்வேறு பாட்டானெல்லாஞ் சந்த வேற்றுமை செய்ய வென்பதூஉங் கூறியவாறு. அது நுண்ணுணர் வுடையார்க்குப் புலனுமென்பது' என்பர். அதனுல் வண்ணங்கள் காப்பியங்களில் உள்ள செய்யுட்களின் ஓசை பற்றியன வென்று புலனுகும். அவற்றைக் குண அலங்காரங்களோடு சேர்த்து எண்ணுதல் தகும். உடம்பின் நிறத்தைப் போலச் சொல்லின் ஓசை குறித்து நிற்றலின் காப்பியத்தின் குணமாதல்காண்க. மாறனலங்கார உரையாசிரியர் குணவலங்காரங்களைக் கூறும் பொதுவியலின் ஈற்றில், செய்யுட்குண வலங்காரங்கட்கு ஒழிபு கூறும் வாயிலாக வண்ணங்கள் அவர் கூறும் மூன்று நெறியார்க்கும் வேறு வேருகுமென்றும், சில பொதுவாவனவு முளவென்றும் கூறிப் போந்தார்.[2]

அன்றியும், வண்ண இலக்கணங்களிற் சில குணவணிகளின் இலக்கணங்களோடு ஒத்துநடக்கின்றன. அவை தமிழில் வண்ணமெனத் தொன்று தொட்டு வழங்குகின்றன. ஆயினும் வட நூலார் இலக்கணம் பற்றி அவற்றைக் குணமென்று கொள்ளுதலும் ஆம். யாப்பருங்கல உரையில் வண்ணங் கூறிப் பின் வழுவை உரைப்பர். அணியிலக்கணங்களிலும் பிற நூலினும் குணங் கூறிக் குற்ற முரைத்தல் மரபு; ஆதலின் வண்ணமும் செய்யுளின் குணமெனக்கொண்டு அதனை முற்கூறிப் பின் குற்றங் கூறினர் போலும்.

தொல்காப்பியத்தில் பாஅவண்ணம், தாஅவண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டுவண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என இருபது வண்ணங்கள் சொல்லப்பட்டன.

---

1 அலங்காரப். 6.

2 மாறனலங். 85, உரை.

இவற்றுட் சில வடமொழி நூலார் கூறும் குணவலங்காரங்கள் ஆதலை ஆராய்வோம் :

1. வல்லிசை வண்ணம் : இது வல்லெழுத்துப் பயின்று வருவது. இது கௌட நெறியார் கூறும் செறிவென்னும் குணவலங்காரமாகும். 'வல்லின வண்ணத்தால் வல்லெழுத்துச் செறிந்த சொல்லோடும் வற்கெனத் தொடுப்பதே வேண்டுவர் கௌடர்'[1] என்றார் மாறனலங்கார உரையாசிரியர். இவ் வல்லிசை வண்ணம், 'தோற்கயிறும் இரும்புந் திரித்தாற் போலவும், கல்மேற் கல் உருட்டினாற் போலவும் வருவது' என்பர்.[2]

2. மெல்லிசை வண்ணம் : இது மெல்லெழுத்துப் பயின்று வருவது.[3] இது வைதருப்ப நெறியார் கூறும் செறிவென்னும் குணவணியாகும். 'இது வைதருப்பச் செறிவு; என்னை? மெல்லினமாகிய எழுத்துச் செறிய மெல்லின வண்ணமுற்று அவ்வெழுத்தான் ஆய சொற்கள் செறியச் செறித்தமையின் எனக்கொள்க'[4] என்பது காண்க. இவ் வண்ணம் அன்ன நடையும் தண்ணம்பறையும் போலவும், மண்மேல் நடந்தாற் போலவும் வருவது.[5]

3. இயைபு வண்ணம் : இடையெழுத்து மிக்கு வருதல் இவ் வண்ணம் ஆகும்.[6] இவ்வண்ணத்தைப் பாஞ்சால நெறியார் கூறும் செறிவு என்னும் குணவலங்காரமாகக் குறிப்பர். 'இது பாஞ்சாலச் செறிவு; என்னை? இடையினமாகிய எழுத்து மிகவும் செறிய இயைபு வண்ணமும் உற்று அவ்வெழுத்தானாய சொற் செறிய வந்தமையானெனக் கொள்க'[7] என்பர் மாறனலங்கார உரையாசிரியர்.

4. ஒழுகு வண்ணம் : ஒழுகியவோசையாற் செல்வது ஒழுகு வண்ணம்.[8] ஒழுகியவோசையாவது வெறுத்திசையின்றி அவ்வச் செய்யுட் கேற்ற சொன்னடையாகும். ஒழுகிசையென்னும் குணவலங்காரம் ஒன்று உண்டு.[9] அஃது இவ்வொழுகு வண்ணமேபோலும். அதனை இன்னிசையென்றுங் கூறுவர்.[10] இன்னுவிசையாவது மென்னடை யொழுக்கத்து வல்லொற்றடுத்து மிக்கது போலவும், அந் நடையொழுக்கத்து உயிரெழுத்தடுத்துப் பொய்ந்நலம் பட்டு அறுத்திசைப்பது போலவும் வரும். இன்னிசை அங்ஙனம் வாராது. இவ்வொழுகு வண்ணம் நீரொழுக்கும் காற்றொழுக்கும்போல வருவது.[11]

---

1 மாறனலங். உதா. 88, உரை.
2 யா. வி. ப. 393.
3 தொல். செய்யுள். 217.
4 மாறனலங். உதா. 88, உரை.
5 யா. வி. ப. 393.
6 தொல். செய்யுள். 218.
7 மாறனலங். உதா. 90, உரை.
8 தொல். செய்யுள். 226.
9 தண்டி. 20.
10 மாறனலங். 83.
11 யா. வி. ப. 393.

5. ஒரூஉ வண்ணம் : "ஒரூஉ வண்ண மொரீஇத் தொடுக்கும்" என்பது இதன் இலக்கணம். பேராசிரியர், 'யாற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதோன்றனை அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉ வண்ணம்' என உரையமைத்தார். குணவலங்காரங்களுள் ஒன்றாகிய உய்த்தலில் பொருண்மையின் இலக்கணத்தை, "கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற், குரியசொல் லுடைய துய்த்தலில் பொருண்மை"[1] என்று தண்டியாசிரியர் கூறினர். அதன் உரையில் உரையாசிரியர், 'கவி தன்னாற் கருதப்பட்ட பொருளை விளங்க விரிக்குஞ் சொல்லைச் செய்யுளுள்ளே உடைத் தாய்ப் பிறிதுமொழி கூட்டி உரைக்கும் பெற்றியின்றி வரத் தொடுப்பது' என்பர். ஒரூஉ வண்ணத்தின் இலக்கணமும், உய்த்தலில் பொருண்மையின் இலக்கணமும் பெரும்பாலும் ஒப்புமையுடையனவாகக் காணப்படுகின்றன. அதனால் இவ்விரண்டும் ஒன்றென்றேனும் ஓரினமென்றேனும் கொள்ளு தலிற் பிழையேதும் இல்லை.

இவற்றால் தொல்காப்பியனார் கூறிய வண்ணங்களுள் ஐந்து வட நூலாளர் கூறும் குணவணிகளாதலை அறியலாகும். எனவே இவ்வைந்து மல் லாத வண்ணங்கள்பிறவும் குணவலங்காரங்களுக்கு இனமென்றே கூறுதல் தகும்.

தொல்காப்பியனார் கூறிய இருபது வண்ணங்களையே கையனார் என்பாரும் கூறினர்.[2] அவிநயனார் நூறு வண்ணங்கள் வகுத்து இலக்கணம் கூறினாரென்று தெரியவருகின்றது.[3]

## குற்றமும் குணமும்

சொல்லதிகாரத்திற் பொதுப்பட எழுவகை வழுவைத் தொல் காப்பியர் அமைத்தார். அவ்வழுவினின்றும் நீங்கிச் செய்யுள் இயலவேண்டும். மரபியலில் இலக்கண நூற்குற்றம் பத்துக் கூறி அவற்றின் எதிர்மறையாகி யவை குணம் என்று அமைத்தார். அவை அதிகாரம் நோக்கி இலக்கண நூலிற்கு உரியனவாகச் சொல்லப்படினும் காப்பியங்களுக்கும் உரியன வென்பது முன்னர்க் கூறப்பட்டது. குற்றங்களைப் பற்றிய சூத்திர உரையிற்[4] பேராசிரியர், 'ஒழிந்த செய்யுட்காயின் இவை அனைத்தும் ஆகா வென்பது ஈண்டே தழாஅல் வேண்டும்' என்று அக் குற்றங்களைத் தொடர் நிலைச் செய்யுள் முதலியவற்றிலும் வரைதல் வேண்டுமென்பதைப் புலப்படுத் தினார்.

தொல்காப்பியனார் கூறிய குற்றங்களாவன கூறியது கூறல், மாறு கொளக் கூறல், குன்றக்கூறல், மிகைபடக் கூறல், பொருளில மொழிதல்,

[1] தண்டி. 22.
[2] யா. வி. ப. 389.
[3] யா. வி. ப. 389.
[4] தொல். மரபு. 108, உரை.

மயங்கக் கூறல், கேட்போர்க் கின்னா யாப்பிற்றாதல், பழித்த மொழியான் இழுக்கங் கூறல், தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல், என்ன வகையினும் மனங்கோளின்மை என்பனவாம். உரையிற் பேராசிரியர், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை என நான்கை உடன்கூட்டி யமைப்பர். பிற்காலத்து நூலாசிரியர் இப்பதினொன்கிற் சிலவற்றை விடுத்துப் பத்துக் குற்றங்களைக் கொண்டனர். குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச்சொற் புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை யென்னும் இப் பத்துமே பிற்காலத்தில் பெருவரவினவாகப் பயில்கின்றன.[1]

வடமொழி யலங்கார நூல்களுள் காப்பியக்குற்றங்கள் இவை யென்பது கூறப்படுதல் வழக்கு. அலங்கார இலக்கணங் கூறுவனவற்றுட் பழையதாகிய பரதருடைய நாட்டிய சாஸ்திரத்திலும் பத்துவகைக் குற்றங்கள் சொல்லப்படும்.[2] தண்டியலங்காரத்திலும் மாறனலங்காரத்திலும் ஒன்பது வழுக்கள் கூறப்படுகின்றன. அவை பிரிபொருட் சொற்றொடர், மாறுபடு பொருண்மொழி, மொழிந்தது மொழிவு, கவர்படு பொருண்மொழி, நிரனிறைவழு, சொல்வழு, யதிவழு, செய்யுள்வழு, சந்திவழு என்னும் ஒன்பது வழுக்களாகும். இவற்றிற் பல தொல்காப்பியத்திலும் பிற நூல்களிலும் சொல்லப்பட்ட குற்றங்களாதலைக் காண்க. இவ்வழுக்களை வழுவணி யென்று மாறனலங்கார உரையாசிரியர் உணர்த்துவர்.[3]

இவற்றை யன்றி இடமலைவு, காலமலைவு, கலைமலைவு, உலகமலைவு, நியாயமலைவு, ஆகமமலைவு என்னும் ஆறும் காப்பியங்களிற் களையப்பட வேண்டுவன வென்று தண்டியாசிரியர் கூறுவர். இவை யனைத்தும் தொல்காப்பியர் கூறும் மரபு வழுவின்பாற் படும். மேற்கூறிய வழுக்கள் சில இடங்களில் அமைந்து வழுவமைதி யென்னும் பெயர் பெறும். இது தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலும் அணியிலக்கணங்களிலும் உண்டு.

தொல்காப்பியர் குற்றங்களைச் சிதைவென்று குறிப்பர். அக் குற்றங்களை எதிர் மறுத்து உணருந் திறத்தன குணமெனப்படும். அவை பத்து.

"எதிர்மறுத் துணரின் றிறத்தவு மவையே"[4]

என்னும் சூத்திரத்தையும், 'இது, மேற் குற்றம் பத்துங் கூறி இனிக்குணமும் பத்துளவென்கிறது' என்ற பேராசிரியர் உரையையும் காண்க.

---

[1] யா. வி. ப. 13.

[2] ch. xvi.

[3] மாறன். 300, உரை.

[4] தொல். மரபு. 109.

இப்பத்துக்குணங்களின் பெயரையும் தனியே எடுத்துத் தொல்காப்பியர் கூறவில்லை. ஆயினும் பிற்காலத்து நூல் செய்த ஆசிரியர் அக்குணங்களின் பெயர்களையும் தொகுத்துக் கூறினர். அவை சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், உலகமலையாமை, முறையின் வைப்பு, விழுமியது பயத்தல், விளங்குதாரணத்ததாதல் என்பன. இவற்றிற் பல காப்பியங்களிலுள்ள குணவணிகளோடு ஒப்புடையனவாதலைக் காணலாம். இலக்கணநூல்களுக்கு உரியனவாகக் கூறப்பட்ட இக்குணம் பத்தும் காப்பியங்களுக்கும் உரியனவே ஆகும்.[1]

## உவமையளவையும் அணியும்

இனி, தொல்காப்பியத்தால் அறிந்த காப்பியப் பொருளணிகளைப் பற்றி ஆராய்வோம்.

உவம இயல் உவமைகளைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றது.

உவமை யென்பது பொருள் புலப்படுத்தற்குப் பயன்படுவது. 'உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றானாதலின். எங்ஙனமோ வெனின், ஆபோலும் ஆமாவென்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையே பற்றி ஆமா இதுவென்று அறியுமாகலா னென்பது'[2] என்று பேராசிரியர் உரைப்பர். இலக்கியச் சுவை கருதி அமைக்கப்படும் உவமை அணிக்கு இங்ஙனம் பயன் கூறுதல் பொருத்தமாகத் தோற்றவில்லை.

உவமையென்பது உபமானம், உபமா என்பவற்றின் திரிபாகும். வடமொழியில் உவமை அளவையாகவும் அணியாகவும் வகுக்கப்படுகின்றது. உவமை அளவை யாகும்போது அது பொருளின் இயல்பை மிக அணித்தாக எடுத்துக் கூறுவதென்பர்.[3] யாஸ்கர் தம்முடைய நிருக்தத்திலும், பதஞ்சலி தம்முடைய மகாபாஷ்யத்திலும் உவமையைப் பற்றிய செய்திகளை அமைத்துள்ளாரென்பர். தருக்கநூலார் உவமையளவையைப் பலபடியாக விரித்துரைப்பர். அவர்கள் தெரிந்த பொருளை உவமையாக்கித் தெரியாத பொருளைப் புலப்படுத்த அது பயன்படுமென்று கூறுவர். மகாபாஷ்யத்திலும் தருக்கநூல்களிலும் 'ஆபோலும் ஆமா' என்ற உதாரணமே காட்டப்பட்டிருக்கின்றது. இது கருதியே பேராசிரியர் முற்கூறியவாறு எழுதினர் போலும். அவர் கூற்று உவமையளவைக்கே பெரும்பாலும்

1 சேக்கிழார் பிள்ளைத்தமிழ், முத்தப். 3.

2 தொல். உவம. 1, உரை.

3 ஸாமீப்ய மானம் உபமானம்.

இயைபுடைத்தாகும். உவமையணி கவியின் அழகுக்குக் காரணமாகும். தொல்காப்பியனார் உவமையை அணியென்னும் பெயராற் குறிக்கவில்லை. அகத்திணையியலில்,

"உள்ளுறை யுவமம் ஏனை உவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே" (46)

எனக் கூறிப் பின்னும் சில சூத்திரங்களை அமைத்தார். அங்கே கூறிய உள்ளுறை உவமம் ஏனையுவமம் என்னும் இரண்டனையும் உவம இயலில் விரித்தார்.

அவர் கூறிச்செல்லும் முறையை நோக்க அவர் உவமையை அணியாகவே கொண்டனரெனத் தோற்றுகின்றது. பிற்காலத்துப் பல வகையாகப் பிரிந்த அணிகளிற் பலவற்றை அவர் கூறும் இலக்கணங்களில் அடக்கிக் காட்டலாம்.

காப்பியங்களுக்கு அழகைக் கொடுக்கும் அலங்காரங்களுள் தலை சிறந்தது உவமை. அப்பைய தீக்ஷிதர் தம் சித்திர மீமாம்ஸையில் எல்லா அலங்காரங்களும் உவமையினடியாகவே தோன்றின வென்பர்;

"உவமை யென்னுந் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"[1]

என்பது காண்க.

தொல்காப்பியனார் உவமையின் இரண்டு வகைகளில் ஒவ்வொன்றன் பிரிவுகளையும் எடுத்தோதி உவம உருபையும் கூறி உவமத்தோடு தொடர்புடைய மரபுகளையும் உணர்த்துகின்றார்.

## ஏனையுவமம்

முதலில் ஏனையுவமத்தைப் பற்றிக் கூறத் தொடங்கி அது வினை, பயன், மெய், உரு என்ற நான்கு கூறுபட்டு வருமென்றார். அவற்றை முறையே வினையுவமம், பயனுவம், மெய்யுவமம், உருவுமம் என்பர். இதனைப் பின்பற்றியே வீரசோழியக்காரரும் மாறனலங்காரத்தாரும் நான்கு கூறுபடுத்துவர். தண்டியலங்கார ஆசிரியரோ மெய்யும் உருவும் பண்பென அடக்கி மூன்றாக்கினர். இந் நான்கில் ஒன்றும் பலவும் விரவி வரும்.[2] உவமை பொருளைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கவேண்டு மென்

---

[1] வி. கோ, சூரியநாராயண சாஸ்திரியார் : தமிழ் மொழியின் வரலாறுய, ப. 49.

[2] தொல். உவம. 2.

பர்.[1] இக்கருத்தே கார்க்கிய சூத்திரமென்னும் பழைய வடநூலொன்றிற் காணப்படுகின்றதென்பர்.[2] உவமை பிறக்கும் நிலைக்களன்கள் பின்னர்க் கூறப்படுகின்றன. அவை சிறப்பு, நலன், காதல், வலி என நான்கு புகழ்தற் பொருளும் இழிபும் ஆக ஐந்து ஆகும். பிறிதொரு சூத்திரத்தால் பட்டாங்கு உவமங் கூறுதலும் உரித்தென்று அமைப்பர்.[3] வீரசோழியக்காரர் இம் மூன்றையும் கூட்டி,

"பட்டாங் குரைத்தல் புகழ்தல் பழித்தலின்"[4]

என்று உரைப்பர்.

தொல்காப்பியர் பிறகு உவமைகளில் முதலொடு முதலும் சினையொடு சினையும் முதலொடு சினையும் சினையொடு முதலும் வேண்டிய வாற்றான் உவமஞ் செய்தற்கு உரியனவெனவும் அங்ஙனம் செய்யுங்கால் மரபு பிறழாமைச் செய்யப்படுமெனவும் கூறுவர்.[5]

'உவமானமும் உவமேயமும் தம்மின் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும். இறப்ப உயர்வும் இறப்ப இழிவும் உவமிக்குங்கால் இன்னவாகச் செய்யாது சிறப்புடைமையில் தீராவாகிக் கேட்டார் மனங்கொள்ளுமாற்றால் அமைக்கவேண்டும். உவமையடையும் பொருளடையும் முறையே பொருளுக்கும் உவமைக்கும் உபகாரப்படுவன உள. அவை ஏலாதனவும் உள. அவற்றை ஏற்புழி உணர்ந்துகொள்ள வேண்டும். உவமைக்கு உவமை கூறுவதாகிய அடுக்கிய தோற்றம் நீக்கப் படுவது' என்பனவும் பிறவும் உவமையைப்பற்றி அவர் கூறுவனவாகும்.

## உவமைகளின் வகை

உவமைகளின் வகையாக வினை, பயன், மெய், உரு என்னும் நான்கும் உவமத்தொகை உவமவிரி என எட்டாவனவும் மெய்ப்பாடு எட்டனோடு சேர்ந்து எட்டாவனவும் தொல்காப்பியத்தில் வகுக்கப்பட்டன.

இவற்றை யன்றி அவர் குறித்த சுட்டிக் கூறுவுவம மென்பது தொகையுவமையில் அடங்கும். பொருளையே உவமஞ் செய்தல் ஒன்று; இது தண்டியார் கூறும் விபரீத வுவமையாகும்.[6]

---

[1] தொல். உவம. 3.

[2] Studies in the History of Sanskrit poetics, p. 6.

[3] தொல். உவம. 34.

[4] அலங்காரப். 16.

[5] தொல். உவம. 6.

[6] தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 137.

"ஓரீஇக் கூறலு மரீஇய பண்பே"[1]

என்பது ஒரு சூத்திரம். ஒக்குமெனக் கூறாது ஒவ்வாதெனக் கூறுதலும் உவமையாகும். மாறனலங்கார உரைகாரர் இதனைக் குறைவுவமை யென்பதில் அடக்குவர்.[2] தடுமாறுவமம் என்பது ஒன்று. இஃது உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமமாக்கியும் தடுமாறச் சொல்லுதல். இதனை ஐயவுவமை, இதர விதர மென்பவற்றின்பாற் படுத்துவர்.[3] நிரனிறையோடு வரும் நிரனிறையுவமம் என்பதொன்று. இவற்றையன்றி ஏனைய உவமை வகைகளைக் கொள்ளும் வழிக்கொள்க வென்று,

"வேறுபட வந்த வுவமத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்" (32)

என்னும் சூத்திரத்தில் அமைக்கின்றார். அச்சூத்திர உரையில் பேராசிரியர் வேறுபட வருதலை விரித்து உவமைக்கும் பொருட்கும் ஒப்புமையாமாறு படக் கூறுதல் முதலிய பதினோருவமைகளை எடுத்துக் காட்டுவர். அவை தண்டியலங்காரம் முதலிய நூல்களிலுள்ள விரியுவமை முதலியனவற்றினுள் அடங்கும்.

"பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்"

என்னும் சூத்திரத்தில் 'இவை உவமத் தொகையாங்கால் மூலைக் கோங்கம், முகத்தாமரை எனப்படும். இவற்றை உருவகமென்று பிறர் மயங்குப' என்பர் பேராசிரியர். அவர் பிறர் கூற்றோடு உடம்படாவிடினும், பொருளை யுவமஞ் செய்த உவமத்தொகையே உருவகத்துள் அடங்கு மென்ற ஒரு சாரார் கொள்கை அவ்வுரையாற் பெறப்படுகின்றது.

"உவமத் தன்மையு முரித்தென மொழிப"

என்னும் சூத்திர உரையில் 'உவமத்தன்மையு மென்ற உம்மையான் உவமத் தன்மையே யன்றி வாளாது தன்மை கூறுதலும்' எடுத்துரைக்கின்றார். அது தன்மையணி யாகும்.

## உவம உருபுகளின் வரையறை

உவம உருபுகளைத் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தில் தொகுத்துக் கூறினர். அப்பால் வினையுவமம் முதலிய நான்கினுக்கும் தனித்தனியே வரும் வரையறையுடையன இன்ன இன்னவென்று அவற்றை வகுத்துரைப்பர். இவ்வரையறை தொல்காப்பியத்துக்குப் பிற்காலத்தில் நீங்கியது. கடைச்சங்க காலத்து நூல்களிலேயே இவ்வரையறைக்குப் புறம்பான

1 தொல். உவம. 33.

2 மாறனலங். 95.

3 தொல். பொருள். ஆராய்ச்சி, ப. 137.

உவம உருபின் அமைதியைக் காணலாம். 'இவை யெல்லாம் மரபுபற்றி அறியல் வேண்டும் எனவே தலைச்சங்கத்தார் முதலாயினார் செய்யுட்களுள் அவ்வாறு பயின்று வருமென்பது அறிந்தாமன்றே' என்று பேராசிரியர் கூறுதலால் இவ்வரையறை மிகப் பழங்காலத்தில் இருந்ததென்றே கொள்ள வேண்டும். உவம உருபுகளுக்கு இதைப்போன்ற சில வரையறைகள் வடமொழியில் வேதத்திற் காணப்படும் உவமைகளைப்பற்றிக் கூறும் பகுதியில் யாஸ்கரால் தம்முடைய நிருக்தத்தில் சொல்லப்பட்டுள்ளன என்பர்.[1] இவ்வுவம உருபு வரையறை யிலக்கணத்தைத் தொல்காப்பியத்தின் பழமையை உணர்த்தும் ஆதாரங்களுள் ஒன்றாகச் சிலர் கொள்வர்.[2]

## உள்ளுறை யுவமம்

ஏனையுவமங்களைப் பற்றி இத்துணை வரையறைகளை உணர்த்திய ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளுறை யுவமங்களைப் பற்றியும் சில சூத்திரங்கள் அமைக்கின்றனர். உவமப்போலி என்றும் அது கூறப்படும். அதன் இலக்கணம், 'உவமையோடு உவமிக்கப்படும் பொருள் பிறிதென்று தாராது உவம நிலங்களுட் பிறந்த பிறவிகளோடு சார்த்தி நோக்கிக் கருத்தினான் இதற்கு இஃது உவமை என்று சொன்ன மரபினாற் கூறுங்காலை, இன்னபொருட்கு இஃது உவமமாயிற்றென்பது துணிந்து கொள்ளத் தோன்றும்' என்று உரைக்கப்படும். இஃது எல்லோர்க்கும் புலனாகாமல் நல்லுணர்வுடையோர்க்கே புலனாகும்.

இவ்வுவமப் போலி, வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு என ஐந்தினாலும் வரும் என்பர். ஓர் உதாரணம் வருமாறு :

"கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வ னீன்றவெம் முயங்கல்
அதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே" (ஐங்குறு. 65.)

இது வினைபற்றிவந்த உள்ளுறை யுவமம். 'தாமரையினை விளைப்பதற்காக அல்லாமல் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியில் அத் தாமரை தானே விளைந்து சுரும்பினுடைய பசியைத் தீர்க்கும் ஊரன்' என்றது, 'அதுபோலக் காதற்பரத்தையர்க்கும் இற்பரத்தையர்க்கும் என்று அமைக்கப்பட்ட கோயிலுள் யாமும் உளமாகி இல்லறம் பூண்டு விருந்து ஓம்புகின்றனம்' என்னும் பொருளைக் குறிப்பிக்கின்றது. இங்கே உவம உருபேனும் உவமேயமேனும் கூறப்படவில்லை. ஆயினும் குறிப்பினால் இப்பொருள் கொள்ளும்படி இஃது அமைக்கப்பட்டது. தாமரையானது

[1] History of Sanskrit Poeties, p. 5.

[2] வேங்கடராஜுலு ரெட்டியார் : பரணர், ப. 171—73.

சுரும்பின் பசியைக் களையுந் தொழில் தலைவி விருந்தினரை ஓம்புந் தொழிலாகிய குறிப்பை உள்ளுறை பொருளாகப் பெற்ற உவமமாதலின் இது வினையுவமப் போலியாயிற்று. இப்படியே மற்றவைகளும் வரும்.

இங்ஙனம் குறிப்பாற் பொருள் கொள்ளும் முறை வடமொழியில் தொனியென்னும் அணியைப்பற்றிய இலக்கணத்திற் காணப்படும். ஒரு காப்பியத்துக்குத் தொனியே உயிர் என்பதும் தொனியைத் தலைமையாகக் கொண்டதே உத்தம காப்பியமென்பதும் சில வடநூலார் கொள்கை. அகத்திணை இயலிற் சொல்லப்படும் இறைச்சியும் குறிப்பாற் பொருளுணர்த்துவதேயாகும். இவ்விரண்டினையும் தனியே இரண்டு அலங்காரமாக்கி அமைத்தார் மாறனலங்கார ஆசிரியர்.

உள்ளுறையுவமம் அகத்திணையின்கண்ணே பெரும்பாலும் வரும். இன்னார் இன்னார் கூற்றில் இன்ன இன்ன முறையில் வரவேண்டுமென்பது தொல்காப்பியனாரால் சொல்லப்படுகின்றது (உவம. 26—31). உள்ளுறையுவமம் இனிதுறு கிளவி பற்றியும் துனியுறு கிளவி பற்றியும் வரும்; தெய்வமொழிந்த கருப்பொருள் அடியாகப் பிறக்கும்.

அகப்பொருள்நூல் உரைகளில் உரையாசிரியர்கள் பல இடங்களில் உள்ளுறை உவமப் பொருளை விரித்துரைக்கின்றனர். 'மற்று இவையெல்லாம் அகப்பொருட்கே உரியவாக விதந்தோதியது, என்னை? புறப்பொருட்கு வாராதனபோல எனின், ஆண்டு வருதல் அரிதாதலின் இவ்வாறு அகத்திற்கே கூறினான் என்பது[1]' என்ற பேராசிரியர் கூற்றினால் இது புறப்பொருட்கண் வருதல் அருமையென்று அறிகின்றோம். ஆயினும் புறநானூற்று உரையாசிரியர் உள்ளுறையுவமத்தின் உள்ளுறையை அகப்பொருள் நூலில் உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுதல் போலச் சில செய்யுட்களிற் கண்ட சில பகுதிகளுக்கு உள்ளுறை இதுவென்று காட்டுகின்றனர்.

அவற்றுள் ஒன்று வருமாறு:—

"அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே" (புறநா. 23)

என்பதன் உள்ளுறையை உரைக்குமிடத்து உரையாசிரியர், 'கலைபுலிப்பாற் பட்டெனச் சிறுமறி தழீஇய மடப்பிணை பறந்தலை வேளை வெண்பூக்கறிக்குமென்பது, அவன் பகைவரைக் கொன்றவழி அவர் பெண்டிர் தம் இளம்

1 தொல். உவம. 31.

புதல்வரை ஓம்புதற்பொருட்டு இறந்துபடாது அடகு தின்று உயிர்வாழ் கின்றுரென்பதோர் பொருள் தோன்ற நின்றது' என்று குறித்தார்.[1]

இஃது அகப்பொருள் நூலிற் கூறப்படும் உள்ளுறையோ டொப்புமை பெறுதல் காண்க. இதைப்பற்றி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் குறித்துள்ள 'அகப்பொருட் செய்யுட்களுக்கு உரைவகுக்கும் உரையாசிரியர்கள் உள்ளுறை யுவமமாகவும் இறைச்சிப் பொருளாகவும் அறிந்து கூறும் பொருளைப்போன்று பாட்டிற் காணப்படும் இன்ன சொற்களின் குறிப்பினுல் இன்ன பொருள் தோற்றுகின்றதென் றும் இன்ன நயம் புலப்படுகின்றதென்றும் இவர் எழுதிச் செல்லும் இடங்கள் மிக்க இன்பத்தை உண்டாக்கும்'[2] என்ற கருத்தும் இங்கு ஆராய் தற் குரியது.

புறநானூற்று உரையாசிரியர் இங்ஙனம் அமைக்கும் குறிப்பும், அகப்பொருட் செய்யுளில் வரும் உள்ளுறை யுவமமும், இறைச்சியும், பிற் கால அணியிலக்கணத்தில் வரும் கருத்துடையணி, கருத்துடையடைகொளி யணி யென்பனவும், வடமொழியில் த்வன்யாலோகம் முதலிய நூல்களில் விரித்துக் கூறப்படும் தொனியும் ஓரினப்படுவனவென்று கொள்ளுதல் ஏற்புடையதாகும்.[3]

## மெய்ப்பாட்டியல்

இனி மெய்ப்பாட்டியலில் அமைந்த செய்திகளை ஆராய்வோம். தொல்காப்பியர் காலத்திலே தமிழ்நாட்டில் மெய்ப்பாடு பற்றிய செய்திகள் நூல் வழக்கில் இருந்தனவென்று தெரிகின்றது. மெய்ப்பாடென்பதற்குப் பொருட்பாடு என்று பொருள் கூறுவர். அஃதாவது, உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றுன் வெளிப் படுதல்.

தொல்காப்பியத்திற் கூறப்பட்ட மெய்ப்பாடுகள் வடநூலுட் கூறப்படும் ரஸம், பாவம் என்னும் இருவகையுள் அடங்கும். இவற்றைத்

---

[1] புறநா, 143, 145, 200, 202 என்னும் செய்யுட்களின் உரையையும் பார்க்க.

[2] புறநா. 3-ஆம் பதிப்பு, உரையின் இயல்பு, ப. 85.

[3] 'இங்ஙனம் பலவாறுகத் தோன்றும் தொனி வகைகளை எண்ணித் தனிமையில் பேதமும், சேர்க்கையில் பேதமும், சேர்க்கைக் கலவியில் பேதமும் உண்டென்று தொனி நூலுடையார் கூறுகின்றனர். இத்தொனிவகைகளெல்லாம் அகப்பாட்டும் புறப்பாட்டுமாகிய சங்கமருவிய நூல்களிலும் பிறசான்றோர் செய்யுட்களிலும் இடையிடையே விரவி வரப் பெறுவன. இவை பெரும்பாலும் இறைச்சிப்பொருள் பற்றியும், திருப்பாவை, திருவிருத்தம், திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங்களில் ஸ்வாபதேசப் பொருள்பற்றியும், மற்றும் கவிகருதிய வேறுபல உள்ளுறை பொருள்பற்றியும் வருவன' ஸ்ரீ திருநாராயணையங்கார்; காவியம், செந்தமிழ், தொகுதி, 10, ப. 266.

தமிழில் சுவை, குறிப்பு என்க் கூறுவர். ரஸமாவது பாவங்களினல் கண்டோருங் கேட்டோரும் நுகரும் இன்பம். இது நாடகத்திலும், காப்பியத்திலும் வெளிப்படுவது. நாடகத்தைக் கண்டோர் அதில் நடிப்பவர்களுடைய பேச்சு, செய்கை, மெய்ப்பாடு என்பவற்றை உணர்ந்து இன்பத்தை அடைகின்றனர். அவ்வாறே காப்பியத்தைப் படிப்போரும் அடைகின்றனர். இந்த இன்ப உணர்ச்சியையே சுவையென்பர். மெய்ப்பாடுகளைச் சிலவிடங்களிற் சுவையெனவும் சிலவிடங்களிற் குறிப்பெனவும் கொள்ள வேண்டும். 'இவற்றைச் சுவை யெனவும் குறிப்பெனவும் வழங்கினும் அமையும்'[1] என்று பேராசிரியர் கூறுவது காண்க.

வடமொழியிற் சுவையைப் பற்றியும் பாவங்களைப் பற்றியும் இலக்கணம் அமைக்கும் நூல்கள் மிகப் பல. அலங்கார நூல்களில் சுவையை முதலில் ஏனைய அணிகளோடு வைத்துக் கூறிப் போந்தவர் பலர். நாளடைவில் சுவையே காப்பியத்தின் உயிரென்ற கொள்கை உண்டாகி வேரூன்றியது. இதற்கு முதலில் அடிகோலியவர் த்வன்யாலோக ஆசிரியர். அவருக்குப்பின்னே அலங்கார நூல்களில் தனியே ரஸத்தைப்பற்றி விரிவாக உரைக்கத் தொடங்கினர். ரஸ சம்பந்தமான இலக்கணத்தைக் கூறுவதற்காகவே ரஸகங்காதரம், ரஸதரங்கிணி, ரஸ மஞ்சரி முதலிய நூல்கள் எழுந்தன. இவை பிற்காலத்தில் எழுந்த நூல்களாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சுவையைப் பற்றிய ஆராய்ச்சி தமிழ்நாட்டில் இருந்ததென்பதற்குத் தொல்காப்பியத்து மெய்ப்பாட்டியலே போதிய சான்றாகும்.

## நாடகச் சுவை

தொல்காப்பியர் முதலில் நாடக ரஸங்களைப் பற்றிச் சொல்லுகின்றார். அவை எட்டென்றும் ஒவ்வொன்றும் நந்நான்காகப் பிரிந்து முப்பத்திரண்டு பாவங்களாகும், அவை பதினாறனுள் அடங்கும் என்றும் உணர்த்துகின்றார்.

"பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப"

என்பது சூத்திரம். இம் முப்பத்திரண்டும் பதினாறுள் அடங்குவதற்கு வகை உரையாசிரியர் விரித்துரைக்கின்றார்.

நாடகத்துக்குரிய சுவை எட்டென்பதனைத் தொல்காப்பியர் குறிக்கின்றார். பேராசிரியர் உருத்திரம் ஒழிந்த எட்டை நாடகச் சுவையென்பர்.

---

[1] தொல், மெய்ப்பாடு. 3, உரை.

"உருத்திரந் தன்னே டொன்ப தாகும்"

என ஒரு சூத்திரத்தையும் அவர் காட்டுகின்ருர். வடமொழிநூலாகிய பரதர் நாடக இலக்கணத்தில் சாந்தமொழிந்த எட்டுச்சுவைகள் சொல்லப் படுகின்றன. சாந்தம் புறத்தார்க்குப் புலனுவதன்ருதலின் அதனை அவர் விலக்கினர். பேராசிரியர் உருத்திரத்தை யொழித்து ஏனைய எட்டைத் தாம் கூறியதற்கு ஆதாரமாகக் காட்டும் சூத்திரம் யாண்டையதோ தெரியவில்லை. உருத்திரமொழிந்த எட்டும் நாடகத்துக்குரியன வென்ற தொரு கொள்கை முற்காலத்தில் நிலவியது போலும்.

நாடகத் தமிழ்நூல் செய்த செயிற்றியனார் சூத்திரமாகிய,

"அறமுத லுன்கு மோன்பான் சுவையும்
உரைமுன் னுடைக முன்னே னுகும்"

என்பதனுல் அவர் ஒன்பது சுவையையும் கொண்டாரென்று தெரியவரு கின்றது.

மேலே கூறிய எட்டுச் சுவையுள் ஒவ்வொன்றும் சுவைக்கப்படும் பொருள், அதனை நுகர்ந்த பொறியுணர்வு, அது மனத்துட்பட்ட வழி உள்ளத்து நிகழும் குறிப்பு, குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தால் உடம்பின்கண் வரும் சத்துவம் என நான்கு வகைப்பட்டு முப்பத்திரண்டாதலும், இவை முறையே முன்னிரண்டும் ஒன்ருகவும் பின்னிரண்டும் ஒன்ருகவும் தொக்கு இவ்விரண்டாகிப் பதினுருதலும் காண்க. இவ்விரண்டென்னும் பகுப்பிற்கு,

"இருவகை நிலத்தி னியல்வது சுவையே"

என்னும் ஒரு சூத்திரம் ஆதாரமாகக் காட்டப்படுகின்றது. இது பிற் காலத்து நாடகநூல் செய்த ஆசிரியர் இயற்றிய தென்பர் பேராசிரியர். செயிற்றியனர் சுவைப்பொருளும் சுவையுணர்வும் ஒன்ருக்கி, சுவைக்குறிப்பு, சத்துவமென்பவற்றையும் கூட்டி மும்மூன்ருக்குவர்.

"எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப"

என்பது அவர் உரைக்கும் சூத்திரம்.

சுவை வாசிகம், அங்கிகம், சத்துவம் என்னும் மூன்று வகையால் உணர்த்தப்படுவ தென்பது நாடக நூலாசிரியர் கொள்கை. வாசிகமாவது உரை; அவ்வவிநயத்தின் சார்பாக அலங்கார இலக்கணங்களைப் பரதர் கூறுவர். அங்கிக மென்பது உடம்பாற் செய்யும் செய்கை. சத்துவமாவது வேம்பு தின்ருர்க்குத் தலைநடுக்க முதலியன உண்டாவது போல்வது. இதனைத் தமிழில் விறல் என்று கூறுவர்; சாத்விகபாவ மென்பர் வட மொழியாளர்.

விறல் ...த்துவகைப்படும். அவை மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என்பன. அவ்விறல் சுவைகளிலே மனக்குறிப்பு உளதாயவழி உடம்பிலே தோற்றும்; உடம்பினும் முகத்து மிகத் தோற்றும்; முகத்தின் மிகத் தோற்றும் கண்ணில்; கண்ணின் மிகத் தோற்றும் கண்ணின் கடையகத்து.[1] இவை எட்டென்பது வடநூலார் மதம்.

நாடகச் சுவை ஒன்பதுக்கும் அமைந்த அவிநயங்களுக்குரிய சூத்திரங்கள் அடியார்க்கு நல்லாரால் காட்டப்படுகின்றன.

வடநூல்களுள் நாடகரஸம் எட்டென்பர். ஒவ்வொரு சுவையும் ஸ்தாயீபாவம், விபாவம், அநுபாவம், சஞ்சாரிபாவமென நான்குவகையான பாவங்களால் உண்டாகி வளர்வது.

இவற்றுள் ஸ்தாயீபாவம் என்பது சுவை பிறக்குமளவும் நிலையாய் நிற்பது. சிருங்காரத்திற்குக் காதலும் ரௌத்திரத்திற்குக் கோபமும்போல அமைவன ஸ்தாயீ-பாவங்களாகும். இவற்றையே தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பர். தலைவன் தலைவியரது வடிவம், இளமை முதலியன விபாவம் ஆகும். அவை சுவை தோன்றற்குக் காரணங்கள். அவற்றின் காரியம் அநுபாவம்; அவற்றிற்குத் துணைசெய்வன சஞ்சாரிபாவமென்பன; இவற்றையே வியபிசாரிபாவமெனலும் ஆம். அவை அரசனைப் பின்தொடரும் ஏவலர் போலவும் கடலிற் பிறக்கும் அலைகள் போலவும் ஸ்தாயீபாவங்களைப் புலப்படுத்தி நிற்கும்.[2] அவை முப்பத்துமூன்றென்பர். தொல்காப்பியத்திற் கூறப்பட்ட உடைமை முதலியன வியபிசாரி பாவங்களேயாகும்.

இவற்றைத் தொகுத்துத் தண்டியலங்கார ஸாரம் இயற்றியவர் பின்வருமாறு கூறுவர்: 'விபாவங்களால் தோன்றி அநுபாவங்களால் வெளிப்பட்டுச் சஞ்சாரிபாவங்களால் புஷ்டியடைந்து நிற்கும் ஸ்தாயீபாவம் சுவையென்னப்படும். இதனை வடநூலார் ரஸம் என்ப. இவை சிருங்காரம், ஆசியம், கருணை, ரவுத்திரம், வீரம், பயானகம், குச்சை, அற்புதம், சாந்தம் என ஒன்பதாம். இவற்றிற்கு முற்கூறிய உவகை முதலிய ஒன்பதுமே முறையாய் அடியென அறிக. இவை நாட்டியத்திலும் காப்பியத்திலும் செய்திறத்தினாலும், சொற்றிறத்தினாலும் தூண்டப்பட்ட வாசனையின் திண்மையால் தம்மவையேபோல அநுபவநிலையில் வந்து ஆனந்தமாகவே நிற்பன. இவற்றின் விசாரணை வடநூலுள் விரிந்து கிடக்கின்றது.' (ப 12.)

---

1 சிலப். ப. 84.

2 History of Sanskrit Poetics, vol. II p. 345.

## தொல்காப்பியத்தில் உள்ள மெய்ப்பாடுகள்

தொல்காப்பியத்தில் பண்ணைத் தோன்றுவனவாகிய நாடகச்சுவை எட்டைப் பற்றியும், காப்பியச்சுவை எட்டைப் பற்றியும், அவை தோன்றும் நிலைக்களனைப்பற்றியும் சூத்திரங்கள் உள்ளன. உடைமை முதலிய வியபிசாரி பாவங்கள் ஒரு சூத்திரத்திற் கூறப்படும். அவை முப்பத்திரண்டு. வடநூலார் முப்பத்துமூன்று என்று உரைப்பர். 'தொல்காப்பியர் கூறிய இம் முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளுள் சில மெய்ப்பாடுகளுக்கு ஈடானவை வடநூல்களில் இல்லை; அவற்றிற்கு ஈடாக வேறு பாவங்கள் சொல்லப்படுகின்றன.'[1]

இவற்றின் பின்பு அகத்திணைக்கே பெரும்பான்மை உரிய மெய்ப்பாடுகள் சொல்லப்படுகின்றன. புணர்ச்சிக்கு முன் நிகழ்வன வென்றும் பின்னர் நிகழ்வன வென்றும் அவை பிரித்து உரைக்கப் பெறுகின்றன. அவற்றைச் சிருங்கார ரஸத்திற்கு நிமித்தமான பாவங்களாகக் கொள்ளுதல்வேண்டும். பரணர் என்னும் நூல் எழுதிய ஸ்ரீமான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியலைக் குறித்துக் கூறும் பின்வரும் கருத்து இங்கே பயன்படுவது ஆகும்:

'ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப்பாடுகளைக் கூறுமிடத்து, ஒவ்வொரு மெய்ப்பாடும் நந் நான்கு பொருளிற் பிறக்குமென்றும், அவை இன்னவை இன்னவை என்றும் கூறினாராயினும், அவர் மெய்ப்பாட்டின் (ரஸத்தின்) இயல்பினை விரித்துக் கூறினார் அல்லர்; பின்னும் உடைமை முதலாக முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் உள்ளன எனக் கூறினவர், அவ் வெட்டனோடு இவற்றிற்குள்ள வேறுபாடும் விளங்க உரைத்திலர். இவற்றால், மெய்ப்பாட்டியலை ஆசிரியர் சுருக்கமாகவே கூறியுள்ளாரென்பது புலனாகும். வடமொழியில் இவற்றை விரித்துக்கூறும் நூல்கள் பல. அவற்றைப் பின்பற்றிக் கன்னடம் முதலிய திராவிட மொழிகளிலும் சிற்சில நூல்கள் தோன்றியுள்ளன. தமிழிலோ தொல்காப்பியத்தோடே நின்றது. ஆதலின், மெய்ப்பாட்டியல்பினை நன்கு அறிந்து கொள்ளுதல் அரிதாகும்' (ப. 157.)

## சுவைகளின் தொகை

நாடகச் சுவைகள் எட்டென்பது தமிழ் வடநூலாருக்கு ஒப்ப முடிந்ததேயாயினும் தமிழிலே உருத்திரத்தை நீக்கி எட்டாக எண்ணும் ஒரு சாரார் இருந்தனரென்பது பேராசிரியர் உரையால் தெரியவருதலை முன்னர்க் கண்டோம். காப்பிய ரஸங்களில் சமநிலையை விலக்கினார். 'மற்று இவ் வெட்டனோடும் சமநிலைகூட்டி ஒன்பதென்னுமோ நாடக நூலுட்போல வெனின், அதற்கு ஓர் விகாரம் இன்மையின் ஈண்டுக் கூறியதிலனென்பது;

[1] பரணர், ப. 157, 158.

அதற்கு விகார முண்டெனின் முன்னை எட்டனுள்ளுஞ் சார்த்திக் கொள் ளப்படும்' என்று அதற்குக் காரணம் குறிக்கப்படும். வட நூல்களுள் சாந்த ரஸத்தைக் காப்பியத்திற்குக் கொண்டாலும் நாடகத்திற் கொள்வ தில்லை. அதற்கு ஒரு ஸ்தாயி பாவம் இல்லை யென்பர். சிலர் நிர்வேத மென்பதே அதன் ஸ்தாயீபாவமென்பர். இது தத்துவ ஞானத்தால் வருவது. "செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும், நெஞ்சோர்ந் தோடா நிலைமை"யில் அச்சாந்த ரஸம் வெளிப்படும். அந் நிலையே நடுவு நிலையாகும். அது தனியே எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றாகக் கூறப் படாமல் தொல்காப்பியரால் முப்பத்திரண்டுவகையுள் ஒன்றாக அமைக்கப் படுகின்றது. அங்கே பேராசிரியர், 'நடுவு நிலையென்பது ஒன்பது சுவையுள் ஒன்றெனா நாடக நிலையுள் வேண்டப்படும் சமநிலை;........அது காம வெகுளி மயக்கம் நீங்கினோர்கண்ணே நிகழ்வது; இது சிறு வரவிற்றாகலான் அவற் றொடு கூறினான்' என்றார். இம் முப்பத்திரண்டோடு ஒத்த வியபிசாரி பாவங் களுள் ஒன்றாகவே பரத முனிவரும் வடமொழி நாட்டிய சாஸ்திரத்தில் இதனோடு தொடர்புடைய நிர்வேதமென்பதைக் கூறினார். பேராசிரியர் பன்முறையும் நாடகத்துக்குச் சமநிலையுரியதென்று கூறுவர். ஆயினும், பர தர் முதலியோர் அதனை அங்ஙனம் வேண்டார். தசரூபக நூலாசிரியர் நாடகத்தில் சாந்தரஸம் புலப்படுத்தப்படாதென்றே உரைப்பர். காவ்யப் பிர காச நூலாசிரியராகிய மம்மடரோ சாந்தரஸம் நாடகத்தில் வாராதென்றும் காப்பியத்தில் வருமென்றும் கூறி நாடகரஸம் எட்டென்றும் காப்பிய ரஸம் ஒன்பதென்றும் அமைப்பர். பிரபோத சந்திரோதயம் முதலியநாடகங்களுள் பெரும்பாலும் ஆத்மஞான உணர்ச்சியின் விளைவாகிய செய்திகளே கூறப் படுதலின் சாந்த ரஸமும் நாடகத்தில் வருமென்று கூறுவாரும் உளர்.

காப்பிய ரஸங்கள் எட்டென்பதே வடமொழிக் காவியாதர்ச நூலாசிரியர் கொள்கை. அதனைப் பின்பற்றிய தண்டியலங்கார நூலாசிரிய ரும், தொல்காப்பிய நூலைப் பின்பற்றிச் சுவை வகுத்த மாறனலங்கார நூலா சிரியரும் சுவை எட்டே கூறினர். வீரசோழிய உரைகாரர் ஒன்பதுகூறி,

"நவைதீ ரொன்பஃ தாகு முட்பொருள்
சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப"

என ஒரு சூத்திரமும் காட்டுவர்.

நாடகச் சுவை ஒன்பது கூறிய அடியார்க்கு நல்லார், 'காப்பியத் திற்கு அங்கமான நவச்சுவை' எனக் காப்பியத்திற்கும் ஒன்பது கூறுவர்.

சுவை ஒன்பதென்பது பெரும்பான்மைவழக்காயினும் வடமொழி யில் இவ்வொன்ப தொழிந்த வேறு சில சுவைகளையும் கூறும் ஆசிரியர் உளர். ப்ரேயஸ், வாத்ஸல்யம், பக்தி, சிநேஹம், சிரத்தை, லௌள்யம், ம்ரு கயா, அக்ஷா முதலிய பல ரஸங்களைப்பற்றி அவர் கூறுவர்.[1]

---

[1] Dr. V. Raghavan : Number of Rasas, J. O. R. M. Vol. xi, p. 77.

## உவகைச்சுவை

தொல்காப்பியர் எட்டுச் சுவைக்கும் உரிய மெய்ப்பாடுகளை முதலிற் கூறினும் காமச் சுவையின் பாவங்களையே பலபடியாக விரித்துக் கூறுகின்றனர். அகத்திணை இயலில் அச்சுவைக்குரிய பல பாவங்களும், மெய்ப்பாட்டியலில் புணர்ச்சிக்கு முன்னும் அதன் பின்னும் நிகழும் மெய்ப்பாடுகளும் சொல்லப்படுகின்றன. இவற்றால் ஏனைச் சுவைகளுள்ளும் சிருங்காரச் சுவையே தலைமையுடையதென்பது புலனாகின்றது. உவகையை ஈற்றுக்கண் வைத்ததற்குக் காரணம் கூறவந்த பேராசிரியர், 'எல்லாவற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்த தாகலானும்' என்பர். எல்லா ரஸங்களும் சிருங்கார ரஸத்திலிருந்தே பிறப்பன வென்று போஜராஜன் இயற்றிய சிருங்காரப் பிரகாசம் முதலிய நூல்கள் கூறும். பரிமேலழகர், 'இச் சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும், சுவை பலவென்று கூறுவார் கூறுக, யாங் கூறுவ தின்பச்சுவை யொன்றனையுமே யென இதனையே மிகுத்துக் கூறினான்' என்று கூறுதலும் காண்க. வீரசோழிய உரையாசிரியர் சுவையைக் குறிக்கும் மெய்ப்பாடுகளைப் புறமெய்ப்பாடுகள் எனக் குறித்து, அவை எட்டென்றும் அவ்வெட்டும் சிருங்காரத்தினின்று பிறப்பனவென்றும் தெரிவிக்கும் சூத்திரம் இரண்டை எடுத்துக் காட்டினர்.

"புறமெய்ப் பாடே திறனுளிப் புகலின்
ஆரணங் காயவக் காமந் தானே
காரணம் பற்றிக் கருத்து வேறுபட்டு
மற்றுமோ ரேழாய் மெய்க்கண் டதனொடும்
எட்டா மென்ப ரியல்புணர்ந் தோரே"

"அவைதாம், நற்சிருங் காரம் நகையே வியப்பே
அச்சம் வீரம் உட்கோள் இரக்கம்
இழிப்பெனத் தோன்றின இவையவை தாமே
முப்பத் திரண்டென மொழிந்தனர் கண்டே."

இவை எந்த நூலினுள்ளனவோ தெரியவில்லை. வடமொழியில் அக்கினி புராணக்காரர், ருத்திரபட்டர் (சிருங்கார திலகம்) ஆகியோர் சிருங்காரமே தலைமைச்சுவை என்பர்.[1] சீவகசிந்தாமணி ஆசிரியர் "காப்பியக் கவிகள் காம வெரியெழ விகற்பித் திட்டார்" என்று குறைகூறும் வாயிலாக, காப்பிய இலக்கியங்களில் இச்சுவை தலைமை பெற்றுப் பல விகற்பங்களோடு நிலவுவதைத் தெரிந்து புலப்படுத்தினர்.

## சிருங்கார வகை

இந்தச் சிருங்காரம் இரண்டு பகுதிப்படும், சம்போக சிருங்காரம், விப்ரலம்ப சிருங்காரம் என. இவ்விரண்டு வகையோடும் தொடர்

1 ச்ருங்காரோ நாயகோ ரஸ: (சிருங்கார திலகம், i : 20.)

புடைய விஷயங்களே தொல்காப்பியத்தில் களவியல், கற்பியல் என்ற பகுதிகளில் கூறப்படுகின்றன. அவை இச்சுவையின் தொடர்புடையன வென்பது தொல்காப்பியரால் கூறப்படாதெனினும் அவர் அமைத்த முறை களும் செய்திகளும் இதனுள் அடங்குவனவாயின.

பரிமேலழகர் திருக்குறட் காமத்துப்பாலில், 'இது புணர்ச்சி பிரிவென இருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோ வெனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென வட நூல் வழக்குப் பற்றி ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினாரென்க. இனி அவை தம்மையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ் வாமையும் உடையவாகிக் கூறுகின்றார்' என்று எழுதும் அவதாரிகையினால் இக்கருத்து வலியுறும்.

மெய்ப்பாடு, உவமை முதலியவற்றைப் பற்றித் தொல்காப்பியர் கூறினும் அணியிலக்கணமென்ப தொன்று பழங்காலத்தில் தமிழில் தனியே இல்லை. வடமொழியிலுங்கூட உவமை முதலியன வேத முதலியவற்றில் இலக் கிய உருவிற் பயின்றுவரினும் அலங்காரத்தை வரையறுக்கும் இலக்கணம் பிற்காலத்தேதான் தோற்றியதென்று அறிஞர்கள் கூறுகின்றனர்.[1] கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த நூல்களிலேதான் அலங்காரத் தைப்பற்றிய குறிப்புக்கள் காணக்கிடைக்கின்றன வென்றும், முறையாக அலங்கார இலக்கணத்தை ஆராயும் நிலை கி. பி. 4, 5-ஆம் நூற்றாண்டுகளி லிருந்தே விரிவடைந்ததென்றும் வடநூலறிஞர் வகுக்கின்றனர்.

அக்காலமுதல் குணவலங்காரங்களைப்பற்றியும், செய்யுள் நெறி யைப் பற்றியும், சொற்பொருள் அணிகளைப்பற்றியும், சுவையைப்பற்றியும், தொனியைப்பற்றியும் பலபடியாகக் கூறும் அணியிலக்கணங்கள் வடமொழி யிற் பல்கின. செய்யுள்நெறியையே தலைமையுடைய தென்போரும் அணிகளே காப்பியத்துக்கு அழகு பயப்பன வென்போரும் சுவையே காப்பியத்தின் உயிர் என்போரும் தொனியே காப்பியத்திற்கு ஒளி தருவதென்போருமாக நாளடைவில் வடநூல் அணியிலக்கண ஆசிரியர்கள் பல திறப்பட்டனர். இவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுந்த தொல்காப்பியம், உவமையைப்பற்றியும் மெய்ப்பாட்டைப்பற்றியும் இறைச்சி உள்ளுறைகளைப் பற்றியும் வரையறுத்துக் கூறுதலை நோக்கின் அப்பழங்காலத்திலேயே நம் தமிழ் நாட்டில் கவியழகை அறிந்து சுவைக்கும் தன்மை வளம்பெற் றிருந்ததென்று நினைக்க இடமுண்டாகிறது.

[1] History of Sanskrit Poetics, vol. I, p. 17.

# IV

# காப்பிய இலக்கணங்கள் (2)

இதுகாறும் தொல்காப்பியனார் கூறிய காப்பிய இலக்கணங்களும் அவற்றோடு தொடர்புடைய செய்திகளும் ஆராயப்பட்டன. இனி மற்ற நூல்களிற் கூறப்படும் காப்பிய இலக்கணங்களை ஆராய்வோம்.

## நாடக இலக்கணங்கள்

நாடகமென்பது கதை தழுவிவருங் கூத்து. இதன் இலக்கணங்கள் அகத்தியம் முதலிய பல நூல்களிற் கூறப்பட்டன. ஆயினும் இப்பொழுது கிடைப்பன மிகச் சில செய்திகளேயாகும். சிலப்பதிகார உரைகளிலிருந்தும் வீரசோழிய உரையிலிருந்தும் நாடகக் காப்பிய இலக்கணங்களிற் சில தெரியவருகின்றன.

### நாடகக் கவிஞன்

நாடகக் காப்பியம் இயற்றும் கவிஞனது இலக்கணத்தை இளங்கோவடிகள்,

> "இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
> தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி
> வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தின்
> நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்
> திசையோன் வக்கிரித் திட்டதை யுணர்ந்தாங்
> கசையா மரபி னதுபட வைத்து
> மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
> நாத்தொலை வில்லா நன்னூற் புலவன்" (சிலப். iii : 37—44)

என்பதில் உணர்த்தினர்.

அக் கவிஞன் மூன்று தமிழும் முற்றக் கற்றவனாக இருத்தல் வேண்டும். இசையோடு சேர்த்தற்குரிய செய்கைகளில் நல்லறிவுடையனாதல் வேண்டும். தலைவனைப் பழித்துப் பகைவர் அமைத்த வசைகளிற் காணப்பட்டவற்றை எல்லாம் மறைத்து வசையில்லாத மொழிகளால் நாடகத்தை இயற்றவேண்டும்.

"இன்னே னல்லன் செய்குவ னுயின்
தேற்ரு மாந்த ராரியம் போலக்
கேட்டார்க் கெல்லாம் பெருநகை தருமே"

என்னும் சூத்திரம் இவ்விலக்கணம் அமையாத கவிஞன் நாடகம் இயற்றுதல் நகைக்கு ஏதுவாகும் என்பதை உணர்த்துகின்றது.

## கூத்து வகை

கூத்துக்கள் பலவகைப்படும். அவற்றுள் இவ்விரண்டாகப் பகுக்கப்படுவன உள. அவை, வசைக் கூத்து, புகழ்க் கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்துக் கூத்து; சாந்திக் கூத்து, விநோதக் கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து என்பனவாகும்.

இவற்றுள் சாந்திக் கூத்தென்பது சொக்கநிருத்தம், மெய்க் கூத்து, அவிநயக்கூத்து, நாடகமென்னும் நான்கு வகைப்படும். இவற்றுள்ளே கூறப்படுவதாகிய நாடகமே கதை தழுவிவரும் கூத்தாகும்.

வென்றிக் கூத்தென்பது பகைவனது ஒடுக்கத்தையும் தலைவனது உயர்ச்சியையும் மேம்படுத்திக் கூறுவது. இதற்குரிய இலக்கியம் நாடகக் காப்பியங்களில் ஒருவகை யாகும்.

"அவற்றுள், மாற்ரு னொடுக்கமும் மன்ன னுயர்ச்சியும்
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே."[1]

வசைக்கூத்து பல்வகை உருவமும் பழித்துக் காட்டும்.

## நாடக உறுப்புக்கள்

நாடகத்திற்கு உறுப்பாக விலக்கு என்னும் தலைப்பில் பதினுன்கு பிரிவுகள் சொல்லப்படுகின்றன. அவை பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல் வகை, வண்ணம், வரி, சேதம் என்பன.

பொருளென்பது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்குமாகும். இவற்றைச் சதுர்வர்க்கமென்பர் வடநூலார்.

## நாற்பொரு ளமைதி

இவற்றுள் நாடகமென்பது அறம் முதலிய நாற்பொருளையும் பயப்பக் கூறுவது. தொல்காப்பியனர் கூறிய தொன்மை, விழுமிய பொரு

---

[1] சிலப். ப. 81.

ளாகிய இவற்றைக் கூறுவதென்பதை முன்னர்க் கண்டோம். தண்டியாசிரியர் முதலியோர் காப்பியங்களைப் பெருங்காப்பியம், காப்பியம் என வகுக்கின்றனர். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் கூறுவது பெருங்காப்பியமென்றும், அவற்றில் ஒன்றும் சிலவும் குறைந்து வருதல் காப்பியமென்றும் அவர் கூறுவர். இங்ஙனம் நாற்பொருளையும் கருதிப் பகுக்கப்படும் பகுப்பு நாடகக் காப்பியங்களுக்கும் உண்டாதல் தெரியவருகின்றது.

## கதையமைப்பு

விலக்குறுப்பின் இரண்டாவதாகிய யோனி யென்பது நாடகத்தினுள்ள கதையை நோக்கிப் பகுக்கப்படுவது. அவை நான்கு வகைப்படும். அவை உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருள்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக உள்ளதோர் பொருள்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனாக இல்லதோர் பொருள்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருள்மேற் செய்தலும் என்பன. சிலப்பதிகாரம், உள்ளோன் தலைவனாக உள்ளதொரு பொருண்மேல், சித்திரிக்கப்படாது பட்டாங்குக் கிளந்து பலவினப்பாட்டால் வந்ததென்று கூறுவர் அடியார்க்கு நல்லார்.

கதையின் வகை இங்கே நான்காகக் கூறப்பட்டது. வீரசோழிய உரையாசிரியர் ஐந்தாகக் கூறுவர்.[1]

நாடக இலக்கியங்களுக்கு அமைக்கும் இவ்வகையையே காப்பியங்களுக்கும் கோடல் பொருந்தும். உள்ளோன் தலைவனாகச் செய்தவை சரித்திரக் காப்பியங்களாகும். இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருள்மேற் செய்யும் நாடகக் காப்பியம் தொல்காப்பியர் கூறும் விருந்தென்னும் வகையினுள் அடங்கும்.

## விருத்தி

விருத்தி என்னும் விலக்குறுப்பு நான்கு வகைப்படும். இதுவும் கதைப்பொருள் குறித்த பகுப்பாகும். அறம் பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருவது சாத்துவதி யெனவும், பொருள் பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது ஆரபடியெனவும், காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது கைசிகி யெனவும், கூத்தன் தலைவனாக நடன் நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது பாரதி எனவும் கூறப்படும்.

---

1 வீரசோழியம், ப. 86.

## கதைத் தொடர்ச்சி

ஐந்தாவது விலக்குறுப்பாகிய சந்தி என்பது கதைப் பொருளின் தொடர்ச்சியைப் பற்றிய வகை. அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்பன. அவற்றை வித்து, முளை, தழைத்தல், விளைவு, துய்த்தல்[1] எனவும் கூறுவர்.

முகமாவது உழவினாற் சமைக்கப்பட்ட பூழி யுள்ளிட்ட வித்துப் பருவஞ் செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலை தோன்றி நாற்றாய் முடிவது போல்வது. கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிலிருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து கருப்பமுற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது. துய்த்தலாவது விளைந்த பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது.

நாடகக் காப்பியங்களுக்குரிய இவ்விலக்கணம் இயற்றமிழ்க் காப்பியங்களுக்கும் உரியனவேயாகும். தண்டியாசிரியர் பெருங்காப்பியத்திலுள்ளசெய்திகள் சந்திபோலத் தொடர்ந்து வரவேண்டுமென்று இலக்கணம் வகுக்கின்றார். நாடகத்துக்குரிய சந்தியின் இயல்பு இயற்றமிழ்க் காப்பியத்திலும் அமைதல் வேண்டுமென்பதே அவர் கருத்தாதல் தெளியப்படும்.

பன்னிருபாட்டியலில் தொடர்நிலைச்செய்யுளின் இலக்கணம் சில சூத்திரங்களாற்[2] கூறப்படுகின்றது. அங்கே மூன்றுவகைப் பிரிவுகள் காணப்படும்.

"வித்தெண் டுளிகொடி தலைவனொடு மேவி
... ... ... ...
நடைபெற வருவது தொடர்நிலை யென்ப"

என ஒரு சூத்திரத்திலும்,

"வித்தே எண்டுளி விருந்தியல் கொடியென
... ... ... ...
நடைபெற வருவது தொடர்நிலை வகையே"

என மற்றொரு சூத்திரத்திலும் வித்து, துளி, கொடி என மூன்று கூறப்படுகின்றன. மூவகைத் தலைவனோடு பொருந்திய காப்பியங்களை முறையே இப் பெயராற் குறித்தனரென்று கொள்ள இடமுண்டெனினும், அம் மூன்றும் ஒருங்கே வருதல் வேண்டு மென்னும் பொருள்பட அச் சூத்திரங்கள்

---

1 தண்டி. 8, உரை.

2 347, 348, 349, 350.

அமைந்திருக்கின்றன. அதனால் சந்தியைப் போலக் கதைப் பொருளின் தொடர்பை வகுக்கும் வகையுள் இம் மூன்றையும் கொள்ளுதல் பொருந்துமோ என்பது ஆராய்தற்குரியது. வித்து என்பது ஐவகைச் சந்தியுள் ஒன்றாகிய முகம்போல்வதென்றும், துளியென்றது அவ்வித்து முளைத்துத் தழைக்குமளவும் உதவுகின்ற மழையைக் குறித்து நிற்றலின் அது பிரதி முகம் கருப்பம் என்பவற்றைப் போல்வதென்றும், கொடி யென்றது நன்றாக வளர்ந்து மலரும் கனியும் செறிந்த கொடியைக் குறித்து நின்று விளைவு துய்த்தலென்னும் இரண்டையும் போல்வதென்றும் கொள்ளலாகும். முன்னே நாடக நூல்களுக்குரிய ஐந்து சந்திகளும் காப்பியங்களுக்குக் கூறப்படுங்கால் சுருங்கி மூன்றாதல் இயல்பேயாகும். பன்னிரு பாட்டியலில் தொடர்நிலைச் செய்யுளிலக்கணம் வகுக்கும் மற்றொரு சூத்திரம்,

"வென்றிகோ ளிருக்கை யென்றிவை யனைத்தும்
சந்தி யாகத் தந்துநிலை பெறுமே"

என்று குறிக்கின்றது.

காப்பியங்களுட் பொருளை இங்ஙனம் உழவோடு உவமித்துக் கூறும் மரபு இலக்கியங்களிலும் காணப்படும். திருக்குறளாசிரியர் புலவர்களை, "சொல்லேருழவர்" என்று குறித்தனர்.

## சுவை

நாடகக் காப்பிய உறுப்புக்களில் சந்தியை அடுத்து வருவது சுவை. அவை அடியார்க்கு நல்லாரால் ஒன்பதெனக் கூறப்பட்டது. இது குறித்த செய்திகள் முன்னர் ஆராயப்பட்டன. சுவை ஒன்பதுக்கும் உரிய அவிநயங்களைச் சில சூத்திரங்களால் அடியார்க்கு நல்லார் விளக்குகின்றார். வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய இலக்கணங்களிற் காட்டிய உதாரணச் செய்யுட்களிலும் காப்பிய இலக்கியங்களிலும் இவ் வவிநயக் குறிப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## நாடகச் சாதி

சுவையின் பின்வரும் விலக்குறுப்பு, சாதியென்பதாகும். இது நாடகக் காப்பிய வகையாகும். அவ்வகை பத்து. வீரசோழிய உரையாசிரியர் கூறும் பெயர்களுக்கும் தண்டியலங்கார உரையாசிரியர் கூறுவனவற்றிற்கும் சிறிது வேறுபாடு உண்டு. வீரசோழிய உரையாசிரியர் கூறும் வகை, பதிப்பிலுள்ளபடியே காட்டப்படுகின்றன:

1. வீரம், 2. கூச்சம், 3. அர்ப்பாயம், 4. பேய்க்காரம், 5. வியோகம், 6. பாணம், 7. சல்லாபம், 8. வீழிணி, 9. உத்தார

மடங்கம்,[1] 10. பிரசானம்[2]. இவற்றின் இலக்கணங்களையும் அவ் வுரையாசிரியர் எடுத்துரைக்கின்றனர். தண்டியலங்கார உரையாசிரியர் கூறுவன, நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவகாரம், வீதி, அங்கம், ஈகாமிருகம் என்பன.[3] இவையே வடநூலுள்ளும் கூறப்படும். இவற்றை "நயநிலை மருங்கிற் சாதி" என்பர் அணியியலுடையார்.[4]

## குறிப்பு முதலியன

பின்வரும் குறிப்பு, சத்துவம் என்னும் இரண்டும் சுவைக்கு அங்கமாவன. சத்துவம் என்பது சாத்விகபாவமென்னும் தலைப்பின்கீழ் முன்னர் விளக்கப்பட்டது. அவிநயமென்னும் விலக்குறுப்பு வகுண்டோன் அவிநயமுதல் இருபத்து நான்கு.

அதன் பின்வரும் சொல் என்பது, உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் என்பன. அவை நெஞ்சொடு கூறல், கேட்போர்க் குரைத்தல், தானே கூறலென்றும் சொல்லப்படும். சொல்வகை யென்பது அடிவரையறை பற்றியது. வண்ணம், வரி என்பன நாடகத்துள் வரும் இசைப்பாட்டுக்களின் அமைப்புக்களைப் பற்றியவை.

## சேதம்

இறுதி யுறுப்பாகிய சேதமென்பது காப்பியத்திற் கண்ட கதையையேனும், வழங்கும் வரலாற்றையேனும் நாடகத்திற்கேற்பக் கூட்டியும் குறைத்தும் அமைத்துக் கொள்வது. அஃது ஆரியம், தமிழ் என இரு வகையை உடையது.

"ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டினும்
ஆதிக் கதையை யவற்றிற் கோப்பச்
சேதித் திடுவது சேதமென் றாகும்"

என்பது சூத்திரம்.

இதனால், பழங்கதையை நாடகமாக்குவதற்குச் சில வரையறைகள் உண்டென்பது பெறப்படும். காப்பியங்களின் கதையை நாடகமாக்கி யமைக்கும் மரபும் தெரியவருகின்றது. ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இத்

---

[1] உத்தரட்டாங்க மென்பது போலும்.

[2] இது பிரகசனம் போலும்.

[3] ரிப்பன் பிரஸ் பதிப்பாகிய தண்டியலங்காரத்தில், சில ஏட்டுப் பிரதிகளில் இப்பத்தும் 'வாரம், ஈயாமிருகம், அரட்டு, சமவகாரம், பாணம், வீதி, சல்லாபம், உத்திரட்டாங்கம், வீராசனம், வியாயோகம்' எனக் காணப்படுகின்றனவென்று ஓர் குறிப்புள்ளது; ப. 5.

[4] யா. வி. ப. 526.

தகைய அமைதியைக் காணலாம். தமிழில் முற்காலத்தில் இருந்த நூல்கள் காணப்பட்டில. இப்பொழுது வசனத்தில் எழுதப்படுகின்ற நாடகங்களில் சேதமென்னும் உறுப்பைக் காணலாம்.

இவ்வளவும் சிலப்பதிகாரத்தின் உரையால் அறியக் கிடக்கும் செய்திகளாகும்.

## வீரசோழியத்திற் கண்ட செய்திகள்

வீரசோழிய உரையாசிரியர் அகப் புறப்பொருள் இன்ன தென்று விளக்குவதற்கு,

"அறனும் வாழ்க்கையும் ஒருதலைக் காமமும்
பொதுவியல் பாடா ணயநிலைப் படலமென்
றிவைக ளனைத்து மகப்புற மாகும்"

என ஒரு சூத்திரம் காட்டுகின்றார். அதனுட் கூறப்படும் நயநிலைப் படல மென்பது நாடகம் அல்லது கூத்தமார்க்கமென உரைத்து நாடக சம்பந்த மான பல செய்திகளை எடுத்து உரைத்தனர். யோனி, விருத்தி, சாதி, சந்தி, சுவை யென்பன அவரால் விரிக்கப்படுகின்றன. சந்தியாவது முகம், பயிர்முகம், கருப்பம், வைரிமுகம், நிருவாண மென்பவை.

முகமென்பது முளைதோன்றுதலைப் போல நாடகத்திற் பொருள் தோன்றுவதென்றும், பயிர் முகமென்பது முளை வளர்ந்து முற்றியது போலத் தலைமக்கள் சொன்ன பொருள் விளங்கும்படி விரித்துச் சொல்வ தென்றும், கருப்பமென்பது கருத் திரண்டதுபோல நலம் தரும் பொருளைத் திரளச் சொல்வதென்றும், வைரிமுகமாகிய விமரிசமென்பது தோடு விரித்துக் கதிர் தோன்றினாற்போல நாடகப் பொருள் நன்றாக விரிந்து பயன்படுவதென்றும், நிருவாணமென்பது விளைந்த போகத்தை அறுத் துத் துகள் களைந்து கொண்டு பெற்று மகிழ்வதுபோலத் துய்ப்பதென்றும் கூறுவர்.

## நாடகச் சிறப்பு

நாடகக் காப்பியங்கள் இலக்கியங்களிற் சிறந்தனவென்பதைப் பல மொழியாசிரியர்களும் தெரிவிக்கின்றனர். நாடகம் ரஸமயமாக இருந்து இன்பம் பயப்பதாதலின், இன்பம் பயப்ப வருவதை நாடகம் என்று கூறும் மரபு தமிழில் உண்டாயிற்று. இது,

"நன்பவணத் தண்ணற வுண்ணளி போன்றோளிர் நாடகமே" (219)

என்னும் திருக்கோவையாரின் அடிக்குப் பேராசிரியர், 'கண்டார்க் கின்பஞ்

செய்தலின் நாடக மென்றார்' என்று கூறும் உரையாற் புலனாகும்.

இயல் இசை நாடகம் என்னும் முத்திறத்தமிழின் அமைதியும் ஒருங்கே காணப்படுதலின் நாடகம் சிறந்ததாயிற்று. தமிழை அரசாக உருவகம் செய்த தமிழ்விடு தூதுடையார் அஃது எல்லா நலங்களும் நிரம்பக் கொலு வீற்றிருக்கும் காட்சியை,

"பண்கள்முதற் பெண்களோடும் பாலரோடும் நாடகமாம்
பெண்கோலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே" (33)

என்று வருணிக்கின்றார். தமிழரசிருக்கை நாடகத்தால் நிறைவேறுகின்றது என்ற அவர் கருத்து இதன்கண்ணே அமைந்தது காணலாம்.

வடமொழியிலும் வாமனாசாரியர் நாடகமே காப்பியங்களிற் சிறந்ததென்பர்.[1] ஆங்கில அறிஞர்களும் இங்ஙனமே உரைப்பர்.

"நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"[2]

என்ற தொல்காப்பியச் சூத்திரம் புலவர் இயற்றும் பனுவல்களின் மரபை இரண்டு வழக்கினுள் அடக்கிக் கூறுகிறது. செய்யுள் வழக்கு உலகியல் வழக்கு என்பன வேறுவகை. இச்சூத்திர உரையில் இளம்பூரணர், 'நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறல்' என்று உரைத்தார். நாடகம் சுவைமயமாக அமைவதென்பதும் ஏனைய செய்யுட்களிலும் அந்நாடக வழக்குக் காணப்படுமென்பதும் இச் சூத்திரத்தாலும் உரையாலும் அறியப்படுகின்றன. 'நாடக வழக்கு, கவிஞர்களுடைய உள்ளத்தால் கற்பனை செய்யப்பட்டுப் படிப்போருக்கு இனிமை பயப்பது'[3] என்பர்.

தமிழ் நூல்களிற் பழையனவாகிய அகப்பொருட் டொகைநூற் செய்யுட்கள் யாவும் கூற்று வகையாக அமைந்து இந்நாடக இலக்கிய மரபைப் பின்பற்றுதல் இங்கே நினைத்தற்குரியது.

# இயற்றமிழ்க் காப்பிய இலக்கணங்கள்

## காப்பியத்தின் பகுப்பு

காப்பியங்களைத் தண்டியலங்கார ஆசிரியர் பெருங்காப்பியம் காப்பியமென்று இருவகையாகப் பகுப்பர். பிற்காலத்தில் அவரைப் பின்பற்றிய மாறனலங்கார நூலாசிரியரும் அங்ஙனமே அமைத்தனர்.

[1] 1. iii : 30.

[2] தொல். அகத். 56.

[3] டாக்டர் உ. வே. சாமிநாதையர்: குறுந்தொகை, நூலாராய்ச்சி, ப. 17.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் நாற்பொருளையும் கூறுதல் பெருங்காப்பியம்; அந்நான்கனுள் ஒன்றேனும் பலவேனும் கூறப்படா விடின் அது காப்பியம் ஆகும்.

"அறமுத னான்கினுங் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே" (தண்டி. 10)

"பெருங்காப் பியங்காப் பியமெனும் பெற்றித்தாற்
சுருங்காப் பொருட்டொடருஞ் சொல்லிற் — பொருந்தவற்றுள்
ஒன்றும் பலவும் பொருளிற் குறைவுறுமேல்
என்று மதுகாப் பியம்" (மாறனலங். 71)

'எனவே நாற்பொருளுங் குறைவின்றி வருவதே பெருங்காப்பியமென்ப தாம்' (ஷை உரை.)

சிறுகாப்பியங்களில் தண்டியலங்கார உரையாசிரியர் கோவையை யும் அமைப்பர். தூது, உலா முதலியனவும் அத்தகையனவே. வடமொழியி லுள்ள மேகசந்தேசம் முதலியவற்றைக் காப்பியங்களாகவே வடநூலறிஞர் வகுப்பது இங்கே ஒப்பிடுதற்குரியது.

'உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்ப மும் வீடும் கூறல் வேண்டுமென்றே' என்பர் அடியார்க்கு நல்லார். சிலப் பதிகாரம் வீடு கூறிற்றிலதென்றும் மணிமேகலை அதனைக் கூறிற்றென்றும் இவ்விரண்டும் ஒன்றாகி ஒரு காப்பியமாக நடப்பனவென்றும் கூறுவர்.[1] இதனால் நாற்பொருளும் பெருங்காப்பியத்தில் அமைதல் வேண்டுமென்பது பெறப்படும்.

புராணமென்பது காப்பியவகைகளிலே தமிழிற் சேர்க்கப்படும், அதுவும் தொடர்நிலைச் செய்யுளே யாதலின். வடமொழியிலே புராணமென் பதற்குத் தனியே இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் காப்பியங் களோடு சேர்க்காமல் தனியே எண்ணுதலே வடநூலார் மரபு. இந்திய இலக்கியங்களைப் பற்றி ஒரு பெருநூல் எழுதிய ஆசிரியர் ஒருவர் செய்யுள் இலக்கியங்களை இதிஹாஸம், புராணம், தந்திரம், காப்பியம் என நான்கு வகையாக்குகின்றார்.[2] அங்கே இதிஹாஸ புராணங்களைக் காப்பியத்தி னின்றும் வேறாகப் பிரித்தது வடநூல்களை நோக்கியதாகும். தமிழில் அவையும் காப்பியங்களாகவே கூறத்தகும்.

புராணம் என்பது பழமை என்னும் பொருளுடையது. 'சிவ புராணம்' என்பதற்கு, 'சிவனது அநாதி முறைமையான பழமை' எனத் வாசகத்தில் விளக்கம் எழுதியிருத்தல் காண்க. தொன்மை, தோல் என்னும் வனப்புக்கள் பழமைப் பொருளையுடைய சொற்களாதல் இங்கே

[1] சிலப். ப. 10-11.

[2] Herbert H. Gowen, D. D : A History of Indian Literature, p. 197.

ஒப்புநோக்கற் குரியது. புராணம் ஐவகை யிலக்கணமுடைய தென்பர் வடநூலார். அதனைத் தமிழ்க் கூர்மபுராண முடையாரும் கூறினர்.

இனி, விளம்பனம் என்பதொன்று யாப்பருங்கல உரையில் சொல்லப்படும். "விளம்பனத் தியற்கையும்" என்னும் சூத்திரப் பகுதிக்கு உரையெழுத வந்த உரையாசிரியர்,

"விளம்பனத் தியற்கை விரிக்கும் காலை
ஆரியந் தமிழோடு நேரிதி னடக்கிய
உலகின் றோற்றமு மூழி யிறுதியும்
வகைசா ரெண்ணூற் றறுவா தியற்கையும்
வேத நாவின் வேதிய ரொழுக்கமும்
ஆதி காலத் தரசர் செய்கையும்
அவ்வந் நாட்டார் அறியும் வகையால்
ஆடியும் பாடியு மறிவரக் கிளத்தல்"

என்ற சூத்திரத்தை மேற்கோள் காட்டினர்.[1] இச் சூத்திரத்தையே வீரசோழிய உரையாசிரியரும் எடுத்துக் கூறுகின்றார்.[2] ஆடலும் பாடலும் சம்பந்தப்பட்ட இது புராணத்தைப்போன்றதொன்றைத் தன் உள்ளுறை பொருளாகக் கொண்டது போலத் தோற்றுகின்றது. உலகின் றோற்றம் முதலிய செய்திகள் புராணத்தின் கண்ணும் வருவன.

"குலவரவு காரிகை, யாப்பிற் புராணமே யாம்"

என்னும் வச்சணந்திமாலைச் செய்யுள் புராண இலக்கணம் கூறுகின்றது. குலவரலாறு அமைதல் புராணத்தின் இலக்கண மென்று அதனாற் புலப்படும்.

புராணத்தில் நாற்பொருளும் ஒருங்கே கூறப்படுதல் அருமை யாகும். பெரும்பாலும் பக்திரஸமும், வீட்டு நெறிக்குரிய செய்தி களுமே அவற்றிற் காணலாகும். ஆதலின் அவற்றைப் பெருங் காப்பியங் களிற் சேர்க்காமல் காப்பிய வகையாகவே கொள்ளல்வேண்டும். இக் கருத்தை,

"அறம்பொருளின் பம்வீட்டிற் குறைபா டாகப்
பெறுவதுகாப் பியமாகும் புராண மாகும்"[3]

என்று சிதம்பரப் பாட்டியலாரும் தெரிவித்துள்ளார்.

---

1 யா. வி. ப. 526.

2 வீர. ப. 190.

3 சிதம்பரப்பாட்டியல், 42.

# பெருங்காப்பிய இலக்கண ஆராய்ச்சி

காப்பிய வகைகளிற் சிறந்ததாகிய பெருங் காப்பியத்தின் இலக்கணம் முதன்முதலில் தமிழில் விளக்கமாகத் தண்டியலங்கார நூலிலே தான் காணப்படுகின்றது. அச் சூத்திரம் வருமாறு:

" பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட லாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப. "

இச் சூத்திரத்தாற் பெறப்படும் பெருங் காப்பிய இலக்கணங்களை ஒரு வகைப்படுத்தி அமைத்துக்கொண்டால் ஆராய்தற்குத் துணையாகும். இச் சூத்திரம் பெருங் காப்பியங்களின் உறுப்புக்களைப்பற்றியும், பொருளின் கூறுகளைப்பற்றியும், அணியமைதியைப் பற்றியும் கூறுகின்றன.

உறுப்புக்கள்: முன் உறுப்பு: வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் என்பவற்றுள் ஒன்று முதல் உறுப்பாக வரும்.

## கடவுள் வாழ்த்து

இதனை ஆசி யென்பர் வடநூலார். இதனைத் தனியே ஓர் அலங்காரமாகப் பின்னர் விரித்துக் கூறுவர் தண்டியாசிரியர்.[1] தமிழ் நூல்களில் கடவுள் வாழ்த்தென்பது வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தலென்னும் மூன்றுக்கும் பொதுவாக வழங்குகின்றது. தண்டியலங்காரம் கூறுவது வடமொழியைப் பின்பற்றியது. தமிழில் தேவபாணி, தேவர்ப் பரவுதல் என்னும் தொடர்கள் கடவுள் வாழ்த்தின் வகைகளாகக் காணப்படுகின்றன. இவற்றின் சொற்பொருளைக் கொண்டு ஆராயின் தேவபாணி யென்றது தாளத்தொடு பொருந்திய கடவுள் வணக்கச் செய்யு

[1] சூ. 88.

ளெனவும், தேவர்ப்பரவுதல் கடவுளை முன்னிலைப்படுத்தி வணங்குதலென வும், கடவுள் வாழ்த்தென்பது கடவுளை வாழ்த்துவதெனவும் தோற்று கின்றது.

கடவுள் வாழ்த்தைப்பற்றிக் கூறும் தொல்காப்பியச் சூத்திர உரைகளில் இளம்பூரணர் அது, கொடி நிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப் படை, புகழ்தல், பரவல் என ஆறுவகைப்படுமென்பர். அவர் கருத்துப் படிக் கொடிநிலை யென்பது கடவுளின் கொடியைப் புகழ்வதாம். கந்தழி யென்பது கடவுள் அரணெறிந்து பகைவென்ற திறத்தைப் பாடுதல். வள்ளியென்பது வெறியாட்டைக் கூறுவது. புலவராற்றுப்படை யென்பது அறிவான் அமைந்தான் ஒரு புலவனைக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்துவது. புகழ்தலென்றது கடவுளைப் படர்க்கையிற் புகழ்தல். பரவுதல் முன்னிலையில் வைத்துப் போற்றுதல். இவை இளம்பூரணர் கருத் தாயினும் இலக்கியங்களிற் கடவுள் வாழ்த்தாகப் பயின்று வருவன பெரும்பாலும் புகழ்தலும் பரவுதலுமேயாம்.

முன்னிலைக்கண் வரும் கடவுள் வாழ்த்துக்களில் ஒரு வகை தேவ பாணியாகும். அதனைப் பற்றி அடியார்க்கு நல்லார் பின் வருமாறு கூறு கின்றார் :—

'அது முத்தமிழ்க்கும் பொது. அஃது இயற்றமிழில் வருங்கால் கொச்சக வொரு போகாய் வரும். வரும் வழியும் பெருந்தேவபாணி சிறு தேவபாணி யென இருவகைத்தாய் வரும்.'[1]

பின்னும் அது முன்னிலையில் வருமென்றும் இசைத் தமிழில் வருமாறு இன்னதென்றும் நாடகத் தமிழில் இன்ன இன்ன தெய்வத்தைக் குறித்து வருமென்றும் விரித்துக் கூறுகின்றார். இவற்றால் கடவுளை முன் னிலைப்படுத்தித் துதிக்கும் மரபுண்மையை அறிகின்றோம். 'அத்தொடர் நிலையின் முதற்கண் நின்ற தேவபாணி' (தொல். செய். 149, பேர்.) எனப் பேராசிரியர் கூறுதல் காண்க.

கடவுள் வணக்கத்தை நமஸ்க்ரியை என்பர் வடநூலார். இப் பொழுதுள்ள காப்பியங்களில் காணப்படும் துதிகள் இவ்வகையைச் சேர்ந் தனவாக உள்ளன.

வருபொரு ளுரைத்தல் என்பதனை வஸ்து நிர்த்தேசமென்பர் வடநூலார். தொகைநூல்களிற் காணப்படும் கடவுள் வாழ்த்துக்கள் இந்த வகையில் அமைந்துள்ளன.

கடவுள் வாழ்த்துத் தனக்குப் பயன்பட வாழ்த்துவ தென்றும் உலகுக்குப் பயன்பட வாழ்த்துவதென்றும் இரண்டு வகைப்படும்.[2] நற்றிணை

---

1 சிலப். ப. 190-191.

2 தொல். செய்யுள். 109, பேர்.

யிலுள்ள வாழ்த்தும், கலித்தொகையிலுள்ள வாழ்த்தும் தனக்குப் பயன்பட வாழ்த்தியன வென்பர். குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்பன பிறர்க்குப் பயன்பட வாழ்த்தியவை.

இவ்வாழ்த்து இயற்கை வாழ்த்தென்றும், சார்த்துவகை வாழ்த்தென்றும் இருவகைப்படும். முன்னதே காப்பியங்களிலும் பிறநூல்களிலும் முதற்கண் வருவது. பின்னது புறநிலை வாழ்த்து[1] முதலியன.

தண்டியலங்கார உரையாசிரியர் இம்மூன்றனுள் ஒன்றும் பலவும் வருமென்று கூறுகின்றனர். பிற்காலத்து நூலாகிய திருவிளையாடற் புராணத்தில் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் வந்துள்ளன.

தண்டியலங்கார உரையாசிரியர் இம்மூன்றையும் முறையே வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்று கொண்டார். அவ்வுரையை மேற்கொண்டும், அவையடக்கமென்னும் ஒன்றை உடன் கூட்டியும் வாழ்த்தியல், அவையடக்கம், தெய்வ வணக்கம், செய்பொருளென்பவை முன்வரவேண்டுமென்று இலக்கணம் உரைத்தார் மாறனலங்கார முடையார்:

"வைத்த பெருங்காப் பியநிலையும் வாழ்த்தியல்பார்
மெய்த்த வவையடக்கம் வீறுசான்—முத்திதரும்
தெய்வ வணக்கமுடன் செய்பொருளு முன்வரவாங்
கெய்த வுரைப்பதுதா னேய்ந்து." (மாறன். 72.)

தண்டியலங்கார சூத்திரம்,

"வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர"

என்று கூறுகின்றது. இம் மூன்றும் ஒருங்கே முன்வரவென்று கூறவில்லை. இம்மூன்றும் ஓரினப்பட்டனவே யாதலின் ஏதேனும் ஒன்று வரவேண்டுமென்றார் போலும்.

## உறுப்புக்களின் பெயர்கள்

மேலே காட்டிய தண்டியலங்காரச் சூத்திரத்தில் காப்பிய உறுப்புக்களைப்பற்றி வேறொன்றும் கூறப்படவில்லை. ஆயினும் அவ் வுறுப்புக்களின் பொதுப் பெயர்கள் உள்ளன. சருக்கம், இலம்பகம், பரிச்சேத மென்னும் பகுதிகளோடு விளங்குமென்பது காண்க. இவை காப்பியப் பிரிவுகள்; வடமொழியைத் தழுவி யமைந்தன. மாறனலங்காரம் காண்டமென்பதையும் சேர்த்துரைக்கும்.

---

[1] தொல். செய். 110, பேர்.

இவற்றுட் காண்டமென்பது பேருறுப்பு; சிலப்பதிகாரம், பெருங்கதை, கந்தபுராணம், கம்பராமாயணம் முதலியவற்றிற் காணப்படுகின்றது; காண்டம் - தொகுதி; பல சிற்றுறுப்புக்களின் தொகுதி. சருக்கம் முதலியன சிற்றுறுப்புக்களின் பெயர்கள். சருக்க மென்பது சூளாமணியிலும் பாரதத்திலும் பிற்காலத்துப் புராணங்கள் சிலவற்றிலும் காணப்படும். இலம்பகமென்பது சிந்தாமணியிற் காணப்படுகின்றது. பரிச்சேத மென்பது தமிழ் நூல்களில் வழங்கவில்லை.

இவற்றை யன்றிக் காதை, அத்தியாயம், கதி, படலம்[1] முதலிய பெயர்கள் காப்பிய உறுப்புக்களுக்கு வழங்குகின்றன.

இவற்றுட் காதை யென்பதைக் கதைபொதி பாட்டென்பர் அடியாக்கு நல்லார். வடமொழியில் ஒருவகை இசைப்பாட்டைக் 'காதா' என வழங்குவர். பௌத்த நூல்களில் இப் பெயர்வழக்கு மிகுதியாக உள்ளது. ஆதலின், காதை யென்பதற்குப் பாட்டென்றே பொருள் கோடல் பொருந்தும். நீலகேசி உரையாசிரியர் பாட்டைக் காதை யென்றே குறிப்பர். ஒரு பாட்டினுள் மற்றொரு பாட்டு மறைந்திருக்கும் சித்திர கவிக்குக் காதை கரப்பு என்னும் பெயர் யாப்பருங்கல விருத்தியிலும், தண்டியலங்காரத்திலும் காணப்படும். அதன் இலக்கணத்தைக் கொண்டு காதை யென்பது செய்யுளென்னும் பொருள் உடைய தென்பதை ஊகிக்கலாம்.

"காதை கரப்பது காதை கரப்பே" (289)

என்ற மாறனலங்காரச் சூத்திரத்திற்குரிய உரையாகிய, 'புலவராற் குறிக்கப்பட்ட செய்யுளுட் பிறிதொரு செய்யுட்குக் கூடுவனவான எழுத்துக்கள் புகுதாதே தாம் குறித்த பழைய செய்யுள் கரந்து எழுத்துப் பிறக்கிக் கொள்ளலாம்படி பாடுவது காதை கரப்பா மென்றவாறு' என்பதனுல் இது வலியுறுகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை யென்னும் காப்பியங்களில் உள்ள உறுப்புக்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாட்டாக அமைந்திருத்தலின் அவை காதையெனவே வழங்கப்பட்டன. பல பாட்டுக்கள் சேர்ந்த உறுப்பைக் காதை யென்று கூறுதல் பொருத்தமிலதாகும்.

அத்தியாய மென்பது பாகவதத்திலும், குசேலோபாக்கியானத்திலும்காணப்படும். கதியென்பது பிரபுலிங்க லீலையில் உள்ளது. கந்தபுராணம், கம்பராமாயணம் முதலியவற்றிற் படலமென்பது காணப்படுகின்றது. இப் பெயர் இலக்கண நூல்களின் உறுப்புக்களுக்கே பண்டைக் காலத்தில்

[1] இராமநாதபுரம் ஸம்ஸ்தான மகாவித்வான் பாஷா கவிசேகர ரா. இராகவையங்காரவர்கள் தாம் இயற்றிய பாரிகாதை என்னும் தொடர்நிலைச் செய்யுளில் உள்ள பிரிவுகளுக் குத் திறம் என்ற பெயரை அமைத்துள்ளனர்.

வழங்கி வந்தது. இல்க்கண நூலைப்பற்றிய இலக்கணம் வகுக்கும் தொல் காப்பியனார்,

" ஒருபொரு ளுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப"

என்று கூறுவர். இதில் படலத்தைப் பல ஓத்துக்களடங்கிய பகுதியாகக் கூறுதல் காண்க. பின்னும் படலத்தின் இலக்கணத்தை,

" ஒருமொழி யின்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்"

என்று அமைக்கின்றனர். அப்படலங்களை உரையாசிரியர்கள் அதிகார மென்று கூறுவர். 'எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன படலமெனப்படும்' (தொல். செய். 172, பேர்.) என்பது காண்க.

படலமென்றே இலக்கணநூற் பிரிவுகள் வழங்குதலைப் பன்னிரு படலமென்னும் புறப்பொருளிலக்கண நூற்பெயரும், புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம், பிரயோக விவேக மென்னும் இலக்கணங் களின் உறுப்புக்களின் பெயர்களும் புலப்படுத்தும். இங்ஙனம் இலக்கணங் களுக்குரியனவாக இருந்த பெயர் காப்பியங்களுக்கும் கொள்ளப்பட்டது. இதனை நினைந்தே சங்கர நமச்சிவாயர் நன்னூலுரையில் 'படல வுறுப்பினை யுடைய காப்பியங்களுள் பாட்டுடைத் தலைவனது சரிதையே யன்றி மலை கடல் நாடு முதலிய பல பொருட்டிறங்களும் விரவிவருதலும் பல பொருளை உணர்த்தும் பொதுச் சொற்கள் ஒரோவழி யன்றித் தொடர்ந்து வருதலும் காண்க'[1] என்றுரைத்தார். இப்பொழுதுள்ள தொடர்நிலைச் செய்யுட் களிற் படலவுறுப்புக்களையுடையனவே பெரும்பாலனவாம்.

காண்டத்தை யன்றி, வடமொழி முதனூல்களைப் பின்பற்றிப் பாகவதத்தில் அமைந்துள்ள கந்தங்களும் பாரதத்திலுள்ள பருவங்களும் பேருறுப்புக்களாம்.

காப்பியம் நுதலும் பொருளைப் பற்றிக் கூறுவனவற்றை நான்கு பகுதிகளாக வகுக்கலாம்.

1. காப்பியத்தின் திரண்டபொருள் — அறம்பொரு ளின்பம் வீடென்பவை.
2. வருணனைகள்.
3. இன்பச் செய்திகள்.
4. அரசியற் செய்திகள்.

---

[1] நன்னூல், சங்கர நமச்சிவாயர் உரை, 3-ஆம் பதிப்பு, ப. 17.

## நாற்பொருள்

இவற்றுள் முதல் வகையாகிய அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கையும் பெருங்காப்பியத்தின் திரண்டபொருளென்று பலரும் வற்புறுத்திக் கூறுதலை முன்னர்க் கண்டோம். பெருங்காப்பியத்தை ஏனைய நூல்களினின்றும் பிரித்தறிவதற்கு இச் சிறப்பிலக்கணமே அடையாளமாகும். எல்லாப் பெருங்காப்பியங்களிலும் இந்நான்கு பொருள்களும் இருப்பினும் கவியினுடைய பாவிகத்துக் கேற்றவண்ணம் இவற்றுள் ஒன்றும் சிலவும் சிறப்பாக அமைந்திருக்கும்.

## வருணனைகள்

வருணனைகள், மலைவருணனை, கடல்வருணனை, நாட்டுவருணனை, நகர்வருணனை, பருவவருணனை, சூரியோதய வருணனை, சந்திரோதய வருணனை என்பவை. இவற்றின் தொகை பதினெட்டு என்று தமிழ்விடு தூது என்னும் பிரபந்தம் தெரிவிக்கின்றது:

"தாழ்விலா வட்டா தசவன் னவனைகளெனும்
வாழ்வெலாங் கண்டு மகிழ்ந்தாயே" (தமிழ்விடுதூது, 34.)

"... ... ...... கொற்றவருக்
கெண்ணிய வன்னனைக ளீரோன் பதுமறியக்
கண்ணிய மிக்கபெருங் காப்பியமும்." (ஷை 52—3.)

மாறனலங்கார உரையாசிரியர் ஓரிடத்தில் இங்ஙனமே உணர்த்துகின்றார்; 'அறம் முதலிய நாற்பொருளும் மலை கடல் நாடு முதலிய பதினெட்டு வருணனையும் ஒழிந்தனவும் குறைவின்றி உணர்த்தப்படுவனவாகும் பெருங்காப்பியம்' என்பது காண்க. இப்பதினெட்டுக்கும் வகை வருமாறு.

(1) மலை, (2) கடல், (3) நாடு, (4) நகர், (5-10) சிறுபொழுது ஆறு, (11-16) பெரும்பொழுது ஆறு, (17) சந்திரோதயம், (18) சூரியோதயம்.

இவற்றோடு மாறனலங்காரத்தில், மேகவருணனை, ஆற்று வருணனை என்பவையும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளன. பெருங்காப்பியத்திற்குரிய இவ்வருணனை ஏனைத் தொடர்நிலைச் செய்யுட்களுக்கும் உரியனவேயாம். ஆதலின் இவ் வருணனைகளைப் புராண காப்பியங்களிலும் காணலாம். இவற்றை யன்றி வேறு பல வருணனைகளும் கூறப்படுதல் உண்டு. அவற்றை 'இனையன' என்பதனாற் கொள்க. அவற்றுட் சில வருமாறு:

ஆற்றுவருணனை, தீர்த்தவருணனை, சந்திரனது அஸ்தமனம், சூரியனது அஸ்தமனம் முதலியன.

இவ்வருணனைகள் அனைத்தும் காப்பியங்களில் வரவேண்டு மென்பது நியதியன்று. இவற்றுட் சில குறைந்து வருதலும் உண்டு. இதனை,

> "கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்
> வேறுபா டின்றேன விளம்பினர் புலவர்" (தண்டி. 9)

என்னும் சூத்திரம் உணர்த்துகின்றது. இவ்வருணனைகளிலும் சில சிறப்பாக அமைந்திருக்கும்.

பிற்காலத்துப் புராணங்கள் சிலவற்றில் திருமலைச் சருக்கமென்று தனியே மலையைப் பற்றி வருணிக்கும் பகுதி உள்ளது. கடல் வருணனை கம்பராமாயணத்திலுள்ள கடல்தாவு படலம், கடல்காண் படலம் என்பவற்றில் உள்ளது. நாடு, நகரம் என்னும் இரண்டைப் பற்றியும் சிலப்பதிகாரம் மணிமேகலை பெருங்கதை யென்னும் நூல்கள் தனியாக வரையறுத்துப் புனையாவிடினும் இடையிடையே அமைந்த செய்திகளோடு சார்த்தி அவற்றின் சிறப்புக்கள் காட்டப்படுகின்றன. சீவகசிந்தாமணியில் முதல் இலம்பகத்தின் தொடக்கத்தில் நாட்டையும் நகரத்தையும் வருணித்துப் பின்பு கதையைத் தொடங்குகின்றார் திருத்தக்கதேவர். சூளாமணியில் தனித் தனியாக நாட்டுச் சருக்கமும் நகரச் சருக்கமும் உள்ளன. அதன் பின்பு இயற்றப்பட்ட காப்பியங்கள் பெரும்பாலனவற்றில் இவ்விரண்டு வருணனைகளும் தனித்தனி உறுப்பாக அமைந்துவிட்டன.

காப்பியத்தில் முதலில் நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்புக் கூறுவது இன்றியமையாத தென்ற கொள்கை கவிகள் உள்ளத்தில் தோன்றி வளரலாயிற்று. நீலகேசியில் முதலாவது தருமவுரைச் சருக்கத்தில் முதலில் நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் கூறப்படுகின்றன. நாட்டுச் சிறப்பைக் கூறத் தொடங்குமுன் அந்நூலாசிரியர்,

> "வாடா வளத்தான் மலர்ஞால மதிப்பின்மிக்க
> நாடாவ திஃதா மதனன்னலஞ் சொன்னலத்தாற்
> கூடா தெனினுஞ் சிலகூறலும் வேண்டுமன்றே
> பாடா விருந்தார் பரிவஞ்சும் படியதன்றே"

என்று கூறுகின்றார். 'என்றால் சொல்லுதற்கு இயலாதென்றாலும் சொல்ல வேண்டியிருக்கிறதே' என்னும் பொருள்பட அவர் கூறுவதில் நாட்டுச் சிறப்புக் கூறுதல் அவசியமென்னும் அவர் கருத்துப் புலப்படுகின்றது.

ஒருவருடைய வரலாறாக இல்லாமல் பலருடைய வரலாறாக உள்ள பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் தம் நூலுக்கு எந்த நாட்டின் சிறப்பைக் கூறுவது? காப்பியத்துக்கு முதலில் நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்பு அமைக்கவேண்டுவது அவர் காலத்து மரபாகிவிட்டது. பெரியபுராணத்துக்கு முதனூலாகிய சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத்தொகை, திருவாரூர்த் திருக்கோயிலிலுள்ள தேவாசிரயனென்னும்

மண்டபத்திலுள்ள நாயன்மார்களைப் பாடியது. அத்திருவாரூர் சோழ நாட்டிலுள்ளது. ஆதலின் 'சோழ நாட்டிலுள்ள திருவாரூரில் இருக்கும் தேவாசிரய மண்டபத்தில் அமர்ந்த அடியார்களைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய முறைப்படி நான் உரைக்கப் புகுகின்றேன்' என்ற கருத்துடைய படலங்களை முன்னர் வைத்துப் பின் முறையாகத் திருத்தொண்டர் வரலாற்றை உரைக்கத் தொடங்குகின்றார். சுந்தரமூர்த்தி நாயனாரது முந்திய வரலாற்றைத் திருமலைச் சருக்கம் முதலிற் கூறுகின்றது. அப்பால் நாட்டுச் சிறப்பைக் கூறியபின் திருவாரூர் நகரச் சிறப்பைப் புனைகின்றார். அதற்குச் சிறப்புக் கூறும் நோக்கத்தால் மனுச் சோழன் சரிதையை விளக்குகின்றார். இங்ஙனம் காப்பியத்துக்குரிய இரண்டும் அமைகின்றன.

ஒன்றோடு ஒன்று இயைபுற நகரச் சிறப்பு வரையிற் கூறிய சேக்கிழார், திருவாரூர்ப் பூங்கோயிலையும், திருக்கூட்டச் சிறப்பில் அக் கோயிலிலுள்ள தேவாசிரயனையும் இணைத்துப் பாராட்டி அங்குள்ள திருக் கூட்டத்தைச் சிறப்பித்துச் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றுக்குத் தோற் றுவாய் செய்கின்றார்; பின் சுந்தரர் வரலாற்றைத் தொடங்கித் திருத்தொண் டத் தொகை பாடியவரை கூறி,

> " தம்பிரான் றோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே
> எம்பிரான் றமர்கடிருத் தொண்டேத்த லுறுகின்றேன் "

என்று திருத்தொண்டர் புராணத்தோடு இயைக்கின்றார். இவ்வளவும் திருமலைச் சருக்கமென்னும் பெயரோடு நூலுக்குப் புறவுறுப்பாக உதவு கின்றன. இங்ஙனம் அமைத்தது காப்பியத்துக்குரிய மலை, நாடு, நகர் வருணனைகள் முன் அமையவேண்டு மென்னும் கருத்தினாலேயே என்று தோற்றுகின்றது. இல்லையெனில் கைலைமலைச் சிறப்பையும் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றையும் கூறுதற்கு வேறு பொருத்தமான இடங்களிருப்ப, அங்ஙனம் செய்யாது இவ்வாறு தொடர்புற வைத்ததற்குத் தக்க காரணம் வேறு யாது ?

கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்தபுராணத்தில் பாட்டு டைத் தலைவர் முருகக் கடவுள். அவருடைய திருவிளையாடல்கள் அக் காப் பியத்திலே கூறப்படுகின்றன. அவர் எல்லாத் தலங்கட்கும் பொதுவான கடவுளாயினும் காப்பியத்துக்கு நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் கூறுவ தற்கு ஒரு காரணம் வேண்டுமே. அதற்காகக் காஞ்சிக் குமரகோட்டத்தில் உறையும் முருகக் கடவுளைப்பற்றிக் கூறி அவரே யாண்டும் உறைவரென்று புகுகின்றார். தோற்றுவாயாகத் தொண்டை நாட்டையும் பின் காஞ்சி நக ரத்தையும் புகழ்கின்றார். இங்ஙனமே விநாயக புராணம் பாடிய கச்சியப்ப முனிவரும் தாம் அரங்கேற்றிய இடமாகிய சென்னையிலுள்ள பிரஸன்ன விநாயகரைப் புராணத்தே தொடர்புபடுத்தித் தொண்டை நாட்டையும்

சென்னை நகரத்தையும் சிறப்பித்துச் செய்யுள் செய்து காப்பியஉறுப்புக்களை நிறைவுறுத்தினர்.[1]

வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதத்தில் நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் தனியாக முன்னர்க் கூறப்படவில்லை. அந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் கூறவந்த வரந்தருவார் பத்துப் பாட்டுக்களில் நடுநாட்டை வருணிக்கின்றார். அவ்வளவு பெரிய பாரதகதைக்கு நாட்டுச் சிறப்பு இல்லாதிருக்க, பாரதம் இயற்றிய வரலாற்றைக் கூறும் கதைக்கு நாட்டுச் சிறப்புப் பத்துச் செய்யுட்களால் அமைந்திருக் கின்றமைக்குத் தக்க காரணம் ஒன்றும் தோற்றவில்லை. நூலின் முதலில் நாட்டுச் சிறப்பில்லை யென்ற குறையை ஒருவாறு போக்க அங்ஙனம் செய்தார்போலும்!

நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்பென்னும் உறுப்புக்களுக்கு நாளடைவில் பெருமை மிக்கது. புராண காப்பியங்களுள்ளே பழையனவற்றில் நாடு நகரச் சிறப்புக்கள் இரா. பிற்காலத்திற் புராணங்களை இயற்றவந்த புலவர் பெருமக்கள் அவ்விரண்டையும் மிக விரிவாக அமைத்தனர். இந்த வகையிற் சிறந்தவர்கள் சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய பலர். பிள்ளையவர்கள் செய்த புராணமுடைய பல தலங்களுக்குப் பழைய புராணங்கள் இருக்கின்றன. ஆயினும் நாடு நகரச் சிறப்பு முதலிய உறுப்புக்களோடு இல்லாததைக் குறைவாகக் கருதிய அன்பர்கள் பலர் வேண்டுகோளால் அவை மிக விரிவாக அமையும்படி அப் புராணங்கள் இயற்றப்பட்டன.

## ஐந்திணை வளம்

நாட்டை வருணிக்கையில் அதனைத் தமிழ் முறைப்படி ஐவகை நிலங்களாகப் பகுத்து அவற்றிற்குரிய கருப்பொருளின் வருணனைகளும் அமையக் கூறுதல் பிற்காலத்துக் காப்பிய ஆசிரியர் மரபு. பெருங்கதையில் நருமதை கடந்தது என்னும் உறுப்பில் இவ்வைந்திணைவருணனையும் வந்தன. ஐந்திணைக்குரிய முதல் கரு உரிப் பொருள்கள் சிலப்பதிகாரத்தில் அமைந்திருப்பதை அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டுகின்றார். கோதாவரியின் இலக்கணங் கூறவந்த கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் சிலேடை வகையால் சான்றோர் கவிக்கும் இலக்கணம் கூறுவாராகி,

"புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவிச்

[1] எல்லாத் தலத்துக்கும் பொதுவாகிய கடவுளின் திருவிளையாடல்களை உரைக்கப் புகுங்கால், தமக்கு விருப்பமான தலத்தோடு சார்த்திச் சிறப்பித்தல் புலவர் வழக்கு. இதனைச் சிவபிரான் திருவிளையாடலைப் பொதுவகையால் விளக்க வந்த "சங்கர விலாசம்" என்னும் நூற் பெயர், சங்கர நயினார் கோயில் இறைவன் திருநாமத்தோடு சார்த்தப்படுதலாலும் அறியலாம்.

சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

என்றார். இதன்கண் பொதுவாகச் சான்றோர் கவிக்குரியதாகக் கூறிய ஐந்திணை நெறி யளாவுதல் காப்பியத்திற்கும் ஒக்குமென்றே கொள்ளலாம்.

## பொழுது வருணனை

காப்பியங்களிற் கூறப்படும் பருவவருணனைகள் கவிஞருடைய சிறந்த கவித்துவத்தை வெளிப்படுத்துவன. பழந்தமிழ் நூல்களாகிய தொகை நிலைச் செய்யுட்களிலே பருவவருணனை மிகுதியாக உள்ளன. அகத்திணைக் குரிய பொருள்களுள் ஒன்றாகிய முதற்பொருள் நிலம், பொழுதென்று இருவகைப்படும். பொழுது பெரும் பொழுது, சிறுபொழு தென்பன. அகப்பொருட் செய்யுட்கள் பலவற்றில் இப் பொழுதுகளைப பற்றிய செய்தி களைக் காணலாம். ஆகவே பொழுதை வருணித்தல் தமிழ்ப் புலவர்களுக்கு அடிப்பட்ட பழக்கமாய்விட்டது. காப்பியக்கவிகள் அவற்றைத் தம்முடைய கதைப்போக்கிலே இடைப்பெய்து கூறுதலின் பின்னும் சுவை மிக்குத் தோன்றும்.

பெரும்பொழுது ஆறென்றும் சிறுபொழுது ஆறென்றும் சொல் வர். சிறுபொழுது ஐந்தென்று கூறுவாரும் உளர். ஆறென்பார் நச்சினார்க் கினியர் முதலியோர். ஐந்தென்பார் நாற்கவிராச நம்பி முதலியோர்.

பெரும் பொழுதை இருதுவென்று வடமொழியிற் கூறுவர். இந்த இருது வருணனையைப் பற்றிய செய்திகள் அணியியலென்னும் அலங்கார நூலில் உள்ளனவென்று தெரிகின்றது. 'இந்த இருது வருணனை அணியிய லுட்காண்க'[1] என்பதனால் இதனை அறிகின்றோம். சிந்தாமணியில் ஆறுபரு வங்களையும் முக்தியிலம்பகத்தில் இருது நுகர்வென்னும் பகுதியில் திருத் தக்கதேவர் வருணிக்கின்றார். இப் பருவங்களில் ஏதேனும் ஒன்றைச் செவ்வி நேர்ந்துழி வருணித்தலும் புலவர் இயல்பு; கம்பராமாயணத்திலுள்ள கார்காலப்படலம், வில்லிபாரதத்திலுள்ள வசந்தகாலச் சருக்க மென்பன இதற்கு உதாரணங்களாகும். நெடுநல்வாடை, கார் நாற்பது, காரெட்டு முதலிய நூல்கள் பருவத்தைச் சிறப்பித்தமையாற் பெயர் பெற்றமை இங்கே அறிதற்குரியது. இவ்வாறே சிறுபொழுதைச் சிறப்பித்தல்பற்றிக் காப்பிய உறுப்புக்கள் பெயர் பெறுதலைச் சிலப்பதிகாரத்திலுள்ள அந்திமாலைச் சிறப்புச் செய்காதையாலும், பெருங்கதையிலுள்ள மாலைப் புலம்பலாலும், அவைபோன்றவற்றாலும் உணரலாம்.

முன்னர்க் கூறிய ஐந்து நில வருணனையும் இப்போது கூறிய பொழுது வருணனையும் வார்த்தை யென்னும் ஒருவகை அணியின்பாற்படும்.

---

1 யா. வி. ப. 532.

இது வீரசோழிய உரையிலுள்ள பின் வரும் பகுதியால் உணரலாம்[1]: ' "காலமு மிடனும் வாலிதிற் புகழ்வா, ராகிய தடுப்பினது வார்த்தை யாகும்" என்று வார்த்தைக் கிலக்கணங் கூறுப. காலமாவது பொழுதும் பருவமுமெனக் கொள்க. இடமாவது பாலை குறிஞ்சி நெய்தல் முல்லை மருதமென்னும் ஐந்து நிலமுமாம்.' காலம்பற்றிய வருணனை காலவார்த்தை யென்றும் இடம்பற்றியது இடவார்த்தை யென்றுங் கூறப்படுகின்றன.

## இருசுடர்த் தோற்றமும் மறைவும்

இருசுடர்த் தோற்றமென்பது சூரிய சந்திரர்களின் உதய மாகும். பெரும்பான்மையான காப்பியங்களில் இவ்விரண்டோடு இவ்விரு சுடரின் அஸ்தமனமும் புனைந்துரைக்கப்படும். சூரியனது அஸ்தமனமும் சந்திரனது உதயமும் அடுத்தடுத்தே வருணித்தல் புலவர்கள் இயல்பு.

இதுகாறும் கூறிவந்தவை இயற்கையாகஅமைந்த பொருள்களின் வருணனைகளாம். இனி, காப்பியத்துள் வரும் செய்திகளுள் இவ்வருணனை யல்லாத பிறவற்றை இன்பச் செய்திகளென்றும் அரசியற் செய்திக ளென்றும் பகுத்துக்கொள்ளலாம்.

(1) நன் மணம் புணர்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளை யாடல், தேம்பிழி மதுக்களி, சிறுவரைப் பெறுதல், புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தலென்பன இன்பச் செய்திகளாம். இவற்றையன்றி, மலை விளையாட்டு, உலாப்போதல் முதலிய வேறு செய்திகளும் காப்பியங்களிற் காணப்படுகின்றன.

(2) பொன்முடி கவித்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றியென்பன அரசியற் செய்திகளாம். இவற்றோடு தொடர்புடைய முறை செய்தல், நாடு காத்தல் முதலியனவும் காப்பியங்களுக்கு இன்றி யமையாத செய்திகளென்று தெரியவருகின்றது.

## இன்பச் செய்திகள்

1. நன்மணம் புணர்தல்:—காப்பியத் தலைவனும் தலைவியும் அன்பு வயத்தராய் ஒன்றுபட்டு மணம் புரிதல். இது காப்பியத்தின் திரண்ட பொருளுள் ஒன்றாகிய இன்பத்தின் பகுதி. எனவே காப்பியத்தின் வரலாற் றில் இந் நிகழ்ச்சியைப் புலப்படுத்தும் பகுதி சுவை மிக்கதாக இருத்தல் வேண்டும். புலவர்கள் தம்முடைய கவித்திறத்தைக் காட்டுவதற்குரிய பகுதி களுள் இஃது ஒன்று.

---

[1] வீரசோழியம், ப. 159.

2. பூம்பொழில் நுகர்தல்:—மகளிரும் ஆடவரும் ஒன்றுபட்டு இன்புறும் பொழில் விளையாட்டைப் புலவர்கள் பலபடியாகப் பாராட்டுவார்கள். கம்பராமாயணத்திலுள்ள பூக்கொய் படலமென்பது இவ்வுறுப்பின் பாற்படும்.

3. புனல் விளையாடல்:—மேற்கூறிய விளையாடல்களுள் ஒன்று. பரிபாடலென்னும் சங்கச் செய்யுளில் இவ்விளையாட்டு அழகாக வருணிக்கப் படுகின்றது. கம்பர் நீர்விளையாட்டுப் படலமென்று தனியே ஒரு படலம் அமைப்பர்.

4. களியாட்டு:—மதுவை நுகர்ந்து மகளிரும் ஆடவரும் இன்புறும் செய்தி கூறுதல். இந்நுகர்ச்சியைக் காமபான மென்பர். நன் மணம் புணர்ந்த மகளிரும் ஆடவரும் பொழில் நுகர்ந்தும் புனல்விளையாடியும் களியாட் டயர்ந்தும் இன்புறுதல் முறையாக வைக்கப் பட்டிருத்தல் அறிதற்குரியது.

5. புதல்வரைப் பெறுதல்:—இன்பந் துய்த்த காதலர் அதன் பயனாக நன்மக்களைப் பெறுதலைக் கூறுதல் காப்பியத்தின் கதைக்குத் தொடர்புடையது. மனைவாழ்க்கைக்கு நன்கலமாகிய மக்கட்பேற்றை இன்பத்தின் பயனாகவும் அறத்தின் கருவியாகவும் கொள்ளலாம்.

6. புலவியிற் புலத்தல்:—அகப்பொருள்நூல்களிற் கற்புக் காலத்திற் சொல்லப்படும் ஊடல் காப்பியங்களிலும் சொல்லப் படுகின்றது. புலவி கலவியின் இன்பத்தை மிகுதிப்படுத்தலின் இதனை அகப்பொருளிற் கற்பிற்குச் சிறந்த நிகழ்ச்சியாக வைத்தனர். அதனையே காப்பியக் கவிகளும் பின்பற்றி அமைப்பர்.

7. கலவியிற் களித்தல்:—ஊடிய மகளிர் தலைவர் தெளித்த பின் அவ்வூடல் நீங்க இருவரும் களித்தல். ஊடலின்பின் நிகழும் கூடல் மிகச் சிறந்ததென்பது கவிமரபு.

## அரசியல்

நாட்டு வருணனையில் பொதுவாக அரசன் கோல் கோடாது அரசுபுரிதலைக் கூறுதல் புலவர் வழக்கம். அங்கே கூறுவதை யன்றிக் கதைப்போக்கிலே போர் நிகழ்ச்சியைச் சொல்லுங் காலத்திலும் அரசியற் செய்திகளை அமைப்பர். அவற்றுள் இங்கே கூறப்பட்டன அடங்கும்.

1. முடிகவித்தல்:—தமிழ்க் காப்பியங்களிலே பெரும்பான்மை யான நூல்களில் அரசர்களே தலைவராக உள்ளனர். அவர்கள் முடிபுனை தலைக் கதைக்கேற்றபடி புலவர் அமைப்பர்.

**2.** மந்திரம்:—அரசன் மந்திரிகளோடு ஆராய்தல். தசரதர் மந்திரிகளோடு ஆராய்வதை ஒரு படலத்தாலும், இராவணன் ஆராய்வதனை ஒரு படலத்தாலும் கம்பர் விரிக்கின்றார்.

**3.** தூது:—போர் நிகழ்ச்சிக்குமுன் நடப்பது இது. அங்கதன் தூது, கண்ணன் தூது முதலியன இதன்பாற் படும்.

**4.** செலவு:—போருக்காகப் படைகள் செல்வதை வருணித்தல்; தகடூர் யாத்திரையிற் பெரும் பகுதி இவ்வகைச் செய்தியையே சொல்வது போலும்.

**5.** இகல்:—போர் நிகழ்ச்சியைக் கூறுதல்; கம்பராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலியவற்றில் பல படலங்கள் இந் நிகழ்ச்சியைக் கூறுகின்றன.

**6.** வென்றி:—போரில் வெற்றிபெறுதலைக் கூறுதல். காப்பியத் தலைவனது வெற்றியை விரித்துக் கூறிப் பாராட்டும் பகுதி இது.

இவற்றில் தமிழ்ப் பொருளிலக்கணப் பகுதியாகிய புறத்திற் கண்ட பல செய்திகள் அமையப் பாடுவது புலவர் வழக்கம். அங்கங்கே புறப் பொருட்டுறைக்கு இலக்கியமாகவுள்ள பல செய்யுட்களைக் காப்பியங்களிற் காணலாம். தொல்காப்பியப் புறத்திணையியல் உரையில் உரையாசிரியர்கள் சங்ககாலத்திலிருந்த இராமாயண பாரதச் செய்யுட்களையும் தகடூர் யாத்திரைச் செய்யுட்களையும் புறத்துறைகளுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டுதலினாலும் இது வெளியாகும். நச்சினார்க்கினியர் புறத்திணையியல், 17-ஆம் சூத்திர உரையில், 'இவை தனித்து வாராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும்' என்று சிலபுறத்துறைகளைப்பற்றி யுரைத்தனர்.

மாறனலங்கார ஆசிரியர் காப்பியத்துட் கூறப்படும் பொருளைப் பற்றி இலக்கணம் வகுக்கையில்,

> "மந்திரந்து தோற்றுடல் வாய்ந்த நிரைகோடல்
> புந்தியுறச் சேறல் புறத்திறுத்தல்—வெந்திறல்கூர்
> மிக்கவிகல் வென்றி நிலையாமை யைமிகுத்தல்
> கைக்கிளைகள் கூறுங் கடன்"

என்று புறத்திணைக்குரிய செய்திகளனைத்தையும் தனியே ஒரு பாட்டிற் குறித்தார். இதனை உரையாசிரியர் விளங்கவைக்கின்றார்; 'வாய்ந்த நிரைகோடலென்பது முதலாக் கைக் கிளைகள் கூறுங் கடனென்பதனால் வெட்சி முதற் பாடாண்டிணை யீறாகப் புறம் புறப்புறம் அகப்புற மென்னும் மூன்று கூறாய எழுதிணையும் முறையே கூறியவாறுங் காண்க' என்று அவர் உரைத்தனர்.

## சுவையும் பாவமும்

"நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்ருேர் புனையும் பெற்றிய தென்ப"

என்பது மேற்கூறிய தண்டியலங்காரச் சூத்திரத்தின் இறுதிப்பகுதி. 'எட்டுவகைப்பட்ட சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமற் கேட்போர் மதிக்க இவ்வகைத்தாகப் புலவராற் புனையப்படுந் தன்மையுடைத்தென்ப ராசிரியர்' என்பது அதன் உரை. இச்சுவை அவ்வலங்கார நூலில் தனியே சுவையணி யென்னும் தலைப்பின்கீழ் விரிவாகச் சொல்லப் படுகின்றது.

"உண்ணிகழ் தன்மை புறம்பொழிந் தோங்க
எண்மெய்ப் பாட்டி னியல்வது சுவையே"

"அவைதாம்,
வீர மச்ச மிழிப்பொடு வியப்பே
காம மவல முருத்திர நகையே"

என்பன சுவையின் இலக்கணம் உணர்த்தும் சூத்திரங்கள். சுவை பற்றிய செய்திகள் முன்னரே ஆராயப்பட்டன.

இதுகாறும் ஆராய்ந்த தண்டியலங்கார இலக்கணத்திஞல் காப்பியங்களைப் பற்றி அறிந்து கொண்ட செய்திகளாவன:

1. ஒரு கதையைக் கூறவேண்டும்.
2. அறம் பொருளின்பம் வீடுகளை இலக்காகக் கொள்ள வேண்டும்.
3. பதினெட்டு வருணனைகள் அமையவேண்டும்.
4. இன்பச் செய்திகளும் புறப்பொருட் செய்திகளும் விரவி வரவேண்டும்.
5. மெய்ப்பாடுகள் வெளிப்படவேண்டும்.

இவையே முக்கியமான இலக்கணங்களாம்.

## காப்பியத்தின் யாப்பு

காப்பியங்களின் யாப்பைப்பற்றிய இலக்கணம் ஒரு சூத்திரத்தாற் கூறப்படுகின்றது.

"அவைதாம்,
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே"

என்பது அது.

'மேற்கூறிய பெருங்காப்பியமும், காப்பியமும் ஒருவகைச் செய்யுளானும், பலவகைச் செய்யுளானும், உரைவிரவியும், பாடை விரவியும் வருதலுடைய' என்பதும், 'ஈண்டுச் செய்யுளென்பது பாவும் இனமும் நோக்கியது. விரவியும் வருமென்ற உம்மையான் விரவாது செய்யுளான் வருவதே சிறப்புடைத்தெனக் கொள்க' என்பதும் அச்சூத்திரத்தின் உரையிற் காணப்படுவன.

ஒருதிறப்பாட்டான் வந்த காப்பியங்களாவன மணிமேகலை, பெருங்கதை யென்பனவாம். பலதிறப்பட்ட பாட்டான் வந்தவை சீவக சிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம் முதலியனவாம்.

உரையும் பாடையும் விரவி வந்தது சிலப்பதிகாரம். 'உரை - உரை நடை, பாடை - திசைச்சொல்' என்பர் மாறனலங்கார உரையாசிரியர். வட மொழியின் வழீஇய பிராகிருத மொழிகளையும் பாஷை யென்னும் பெயரால் வழங்குதல் வடநூன்மரபு. அதனை யொப்பத் தமிழிலே உள்ள சேரி மொழி யையும் பாடையென்னும் பிரிவில் அமைத்துக்கொள்வதில் இழுக்கொன்று மில்லை. பிற்காலத்துப் பாரத வெண்பாவில் இடையிடையே உரை விரவி வந்துள்ளது. இவற்றை வடமொழியில் சம்பு என்பர்.

சிலப்பதிகாரத்தில் உரைபெறு கட்டுரைக்கு உரையிட்ட அடி யார்க்கு நல்லார், 'காப்பியங்கட்குச் சிறுபான்மை இவ்வுறுப்புக்களும் சில வருமெனக் கொள்க' என்றார். இவ் வுறுப்பென்று சுட்டியது கட்டுரைச் செய்யுளை.

தொடர்நிலைச்செய்யுட்களைச் சேர்ந்த புராணங்கள் பெரும்பாலும் விருத்த யாப்பில் இயற்றப்பட்டுள்ளன. இதனை நினைவுகொண்ட யாப்பருங் கல விருத்தியாசிரியர் விருத்தமென்னும் பாவினப் பெயர்க்காரணம் கூறும் பொழுது, 'புராண முதலாகிய விருத்தம் உரைத்தலானும் விருத்த மென்பதூஉங் காரணக்குறி' என்றார். விருத்தம் - வரலாறு. "கம்பர், விருத்தக் கவித்திறம்" என்று இராமாயணத்தை ஒருவர் பாராட்டுதலைக் கருதுக.

வீரசோழிய உரையாசிரியர் ஓரிடத்தில், 'இனிக் கோவைக் கலித்துறை யென்றுங் காப்பியக் கலித்துறை யென்றும் இரண்டாக்குவ ரெனக் கொள்க'[1] என்றார். கோவைக் கலித்துறை என்றது கோவை நூல்களில் உள்ள கட்டளைக் கலித்துறையை; காப்பியக் கலித்துறை என்றது சிந்தாமணி முதலிய நூல்களிற் பயின்றுவரும் கலித்துறைச் செய்யுட்களை. காப்பியக் கலித்துறை யென்னும் பிரிவொன்று தனியே உண்டாதற்கு ஏதேனும் தக்க காரணம் இருத்தல் வேண்டும். அத்தகைய கலித்துறை

[1] வீர. ப. 115.

ஏதேனும் காப்பியத்துள் முதன் முதலாக ஆளப்பட்டிருத்தல் கூடும். அப்படியாயின் அதற்கு வேறு பெயர் அமைத்தல் இயலாதாகக் காப்பியக் கலித்துறை யென்றே வழங்கினர் என்று கொள்ளுதல் தகும். இல்லையெனின், பல காப்பியங்கள் அக்கலித்துறையில் அமைந்திருந்தமையின் பெரும்பான்மை பற்றி இப்பெயர் அமைந்ததென்று ஊகித்தலும் இயையுடையதே.

## பன்னிரு பாட்டியல் கூறுவன

தொடர்நிலைச் செய்யுளென்னும் தலைப்பில் பன்னிரு பாட்டியவில் நான்கு சூத்திரங்கள் உள்ளன. அதில் உள்ள வித்து, துளி, கொடியென்னும் மூன்றும் கதைத் தொடர்ச்சியாகலா மென்பது முன்னர் ஆராயப்பட்டது. தொடர்நிலைச் செய்யுள் வெண்பா, விருத்தம், அகவல், கொச்சகக்கலி, உரையிடையிட்ட செய்யுள் என்னும் யாப்பால் நடைபெறும். அவற்றுட் கூறப்பட்ட தலைவன் மூவகைப்படுவான். வடமொழியில் போஜராஜன் இயற்றிய சரஸ்வதீகண்டாபரண மென்ற நூலிலும் பிறவற்றிலும் தலைவர்களைத் தீரோதாத்தன், தீரோத்ததன், தீர சாந்தன், தீரலலிதன் என நால்வகையின ராக்குவர்.[1]

பின்னும் பன்னிரு பாட்டியல் தொடர்நிலைச் செய்யுள் தலையிடை கடையென மூவகைப்படுமென்று கூறும். அவற்றுள் தலையாய காப்பியத்திற்கு உரியதொரு சூத்திரம் மாத்திரம் காணப்படுகின்றது. ஏனையவை இல்லை. அறம்பொரு ளின்பம் வீடென்னும் நான்கனையும் கூறி வென்றி முதலியவற்றைச் சந்திபோல அமைத்து விளக்குவன தலையாய தொடர்நிலைச் செய்யுளாகும். இது தண்டியாசிரியர் கூறும் பெருங்காப்பியமேயாகும். இவ்விலக்கணங்களை வரையறுக்கும் பன்னிரு பாட்டியற் சூத்திரங்கள் வருமாறு:—

"வித்தெண் டுளிகொடி தலைவனொடு மேவி
ஒத்த வெள்ளை விருத்த மகவல்
வைத்த வொருதொடை கொச்சக வுறுப்பு
நடைபெற வருவது தொடர்நிலை யென்ப."

"வித்தே யெண்டுளி விருந்தியல் கொடியென
ஒத்த மூவகை யிறைவனொடு பொருந்தி
ஒழுகிய வெள்ளை விருத்த மகவல்
உரையொடு மிடைந்த பாட்டுடைக் கொச்சகம்
நடைபெற வருவது தொடர்நிலை வகையே."

"தொடர்நிலைச் செய்யுள் பாட்டுப்பல தொடுத்துத்
தலையிடை கடையென நுவலவும் படுமே."

---

[1] History of Sanskrit Literature, vol, II p. 339 & J. O. R. M. Vol. XI p. 90.

"அவற்றுள், தலையெனப் படுபவை மலைவின் றாகி
அறம்பொரு ளின்பம் வீடென விவற்றின்
திறந்தெரி மரபி னீங்கா தாகி
வென்றிகோ ளிருக்கை யென்றிவை யனைத்தும்
சந்தி யாகத் தந்துநிலை பெறுமே."

இவற்றில் உள்ள இலக்கணங்களிலும் தண்டியலங்காரத்தில் கூறப்பட்டவற்றிலும் இரண்டு செய்திகள் ஒப்பன. அவை அறம் முதலிய நான்குங் கூறுதல் தலையென்பதும், சந்தியாகத் தொடருமென்பதும் ஆகும். பிற புதிய செய்திகளாம்.

## மாறனலங்காரம் கூறுவன

மாறனலங்காரத்திற் காணப்படும் காப்பிய இலக்கணங்கள் பெரும்பாலும் தண்டியலங்காரத்தைப் பின்பற்றியனவாகவே உள்ளன.

அந்நூலில் மேற்கோளாக வரும் செய்யுள் ஒன்றால் காப்பியம் இயற்றுவதன் அருமை உரைப்படுகின்றது. அது வருமாறு :

"முற்ற வுணர்ந்து முதுகாப் பியம்புணர்ப்பான்
உற்றவர்தங் கண்போன் றுறங்காவாம்—இற்பிரிந்தால்
நல்லியலார் வந்தவனைசெய் நாவீறன் மால்வரைமேல்
மெல்லியலா ரின்ப விழி."

இதனால் காப்பியம் செய்யுங் கவிஞர் பலகால் சிந்தித்துச் சிந்தித்துத் தம் நூலை அமைப்பரென்பது புலனாகின்றது.

## வச்சணந்திமாலையும் சிதம்பரப்பாட்டியலும்

வச்சணந்திமாலையிலும்[1] சிதம்பரப்பாட்டியலிலும்[2] உள்ள இலக்கணங்கள் தண்டியலங்காரத்தைப் பின்பற்றியனவே. இதனை அந்நூற் செய்யுட்களின் சொற்பொருளமைதியே வெளிப்படுத்தும்.

## காப்பியமும் இலக்கண வரம்பும்

காப்பியமாகிய அகலக்கவி செய்வார் தமிழ்மரபை நினைந்து கவி இயற்றினும் பொருள்போன வழியே சொல் போகவேண்டுமாதலின் அவர் சில இடத்துப் பழைய இலக்கணங்களையுங் கடந்து செல்ல நேரும். அப்பொழுது அவர் வழங்கிய வழக்கே இலக்கியமாதலின் அதிற் காணப்பட்ட அமைப்பே இலக்கணமாகிவிடும். இலக்கண நூல்களில் எல்லா இலக்கணங்களையும் வரையறுத்தல் சாத்தியமன்று. காலந்தோறும் கவிஞருடைய கருத்

[1] வச்சணந்தி. 40-43.

[2] சிதம்பரப். 41, 42.

துக்கள் வேறுபடுதலின் இலக்கியமும் வேறுபடும். அதற்கேற்ப இலக்கணமும் வேறுபடும்; விரிவும் அடையும்.

கவிஞர் இலக்கிய வாயிலாகப் புலப்படுத்துவனவற்றைச் செய்யுள் வழக்கு, சான்றோர் மரபு, கவிஸமயமெனப் பலவாறாக வழங்குவர்.

பெருங்கவிஞர் காப்பியத்தில் ஒரு சொல்லைச் சிதைத்து வழங்கினும் ஒரு சொல்லுக்கு நிகண்டிலே காணப்படாத பொருளை அமைத்துக் கவி இயற்றினும் ஒரு வழக்கத்தை மாற்றி உரைப்பினும் அவை யாவரும் உடம்படுதற் குரியன ஆகிவிடும். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' அல்லவா? யாப்பருங்கல விருத்தியாசிரியர்,

"மிக்குங் குறைந்தும் வரினு மொருபுடை
ஒப்புமை நோக்கி யொழிந்தவுங் கொளலே" (யா. வி. ப. 344)

என்னும் சூத்திர உரையில் 'இக்கவியுள் ஐஞ்சீரடியும் வந்தனவெனக் கொள்க. "கலியொடு வெண்பா வகவல் கூறிய, அளவடி தன்னால் நடக்குமன் னவையே"[1] என்ற சூத்திரத்தில் அவை யென்ற விதப்பினாலும், இச் சூத்திரத்தாலும் இவற்றையும் குற்றமில்லை என்று கொண்டு வழங்குப, புராண கவிஞராற் சொல்லப்பட்டனவாகலின்'[2] என்றும், 'பிறவும் புராண கவிஞராற் பாடப்பட்டு மிக்கும் குறைந்தும் வருவனவற்றை இவ்விலக்கணத்தான் ஒருபுடை ஒப்புமை நோக்கிப் பெயரிட்டு வழங்கப்படும்'[3] என்றும் கூறும் பகுதிகள் அகலக் கவியாகிய புராணங்களை இயற்றும் ஆசிரியர்கள் இலக்கணவரம்பு கடந்தும் செல்வரென்பதை உணர்த்துகின்றன. 'கம்பர் போனவழி' என்று கம்பரைப் பற்றிக் கூறும் பழமொழியும் இங்கே கருதற் குரியது.

வீரசோழியம் அலங்காரப்படலத்தின் 4-ஆம் கலித்துறை உரையில் உரையாசிரியர், 'குண்டலகேசியும் உதயணன் கதையும் முதலாக உடையவற்றில் தெரியாக சொல்லும் பொருளும் வந்தனவெனின் அகலக் கவி செய்வானுக்கு அப்படியல்லது ஆகாதென்பது' என்றெழுதுவதனால் காப்பியக் கவிஞர் பிறர் அறியாத சொல்லும் பொருளும் அமைத்தற்கு உரிமைபூண்டவரென்ற உண்மை புலப்படுகின்றது. அச்சொல்லும் பொருளும் கவிஞரால் புதியனவாக மேற்கொள்ளப்படுவன ஆதலும் கூடும். வடநூலார் காப்பியத்தைப் பண்டை இதிஹாஸங்களின் வழியே வந்தனவென்றும் உத்பாத்தியமென்றும் இரண்டுவகை யாக்குவர். அவற்றுள் உத்பாத்தியமென்பது கவிஞன் படைத்துக்கொண்ட கதையை யுடையதாகும்.

காப்பியம் இயற்றுவார் சொல்லையும் படைத்து வழங்குவரென்பதும் ஓர் உண்மையாகும். ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணிக்கு

---

[1] யா. வி. ப. 109. [2] ப. 347. [3] ப. 349.

உரைவகுத்த பெரியார் ஓரிடத்தில், 'உலகக் கவிப்பென்னும் பெயர் சக்கரவர்த்திகள் தாம் படைத்த திரிசொல்லென உணர்க. பண்டு நம்பிகாளியார் கடற்குப் பெயர் மழுவென்றிட்டு எறிதலும் கூர்த்தலும் திரைத்தலும் உடையதென்றார். அதுபோலும் இதுவென்க' (தாழிசை. 213, உரை) என்று கூறினர். இங்கே ஒரு கவிஞர் ஒரு புதுச்சொற் படைத்தமைக்கு மற்றொரு கவிஞர் படைத்த படைப்பை அவர் உதாரணம் காட்டுகிறார். இவை இரண்டும் நமக்கு உதாரணமாகின்றன. இப்புதிய படைப்புச் சொற்களைப்பற்றி ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் கூறும் பின் வரும் கருத்து இங்கே கோடற்குரியது: 'ஆகவே நிகண்டேறி இலக்கியங் களினும் பயின்றுவருஞ் சொற்கள் தவறுடையனவென்பது, பின்னர் நிகழும் ஆராய்ச்சிகளிற் புலப்பட்டாலும் அவற்றைத் திருத்தப் புகுதல் ஒருநாளும் ஓராற்றானுஞ் சாலாது. பிழை பிழையாகவேதான் இருத்தல் வேண்டும். மாற்றுதல் பாஷையின் வரலாற்றிற்குத் தீங்கு பயக்கும். இப்படிப் பிழைபோன விடங்கள் ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளில் எத்துணையோ உள'[1].

சொற்பொருளை மாற்றி வழங்கும் அதிகாரமும் காப்பியக் கவிஞருக்கு உண்டு. தக்கயாகப்பரணி உரையாசிரியர், 'புண்டரீகமென்பது செந்தாமரைக்குப் பெயர்; புண்டரீகாட்ச னென்ப; இது செந்தாமரைக்குப் பெயரன்றாயின், தந்திர வுத்தியானும் தொடர்நிலைச் செய்யுளானும் உணர்க' என்று ஓரிடத்தில் உரைத்தனர். வடமொழி நிகண்டில் புண்டரீகமென்பது வெண்டாமரைக்குப் பெயரென்று கூறப்பட்டுள்ளது. ஆயினும் செந்தாமரைக்கும் அது வருகின்றது. எனவே ஒரு செய்யுளின் பொருளைத் துணிதற்கு நிகண்டைக்காட்டிலும் தொடர்நிலைச் செய்யுளே தக்க கருவியென்பது அவ்வுரையாசிரியர் கொள்கை யென்று அறியலாகும்.

சொல்லின் உருவ அமைப்பில் மாறுபாடு காப்பியங்களில் உளவேல் அதனைப் பழைய முறையில் அமைந்ததன்றென்று விலக்குதல் பிழை. அத்தகையன கோடற்குரியனவே. காப்பியங்களில் மானுடன் என்பது மானிடன் என்றும், குரிசில் என்பது குருசில் என்றும், பரிதி என்பது பருதி யென்றும் வருதலை நாம் மேற்கொள்ளவேண்டும். கவியுலகாட்சியை நடத்தும் கவியரசர் சென்ற நெறியே நம் நெறி. அவர் கண்டதே வழக்கு.

"தானே யுலகாள்வான் றான்கண்ட தேவழக்காம்
ஆனான்மற் றாதவனை யன்றென்பார்"

என்று காரைக்காலம்மையார் கூறுவதை நாமும் கூறியமைதல் வேண்டும்.

'டாகினிக ளெனத் தமிழில் மொழி முதலாகா அவ்வெழுத் திடுதற்குக் காரணம்: சந்தியிசை வஞ்சியென்பாரும் சருவஞ்ஞ கவி

[1] தமிழ்மொழியின் வரலாறு, ப. 83.

யென்பாரும்........உளர்'[1] என்ற தக்கயாகப்பரணி உரையாசிரியர் கூற்றும், அந்நூற் பதிப்பாசிரியர், 'சருவஞ்ஞ கவி: இது குறிப்புச்சொல்; எம் முறையிலும் பாடும் வன்மையுடையரென்றபடி; பெரிய கவிகள் விதிகளையும் கடந்து இலக்கியம் அமைப்பார்கள். இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின் என்பதனால் அத்தகைய கவிகளுடைய இலக்கிய அமைதியே இலக்கணமா மென்பது பெறப்படும். கம்பர் முதலிய மகா கவிகளிடத்து இத்தகைய இயல்பைக் காணலாம்; "நாரா யணனை நராயணனென் றே கம்பன், ஓராமற் சொன்ன வுறுதியால்" என்ற காளமேகத்தின் பாட்டும் இதனை வலியுறுத்தும்'[2] என்று எழுதியுள்ளனவும் இங்கே பயன் படுவனவாகும்.

---

1 தாழிசை. 433, உரை.

2 தக்கயாகப் பரணி, ப. 317.

# V

# காப்பிய அலங்காரங்கள்

## அலங்கார வகை

காப்பியங்களில் அமையும் அலங்காரங்கள் குணவலங்காரங்கள், பொருள் அலங்காரங்கள், சொல் அலங்காரங்கள் என மூன்று வகைப்படும். அவற்றுள் குண அலங்காரங்களைப் பொது அணிகளென்றும் கூறுவர். வட மொழி நூல்களில் இப் பகுப்பு அமைந்ததைப் பின்பற்றி வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம் என்னும் நூல்கள் இலக்கணங்கள் வகுக்கின்றன.

## நெறி

குண அலங்காரங்களின் தொகுதியை நெறி அல்லது மார்க்க மென்பர். தண்டியாசிரியர் செய்யுள் நெறி இரண்டென்பர். அவை வைத ருப்பம், கவுட மென்பன. இந்நெறியை ரீதி யென்று வாமன காரிகை முத லிய வட நூல்கள் கூறும். ரீதியைக் காப்பியங்களுக்கு உயிராகக் கொண்டு[1] அதற்குத் தலைமை கூறுவர் வாமனாசாரியர்.

நெறி யென்பது சொல்லும் பொருளும் நோக்கியதொரு வரை யறை. அது செய்யுள் நடையென்று இக்காலத்தார் குறிப்பது போன்றது. வீரசோழியமும் தண்டியலங்காரமும் வைதருப்பம், கவுடமென்னும் இரண்டையுரைத்து வைதருப்பத்தையே சிறந்ததாகக் கருதின. அதற்குரிய குணங்கள் பத்து.

> "மெய்ப்பெறு மரபின் விரித்தசெய் யுட்கு
> வைதருப் பம்மே கௌட மென்றாங்
> கெய்திய நெறிதா மிருவகைப் படுமே" (13)

என்பது தண்டியலங்கார சூத்திரம்.

மாறனலங்காரத்தார் மூன்று நெறி கொண்டனர். அவை வைத ருப்பம், கவுடம், பாஞ்சாலம் என்பன. ரீதிக்குத் தலைமை கூறும் வாமன

[1] Vamana : Kavyalankara Sutra, iii. i : 12.

ரும் இம் மூன்றைக் கூறினர். வாமனருடைய காலம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.[1] மாறனலங்கார ஆசிரியர் 16-ஆம் நூற்றாண்டினர். ஆதலின், வாமனர் நூலைப் பின்பற்றியே மாறனலங்கார நூலாசிரியர் நெறி மூன்று வகுத்தனரென்று கொள்ளலாம்.

தமிழ்விடு தூதென்னும் நூலின் ஆசிரியர் நெறி நான்கு என்றனர்.

"நல்லநெறி, நாலே விதையா" (64-5)

என்று அவர் கூறுவர். 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ருத்திரடர் என்ற ஆசிரியர்[2] இயற்றிய வடமொழி அணியிலக்கணத்தில் வைதருப்பி, கௌடி, பாஞ்சாலி, லாடீயம் என்னும் நான்கு நெறிகள் கூறப்படும். அக்கினி புராணத்தும் இந்நான்கு நெறிகள் சொல்லப்பெறுகின்றன. போஜன் இயற்றிய ஸரஸ்வதீகண்டாபரணத்தில் மேற்கூறிய நான்கோடு, மாகதி, அவந்திகா என்ற இரண்டும் சேர்த்து ஆறாகக் கூறப்படுகின்றன.

வாமனர், இந் நெறிகளுக்கு அங்கமாக இருப்பவை குணவணிகளாமென்றும் அவைகளில் ஒவ்வொன்றும் சொல்லின் குணம், பொருளின் குணமென இருவகையா மென்றும் கூறுவர். நெறிகளைப் பற்றிக் கூறவந்த மாறனலங்கார நூலாசிரியர் அவை ஒவ்வொரு நாட்டிலும் வழங்கும் முறைபற்றிப் பெயர் பூண்டனவென்பர்;

"மன்னியபேர் யாப்பிற்கு வைதருப்பம் வான்கௌடம்
பன்னியபாஞ் சால மெனப்பகுத்து—மின்னிடையாய்
நன்னூன் முழுதுணர்ந்தோர் நாட்டகத்து நாட்டலுறீஇ
முன்னூலுட் கண்டநெறி மூன்று." (77)

இந்நெறியைப் பாகமென்ற சொல்லாலும் உரையாசிரியர் குறிப்பர். மெல்லென்ற விழுமிய இனிய மொழியும் மெல்லென்ற விழுமிய இனிய அறமுதலிய நாற்பொருளும் பொருந்துவன வைதருப்ப பாகமென்றும், விழுமிய சொற்கடினமும் பொருட்கடினமும் தோய்ந்து அரிய நடைத்தாய்ப் புலவனாற் கூறப்படுவது கௌடபாக மென்றும், மென்மையும் கடினமுமாகிய வைதருப்ப கௌடங்களோடு கூடாதே இடைநிலைப்பட்டவாம் இனிய சொல்லானும பொருளானும் தடையின்றி நடைபெற்றொழுகுவது பாஞ்சாலபாகமென்றும் கூறுவர்.

அவ்வந் நெறியாலே பாடும் கவிஞர்களுக்கு அவ்வந் நெறியினாலேயே பெயர் வழங்கும்.[3] ஒட்டக்கூத்தர் கௌடப் புலவரென்று கூறப்படுதல் இங்கே நினைத்தற்குரியது.

---

[1] Some Aspects of Literary Criticism in Sanskrit, p. 29.

[2] Ibid p. 32.

[3] மாறனலங். 78, 79.

நெறிகள் தொகைநிலைத்தொடரை (சமாஸ பதங்கள்) அனுசரித்து அமைவன வென்றும், கௌட நெறியில் அதிகமான தொகை நிலைத் தொடர்கள் பயின்று வருமென்றும் வடமொழியில் ருத்திரடர் கூறினர்.

வைதருப்ப நெறியே யாவராலும் விரும்பிக் கோடற்குரியது. தண்டியாசிரியரும் அதற்குரிய பத்துக்குணங்களையே விரித்தார்.

## பாகங்கள்[1]

மாறனலங்கார உரையாசிரியர் நெறியைப் பாகமென்றும் குறித்தனர். பொருளின்பத்தைச் சொற்களின் அமைப்பினுல் வெளியிடும் நெறியையே பாகமென்பர். வடநூல்களில் சிலர் சொற்பாகம், பொருட்பாகமென இரண்டாக்குவர்.

சொற்களை மாற்றி வேறு அமைக்க முடியாத நிலையிலே அமையும் நடையே பாகமென்பர் சிலர். நெறி, சொற்பொருளணி, சுவை, யுக்தி முதலியன யாவும் அமைந்து உண்டாகும் அமைப்பே பாகமென்பர் வேறு சிலர். ரஸத்தை உண்டாக்குவதற்கு உபகாரப்படுவது என்பர் ஒரு சாரார்.

பாகமென்பதற்குக் கனிவு, பழுத்தல் என்னும் பொருள் கூறலாம். கவி, தான் கருதிய பொருள் பழுத்துப் படிப்போர் உணர்ந்து இனிது நுகரும்படி செய்யுள் அமையவேண்டும்; அவ்வமைப்பே பாகமாகும். இதனைப் பொருள் கொள்ளும் முறையின் இனமாகக் கூறலாம்.

பழச்சுவை முதிருங்கால் அம் முதிர்ச்சியைப் பாகமென்பர் வடநூலார். ஆதலால் செய்யுட் பாகத்திற்கும் பழங்களின் பெயர்களை அமைத்தனர். பெரும்பாலான ஆசிரியர்கள் திராக்ஷாபாகத்தையும் நாளிகேர பாகத்தையும் எடுத்துரைக்கின்றனர். திராக்ஷாபாகம் எளிதிற் பொருள் புலப்பட்டு இன்பம் பயப்பது. நாளிகேர பாகம் சிறிது கூர்ந்து உணரின் இன்பம் பயப்பது. வித்தியாநாதர், போஜன் என்பார் இவ்விரண்டையும் உரைத்தனர். இரத்தினேசுவர ரென்னும் உரையாசிரியர் ஸஹகாரபாகம், வார்த்தாகபாகம், நீலகபித்தபாகம் என்பவற்றை உணர்த்துகின்றுர். இவை முறையே மாங்கனி, கத்தரிக்காய், கருவிளங்கனி என்பவற்றை உணர்த்தும். மாங்கனிப்பாகம் தலையாயது; கருவிளங்கனி இடையாயது; கத்தரிக்காய்ப்பாகம் கடையாயது. இராஜசேகர மகாகவி தம்முடைய காவ்ய மீமாம்சையில்[2] ஒன்பது பாகங்கள் சொல்லுகின்றுர். அவை (1) ம்ருத்வீகா பாகம் (முந்திரிக்கனி) (2) ஸஹகார பாகம் (மாங்கனி) (3) நாளிகேர பாகம் (தேங்காய்) (4) பதர பாகம் (இலந்தைக்கனி) (5) திந்திருணீ பாகம் (புளியம்

[1] History of Sanskrit Poetics, vol. II, p. 300.

[2] Kavya Mimamsa of Rajasekara : Gaekwar Oriental Series no. 1. 3rd Edn. p. 161.

பழம்) (6) த்ரபுஸ பாகம் (வெள்ளரி) (7) பிசுமந்த பாகம் (வேம்பு) (8) வார்த்தாக பாகம் (கத்தரி) (10) க்ரமுகபாகம் (கமுகு) என்பனவாம்.

கவிச் சுவையைப் பழச் சுவைக்கு ஒப்பிடுதல் தமிழ் நாட்டிற்குப் புதிதன்று. கடைச்சங்க காலத்துக் கவிஞர் ஒருவர் இனிய பாக்களை இயற்றினமையின் அவரை, 'அக்கார க்கனி நச்சுமனார்' என்னும் பெயரால் வழங்கலாயினர். நச்சுமனாரென்பது அவர் இயற்பெயர். அவர்பெயர் அங்ஙனம் அமையினும் அவர் இயற்றிய கவிகள் இனியனவாகவே இருந்தன. ஒட்டுமாங்கனியைப் போல அவற்றை நுகர்ந்தவர்கள் 'அக்காரக்கனி நச்சுமனார்' என்று அவரை வழங்கலாயினர். அக்காரமென்பது ஸஹகார மென்பதன் திரிபாகும். வடநூலார் ஸகாரம் செய்யுட்பாகத்திற் சிறந்த தென்று கூறுவர். கம்பரும்,

"காதைகள் சோரிவன செவிநுகர் கனிகள்"

என்று கவிதைகளைக் கனிகளாக உருவகம் செய்தார்.

"பாகத்தி னுற்கவிதை"

என்று தாயுமானாரும்,

"முறுக்கம் பாக முறுந்தமிழ் பாடுங் கடன்பணியே"[1]

என்று சிவஞான முனிவரும் பாகமென்ற சொல்லை வழங்கினர்.

செய்யுட் குணமாகிய செறிவு குறித்துக் கூறும் தண்டியலங்கார உரையாசிரியர் 'மாங்கனியும் தீம்பாலும் வருக்கைச் சுளையும் சருக்கரையும் தம்முள் வேறுபட்ட சுவையவெனினும் கூறுவது மதுரமொன்றன்றே? அதுபோல எழுத்துச் செறிவும், சொற்செறிவும், பொருட் செறிவும் செறிவென்றே சொல்வதல்லது பிறிதொரு வகை பேசிற் பெருகிய அகலமுடைத்தா மெனக் கொள்க'[2] என்றார். இங்கே செய்யுட் சொற்பொருளமைப்பைப் பழச்சுவையோடு உவமித்தல் காண்க.

பழச் சுவைகளாற் பாகத்தின் பெயர் அமையினும் இனிமை தரும் பிறவற்றையும் இவற்றோடு கூட்டி உரைப்பதும் உண்டு. அவ்வகையில் தமிழ் விடுதூதுடையார் பால் (க்ஷீரபாகம்), முந்திரிகை (திராக்ஷாபாகம்), வாழைக் கனி (கதலீபாகம்), கரும்பு (இக்ஷுபாகம்), நாளிகேரம் (நாளிகேரபாகம்) என ஐந்தும் அவற்றின்பின் அமுதமும் கூறுவர் :—

"வளர்ந்தவனபால் முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத் — திளங்கனியாய்த்
தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேயென் முத்தமிழே" (68-69.)

---

[1] கம்பரந்தாதி, 93.

[2] தண்டி. 26, உரை.

வீரசோழியத்துள் அகப்பொருளுக்கு உறுப்பாக வரும் சட்டகம் முதலாகிய இருபத்தேழனுள்[1] ஒன்றாகிய பொருள்கோள் என்பதை விரித்துக் கூறும் உரையாசிரியர் அஃது ஏழுவகையாகு மென்பர்.[2] அவை முறையே வள்ளி, வாழை, கரும்பு, பலா, அசோகு, விற்பூட்டு, புனலாறு என்பன. இப்பெயர்களுள் செய்யுட் பாகங்களுக்கு உரிய பெயர்கள் சில வந்துள்ளன. இப்பொருள்கோள்கள் நூலுட் பொருள் சிறக்கும் ஆற்றை வகுப்பன. முற்பகுதியில் பொருள் சிறப்பது வள்ளி யெனவும், ஈற்றின்கட் பொருள் சிறப்பது வாழையெனவும், இடையிற் பொருள் சிறப்பது கரும்பெனவும், முதலும் இடையும் பொருள் சிறப்பது பலாவெனவும், இடையும் ஈறும் பொருள் சிறப்பது அசோகெனவும், முதலும் ஈறும் பொருள் சிறப்பது விற்பூட்டெனவும், முழுவதும் பொருள் சிறப்பது புனல்யாறெனவும் கூறுப. இவற்றிற்குரிய இலக்கணச் சூத்திரங்கள் அவ்வுரையாசிரியராற் காட்டப்படுகின்றன. இவை செய்யுட் பாகத்துக்கு இனமென்றே கொள்ளற்குரியனவாம்.

## குண அணிகள்

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி ஆகிய பத்துக் குணமும் உயிராக வைதருப்ப நெறி நடைபெறும்.[3] வீரசோழிய நூலார் சிலேட்டம், உதாரதை, காந்தி, புலன், சமதை, சமாதி, பொருட்டெளிவு, ஓகம், சுகுமாரதை, இன்பம் எனப் பத்து உரைப்பர். இவ்விரண்டு வகையாகக் கூறப்படுவன ஒரு வகையே யாகும்; தம்முள் வேறுபாடில. இவற்றுள் காந்தி என்பது விதர்ப்பருக்கும் கவுடருக்கும் உடம்பாடு. அதனை யாப்பு வனப்பென்று கூறுவர். சுகுமாரதை, இழை எனவும் கூறப்படும். இவற்றிற் சிறந்தது இன்பமென்பது. அது மாதுர்யமென்று சொல்லப்பெறும். சொல்லின்பம், பொருளின்பம் என அஃது இருவகைப்படும். இக்குணவலங்காரம், 'முன்னைப் பிறப்பினும் கவிப் பொருத்தமுடையானுக் கல்லாது தெளியாது' என்பது வீரசோழிய உரையாசிரியர் கொள்கை.

சொல்லின்பமாவது, அடை சினை முதலென மூன்றும் தத்தம் முறையிலே மயங்காமல் வரும் வண்ணச்சினைச் சொற்களும், முதலொடு குணம் இரண்டு அடுக்கிவரும் அடைசொற்களும், சினையொடு குணம் இரண்டு அடுக்கிவரும் அடை சொற்களும், வழக்கிடமும் செய்யுளிடமுமாக இரண்டிறந்தனவாய் அடைபல வேண்டின வழியே புணர்ந்த சொற்களுடன், வழிமோனை முதலியன வரத்தொடுப்பத் தோன்றுவது.

---

[1] வீரசோழியம், பொருட்படலம், 4, 5, 6.

[2] ஷை. ப. 73.

[3] தண்டி. 14.

பொருளின்பமாவது மலரினுள்ள மதுக் காரணமாக மதுகரங்கட்கு வரும் இன்பம்போலக் கவிப் பொருளை உட்கொண்டோர்க்கு வரும் இன்பமாம். சொற்சுவை, பொருட்சுவை யென்று கூறுவனவும் இவையேயாம்.

"நவிறொறு நூனயம் போலும்" (குறள், 783)

என்பதன் உரையிற் பரிமேலழகர், 'நூற்பொருள் கற்குந்தோறும் கற்றார்க்கு இன்பஞ் செய்தலை ஒக்கும்' என்று கூறிய இன்பம் பொருள் இன்பமே யாகும்.

குணவலங்காரங்கள் பத்தினுள்ளும் சமாதி யென்பதே சிறந்த தென்று மாறனலங்கார உரையாசிரியர் கூறுவர். 'உவமேயத்தின் வினையை உவமைக்கு ஏற்றுவ'தாகிய அதனைத் தலைமையுடையதாக்குதற்குத் தக்க காரணம் யாதும் தெரியவில்லை. தமிழ்விடுதூதுடையார்,

"முற்றுணர்ந்த தேவர்களு முக்குணமே பெற்றார்நீ
குற்றமிலாப் பத்துக் குணம்பெற்றாய்"

என்று இப்பத்துக் குணவலங்காரங்களையும் குறிப்பர்.

## பொருளணிகள்

செய்யுட்கு அணிசெய்வனவற்றுள் அர்த்தாலங்காரங்களே சிறப்புடையனவாகும். அவற்றைக் காப்பியங்களுக்குப் பிராணனாகக் கூறுவர் வீரசோழிய நூலார். உயிரோடமைந்த உடலுக்கு அணியைப் போலப் பொருட்சுவையையுடைய செய்யுளில் அணிகள் அமைந்துள்ளன.

இலக்கியத்தில் அமைந்த அழகுகளைத் தனியே எடுத்து ஆராய்ந்து இலக்கணம் வகுக்கப் புகுந்த ஆசிரியர்கள் நாளடைவில் இலக்கணத்தைப் பெருக்கிக்கொண்டே வந்தனர். அந்த முறையில் முதலிற் சிலவாகச் சொல்லப்பட்ட அணிகள் வரவரத் தொகையிற் பெருகின.

தொல்காப்பியம் உவமையணி யொன்றனையே கூறியது. பேராசிரியர் எடுத்துக் காட்டும் ஓர் இலக்கணச் சூத்திரத்தில் தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப் பொருள்வைப்பு, வேற்றுமை என எட்டு அணிகள் சொல்லப்பட்டன. யாப்பருங்கலத்தில்,

"உருவக மாதி விரவிய லீரு
வருமலங் காரமும்"

என்பதன் உரையில்[1] அதன் உரையாசிரியர், உருவகம், உவமை, வழிமொழி, மடக்கு, தீபகம், வேற்றுமை நிலை, வெளிப்படை நிலை, நோக்கு, உட்கோள், தொகைமொழி, மிகைமொழி, வார்த்தை, தன்மை, பிறபொருள் வைப்பு, சிறப்பு மொழி, சிலேடை, மறுமொழி, உடனிலைக் கூட்டம், நுவலா நுவற்சி,

[1] யா. வி. ப. 511.

உயர்மொழி, நிதரிசனம், மாறுபட்டு, ஒருங்கியன் மொழி, ஐயம், உயர்வு, விரவியல், வாழ்த்து என இருபத்தேழு அணிகளைக் கூறி 'அவை அணியிய விற் கண்டுகொள்க' என்றமையின் அவ்வணியியலின்கண் 27 அணிகள் கூறப்பட்டனவென்று ஊகிக்க இடமுண்டு.

திவாகரத்துள் இருபத்தெட்டு அணிகள் கூறப்பட்டன. வீர சோழியமும் தண்டியலங்காரமும் வடமொழிக் காவ்யாதர்சத்தைப் பின் பற்றியே எழுந்தனவாயினும் ஒரே அலங்காரத்திற்கு இரண்டு நூல்களும் வெவ்வேறு பெயர்களைக் கூறுகின்றன. சில பெயர்கள் மாத்திரம் ஒன்றி யிருக்கின்றன. வீரசோழியத்திற் கூறப்பட்ட பெயர்கள் வருமாறு:—

1. தன்மை, 2. உவமை, 3. உருவகம், 4. விளக்கு, 5. மீட்சி, 6. பிறபொருள் வைப்பு, 7. தடைமொழி, 8. விதிரேகம், 9. விபாவனை, 10. சுருக்கு, 11. பெருக்கம், 12. நோக்கு, 13. ஏது, 14. நுணுக்கம், 15. இலேசு, 16. அடைவு, 17. மகிழ்ச்சி, 18. சுவை, 19. ஊக்கம், 20. பரியாய மொழி, 21. துணைப் பேறு, 22. உதாத்தம், 23. அவநுதி, 24. சிலேடை, 25. சிறப்பு, 26. உடனிலைச் சொல், 27. முரண், 28. நவ லாச் சொல், 29. சுட்டு, 30. தெரிவில் புகழ்ச்சி, 31. ஒழுங்கியல், 32. பரி மாற்றம், 33. ஆசி, 34. விரா, 35. பாவிகம் என்பன. இவற்றின் பெயர் களிற் பல வெவ்வேறாகத் தண்டியலங்காரத்தில் வந்தன. தண்டியலங் காரத்தின்படி, அணிகளின் பெயர்களும், அவற்றிற்கு வழங்கும் பிறபெயர் களும் கீழே காட்டப்படுகின்றன.

1. தன்மை, ஸ்வபாவோக்தி, சொன்னடை.
2. உவமை, உபமானம், உபமா, பொரு.
3. உருவகம், ரூபகம்.
4. தீவகம், விளக்கு.
5. பின்வருநிலை, வழிமொழி, மீட்சி.
6. முன்னவிலக்கு, தடைமொழி, உட்கோள், ஆக்கேபம்.
7. வேற்றுப்பொருள் வைப்பு, பிறபொருள் வைப்பு, அர்த்தாந்தர நியாசம்.
8. வேற்றுமை, வேற்றுமை நிலை, விதிரேகம்.
9. விபாவனை, வெளிப்பாட்டுநிலை, வெளிப்படை நிலை.
10. ஒட்டு, சுருக்கு, தொகைமொழி, சமாசம்.
11. அதிசயம், பெருக்கம், மிகைமொழி.
12. தற்குறிப்பேற்றம், நோக்கு, உத்ப்ரேக்ஷை.
13. ஏது.
14. நுட்பம், நுணுக்கம்.

15. இலேசம், *இலேசு*.
16. நிரனிறை, *அடைவு*.
17. ஆர்வமொழி, *மகிழ்ச்சி*.
18. சுவை, *ரஸம்*.
19. தன்மேம்பாட்டுரை, *ஊக்கம்*.
20. பரியாயம்.
21. சமாயிதம், *துணைப்பேறு*.
22. உதாத்தம்.
23. அவநுதி.
24. சிலேடை.
25. விசேடம், *சிறப்பு*.
26. ஒப்புமைக் கூட்டம், *உடனிலை, உடனிலைக் கூட்டம்*.
27. விரோதம், *முரண்*.
28. மாறுபடு புகழ்நிலை, *நுவலாச்சொல், நுவலா நுவற்சி*.
29. புகழாப் புகழ்ச்சி, *தெரிவில் புகழ்ச்சி*.
30. நிதரிசனம், *சுட்டு*.
31. புணர்நிலை, *ஒருங்கியல், ஒருங்கியன்மொழி*.
32. பரிவருத்தனை, *பரிமாற்றம், மாறூட்டு*.
33. வாழ்த்து, *ஆசி*.
34. சங்கீரணம், *விரா, விரவியல்*.
35. பாவிகம்.

*வீரசோழிய உரையாசிரியர் கூறும் வேறு பெயர்கள் அணியிய லென்னும் இலக்கண நூலிற் காணப்படுவன வென்று தெரியவருகின்றது.*

*மாறனலங்காரத்தில் அறுபத்துநான்கு அணிகள் கூறப்பட்டன. தொல்காப்பியத்துக் காணப்படும் இலக்கணங்கள் சிலவற்றை அலங்காரங்களாக்கியும் புதிய அணிகளைப் பெய்தும் அந்நூலாசிரியர் இலக்கணம் வகுத்தார். தண்டியலங்கார நூலாசிரியர் கூறியவற்றிற்கும் மாறனலங்காரத்தில் உள்ளவற்றிற்கும் வேறுபாடு மிகச் சிலவேயாகும். மாறனலங்கார உரையாசிரியர் அவற்றை அங்கங்கே புலப்படுத்திச் செல்லுகிறார்.*

*குவலயானந்தம் என்னும் அணியிலக்கணம் நூறு அணிகளைக் கூறியது.*

*மேலே சொல்லப்பட்ட அணிகளுள் தன்மை யென்பதை முதற் கண் வைத்தார், அஃது இயற்கையாதலின். வடநூலார் ஸ்வபாவோக்தி வக்ரோக்தி யென அலங்காரங்களை இருவகையாக்கித் தன்மையை முதல்*

வகையிலும் ஏனையவற்றை இரண்டாவது வகையிலும் அடக்கிக் கூறுவர். இவற்றை இயல்பு, விகார மென்பது தமிழ் வழக்கு. தீவகத்தில் இடைநிலைத் தீவகம் தாப்பிசைப் பொருள்கோளாகும். நிரனிறை யென்பதும் ஒரு பொருள்கோளே. தன் மேம்பாட்டுரை யென்னும் அலங்காரம் நெடுமொழி வஞ்சி யென்னும் புறத்துறையிற் பயின்றுவரும். விரோத மென்பது முரண்டொடையாம். இவ்வாறு பொருள்கோள், தொடையென்பனவும் அலங்காரமாதலை நோக்கியே மாறனலங்காரத்தார் பூட்டுவில், இணை யெதுகை என்பவற்றையும் அலங்காரமாக்கி அமைத்தனர்.

தற்குறிப்பேற்றவணி கவிஞனது கற்பனைத் திறனைக் காட்டவல்லது. தொடர்நிலைச் செய்யுட்கண் இக் கற்பனை, கதைத் தொடர்போடு வருங்கால் மிக்க இன்பம் பயக்கும். கற்பனை யென்று அறிஞர் கூறுவது பெரும்பாலும் இத்தற்குறிப்பேற்ற அணியையே யாகும்.

## பாவிகம்

தன்மை முதலிய பொருளணிகளும், மடக்கு முதலிய சொல்லணிகளும் காப்பியங்களல்லாத பிற செய்யுட்களிலும் காணப்படும். பொது வகையினல் செய்யுட்களில் அமையும் அணிகளையன்றிச் சிறப்புவகையாற் காப்பியங்களுக்கே உரியதாக ஓர் அணி சொல்லப்படுகின்றது. அது பாவிக மெனப்படும்.

“பாவிகமது நற்கவியின்
ஓண்பொரு ளின்றொடர் காப்பியமுற்றி னுரைபெறுமால்”

(வீர. அலங்காரப். 34.)

‘பாவிகமென்பது முழுக் காப்பியமும் ஒருங்கு பொருந்திய குணமாம்........ பாவிகம் காப்பியத் தன்மையாதலின், தனிச் செய்யுளால் எடுத்துக் காட்டி அமைவதன்று’ (ஷை உரை.)

“பாவிக மென்பது காப்பியப் பண்பே” (தண்டி. 89.)

‘பாவிக மென்று சொல்லப்படுவது பொருட்டொடர்நிலைச் செய்யுட் டிறத்துக் கவியாற் கருதிச் சொல்லப்படுவதொரு குணம். அஃது அத் தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது, தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது.’ (ஷை உரை.)

“விளம்பிய காப்பியக் குணங்கள்பா விகமே” (மாறன், 251.)

‘விளம்பிய காப்பியக் குணங்க ளென்பது முன்னர்ப் பொதுவியலுட் கூறிய காப்பியக் குணங்கள்...........குணமாவன அப் பொருட்டொடர்நிலை முழுவதூஉம் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது தனித்து ஒரு பாட்டாற் கொள்ளப்படாதெனக் கொள்க.’ (ஷை உரை.)

இவை பாவிகத்தைப்பற்றி இலக்கண நூல்களால் அறியப்படும் இலக்கணங்கள். வீரசோழிய உரையாசிரியரும் தண்டியலங்கார உரையாசிரியரும்,

"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுக
பொறையிற் சிறந்த கவச மில்லை
வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை"

என்பதை உதாரணமாகக் காட்டுகின்றனர். மாறனலங்கார உரையாசிரியர், பல குறட்பாக்களை எடுத்துக் காட்டி, 'இவைபோல்வனவாகிய பொருட்பால் காமத்துப்பால்களுள் வருங்குணங்களும் பிற காப்பியங்களுள் வருங்குணங்களும் காப்பியக் குணங்களாமென்று கொள்க' என உரைத்தனர்.

இவற்றால், கவிஞன் தான் எடுத்துக்கொண்ட காப்பியத்தில் படிப்படியாக வற்புறுத்தி அமைக்கும் அறிவுரைகளே காப்பியக் குணங்களென்று தோற்றுகின்றது. கவிஞன் தன் உள்ளக் குறிப்பில் எந்தச் சிறந்த கருத்தைக் கதைவாயிலாக உருப்படுத்திக் காட்ட விரும்புகிறானோ அந்தக் கருத்தையே பாவிகமென்று சொல்லலாம். கவிஞனுடைய மனோபாவம் பாவிகம். அதை அமைத்த பாவசித்திரம் காப்பியம். சிலப்பதிகாரத்தின் பதிகத்தில்,

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்ற அடிகளிலே கூறப்பட்ட, அரைசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவது முதலிய மூன்றும் கவிஞன் கருதிய கருத்தெனத் தெரிதலின், அவற்றையே சிலப்பதிகாரமாகிய காப்பியத்தில் அமைந்துள்ள பாவிகமென்று கொள்ளவேண்டும். அடியார்க்கு நல்லார் அம் மூன்றையும் 'உள்ளுறை' என்று குறிக்கின்றார்.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் நாற் பொருளுக்குள் இப் பாவிகம் அடங்குமாயினும், அந் நான்கும் பல பகுதியாக விரிந்துள்ளன. அவற்றுள் சிறப்பாகச் சிலவற்றையே கவிஞன் தன் காப்பியத்துக்கு உள்ளுறையாக வைத்துப் பாடுவானாதலின், அச்சிலவே பாவிகமாகக் கருதப்படும்.

சிலப்பதிகாரத்தில் பாவிகம் வெளிப்படையாகப் பதிகத்திற் சொல்லப்பட்டது போலப் பிற நூல்களிற் சொல்லப்படாவிடினும் அந் நூல்களின் போக்கிலே அங்கங்கே புலனாகும் கருத்துக்களால் அவற்றின் பாவிகம் இன்னவென்று அறிந்து கொள்ளலாம். அரிச்சந்திரனுடைய வரலாற்

றைக் காப்பியமாகப் பாடும் புலவனது பாவிகம் சத்தியம் வெல்லுமென்பதாகும். இதனை அவ்வரலாறே தெரிவிக்கின்றது. இராமாயணம், பாரதம் முதலியவற்றில் 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்பதுபோன்ற பல செய்திகள் பாவிகமாக அமைந்துள்ளன.

பாவிகத்தைக் குறித்துத் தண்டியலங்கார நூலாசிரியரும் பிறரும் கூறிய இலக்கணத்தை ஆராய்ந்தோம். வடநூலாசிரியர் சிலர் பாவிகத்துக்கு வேறோர் இலக்கணம் அமைக்கின்றனர். மம்மடர் தம் காவ்ய ப்ரகாசிகையில், நிகழ்ந்தனவேனும், எதிர்வனவேனும் அவற்றைக் கண் முன் நிகழ்வனவாகத் தோற்றச் செய்யும் அமைதியே பாவிகமென்று கூறுவர்.[1]

கவியிற் கூறப்படும் பொருளை உண்மைப் பொருளாகத் தோற்றச் செய்தல் மெய்ப்பாடென்னும் பெயராலும் வழங்கும். பேராசிரியர் மெய்ப்பாடென்பதன் பொருளை விளக்கும் இடங்களில் இத்தகைய கருத்தையே கூறுவர். 'மெய்ப்பாடென்றான்........உணர்ந்த பொருள் பிழம்பினைக் காட்டுவது மெய்ப்பாடென்பது இதன் கருத்து; இக் கருத்தினாற் கவி கண் காட்டும் எனவும் சொல்லுப.'[2]

எனவே கவிஞர் தம்முடைய சொற்சித்திரத்தால் பொருளை அகக் கண்முன் தோற்றச் செய்யும் ஆற்றலுடையவரென்பது புலப்படும்.

## சொல்லணிகள்

அலங்கார நூல்களிற் சொல்லணிகள் சொல்லப்படுகின்றன. காப்பியங்களில் இவை சிறுபான்மையே வந்துள்ளன. சித்திர கவிகளுடைய இலக்கணத்தையும் இச்சொல்லணியிலக்கணத்தோடு சேர்த்துரைப்பர்.

வீரசோழிய நூலாசிரியர் மாலை மாற்று, சக்கரம், ஓரினப்பாட்டு, ஓரெழுத்துப் பாட்டு, வினுவுத்தரம், ஏகபாதம், காதை கரப்பு, சுழிகுளம், சித்திரப்பா, கோமூத்திரி என்னும் பத்தைக் கூறினார். யாப்பருங்கல நூலார் மாலை மாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதை கரப்பு, கரந்துறைபாட்டு, தூசங்கொளல், வாவனாற்றி, கூடசதுக்கம், கோமூத்திரி, ஓரெழுத்துப்பாட்டு, ஓரினப்பாட்டு, பாதமயக்கு, பாவின் புணர்ப்பு, ஒற்றுப் பெயர்த்தல், ஒருபொருட் பாட்டு, சித்திரக்கா, விசித்திரக்கா, வினுவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்து வருத்தனம் என்னும் இருபத்திரண்டைக் கூறுவர்.[3] அந் நூலின் உரையாசிரியர் அவற்றின் மேலும் அக்கரச் சுதகம், மாத்திரைச் சுதகம், பிந்துமதி, பிரேளிகை, நிரோட்டி, அலகிருக்கை வெண்பா, முண்டப்பாட்டு, தேர்கை, திரிபாகி, கண்டகட்டு, கல்லவலென்பவற்றையும் கூறுவர்.

---

[1] Ch. x : 29.

[2] தொல். செய். 204, உரை.

[3] யா. வி. ப. 492.

தண்டியலங்கார ஆசிரியர் மடக்கையும் அதன் விகற்பங்களையும் கூறியபின், கோமூத்திரி, கூடசதுக்கம், மாலைமாற்று, எழுத்து வருத்தனம், நாகபந்தம், வினுவுத்தரம், காதை கரப்பு, கரந்துறை செய்யுள், சக்கரம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், அக்கரச் சுதகம் என்பவற்றைக் கூறுவர். அவை மடக்கலங்காரத்தின்பாலவாய் வருமென்பர். அந் நூலின் உரையாசிரியர், நிரோட்டம், ஒற்றுப் பெயர்த்தல், மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, முரச பந்தம், திரிபாகி, திரிபங்கி, பிறிது படு பாட்டு என்பவற்றையும் உடன் எடுத்துக் காட்டுவர்.

மாறனலங்கார நூலார் வக்ரோக்தி, பதும பந்தம், இரத பந்தம், பிரிந்தெதிர் செய்யுள் முதலிய சித்திரப்பாக்களோடு இருபத்தாறு கூறுவர். இவை சொல்லணியினுள் மடக்கின்பாற்படும் சித்திர கவி என்று அவரும் கூறுவர். அந் நூலின் உரையில், வேறு சில மிறைக் கவிகளை உரையாசிரியர் எடுத்துரைப்பர். அவற்றுள் திரிபதாதி, சதுரங்க பந்தம், கடக பந்தம் என்பவை புதியன.

தமிழ்விடுதூதுடையார்[1] எழுத்து வருத்தனம், சக்கரம், இரதபந்தம், சுழிகுளம், கூடசதுக்கம், மாலை மாற்று, சதுரங்க பந்தம், முரசபந்தமென்பவற்றைக் குறிப்பர்.

இத்தகைய சொல்லணிகள் நாளடைவில் விருத்தியாயின. அதனால் உண்மைக் கவித்துவம் இழுக்குற்றது. இக் கவிகளை இயற்றுவது மிகக் கடினமான காரியம்; இயற்றினும் இவற்றை உணர்ந்து கொள்வது அதை விடக் கடினமான காரியமே யாகும்.

இதுகாறும் விரிவாக ஆராயப்பட்ட இலக்கணங்கள், வடமொழியினின்றும் அறிந்த பல செய்திகளோடு தொடர்புபடுத்தி உரைக்கப்பட்டமை எங்ஙனம் ஏற்புடையதாகும் என்னும் ஓர் ஐயம் இங்கே எழலாம். காப்பிய வகைகள் பிற்காலத்தில் பெரும்பாலும் வடநூற்படி அமைந்த காப்பிய இலக்கணத்தையே பின்பற்றுவன வாகும். அன்றியும், பெரும்பாலும் பொருளோடு தொடர்புடைய காப்பிய இலக்கணங்கள் எந்த மொழியில் இருப்பினும் கோடற்குரியனவேயாகும். கவிச்சுவையையும், கவியழகையும் பற்றி அறிஞராற் கிளத்தப்படும் கருத்துக்கள் எம்மொழியினராலும் அறிந்து பயன்படுத்தற்கேற்பனவாம். கிரேக்க மொழியிலுள்ள காப்பிய இலக்கண நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தமைத்துப் பொருள் அறிந்தனர். இங்ஙனமே வடமொழிக் காப்பிய இலக்கணங்களை இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்த்து அமைத்துக்கொண்டனர். தமிழிலும் தண்டியலங்காரம் முதலியன வடநூல் வழி எழுந்த நூல்கள். அவையெல்லாம் பயன்படுவனவே யாதலின், இங்கே கூறிய கருத்துக்களும் தமிழுக்குப் பயன்படுவன

[1] கண்ணி, 46 - 9.

வாதலில் தடையொன்றும் இல்லை. இது குறித்துத் தமிழ்த் தண்டியலங்கார உரையாசிரியர் எழுதியுள்ள பின் வரும் விஷயங்கள் இங்கே கருதற்குரியன:

'அஃதேல் இன்ன இலக்கணம் எல்லாம் முன்னையோர் மொழிந்தது, நடைபல பயின்ற வடமொழிக் கன்றே; செந்தமிழ் மொழியின் வந்தவாறு என்னை? எனின்,—இதன் முதனூல் செய்த ஆசிரியர் உலகத்துச் சொல்லெல்லாம் சம்ஸ்கிருதம், பிராகிருதம், அவப்பிரபஞ்சம் என மூன்று வகைப்படுத்தினர். அவற்றுள் சம்ஸ்கிருதம் புத்தேளிர் மொழியெனவும், அவப்பிரபஞ்சம் இதர சாதிகளாகிய இழிசனர் மொழியெனவும் கூறினர். அதனால் பிராகிருதம் எல்லா நாட்டு மொழியெனவும் படும். அல்லதூஉம், பிரகிருதி யென்பது இயல்பாகலான், பிராகிருதம் இயல்புமொழி. அந்தப் பிராகிருதத்தைத் தற்பவம், தற்சமம், தேசியம் என மூன்றாக்கினர்........ இவற்றையே செய்யுட் சொல்லெனத் தமிழ் நூலாரும் வேண்டினாராகலின், இவ்வாற்றான் தமிழ்ச் சொல்லெல்லாம் பிராகிருத மெனப்படும். அச் சொற்களால் இயற்றப்படும் எல்லாக் கவிக்கும் அவ்வலங்காரம் அனைத்தும் உரியவாகலின், ஈண்டு மொழிபெயர்த்து உரைக்கப்பட்டன.'[1]

இலக்கண நூல்களினால் அறிந்த காப்பிய இலக்கணங்களையன்றிக் காப்பியங்களின் அமைதியாலும் இலக்கியங்களினிடையே புலவர் பெருமக்கள் குறிப்பிட்டுச் செல்லும் கவிச்சுவை, கவியின் தன்மை முதலியவற்றைப்பற்றிய செய்திகளாலும் காப்பிய இயல்புகள் பல வெளியாகின்றன. அவை தனித்தனியே ஆராய்ந்து தொகுத்தற்குரியவை.

காப்பியங்களின் பயன், கவிச்சுவையை அறிந்து அதன் வாயிலாகக் கடவுள்பால் அன்பு பூண்டு ஒழுகுதலே யென்பது நம் நாட்டார் கொள்கை. ஆதலின் காப்பியங்களிற் பெரும்பாலன சமய நூற்கருத்துக்களை அங்கங்கே வற்புறுத்திச் செல்கின்றன.

---

1 தண்டி. 25, உரை.

# VI

# காப்பிய இலக்கியங்கள்

பண்டைக் காலந் தொடங்கி வளமலிந்து விளங்கும் செந்தமிழ் மொழியில் அளவிறந்த காப்பியங்கள் உண்டாயின. ஒரு மொழியின் வளத்தைக் காப்பியங்களே புலப்படுத்தும். மிகப் பழங்காலத்தில் தமிழில் இயற்றப் பெற்ற காப்பியங்களில் ஒன்றும் இப்பொழுது கிடைத்திலது. அங்ஙனம் கிடையாமை காரணமாகக் காப்பியமே இருந்ததில்லை யென்று கூறுதல் ஏற்புடையதன்று.[1]

## சங்ககாலத்துக் காப்பியங்கள்

முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்னும் மூன்று சங்கத்தினர்களாலும் இயற்றப்பட்ட நூல்களில் முதலிரண்டு சங்கத்துக்கு உரியவற்றில் தொல்காப்பியம் ஒழிந்த ஏனைய நூல்கள் இறந்தொழிந்தன. அவ்விரண்டு சங்கங்களிலும் மருவிய நூல்களின் பெயர்கள் சில, இறையனாரகப்பொருள் உரை முதலியவற்றால் அறியப்படுகின்றன. அங்கே காணப்படும் இலக்கியங்களில் மூன்று தமிழுக்கும் உரியவை உள. அவற்றுள்ளே எவை காப்பியங்களாகிய பொருட்டொடர்நிலைச் செய்யுளென்பதை அறுதியிட முடியவில்லை. அவ்விரண்டு சங்கங்களிலும் இயற்றமிழ்க் காப்பியங்களும் நாடகத் தமிழ்க் காப்பியங்களும் வழக்கில் இருந்தனவென்று கொள்வதிற் பிழையொன்றும் இல்லை. கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூல்களிற் சிலவே இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுள்ளும் இசை நாடகத் தமிழ்ச் செய்யுட்கள் கிடைத்தில. முற்கூறிய இரண்டுவகைக் காப்பியங்களிலும் பல கடைச்சங்க காலத்திலும் இயற்றப்பட்டனவென்று சொல்லலாம்.

சங்க காலத்துக்குப் பின்னர் இயற்றப்பட்ட காப்பியங்களுக்குள் இணையற்றதாக விளங்கும் பெருங்கதையைப்பற்றிக் கூறும் அடியார்க்கு நல்லார், அஃது இடைச் சங்க காலத்துச் செய்யுட்களாகிய கலியும் குருகும் வெண்டாளியும் முதலியசெய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்யப்பட்டதென்று சிறப்பிக்கின்றார். பெருங்கதை ஆசிரியர் அவ் விடைச் சங்க நூல்களைப் பின்

---

1 'The fact, however, that during long periods no Kavya is known to us, does not allow us to conclude, that during these periods there was no cultivation of Kavya at all'—The Foundation of Indian Poetry and their Historical Development by J. Noble, p. 6.

பற்றினுரென்பதுகொண்டு, அக்காப்பியத்திற்கு மூலமாகிய பலமுறைகள் முந்தை நூல்களில் இருந்தனவென்பதும், அவற்றிலிருந்து பல சொல்லே யும் பொருளேயும் அவர் எடுத்தமைத்தனரென்பதும், காப்பியத்துக்குரிய அமைப்புக்கள் சிலவற்றை அம் முந்துநூல்கள் உடையனவாகலாமென்பதும் ஊகிக்கற்பாலன.

## தொல்காப்பியத்துக்கு முன்னர் உண்டானவை

தொல்காப்பியத்தில், தோல் முதலிய வனப்புக்களேப்பற்றிக் கூறப்பட்ட இலக்கணங்கள் சிலவகையான பொருட்டொடர்நிலேச் செய்யுட் களின் இலக்கணங்களாக அமைந்துள்ளன. ஒரு மொழியில் இலக்கியங்கள் உண்டானபிறகே இலக்கணம் உண்டாகும். 'இலக்கியம் கண்டதற்கு இலக் கணம் இயம்பலின்' என்பது இக் கருத்தைத் தெரிவிக்கின்றது.

"எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம்"

என்ற போலி அகத்தியங்கூட இவ்வுண்மையைக் கூறுகின்றது.[1] ஆதலின் தொல்காப்பியத்திலுள்ள இலக்கண விதிகளுக்குரிய இலக்கியங்கள் தொல் காப்பியர் காலத்திற்கு முன்பும், அவர் காலத்திலும் வழங்கியிருக்கவேண்டு மென்று கொள்ளலாகும். வனப்பின் இலக்கணங்கள் முன்பு ஆராயப்பட் டன. அவ்வனப்புக்களுள் ஒவ்வொன்றற்கும் உரையாசிரியர்கள் உதாரணங் காட்டிப் போந்தனர். தொன்மைக்கு உதாரணமாகப் பாரதம், தகடூர் யாத் திரை, சிலப்பதிகாரம் என்பனவும், தோலுக்கு உதாரணமாகச் சிந்தாமணி யும், இயைபுக்கு உதாரணமாக மணிமேகலே பெருங்கதையாகியனவும் அவர் களாற் காட்டப்படுகின்றன. அவை தொல்காப்பியனுர் காலத்திற்குப் பின் உண்டான நூல்களே. பழைய நூல்கள் உரையாசிரியர்கள் காலத்தே வழக் கொழிந்தமையின் அவற்றைக் கூருமல், இலக்கணத்தைப் புலப்படுத்தவேண் டித் தத்தம் காலத்து வழங்கிய நூல்களே உதாரணங் காட்டினர். அவர்கள் காட்டிய உதாரணங்கள் தொல்காப்பியத்தைப் படித்தறிவாருக்குப் பொருள் விளங்கும் பொருட்டு உதவுவனவேயன்றி, தொல்காப்பிய இலக்கணத்தாற் கருதப்பட்ட இலக்கியங்கள் அல்ல. தம் காலத்து வழங்காத நூல்களுக்கு உதாரணங்காட்ட இயலாத இடத்து உரையாசிரியர்கள், 'இவை அக்காலத்து வழங்கினபோலும்!' என்று கூறிச் செல்வர். இயைபென்னும் வனப்பின் இலக்கணத்தைக் கூறும் சூத்திர உரையில், பேராசிரியரும் நச்சினுர்க்கினி யரும் ஞகரம் முதலிய பதிஞெரு புள்ளியை இறுதியாக உடைய செய்யுட்கள் அமைந்த காப்பியங்களனைத்திற்கும் உதாரணம் காட்ட இயலாமல், னகர வீற்றுன் முடிந்ததற்குமட்டும் உதயணன் கதையையும் மணிமேகலேயையும்

[1] 'It is not necessary to prove that poetics are possible only under the sup. position that poetry existed already and that poetry is older than poetics.' - The Foundation of Indian Poetry and their Historical Development, p. 2.

காட்டினர்; 'மற்றை ஈற்றுன் வருவனவற்றுக்கும் ஈண்டு இலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கொள்க. இப்பொழுது அவை வீழ்ந் தனபோலும்' என்று பேராசிரியரும், 'ஒழிந்த ஒற்றுக்களுக்கும் இலக்கணம் உண்மையின் இலக்கியம் இக்காலத்து வீழ்ந்தனபோலும்' என்று நச்சினார்க் கினியரும் மொழிந்தனர். அவர்கள் கூற்றால் தம் காலத்துக்கு முன் இருந்த இலக்கியங்களை நோக்கியே தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தாரென்பது தெரியவரும். இக்கொள்கையையே ஏனைய வனப்பிலக்கணங்களுக்கும் கொள்ளவேண்டும். இவ்வாறு, இலக்கணம் உண்மையால் முன்பு இருந் திருக்கவேண்டும் என்று கருதத்தக்க காப்பியங்களின் வகை வருமாறு:—

(1) தொன்மையென்னும் வனப்பமைந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களாகிய காப்பியங்கள்.

(2) தோலென்னும் வனப்பமைந்த காப்பியங்கள்.

(3) புதிய கதையை அமைத்து இயற்றும் புதுக்காப்பியங்கள்.

(4) ஞணநமன யரலவழள என்ற மெய்களால் இற்ற செய்யுட் களை யுடைய காப்பியங்கள்.

(5) சேரி மொழியாற் புலனென்னும் வனப்பு அமைந்த நாடகக் காப்பியங்கள்.

## ஐம்பெருங் காப்பியங்களென்னும் வழக்கு

தொல்காப்பியத்தின் பின்னர் உண்டான காப்பியங்கள் பல; கடைச்சங்க காலத்தே வழங்கிய இராமாயணம், பாரதம், தகடூர்யாத்திரை முதலியன அவற்றுட் சில.

அவற்றிற்குப் பின் எழுந்த காப்பிய வரிசையில் சிறப்புற்று வழங்குவன ஐம்பெருங் காப்பியங்களென்னும் தொகுதியாகும். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் இலக்கிய வரிசைகளைப் போல, ஐம்பெருங் காப்பியங்களென்னும் வரிசையும் வழங்கி வருகின்றது. அவ் வைம்பெருங் காப்பியங்களாவன, சிலப்பதிகாரம், மணி மேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன. இவற்றுள் முன்னைய இரண்டும் கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டவை; ஆயினும் சங்கமருவாதன. பின் மூன்று காப்பியங்களும் பிற்காலத்து இயற்றப் பட்டன.

இவ் வைந்தையும் ஒருசேர வைத்து ஐம்பெருங்காப்பியங்க ளென்று வழங்கும் வழக்கம் எப்பொழுது தொடங்கியதென்று தெரியவில்லை. நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர், 'இனி, இவ்வாறே ஆண்பாற் பொருட்பெயரும், பெண்பாற் பொருட்பெயரும், ஏனையபாற் பொருட்பெய

ரும், இடப்பெயரும், காலப்பெயரும், சினைப்பெயரும், பண்புப்பெயரும், தொழிற்பெயரும், மரபுப்பெயரும் வழுவாமல் ஐம்பெருங் காப்பியம், எண்பெருந் தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற் பனுவலுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக'[1] என்பதில் இவ் வைம்பெருங் காப்பியங்களைச் சுட்டுகின்றார். இதனால் அவர் காலத்துக்கு முன்னரே இவ் வழக்காறு இருத்தல் வேண்டுமென்று தெரிகின்றது. தமிழ்விடுதூது என்னும் பிரபந்தத்தில்,

"பற்று மிலக்கணநூற் பாவுநூற் பாவறிந்து
கற்றோர் வழங்குபஞ்ச காப்பியமும்" (கண்ணி, 53)

என்னும் பகுதியில் பஞ்சகாப்பியமென்னும் தொடர் ஆளப்படுகின்றது. இவ் விரண்டு இடங்களிலும் அப் பஞ்சகாவியங்கள் இன்னவை யென்று கூறப்படவில்லை. சென்ற நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகிய 'பொருட்டொகை நிகண்டு' என்னும் நிகண்டில்,

"சிந்தா மணிதிகழ் சிலப்பதி காரம்
மணிமே கலைவளை யாபதி குண்டல
கேசி பஞ்சகா வியமெனக் கிளத்துவர்"

என்ற ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இதில், ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களும் உள்ளன.

"சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான்—நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்" (526-27)

என்னும் திருத்தணிகையுலாப் பகுதியில் இவ் வைம்பெருங் காப்பியங்களின் பெயர்களும் தொனியில் அமைந்து காணப்படுகின்றன. சூடாமணிப் புலவர் என்பவரால் இயற்றப்பட்ட வைசியபுராணம் என்னும் நூலில் 31, 32, 33, 34, 35 என்னும் ஐந்து அத்தியாயங்கள் இவ் வைந்து காப்பியங்களினால் வைசியர் சிறப்புப் பெற்றதை உரைக்கும். பொருட்டொகை நிகண்டிலும், திருத்தணிகையுலாவிலும், வைசியபுராணத்திலும் இவற்றின் முறைவைப்பு ஒன்றாக இருக்கின்றது. இம் முறைவைப்பு, கால அடைவை நோக்கி வைக்கப்பட்டதன்று. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஏனைய மூன்று நூல்களுக்கும் முற்பட்டன. எனவே சுவையை நோக்கியோ, வேறு காரணத்தினாலோ, எதனால் இம்முறை வழங்கியதென்று தெரியவில்லை.

முன்பு கூறியவற்றால் ஐம்பெருங் காப்பியமென்னும் வழக்குப் பிற்காலத்ததென்பது விளங்கும். அதன் வைப்பு முறைக்குப் போதிய காரணம் இல்லையென்பதும் தேற்றம். அன்றியும் இவ் வைந்தும் பெருங்

1 சூ. 387, உரை.

காப்பியங்கள்தாமா வென்பதைப்பற்றி ஆராய்ந்தால், அவற்றுட் சில அல்ல வென்னும் முடிபுதான் பெறப்படும்.

சீவகசிந்தாமணி பெருங்காப்பிய மென்பதற்கு ஐயமில்லை. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சேர்ந்து ஒரு காப்பியமாக நடத்தல் வேண்டுமென்பது இளங்கோவடிகள் கருத்தென்று அடியார்க்கு நல்லார் கூறினும், தனித்தனியே எடுத்து ஆராய்ந்தால் சிலப்பதிகாரம் பெருங் காப்பியமாதல் தகும். மணிமேகலையோ எனின், அறனும் வீடுமே பொருளாகக்கொண்டது; பௌத்தசமயச் சார்பு உடையது. தனியே, பௌத்த சமயக் கொள்கைகளையும், பிற மதக் கொள்கைகள் பயனற்றவை யென்பதையும் இரண்டு காதைகளாற் கூறுவது. நாற்பெரும் பொருளமைதியும் அதிற் காணப்படவில்லை. ஆதலின் அதனைப் பெருங்காப்பியமென்று கூறுதல் பொருந்தாதென்று தோற்றுகின்றது. வளையாபதியைப் பற்றிய செய்திகள் போதியனவாகக் கிடைத்தலின்மையின் அது பெருங் காப்பியமா, அன்றா வென்று வரையறுத்தல் இயலாது. குண்டலகேசியை, யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் வாதநூல் வரிசையிற் சேர்த்து வழங்குவர். நீலகேசி அவ் வாதங்களை மறுத்துக் கூறுவதும், அந்நூல் பெரும்பாலும் சமயக் கருத்துக்களை வெளியிடற்கெழுந்த தென்பதை உணர்த்தும். எனவே, அந்த நூலிற் பெருங் காப்பியத்துக்குரிய இலக்கணங்கள் குறைவின்றி நிரம்பியிருக்கும் எனக் கொள்ளுதற்கில்லை. யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் குண்டலகேசியோடு இனமாக வைத்த ஏனைய கேசிகளுள், இப்பொழுது கிடைப்பது நீலகேசி ஒன்றே. அந் நீலகேசியோ பெருங் காப்பியமாகச் சொல்லும் தகுதியில்லாதது. எனவே அதனோடு இனமாக எண்ணப்படும் குண்டலகேசியும் அத்தகையதே யென்று கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை.

எனினும், வீரசோழிய உரையாசிரியர் குண்டலகேசியைக் காப்பியமென்று கூறுவதோடு பலவகையால் அதனைச் சிறப்பிக்கின்றார்:

'குண்டலகேசி முதலான காப்பியமெல்லாம் விருத்தமாம்.'[1]

'குண்டலகேசியும் உதயணன் கதையும் முதலாக வுடையவற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தனவெனின், அகலக்கவி செய்வானுக்கு அப்படியல்லது ஆகாதென்பது.'[2]

'இனிப் பாவிகமாவது அகலக்கவிப் புலவன் கருத்து. அது குண்டலகேசி உதயணன் கதை முதலாயினவற்றுள் உண்டெனக் கொள்க.'[3]

---

[1] யாப்பு. 23, உரை.

[2] ப. 140.

[3] ப. 152.

இவற்ருல் குண்டலகேசி விருத்த யாப்பாற் செய்யப்பட்டதென் றும், தெரியாத சொல்லும் பொருளும் அதன்கண் வந்தனவென்றும், அகலக் கவி யென்றும் நாம் அறிகின்ருேம். இவ்வுரையாசிரியர், சிந்தாமணி முதலியன இருப்பவும் குண்டலகேசியையும் உதயணன் கதையையுமே எடுத்துக் கூறுவதற்குக் காரணம் யாது? அவற்றுள்ளும் குண்டலகேசியை முன்வைத்துச் சொல்வது ஏன்? குண்டலகேசியிலுள்ள சொற்களும் பொருளும் தெரியாமல் இருப்பதனேடு, பெருங்கதையிலுள்ள பலவகைச் சிறப்புடைய சொற்களும் பொருள்களும் தெரியாமல் இருப்பதை ஒருங்கே வைத்ததன் நோக்கம் யாது? இவ் விஞக்களுக்குக் குண்டலகேசியினிடத்தில் உரையாசிரியருக்குள்ள பற்றென்பதே தக்க விடையாகும். அவ் வுரை யாசிரியர் பெருந்தேவனுர் என்பவர். அவர் பௌத்தசமயத்தின ராதலின் அச்சமய நூலாகிய குண்டலகேசிக்குச் சிறப்புத் தருவது இயல்பேயன்ருே? எனவே, அவர் கருத்தையே ஆணையாகக் கொண்டு குண்டலகேசியைப் பெருங்காப்பியத்தில் ஒன்ருக எண்ணுதல் வன்மை பெருது.

இங்ஙனம், மணிமேகலையும் குண்டலகேசியும் பெருங்காப்பியத் துக்குரிய இலக்கண அமைதி நன்கு பெருதிருப்பவும் அவற்றையும் பெருங் காப்பியங்களோடு சேர்த்து எண்ணியதற்குக் காரணம் தெரியவில்லை. பெருங் காப்பியங்கள் வேறு இல்லையென்று கூறுவதற்கும் இயலாது. காப்பிய இலக்கணம் குறைவறப் பெற்ற பெருங்கதையும், சூளாமணியும் நல்ல காப்பியங்களல்லவோ? அவற்றைச் சேர்த்துக் கூருததற்குக் காரணம் என்ன? மணிமேகலை குண்டலகேசி யென்னும் இரண்டினையும் நீக்கிப் பெருங்கதையையும் சூளாமணியையும் சேர்த்து வழங்கியிருப்பின் ஒருவாறு அமைவுடையதாக இருக்கும்.

ஆயின், இவ் வைம்பெருங் காப்பியம் என்னும் வழக்கு எழுந்த தற்குக் காரணம் யாது? பிற்காலத்தில் வடநூன் மரபைப் பின்பற்றிச் சொற்பொருள்கள் தமிழில் உண்டாக்கப்பட்டன. யாப்பும் அமைந்தது. அணியிலக்கணம் வடமொழியைத் தழுவியே அமைக்கப்பட்டது. அப்படி வந்த வழக்காறுகளுள், இந்தப் பஞ்சகாவியத் தொகையும் ஒன்று. வட நூல்களில் பஞ்சகாவிய மென்றதொரு தொகுதி உண்டு. அவை மிக்க சிறப் புடைய காவியங்களாக வடநூற் புலவர்களால் மதிக்கப்படுவன. அவை, ஸ்ரீ ஹர்ஷகவியால் இயற்றப்பெற்ற நைஷதமும், பாரவி இயற்றிய கிராதார் ஜுனீயமும், காளிதாஸ மகாகவி இயற்றிய ரகுவம்சமும் குமாரசம்பவ மும், மாககவி இயற்றிய சிசுபாலவதமும் ஆம்.

இந்த வழக்காற்றை உட்கொண்ட தமிழ் நாட்டினரிற் சிலர் தமிழிலும் ஐம்பெருங் காப்பியங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எண்ணினர் போலும்! அங்ஙனம் எண்ணிய அவர்களுக்குச் சிலப்பதிகார மும் மணிமேகலையும் சிந்தாமணியும் குண்டலகேசியும் வளையாபதியுமே

முதன் முதலில் நினைவிற் றோன்றின போலும்! எங்ஙனமாயினும், ஐம் பெருங் காப்பியமென்று வரையறுத்துக் கூறும் வழக்கு வடமொழியைப் பின்பற்றியதே என்று தோற்றுகின்றது.

ஐம்பெருங் காப்பியமென்னும் வழக்கை நினைந்த சிலர் சமீப காலத்தில் ஐஞ்சிறு காப்பியங்களென்ற ஒரு புது வரிசையைச் சிருஷ்டி பண்ணி யிருக்கின்றனர். அவை (1) உதயண குமாரகாவியம், (2) நாக குமாரகாவியம், (3) யசோதர காவியம், (4) சூளாமணி, (5) நீலகேசி என்பனவாம். சூளாமணிக்கும் ஏனைய நான்கற்கும் உள்ள வேறுபாடு அஜகஜாந்தரமென்பது அவற்றை ஆராய்வார்களுக்குப் புலனாகும்; உதயண குமாரகாவியத்தைப் பதிப்பித்த ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் ஐய ரவர்கள் அதன் முகவுரையில், 'இது காவியமென்னும் பெயரை உடைய தாயினும் காப்பிய இலக்கணங்களை உடையதன்று' என்றும், 'இந்நூலில் இலக்கண வழுக்கள் உள்ளன; சந்த நயமும் பொருட்பொலிவும் இல்லை' என்றும், 'நிரம்பிய புலமை இல்லாத ஒருவரால் இது செய்யப்பட்டிருக்கலா மென்றும் அவர் (வீடூர் அப்பாசாமி சாஸ்திரியாரவர்கள்) கூறினர். எனக் கும் அஃது உடம்பாடே' என்றும் எழுதியிருக்கின்றார்கள். இவற்றால் அப் புத்தகம் இலக்கியமென்று சொல்லுதற்கும் தகுதியற்றதென்பது தெளியப் படும். நாக குமாரகாவியம், யசோதர காவியமென்பனவும் அத்தகை யனவே. நீலகேசி வாதநூல். சூளாமணியோ சிறந்த காப்பியம். இவற்றை ஒருங்கெண்ணுதல் எங்ஙனம் அமைவுடையதாகும்?

இப்பொழுது எழுந்த ஐஞ்சிறு காப்பிய வழக்காறுபோலவே முன்பு ஐம்பெருங்காப்பிய வழக்காறும் எழுந்ததென்றே தோற்றுகின்றது. அன்றெனின், பேராசிரியர் முதலிய உரையாசிரியர்கள் ஏனைய நூல் வரிசைகளைக் குறிக்கும்போது இவற்றைக் குறிப்பிடாமல் இருத்தற்குக் காரணம் இல்லை.

இப்பொழுது கிடைக்கும் நூலுரைகளாற் பெயரளவிலே அறியப் படும் சில பழங்காப்பியங்களும், உரைகளில் அங்கங்கே மேற்கோளாகச் சில சில செய்யுட்கள் மாத்திரம் எடுத்துக்காட்டப் பெற்ற காப்பியங்களும், வழங்கிவரும் காப்பியங்களுமெனப் பழைய காப்பியங்களை மூன்றுவகை யாக்கலாம்.

## பருப்பதம்

பெயர் மாத்திரம் தெரியும் பழைய நூல்கள் பருப்பதம், கலியா யாணன் கதை, புராண சாகரம் என்பன. இவை சங்க காலத்துக்கு முந்தி யனவோ பிந்தியனவோ தெரியவில்லை. பருப்பதமென்பது உரையுள்ள நூலோவென்று ஐயுறுதற்கு வாய்ப்பு உண்டு. பேராசிரியர், பாட்டிற்கு உரை யெழுதுவதும் உரை வகையிற் சேர்ந்ததென்று கூறும் பொழுது, 'ஒழிந்த

பாட்டிற்கும் இவ்வாறே பொருளெழுதின், அஃது ஒக்கும். அவை பாரதம், பருப்பதம் முதலியன'[1] என்று உணர்த்துகின்றார். இங்கே பாட்டென்றது இலக்கியச் செய்யுளை, அதற்கு உரை யெழுதும் முறையை உதாரண வாயிலாகப் புலப்படுத்த வந்தவர் பாரதம் பருப்பதம் என்னும் இரண்டையும் ஒருங்கே காட்டுகின்றார். அவர் கூறும் செய்திகளோடு தொடர்பு படுத்திப் பார்க்கும்போது பாரதமும், பருப்பதமும் தனித் தனியே செய்யுளிலக்கியங்களென்றும் அவற்றிற்குப் பழைய உரை உண்டென்றும் தோற்றுகின்றது.

## கலியாணன் கதை

கலியாணன் கதையென்பது உதயணன் கதையைப் போன்றது. அவ்விரண்டையும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் இனப்படுத்தி எடுத்துக் காட்டுவர். கலியாண னென்பவனது வரலாற்றைக் கூறும் காப்பியமாக இருக்கலாம். இது சங்ககாலத்திற்குப் பிற்பட்டதாகவே தோற்றுகின்றது. இந்நூலில் ஒவ்வோர் உறுப்பும் என் என்ற இறுதியை உடையது. ஓர் உறுப்பின் ஈறும் அடுத்த உறுப்பின் முதலும் ஒன்றிவரும் சொற்றொடர் நிலைத் தன்மையும் இக் காப்பியத்தில் உண்டு. நிலைமண்டில ஆசிரியப் பாக்களால் ஆன நூல் இது.[2]

## புராண சாகரம்

'இன்னும் பலவடியால் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராண சாகரமும் முதலாகவுடைய செய்யுட்களிற் கண்டுகொள்க'[3] என்பதில், புராண சாகரம் என்னும் நூற்பெயரொன்று சொல்லப்படுகிறது. புராணமென்பது பழைய வரலாறு. பல பழைய வரலாறுகளைக் கூறும் தொடர்நிலைச் செய்யுளாக இந்நூலைக் கருதலாம். 'கதாஸரித் ஸாகரம்' என்ற வடமொழி நூற் பெயரோடு இதன் பெயரையும் ஒப்பிடுக. இராமாயணத்தோடு சேர்த்துக் கூறப்பட்டமையின் இஃது அதனைப் போலவே ஒரு காப்பியமென்று கொள்ளலாகும். இதன்கண் பல பஃறொடை வெண்பாக்கள் அமைந்திருந்தனவென்பது மேலே காட்டிய உரைப் பகுதியால் தெரிய வருகின்றது.

## இராமாயணம்

சங்க காலத்தில் இராமாயணம் ஒன்று வழங்கிவந்ததென்று தெரிகின்றது. இது வெண்பாவும் ஆசிரியப்பாவுமாகிய யாப்பு அமைந்தது.

1 தொல். செய். 173, பேர்.
2 யா. வி. ப. 262.
3 யா. வி. ப. 238.

இதன் செய்யுட்கள் பல உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படுகின்றன. இத் தமிழ் இராமாயணம் ஒரு காப்பியமே ஆகும். இஃது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாம்.

## பாரதம்

பாரதமும் சங்க காலத்தே இருந்து வந்தது. இதைப் பாடிய புலவர்பிரான் பெருந்தேவனார் என்பவர். இந்நூல் யாவராலும் போற்றப் பட்டுவந்ததென்பதற்கு இதனை இயற்றிய ஆசிரியருக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற பெயர் அமைந்தமையே ஓர் அறிகுறியாகும். இதனைப் பாடியதே அவருக்கு ஒரு பெருமையாயின், இதன்பெருமை எங்ஙனம் இருத்தல் வேண்டுமென்பது சிந்தித்து அறிதற்குரியது. தொல்காப்பிய உரைகளில் இந்நூற் செய்யுட்கள் பல வந்துள்ளன. இதன்கண் வெண்பாவும் ஆசிரியப்பாவும் விரவி யமைந்திருந்தன. இடையிடையே பாட்டிடை வைத்த குறிப்பாகிய உரைப்பகுதிகளும் இருந்தன. அதனால் இதனைத் தொன்மையென்னும் வனப்புக்கு உதாரணமாகக் கூறுவர். இதற்கு ஒரு பழைய உரை உண்டென்று நினைத்தற்குரிய குறிப்பொன்று தொல்காப்பியம் பேராசிரியர் உரையிற் கிடைத்தல் முன்னர்ப் பருப்பதம் என்ற தலைப்பிற் கூறப்பட்டது.

பத்தாம் நூற்றாண்டில் அரசாண்டு வந்த இராஜ சிம்மன் என்ற பாண்டியன் காலத்தில் எழுந்த சின்னமனூர்ச் சாஸனத்தில் அப் பாண்டியனுடைய மெய்க்கீர்த்தி சொல்லப்படுகின்றது. அதில் அவன் முன்னோர்கள் செய்த பல செயல்கள் அவன்மேல் ஏற்றிக் கூறப்படுகின்றன. அம் மெய்க்கீர்த்தியிலுள்ள,

"மஹாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்"[1]

என்னும் பகுதி பழங்காலத்துப் பாண்டியர் மாபாரதத்தை வடநூலிலிருந்து தமிழ்மொழி பெயர்ப்புச் செய்வித்தாரென்று தெரிவிக்கின்றது. அங்ஙனம் செய்தோன் இன்னனென்று இப்பொழுது தெரியவில்லை. மேலே காட்டிய அடியிற் குறிக்கப்பட்ட பாரதம் பெருந்தேவனார் இயற்றியதென்று கொள்ளலும் கூடும்.

## தகடூர் யாத்திரை

கடைச்சங்க காலத்தில் எழுந்த நூல்களுள் இஃதுஒன்று. இதனை ஒரு பெருங் காப்பியமாகக் கொள்வதற்கில்லையெனினும் காப்பியமாகக் கொள்ளலாகும். தகடூர் என்னும் இடத்திற்குப் படைகள் சென்றமையும் போர் புரிந்தமையும் பிறவும் இதிற் சொல்லப்பட்டன.

---

1 South Indian Inscriptions, Vol. III. p. 454.

தகடூரென்பது சேலம் ஜில்லாவிலுள்ள தர்மபுரியாகும். மைஸூர் ராஜ்யத்திலுள்ள தகடூரென்று கொள்வாரும் உண்டு. தகடூரில் வாழ்ந்து வந்த அதிகமான் என்பவன்மேல் சேர அரசனான பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் படையெடுத்துச் சென்று தகடூரை எறிந்து வென்றான். இந்தப் போர் நிகழ்ச்சியையே இந்நூல் கூறுவதென்று தோற்றுகின்றது. இத்தொடர்நிலைச் செய்யுளில் இடையிடையே உரை விரவியிருக்கும். அதனால் இது தொன்மை யென்னும் வனப்புடையதாகச் சொல்லப்படுகின்றது.

இந்நூற் செய்யுட்களிற் பல, புறத்திரட்டிலும், தொல்காப்பிய உரைகளிலும் வந்துள்ளன. நூல் முற்றும் கிடைக்கவில்லை. இந்நூலும் இராமாயணம் பாரதம் என்பவற்றைப்போல வெண்பாவிகற்பங்களும் ஆசிரியப்பாக்களும் அமைந்த நூலாகத் தெரியவருகின்றது. போர் நிகழ்ச்சியையும் அதற்கு நிமித்தமாகும் செய்திகளையும் கூறும் இந்நூலில் புறப்பொருளமைதி சிறந்து விளங்கும்.

## சிலப்பதிகாரம்

கடைச்சங்க காலத்தைச் சார்ந்த காப்பியங்களுள் இஃது ஒன்று. நமக்குக் கிடைக்கும் காப்பியங்களுள் இதுவே பழமையுடையதாகும்.

இதனை இயற்றியவர் சேரர் குலத்துப் பிறந்த இளங்கோவடிகள். அவர் சேரன் செங்குட்டுவனுக்குப் பின்னவர். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல் முதலிய மூன்று உண்மைகளையும் புலப்படுத்தி முத்தமிழ்ச் செய்திகளும் மூவேந்தர் பெருமைகளும் விளங்கும்படி இக்காப்பியம் இயற்றப்பட்டிருக்கின்றது. கடைச்சங்க காலத்துப் புலவராகிய சீத்தலைச் சாத்தனாருடைய நண்பர் இளங்கோவடிகளாற் செய்யப்பட்ட இச் செய்யுள் கடைச்சங்கத்தின் இறுதிக் காலத்தைச் சார்ந்தது. கி. பி. இரண்டு அல்லது மூன்றாவது நூற்றாண்டில் இருந்த கயவாகு என்னும் அரசனுடைய செய்தி இக்காப்பியத்துள் வருதலின், இந்நூல் அக்காலத்தில் இயற்றப்பட்டதாகத் தெரிகின்றது. இந்நூலுக்கு அரும்பத உரையொன்றும் அடியார்க்குநல்லார் உரையொன்றும் உண்டு.

இஃது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் பரக்கக் கூறுவது. நாடகக் காப்பியமென்றும் வழங்குவது. இதன்கண் இக்காலத்தில் வழங்காத இலக்கணங்களையுடைய பலவகை இசைப்பாட்டுக்கள் இருக்கின்றன.

கதாநாயகனான கோவலன் மாதவியினால் மயங்கி இளமைக் காலத்தில் ஒரு பகுதியைக் கழித்துவிட்டு மனம் திரும்பித் தன் மனைவியாகிய கண்ணகியோடு மதுரை சென்று அங்கே திருட்டுக் குற்றம் சாட்டப்பெற்று

உயிர் இழக்கின்ருன். மேல்நாட்டார் கூறும் 'டிராஜடி' என்ற வகைக்கு இது சிறந்த உதாரணமாகும். கதாநாயகன் தன் நிகரில்லாத் தலைவனாக இருக்க வேண்டுமென்ற பிற்கால வரையறை இக் காப்பியத்துக்கு ஒவ்வாது.

சிலப்பதிகாரக் கதை பிற்காலத்தில் பலபடியாக வேறுபட்டு வழங்குவதாயிற்று. கோவலன் கோவிலனாகவும் கண்ணகி கர்ணகையாகவும் மாதவி மாதகியாகவும் மாசாத்துவான் மாச்சோட்டானாகவும் ஆயினர். கதையும் அங்கங்கே பல மாறுபாடுகளை அடைந்தது. கண்ணகி துர்க்கையின் அவதாரமென்று கதைக்கத் தொடங்கினர். 'கோவிலன் கதை' என்றுள்ள கிராமப் பாட்டினால் இவை தெரிகின்றன.

வைசியபுராணமென்னும் புத்தகத்தில் 32-ஆம் சருக்கமாகிய 'பஞ்சகாவியத் தலைவரில் மாசாத்து வாணிபன் சிலப்பதிகாரம் பெற்ற சருக்கம்' என்பதிற் காணப்படும் வரலாற்றிலும் இத்தகைய வேறுபாடுகள் உண்டு. அதன் அமைப்பை நோக்கும்போது அப் புராணம் இயற்றியவர், சிலப்பதிகாரத்தைப் படித்தவரல்லரென்பதும், கர்ணபரம்பரையாக வழங்கிய செய்திகளையே தம் நூலுக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு பாடியிருக்க வேண்டுமென்பதும் புலனாகும்.

## மணிமேகலை

பௌத்த சமயக் கொள்கையை விரித்துரைக்கும் இக் காப்பியம் சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடையது. சிலப்பதிகாரத்தையும் இதனையும் ஒன்ருகச் சேர்த்து ஒரு காப்பியம்போல வழங்குதலே முறை; 'இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின், இரண்டாகி நடந்த வென்க' என்று அடியார்க்கு நல்லார் கூறுதல் காண்க.

மணிமேகலைமட்டும் தனியே ஒரு பெருங் காப்பியமாதற்குரிய இலக்கணங்கள் நிரம்பியதன்று;[1] அறனும் வீடும் பயப்பச் செய்தது இக் காப்பியமாதலின் இதனைத் தனியே பெருங் காப்பியமெனல் பொருந்தாது.

கோவலனுக்கு மாதவியின்பாற் பிறந்த மணிமேகலை துறந்தபின் நிகழ்ந்தவற்றைக் கூறுவதாதலின் இது, "மணிமேகலை துறவு" எனவும் கூறப்படும்.

"மணிமே கலைதுற
வாறைம் பாட்டினுள் அறிய வைத்தனன் (பதிகம்)

என்பதைக் காண்க.

[1] S. K. Iyengar : Manimekhalai in its Historical Setting, p. 1.

இது, பதிகத்தையன்றி முப்பது பிரிவை உடையது; இந்நூலி லுள்ள அடிகளின் தொகை 4826. பௌத்தசமய சம்பந்தமான பல செய்திகளை இந்நூல் அறிவிக்கின்றது. மணிமேகலை பிக்குணியாகித் தவம் புரிந்த செய்திக்கு நிமித்தமாகிய வரலாறுகளைக் கூறுவதாதலின், பௌத்த சமயக் கொள்கைகளை அங்கங்கே அறிவுறுத்திச் செல்கின்றது.

இது, ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களாற் குறிப்புரையோடு செவ்வனே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந் நூலை இயற்றியவர் கடைச்சங்கப் புலவராதலாலும், சிலப்பதிகாரம் இயற்றப் பட்ட காலத்திலேயே இயற்றப்பட்டதாதலாலும் இதுவும் அச் சிலப்பதிகா ரத்தைப்போலவே இரண்டு அல்லது மூன்றாவது நூற்றாண்டுக்குரியதாகும்.

சங்ககாலத்தைச் சார்ந்த நூல்களில் இறுதியானது மணிமேகலை தான். அதன் நடையும் போக்கும் சங்ககாலத்துக்குரிய இனிமையையும் பொருட் சிறப்பையும் உடையதாகிச் செல்வதோடு, பிற்காலத்தில் மிக விரிந்துபட்ட சொல்லணிகள் சிலவற்றையும் அது கொண்டிருக்கிறது. மடக்கு, தொனி, சிலேடை முதலியவற்றைப் பிற்காலக் காப்பியங்களிற் பலவிடங்களிற் பார்க்கலாம். பழங்காப்பியங்களுக்குள்ளே முதன் முதலில் அத்தகைய அணிகளைப் புகுத்தியவர் சீத்தலைச்சாத்தனாரே யாவார்.

சங்ககாலத்துக்குப் பின் எழுந்த நூல்களில் சமய உணர்ச்சி அதிகமாக வெளியிடப்படுகின்றது. இதற்குத் தோற்றுவாய் மணிமேகலை என்றே சொல்லலாம். பௌத்தர்களைச் சிறப்பிப்பதும் ஏனையோர்களை இழிவாகத் தோற்றச்செய்வதுமாகிய அமைப்புக்களை மணிமேகலையிற் காணலாம். அந்த மனநிலை பிற்காலத்தில் அளவுக்குமேற் போயினமையால் கவியழகும் காவியரசனையும் போய்ச் சமயப் பிணக்கும், ஒருவரை ஒருவர் வைது பாடுவதும் அதிகமாகிவிட்டன. இவ்விதமான அழுக்குக்களிலே படாமல் தூய்மையோடு விளங்கும் காப்பியங்களும் இல்லாமற் போகவில்லை.

## பௌத்த காவியங்கள்

பௌத்தசமயக் காப்பியக்களிற் பழமையானது மணிமேகலை.

சங்ககாலத்தில் தமிழ்நாட்டிலே பௌத்தசமயத்தினரும் வாழ்ந்து வந்தனர். போதியாரென்பது ஒரு சங்கப்புலவர் பெயர். அவர் ஒரு பௌத்தராகவே தோற்றுகிறார். போதியென்பது பௌத்தர்கள் அரச மரத்தைக் குறிக்கும் பெயர். பௌத்த சமயத்தைச் சார்ந்த புலவர்கள் இருக்கும்போது பௌத்தசமய நூல்கள் உண்டாவதற்குத் தடையென்ன?

விம்பசாரகதை, குண்டலகேசி என்னும் இரண்டு நூல்கள் பௌத்தசமயத்தைச் சார்ந்த காப்பியங்களென்பது இப்பொழுது தெரிய வருகின்றது.

## விம்பசார கதை

விம்பசாரன் என்பவனுடைய வரலாற்றைக் கூறும் காப்பியமாக இதைக் கருதல் ஆகும். விம்பசாரனென்பவன் மகததேசத்து மன்னவனாக இருந்தவன்; புத்தருடைய உபதேசம் பெற்றுப் பௌத்தனானவன். இக் காப்பியத்திலிருந்து ஒரு பகுதி நீலகேசி உரையில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றது.

"உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யாருமல்
ஆன்றோ னவ்வழித் தோன்றின னுதலின்
ஈன்றோ ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்"[1]

என்பது அப்பகுதி. அதன்கீழ் உரையாசிரியர் 'என்பது பிம்பிசாரகதையென்னும் காவ்யம். பௌத்தருடையது' என்று குறித்துள்ளார்.

இங்கே கூறப்பட்டுள்ள பகுதியில் புத்தர் பிறந்த ஏழாம்நாள் அவருடைய தாய் இறந்தாளென்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது. இதைக் கொண்டு, புத்தருடைய வரலாறும் இக்காப்பியத்தின்கண் விரவி அமைந்திருந்ததென்று கொள்ளவும் இடமுண்டு. மேற்காட்டிய பகுதி ஆசிரிய அடிகளால் அமைந்தது. அதுகொண்டு ஏனைய பகுதிகளும் ஆசிரியப்பாக்களால் ஆனவை என்று கொள்ளுதலில் தவறொன்றும் இல்லை. உதயணன் கதை, கலியாணன் கதை யென்னும் கதைகள் இரண்டும் அத்தகையனவேயாதல் அறிதற்குரியது.

## குண்டலகேசி

பௌத்தசமயக் காப்பியங்களுள் ஒன்றாகிய குண்டலகேசி விருத்தயாப்பால் ஆனது. இதற்குக் குண்டலகேசி விருத்தமென்றே ஒரு பெயர் உண்டென்று தெரியவருகின்றது. இதன் யாப்பு முறையால் இது சங்ககாலத்துக்குப் பிற்பட்டதென்பது போதரும். இது வாத நூல்களில் ஒன்றாக யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் எண்ணப்படுகின்றது; 'தருக்கமாவன ஏகாந்தமும் அநேகாந்தமும் என்பன; அவை குண்டல நீல பிங்கல அஞ்சன கால தரிசன தத்துவ கேசிகளினும் சாங்கிய முதலிய ஆறு தரிசனங்களினும் கண்டுகொள்க.'[2]

அன்றியும், நீலகேசியில் குண்டலகேசிச் செய்யுட்களிலுள்ள கருத்துக்கள் பல மறுக்கப்பட்டிருக்கின்றன. இன்ன செய்யுளை அநுவதித்தவாறென்று நீலகேசியுரையிற் கண்ட பல செய்யுட்களின் முதற் குறிப்புக்கள் குண்டலகேசிச் செய்யுட்களைக் குறிக்கின்றனவென்பதில் ஐயமில்லை.

---

[1] நீலகேசி, ப. 71.  [2] யா. வி. ப. 540.

நீலகேசி உரையில், குண்டலகேசியின் வரலாறு பின் வருமாறு கூறப்படுகின்றது :—

“குண்டலகேசி யென்பாள் ஒரு வைசிய கன்னிகை; இவள் ஒரு நாள் பிராஸாதஸ்தலத்து விளையாடுகின்றுளாக, ஒரு கிதவைசியபுத்ரன் காளன் என்பான், இவன் புத்த தரிசனங்கொண்டு பல்வழியுஞ் சோர விருத்தி பண்ணிச் செல்வானை அரசன் வதிக்கவென்று ஏவச் சிறைப்பட்டுப் போகின்றானை முன் சொன்ன குண்டலகேசி கண்டு காம பரவசையாக, அதனை அறிந்து அவளுடைய பிதா ராஜாவைக் கண்டு யாதானும் ஒருபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசி யென்னும் கன்னிகையினை விவாக விதியாற் கொடுத்து இனிது செல்கின்ற காலத்து, ஒருநாள் பிரணயகலகத்து நர்மோக்தி முகத்தால், நீ கள்வனன்றே யென்று குண்டலகேசி சொல்லக் காளனும் தன் உள்ளத்தே சினங்கொண்டு, பின்பு ஒருநாள் வித்தியாஸாதன வியாஜத்தால், இவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத்தேறி, ‘நீ என்னை இவ்வாறு சொல்லுதலில் யான் உன்னைக் கொல்லத் துணிந்தேன்’ என்ன, குண்டலகேசியும், ‘தற்கொல்லியை முற்கொல்லியவென்பவன்றே! இவனை யான் கொல்வேன்’ என நினைந்து, ‘யான் சாகின்றேனாகில் உம்மை வலங்கொண்டு சாவல்’ என, அதற்கு இயைந்த காளனை வலங்கொள்கின்றாள் வரையினின்றும் வீழ நூக்கினாள். நூக்கக் காளனும் புத்தஸ்மரணத்தினால் மோக்ஷித்தான். குண்டலகேசியும் பர்த்ருவிரஹ துக்கிதையாகித் துறப்பனென நினைந்து பரஸமயங்களெல்லாம் நாவல் நட்டு ஜயித்துப் பௌத்த தரிசனங் கொண்டு முக்தி பெற்றனள்.’[1]

இதனால் குண்டலகேசி என்பது ஒரு பௌத்தசமய நூலென்றும், அதனை மறுக்கவே நீலகேசி எழுந்ததென்றும் விளங்குகின்றது.

நீலகேசியிற் கண்ட செய்திகளால் குண்டலகேசி நாதகுத்தனாரென்னும் ஒருவரோடு வாதம் புரிந்தாளென்பது தெரியவருகின்றது.

புறத்திரட்டில் குண்டலகேசியிலிருந்து பல செய்யுட்கள் வந்துள்ளன.

“முன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமொழிந் தான்ற னக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்
அன்றே யிறைவ னவன்றாள்சர ணங்க ளன்றே”[2]

என்பது இதன் கடவுள் வாழ்த்துச் செய்யுளென்று தெரிகின்றது.

இக் காப்பியத்தின் உள்ளுறை ஒருவாறு நீலகேசி யுரையிற் சொல்லப்பட்டது. குண்டலகேசி யென்னும் ஒருத்தி பௌத்த சங்கத்தில் பிக்ஷுணியாகி இருந்தாளென்பது தேரிகாதை யென்னும் நூலால் தெரிய

1 மொக்கலவாதச். 20. 2 யா. வி. ப. 488.

வருகின்றது. அங்கே அவளுடைய வரலாறு சொல்லப்படுகின்றது.[1] அவ்வரலாறும் நீலகேசியிற் கண்ட வரலாறும் பெரும்பாலும் ஒன்றியிருக்கின்றன. ஆயினும், அதனால் வேறு சில புதிய செய்திகளும் அறியப்படுகின்றன. குண்டலகேசி தன் கணவனைக் கொன்றபின்பு, பல மதவாதிகளையும் ஜயித்துப் புத்தசமயத்துட் புக்காளென்பது நீலகேசியிற் கூறப்பட்டது. தேரிகாதையில் உள்ள வரலாறு சிறிது விரிவாக அமைந்தது :—

'கணவனைக் கொன்ற பத்திரை[2] தன் வீடு சென்றாளிலள். நிக்கந்தவாதிகள் கூட்டத்துப் புக்காள். அவர்கள் அவள் மயிரைக் களையச் செய்து, தம் குழுவினுட் சேர்த்துக்கொண்டனர். அவளுக்கு மீண்டும் கூந்தல் வளர்ந்தபோது அது சுருள் சுருளாக அமைந்தது. அதனால் அவளை யாவரும் குண்டலகேசி யென்று அழைக்கத் தொடங்கினர். நிக்கந்தவாதிகளின் கொள்கை முற்றும் அறிந்த பின்னர், அதனால் மனவமைதி பெறாது பல சமயவாதிகளிடத்தும் சென்று வினாவி வாதம் புரிந்து இறுதியாகச் சிராவஸ்தி நகரத்துக்கு வந்தாள். அந்நகரத்து அருகில் இருந்த ஜேதவன விகாரத்தில் புத்தர் இருந்தார். அவருடைய சிஷ்யனாகிய சாரீபுத்தனென்பன் குண்டலகேசியோடு வாதம் புரிந்து வென்று அவளுக்குப் புத்த தர்மம் உபதேசித்தான்.'

புத்தர்களுடைய நூல்களுள் ஒன்றாகிய தம்மபதத்திலும் குண்டலகேசியின் வரலாறு சொல்லப்பட்டது. அது கூறப்படும் பகுதிக்குக் குண்டலகேசித் தேரிபத்து என்று பெயர்.[3] அங்கே குண்டலகேசி நிக்கந்தவாதியாக இருந்த செய்தி சொல்லப்படவில்லை.

தமிழ்க் குண்டலகேசி மேலே கூறிய தேரிகாதையிற் கண்ட வரலாற்றையே ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பெற்றதென்பதில் ஐயமில்லை. நாதகுத்தனாரென்பவர் நிக்கந்தவாதியாக இருந்தாரென்றும், அவரோடு குண்டலகேசி வாதித்து அவரையும் புத்தவாதியாக்கினளென்றும் நீலகேசியுரையிற் கண்ட குறிப்புக்களால் ஊகிக்கவேண்டியிருக்கின்றது.

குண்டலகேசியின் வரலாறு இங்ஙனமாகவும், இதனைச் சிறிதேனும் அறியாமல் வைசிய புராணம் பாடிய புலவர் அப் புராணத்தில் 34-ஆம் சருக்கமாகிய 'பஞ்சகாவியத் தலைவரில் காவேரி குண்டலகேசி பெற்ற சருக்கம்' என்பதில் குண்டலகேசியின் தொடர்பில்லாமலே ஒரு கதையை அமைத்திருக்கின்றார். அதன் சுருக்கம் வருமாறு :—

சோழ அரசனும் வக்குவ மகரிஷி மரபில் உதித்த காவேரியென்னும் வைசியனும் நெருங்கிய நட்புப் பூண்டு வாழ்ந்துவந்தனர். அவ்விரு

1 Neelakesi, Ed. by Prof. A. Chakravarti, M. A., I. E. S. p. 75.

2 இது குண்டலகேசியின் இயற் பெயர்.

3 The Commentary on the Dhammapada, Vol II, p. 217. (Pali Text Society)

வரும் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சிபெற்றனர். அக்காலத்தில் மதுரையை ஆண்டிருந்த பாண்டிய அரசனும் அங்ஙனமே கலைகள் யாவற்றிலும் சிறந்து விளங்கினான். செண்டாடலில் அவன் இணையற்ற திறமையை அடைந்து அதற்குரிய அடையாளமாகக் கொடியொன்றையும் வைத்துக்கொண்டான். பிறகு சோழனுக்குத் தூது அனுப்பித் தன்னோடு போர் புரிவதற்கு அறை கூவினான். சோழன் தன் நண்பனாகிய காவேரியைப் படைகளுடன் பாண்டியன்பால் அனுப்பினான். காவேரிக்கும் பாண்டியனுக்கும் செண்டாடற்போர் நடைபெற்றது. அதிற் காவேரி வென்றான். பாண்டியன் தோற்ற பொருள்களை அவன் கைக்கொண்டு மீளுகையில் இடைவழியில் பாண்டியனுடைய படைத்தலைவனாகிய கொல்லத் தாயனென்பவன் மறித்துப் போர் புரிந்தான். காவேரி யென்னும் வைசியன் அவனை எதிர்த்து அவன் தலையைத் துணித்து அதனைக் கொண்டு தன் ஊர் நோக்கிச் செல்லலானான். அப்பொழுது கொல்லத் தாயனுடைய மனைவி பெருந்துயருற்று அங்கே வந்து தன் கணவன் தலையை இரந்தாள். காவேரி என்பவன் சோழ அரசன் முன் சென்று நடந்தவற்றைக் கூறினான். பின் அரசனது ஏவலால் கொல்லத் தாயனது தலை அவன் மனைவிக்கு அளிக்கப்பட்டது.

இந்தக் கதைக்கும் குண்டலகேசிக்கும் எள்ளளவேனும் இயைபில்லையென்பது சொல்லாமலே விளங்கும். குண்டலகேசியைப்பற்றிய செய்தியோ, அவள் பெயரோ இக் கதையில் எங்கும் காணப்படவில்லை. இவ்வாசிரியர்,

"சீராளு மன்னர் பின்னர்
செய்யமூன் றுங்கு டிக்குப்
பேராளுந் தலைவ ரானோர்
பெருமையங் காவி யத்தின்
நேரார்குண் டலகே சிப்பேர்
நெடுநூலின் சீரு ரைத்தாம்"

என்று கூறித் திருப்தி அடைகின்றார்.

## ஜைனசமயக் காப்பியங்கள்

பௌத்த சமயக் காப்பியங்களிற் சிலவற்றின் பெயர்களே இப்பொழுது தெரிகின்றன. ஆனால் ஜைன சமயத்தார் இயற்றிய காப்பியங்கள் பலவற்றின் பெயர்கள் இப்பொழுது காணக்கிடைக்கின்றன. சிலப்பதிகாரம் ஜைன சமயச் சார்பு உடையது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, சூளாமணி, சாந்தி புராணம், நீலகேசி, மேருமந்தர புராணம், யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம் முதலியன ஜைன சமயக் கொள்கைகளை அறிவுறுத்தும் காப்பியங்களேயாகும். இவற்றுட் சிலவே பெருங்காப்பிய மென்னும் வரிசையிற் சேரும் தகுதி வாய்ந்தவை.

## பெருங்கதை

சங்ககாலத்திற்குப்பின் உண்டான பழைய காப்பியங்களுள் ஒன்று பெருங்கதை. அது நடை யமைப்பினாலும் பொருட் சிறப்பினாலும் காப்பியங்களுள் தலைமையுடையதாகக் கருதத் தகுவது. சங்க காலத்தைச் சார்ந்து எழுந்த சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் பிறகு இயற்றப் பட்டவற்றுட் சிந்தாமணிக்கும் முற்பட்டது இந்நூல் என்று தோற்றுகின்றது. இந் நூலுக்கு முதல் நூலாகக் கருதப்படும் வடமொழிப் பிருகத் கதையை இயற்றிய கங்க அரசனாகிய துர்விநீதனென்பவன் ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவன். சிந்தாமணி 9-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. தமிழ்ப் பெருங்கதை இம் மூன்று நூற்றாண்டுகளுக்கு மிடையே இயற்றப்பட்டிருத்தல் கூடும்.

தமிழ்நாட்டிற் பெருங்கதைச் செய்திகள் முன்பே வழங்கிவந்தன; மணிமேகலையில்,

"கோடிக்கோ சம்பிக் கோமக னாகிய
வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
வஞ்சஞ் செய்துழி வன்றளை வீடிய
உஞ்சையிற் றோன்றிய யூகி யந்தணன்
உருவுக் கொவ்வா வுறுநோய் கண்டு
பரிவுறு மாக்களின்"

என்று வந்துள்ள செய்தியைக் காண்க.

வச்சத் தொள்ளாயிரம் என்ற தமிழ் நூலொன்று இருந்தது. அதற்கும் உதயணனைப்பற்றிய வரலாற்றுக்கும் எவ்வகைத் தொடர்பு உண்டென்று வரையறுத்தற்குரிய கருவிகள் இப்போது இல்லை.

## சிந்தாமணி

இந்நூல், சீவகசிந்தாமணி யென்றும் வழங்கும். இதனை இயற்றியவர் ஜைன சமயத் துறவியாகிய திருத்தக்கதேவர் என்பவர். இது, தன்னுடைய சிறப்பினால் சிந்தாமணியென்னும் பெயர்பெற்றதென்று நன்னூல் உரையாசிரியராகிய சங்கர நமச்சிவாயர் புலப்படுத்துவர். அடியார்க்கு நல்லார் இதனை முடிபொருட் டொடர்நிலை என்பர். இதற்கு மிகச் சிறந்த உரையொன்று நச்சினார்க்கினியரால் எழுதப்பட்டுள்ளது. நூலும் உரையும் அமைந்த உயர்வுக்கேற்ப இதன் பதிப்பும் மிகச் செவ்விய நிலையில் வெளி வந்து தமிழர்களுக்கு இன்பத்தை ஊட்டுகின்றது. அப் பதிப்பாசிரியர் பிரும்மஸ்ரீ மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களென்பது யாவருக்கும் தெரியும்.

கம்பர் தாம் பாடிய இராமாயணத்தில் இப் பேரிலக்கியத்திற் கண்ட சில முறைகளைப் பெய்துகொண்டனர் என்று ஒரு வரலாறு இருப்பதாக ஸ்ரீமத் ஐயரவர்கள் அந்நூற்பதிப்பின் முகவுரையிற் குறித்திருக்கிறார்கள்.

இராமாயணம், பாரதம் முதலிய இதிஹாசங்களிலுள்ள வரலாறுகள் நம்முடைய நாட்டில் அடிப்பட்டு வழங்கி வருவதால் இலக்கியங்களில் அவை பலபடியாக எடுத்து வழங்கப்படுகின்றன. அப்படியே சீவகன் வரலாறுகளிற் பல தமிழ் நூல்களில் எடுத்து ஆளப்படுகின்றன. இதற்குக் காரணம் சிந்தாமணியாகிய இக் காப்பியம் தமிழ் நாட்டில் நன்கு பயிலப்பட்டதேயாகும்.

இந்நூல் இயற்றப்பட்ட காலம் 9-ஆம் நூற்றாண்டென்று கூறுவர்.

## வளையாபதி

இதிலிருந்து பல செய்யுட்கள் புறத்திரட்டில் வந்துள்ளன. யாப்பருங்கல விருத்தியுரை, தக்கயாகப்பரணியுரை என்பவற்றிலும் வளையாபதி மேற்கோளாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. இந்நூற் செய்யுட்களிலிருந்து இது ஜைனமதச் சார்புடையதென்பது தெரியவருகின்றது. வைசிய புராணத்தில் 35-ஆம் சருக்கத்தின் பெயர், 'பஞ்சகாவியத் தலைவரில் வைரவாணிபன் வளையாபதி பெற்ற சருக்கம்' என்பது. அது 49 விருத்தங்களால் ஆகியது. அதில் உள்ள கதை வருமாறு:—

திசை முற்றும் புகழைக் கொண்ட ஈகையை உடையவனும், சிவபிரானது பஞ்சாட்சரத்தை உருவேற்றும் நாவையுடையவனும், பாண்டியனை வென்றவனும், வக்குவ மகரிஷி கோத்திரத்தில் உதித்தவனும், வைரவாணிகனும், தேவேந்திரனைக் காட்டிலும் மிக்க வாழ்வுள்ளவனும், விற்பிடி மாணிக்கத்தினாலே விளங்கிய மேன்மையை உடையவனும், நற்குணமுடையவனும் ஆகிய நவகோடி நாராயணனென்னும் வைசியன் ஒருவன் சொற்புலவோர் மிகத் துதிக்க வாழ்ந்துவந்தான்.

இருமரபுந் தூயவனாகிய அவ் வைசியன் தன் குலத்தில் ஒரு பெண்ணை மணந்து, அன்னியகுலத்திலும் தான் விரும்பிய பெண் ஒருத்தியை மணந்து அவ்விருவரோடும் இன்புற்று வாழ்ந்துவந்தான். வேறு குலத்துப் பெண்ணை மணந்ததனால், வைசியரனைவரும் அவன்பாற் சினங்கொண்டனர். "நம் குல மாதினோடு நயந்து வாழ்ந்திருப்பதன்றி அன்னியகுலப் பெண்ணையும் சார்ந்து இவன் இருப்பானாயின், இவன் எங்களோடு உறவு செய்யும் தகுதியில்லான்" என்று அவர்கள் கூறினர். அதனால் வணிகன் அஞ்சி அழகிய அப் பெண்ணை விலக்கிவிட்டான். அவ்வாறு விலக்கிவிட்ட பிறகு, அந்த வணிகன் மேற்கடலிலே கப்பலேறி அன்னிய தேசம் சென்றான்.

அப்பொழுது அப் பெண் தன் வயிற்றினிற் கருப்பத்தோடும் மனங்கலங்கிக் காளிகோயிலொன்றைச் சார்ந்து அங்குள்ள காளியைத் துதித்துப் பின்னர், "என்னை என் கொழுநன் கைக்கொண்டு வாழும்படி கருணை புரியவேண்டும்" என்று வேண்டினுள்.

அப்பொழுது காளி எதிரே தோன்றி, "நீ மனங் கலங்காதே. எப்போதும் என்னுடைய கோயிலின் எல்லையிலே நீ வாழ்ந்துகொண்டிரு" என்று சொல்லி மறைந்தனள். அப் பெண் துயரம் தீர்ந்து அக்கோயிலுக்கு அருகில் வாழ்ந்து வருகையில், கருப்ப முதிர்ந்து ஓர் அழகிய குமரனைப் பெற்றுள். அம் மைந்தன் காளியின் அருள்பெற்றுச் சிறப்புடன் வளர்ந்துவந்தான். அவனுடைய தாய் அவனைப் பாதுகாத்து ஐந்து பிராயம் புக்கவுடன் பள்ளிக்கூடத்தில் வைத்தாள்.

அவன் இவ்வாறு வளரும் நாளில் புறநாட்டிற்கு வியாபார நிமித்தம் சென்றிருந்த வைர வாணிகன் பெருஞ் செல்வத்தோடு வந்து தன் முதல் மனைவியோடு இன்புற்று வாழ்வானுனன்.

ஒரு நாள் காளியருளால் வளர்ந்த பிள்ளை தோழரோடு கூடிக்கொண்டு வணிகத் தெருவிற் போய்ப் பந்து முதலிய விளையாட்டைச் செய்து வரும்போது அங்கே ஒரு பையல் அவனைக் கண்டு, "உன் தந்தையை நீ அறியாய்" என்று உரைத்தான். அப்போது அக் குமரன் மிக வெருண்டு பெருந் துயரங்கொண்டு தன் மனை புக்குத் தாயிடம் அப் பையல் கூறியதை மொழிந்து, "எனக்கு என் தந்தை யாரென்பதை விளங்கச் செய்யாவிடின் என் உயிரை விடுவேன்" என்றுன். அதுகேட்ட தாய் அவனுக்கு உண்மை கூறி, "என்னை நற்குலப் பெண் அல்லளென்று உன் தந்தை தள்ளிவிடினும் காளிதேவி அருள்புரிந்தமையின் நன்மை உண்டாகுமென்று நம்பி வாழ்கின்றேன்" என்றுள்.

இவற்றைக் கேட்ட அவ்விளங் குமரன் தன்னுடைய தாயினுல் தன் தந்தை காவிரிப்பூம் பட்டினத்தில் வாழும் வணிகனென்பதை அறிந்து அவள் கூறிய அடையாளங்களையும் தெரிந்துகொண்டு புகார்நகரம் புகுந்தான். புகுந்து, தன் தந்தையின் கடைக்குமுன் சென்று அவனை நோக்கி, "நான் உம்முடைய முதற்குமாரன்" என்று சொன்னுன்.

வைர வாணிகன் அந்தச் சொல்லைக் கேட்டு அதட்டிப் பார்த்து, "எங்ஙனம் இவ்வுறவு வந்தது? சொல்" என்றுன். அம் மைந்தன் தாயினுல் அறிந்த செய்திகளைக் கூறினன். அது கேட்ட வாணிகன் 'இழிகுலப் பெண்ணைக் கொண்டதுண்டேனும் அவள்பாற் கருப்பம் உண்டாயதை அறிந்தோமில்லையே!' என்று மனங்கலங்கிச் சேவகர்களை அழைத்து அச் சிறு குமரனைத் துரத்தத் தொடங்கினுன். வணிக குலத்தினர் பலரிடம், "இவன் யாரோ? இங்கே வந்து அழிவழக்குப் பேசுகின்றுன்" என்றுன்.

இவற்றையெல்லாம் கண்ட குமரன், "யான் உம்முடைய பிள்ளையென்பதற்குக் காளிதேவியே சாக்ஷி கூறுவாள்" என்று சொல்ல, வைசியர்கள், "அங்ஙனம் தக்க சாக்ஷி இருக்குமேல் இவ் வழக்கு ஆராய்தற்குரியது. நீ போய் உன் சாக்ஷியை அழைத்து வா" என்றனர்.

இளங்குமரன் தாயின்பால் வந்து நிகழ்ந்தவற்றைக் கூற, அவள் தன் தனயனை அழைத்துச் சென்று காளிகோயில் புக்கு வணங்கினாள். காளி, "நீங்கள் அங்கே சென்று என்னை நினைத்தபொழுது அங்கே வந்து நிற்பேன்; உம்முடைய தூய்மையை நிலைநிறுத்தி உமக்குரிய வாழ்வையும் பெறச் செய்வேன்" என்று அருள் செய்தாள்.

தாயும் தனயனும் உடனே வணிகர் சபையின்கண் வந்தனர். தாய், "என்பால் பிழையேற்றுதல் நியாயமன்று; இவ்வணிகர்பிரான் என்னை நீத்தபொழுதே என் வயிற்றில் இக்குமரன் கருவில் இருந்தான். இந்த உண்மையைக் காளிதேவி அறிவாள்" என்று சொன்னாள். "இதனைக் காளியே வந்து சொன்னால் நாங்கள் உடம்படுவோம்" என வணிகர் உரைத்தனர். அப்பொழுது காளி வானத்தில் எழுந்துவந்து, "இவ்விருவரும் வைரவாணிகனாகிய உனக்கு உரியவர்களே" என்று அருளிச் செய்தாள்.

வணிகர் வியந்தனர். வைரவாணிகன் தன் குமரனையும் மனைவியையும் ஏற்றுக்கொண்டான்; குமரனுக்குரிய பொருட் பகுதியைக் கொடுத்து வியாபாரம் செய்யச் சொன்னான்.

இங்ஙனம் 'கார்வணிகன் தெளிசேர் புகழ் செய்த திறங்களினால்' வளையாபதி யொன்று வகுத்தனர்.

வைசியபுராணத்திலுள்ள வரலாறு இங்ஙனம் முடிகின்றது. குண்டலகேசி முதலிய கதைகளைப்போலவே இவ்வரலாறும் வளையாபதியென்னும் காப்பியத்தின் தொடர்பு எள்ளளவேனும் இல்லாமலே அமைந்ததென்று கொள்ளுதலே தகுதியாகும். வளையாபதியின் வரலாற்றிற் காவிரிப்பூம் பட்டினத்தின் சம்பந்தம் இருத்தல் கூடும்.

## சூளாமணி

ஜைன காப்பியங்களில் விருத்தயாப்பில் அமைந்த நூல்களுள் நல்ல நடை அமைந்தது சூளாமணியாகும். இதனை இயற்றிவர் தோலாமொழித் தேவரென்பவர். அருங்கலான்வயமென்னும் கொத்தைச் சேர்ந்த நூல் இஃதென்றும் 9-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றதென்றும் சில அறிஞர்கள் கூறுவர். இது சிந்தாமணிக்குப் பின்னர் இயற்றப்பெற்றதாதல் வேண்டும். சிந்தாமணிச் செய்யுள் நடைக்கும் இந்நூற் செய்யுள் நடைக்கும் உள்ள வேறுபாடு இக்கருத்தை உண்டாக்குகின்றது. சிந்தாமணியின்

விருத்தயாப்பு இடையிடையே தடைபட்டுச் செல்கின்றது. சூளாமணியோ செப்பமுற்ற நடையோடு விளங்குகின்றது. இது பெருங்காப்பியத்துக்குரிய இலக்கணங்கள் அமைந்தது.

## பிற காப்பியங்கள்

நீலகேசி யென்பது குண்டலகேசிக்கு எதிராக எழுந்த நூல். இதனை இயற்றியவர் பெயர் அறியப்படவில்லை. இதற்குச் சமயதிவாகர வாமன முனிவரென்பவரால் இயற்றப்பெற்ற உரையொன்றுண்டு. இதற்கு நீலகேசித்திரட்டு, நீலகேசித்தெருட்டு என்னும் வேறு பெயர்களும் வழங்கும். இந்நீலகேசியோடு ஒரு நிகரானவாக யாப்பருங்கல விருத்தியாசிரியராற் சொல்லப்படும் பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி என்பனவும் நீலகேசியைப்போலவே ஒரு கதையாக அமைந்து சமயக் கொள்கைகளை அறிவுறுத்துவனவென்று கொள்ள இடமுண்டு; பிங்கலகேசியென்பவளின் தோற்றமும் தொழிலும் பிங்கலகேசி யென்னும் தொடர்நிலைச் செய்யுளிற் சொல்லப்பட்டன.[1]

அமிர்தபதி என்பது ஒரு நூற்பெயர். இதன் முதற் பாட்டு, சிந்தாமணியைப்போல வண்ணத்தால் வந்ததென்று தெரிகின்றது. அச் செய்யுளின் முதலடி,

"குற்றங்கண் மூன்று மிலனுய்க்குணங் கட்கிடனுய்"

என்பது. இதன்பொருளால் இது பெரும்பாலும் ஜைனகாவியமென்றே கருத நேர்கின்றது.

சாந்திபுராண மென்பது புறத்திரட்டினுல் தெரியவரும் நூல். அப்புராணத்திலிருந்து சில செய்யுட்கள் அத்தொகைநூலுட் கோக்கப்பட்டுள்ளன.

மேருமந்தரபுராணம் என்பது வாமனுசாரியரென்பவரால் இயற்றப்பெற்றது. யசோதரகாவியம் யசோதரன் என்பவனைப்பற்றிக் கூறுவது; உயிர்க் கொலையால் நேரும் பாவங்களை உரைப்பது. உதயண குமாரகாவிய மென்பது நடைச்சிறப்பில்லாத நூல். இம் மூன்றும் அச்சிடப்பட்டுள்ளன. நாககுமாரகாவியம் என்பது இன்னும் அச்சிடப்படவில்லை.

புறத்திரட்டால்மாத்திரம் தெரியவரும் தொடர்நிலைச் செய்யுள் நாரத சரிதை என்பது. அது நாரதனுடைய வரலாற்றைக் கூறும் புராண நூலோ வேறு யாதோ தெரியவில்லை.

---

[1] யா. வி. ப. 40.

## இதிஹாச புராணங்கள்

பௌத்த ஜைனசமயங்களில் உள்ள பழைய வரலாறுகள் தமிழ்க் காப்பியங்களாகப் புலவர் பெருமக்களால் அமைக்கப்பட்டது போலவே, நாளடைவில் இதிஹாச புராணங்களும் சைவ வைணவசமயப் பற்றுடைய கவிஞர்களால் தமிழில் செய்யுள் உருவத்தில் ஆக்கப்பட்டன. பெரிய இதிஹாசங்களாகிய இராமாயணமும், பாரதமும் சங்ககாலத்திலே வழங்கினவெனினும் நாளடைவில் அவை வழக்கொழிந்தன; அன்றித் தம் தம் கருத்துக்களுக்கு ஏற்ப அவற்றைப் பாடவேண்டுமென்னும் அவாவினால் கவிஞர்கள் புதிய இராமாயண பாரதங்களை இயற்றினர்போலும்.

மகாபுராணங்களிற் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. தல புராணங்கள் பல மொழிபெயர்க்கப்பட்டன. அத்தலபுராணங்களைக் கணக்கெடுப்பதாயின் அது மிக விரியும்.

## பாரத வெண்பா

ஒன்பதாம் நூற்றாண்டில் பெருந்தேவனார் என்னும் ஒருவரால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகப் பாரதவெண்பா வென்னும் நூல் இயற்றப்பட்டது. சங்ககாலத்திருந்த பாரதம் இயற்றிய புலவருடைய பெயரையே இந்நூலாசிரியர் உடையவராயினும் அந் நூற் செய்யுட்களுக்கும் இந்நூற் பாடல்களுக்கும் பலவகையில் வேற்றுமை உண்டு. வெண்பா, ஆசிரியம் என்னும் இருவகைப் பாவும் இதன்கண் உள்ளன. இடையிடையே உள்ள உரைப்பகுதிகள் வடமொழிச் சொற்கள் மிகுதியாக விரவப்பெற்று அமைந்துள்ளன. செய்யுட்களும் இழுமென நடைபெறலின்றியும் பொருட் செறிவின்றியும் உள்ளன. இப்பாரத வெண்பா தெள்ளாறெறிந்த நந்திவர்மன்காலத்துச் செய்யப்பெற்றது. அவன் கி. பி. 830 முதல் 854 வரையில் ஆண்டவன்.[1] எனவே இந்நூலும் அக்காலத்தே இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பே சங்ககாலத்து இயற்றப்பெற்ற பாரதம் வழக்கு வீழ்ந்தது போலும்.

## அருணிலை விசாகர் பாரதம்

பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருணிலை விசாகர் என்பவர் பாரதத்தைத் தமிழ்ப்படுத்தினரென்ற செய்தி சாஸனமூலமாக அறியப்படுகின்றது. அருணிலை விசாகரென்பவர் தொண்டைநாட்டில் சென்னைக்கு அருகிலுள்ள அரும்பாக்கமென்னும் ஊரினர். அவரை, 'அருணிலை விசாகன் திரைலோக்கியமல்லன் வத்ஸராஜன்' என்று சாஸனம் கூறும்.[2]

---

1 சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 24.
2 ஷை ப. 90.

## வில்லிபுத்தூரார் பாரதம்

14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த வில்லிபுத்தூரா ரென்னும் புலவர் வடமொழியில் அகஸ்தியபட்டர் என்பார் செய்த பாரதத்தை மொழிபெயர்த்தும் சில இடங்களிற் பெருக்கியும் ஒரு பாரதத்தை அமைத்தார். வில்லிபாரதம் என்று தமிழ் நாட்டில் பெரு வழக்காக வழங்குவது இப்பாரதமேயாகும். இதன் செய்யுள் நடை வடமொழிக் கலப்புடையது. அரிய சந்தங்கள் பலவற்றை இவர் ஆள்வர். அருணகிரிநாதர் முதலியோர் சந்தங்கள் பலவற்றைப் பாடியுள் ளனர் எனினும், அவர்களுடைய செய்யுட்களில் பாட்டின் சந்தத்துக் கேற்பப் பொருள் அமைக்கப்படுகின்றது. அங்கே பொருள் சந்தத்தைப் பின்பற்றுகிறது. பாரதத்திலோ ஒரு கதையைத் தொடர்புபடுத்திக் கூற வேண்டிய வரையறை அமைந்துவிட்டமையின் அப்பொருளைச் சந்தம் பின்பற்றவேண்டும். அங்ஙனம் பாடுவதே அருமையாகும்.

## பிற பாரதங்கள்

வில்லிபுத்தூரர் பாரதக் கதையைச் சுருக்கமாகப் பாடியிருக் கின்றார். பல கிளைக்கதைகளையும் பாரதத்தின் இறுதிப் பகுதியையும் அவர் பாடவில்லை. ஆதலின் பிற்காலத்தில் நல்லாப்பிள்ளை யென்பவர் வில்லிபாரதத் தையே விரித்துப் பாடினார். அரங்கநாதக் கவிராயர் என்பவர் பாரதத்தின் பிற்பகுதிகளை விரிவாக அமைத்தனர்.

மாவிந்த மென்னும் பெயரால் பாரதக் கதையைக் கூறும் நூல் ஒன்று இருக்கின்றது. அது, சிறந்த கவிச்சுவையை உடையதன்று என்று கூறுவர்.

பழைய காஞ்சிப்புராண ஆசிரியர் ஒரு பாரதத்தை இயற்றியுள் ளாரென்று அப்புராணச் சிறப்புப்பாயிரம் தெரிவிக்கின்றது. அந்நூல் இப் பொழுது கிடைக்கவில்லை. ஆதிபருவத்து ஆதிபருவம் என்பதொரு நூல். அது வியாசபாரதத்தின் முற்பகுதியைக் கூறுவது.

## இராமாயணங்கள்

ஜைனர்களுடைய இராமாயணம் ஒன்று தமிழில் இருந்தது. அதிலுள்ள சில செய்யுட்கள்மாத்திரம் இப்பொழுது கிடைக்கின்றன.

அதன் பின்னர் நெடுநாட்களாக இராமாயணம் இயற்றப்பெற வில்லை. பின்னர், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கற்றோர் இதயங் களிக்க இராமாவதாரமென்னும் பெயரையுடைய இராமாயணத்தைப் பாடினார்.

முற்காலக் காப்பியங்கள் பலவற்றையும் தமிழுலகம் மறக்கச் செய்து தன்னிடத்திலே தமிழருள்ளத்தைத் தேக்கிவைத்த பெரும்புகழ் கம்பராயணத்துக்கு உரியதாகும். இப்பொழுதுள்ள காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி யென்னும் நூல்களுக்குப் பழமையினால் ஒரு மதிப்புண்டு. நாளடைவில் தமிழிலக்கியத்திற் பெருகிவந்த காப்பிய நடையும் கவினும் ஒருங்கே திரண்டு கம்பராமாயணத்திற் குடிகொண்டிருக்கின்றன. கம்பராமாயணகாலம் வரையிலுள்ள நூல்களை ஆராயின் காப்பியத்தின் அமைப்புச் சிறிது சிறிதாக வேறுபட்டுச் சுவை செழுமி வளர்ந்ததென்பது தெரியவரும். பண்டைக்காலத்துப் பொருட்டொடர்நிலைச் செய்யுட்கள் ஆசிரியமும் வெண்பாவும் உடையன. விருத்த யாப்பிலே காப்பியம் இயற்றத்தொடங்கினர் திருத்தக்கதேவர். அவருடைய காப்பியம் மிகச் சிறந்ததாயினும் சமயக் கருத்துக்களைப் புகுத்துவதனால் முத்தியிலம்பகம் யாவருக்கும் சுவை பயப்பதாகாது. இலக்கியச் சுவையைத் தனித்து அனுபவித்து வருகையில் சமயநூற் கருத்துக்களை இடையிட்டு விளக்குதல் 'கடித்தமைந்த பாக்கினுட் கற்படுதலைப்' போன்றது. அவ்வச் சமயத்தினர்களுக்கு அவை இன்பம் பயப்பனவாயினும் காப்பியமென்னும் பொதுப் பூங்காவனத்தில் உள்ள பொருள் யாவும் யாவராலும் விரும்பத்தக்கனவாதல் வேண்டும். பெருங்கதையாசிரியரும் சிலப்பதிகார ஆசிரியரும் இங்ஙனம் சமய பக்ஷபாதத்தால் ஒரு பகுதியைச் சிறைப்படுத்தாமல் தம் நூல்களை மிக அழகாக அமைத்திருக்கின்றனர். மணிமேகலையோ அத்தகையதன்று.

சீவகசிந்தாமணியின் யாப்பு ஆற்றொழுக்கைப்போல அமையவில்லை. விருத்த யாப்பில் முதன்முதலில் காப்பியம் செய்யப் புகுந்தவராதலின் அவருடைய முயற்சி ஒரு வழிகாட்டியாக நிற்கின்றது. எனவே சிந்தாமணியின் செய்யுள் அமைப்பை வண்ணம் தீற்றாத சித்திரமாகச் சொல்லலாம். அதன்பின் எழுந்த சூளாமணியோ இனிய செய்யுணடையையுடையது. அதன் நடை வண்ணந் தீற்றிய சித்திரமாகத் திகழ்கின்றது. பொருட்சிறப்பும் சிறந்ததே. சீவகசிந்தாமணியைப்போலவே சூளாமணியிலும் இறுதிப் பகுதியில் ஜைனமதக் கொள்கைகள் விளக்கப்படுகின்றன. ஆயினும் சிந்தாமணியைக் காட்டிலும் சிறிதளவு குறைவாகவே உள்ளது.

இத்தகைய சிறு குறைகளையும் கடந்து முற்காலத்துப் புலவர் வளர்த்துவந்த பொருணெறியும் சொன்னெறியும் கலந்து சிறந்த செய்யுணெறியோடு பிற்காலத்தாருக்குப் பெரிய உரையாணியாகத் திகழ்வது கம்பராமாயணம். அந்நூல் தமிழுக்குத் தனிச்சிறப்பைத் தந்தது. அதன் காலத்தைக் குறித்து இரு வேறு கொள்கைகள் தமிழ் நாட்டில் நிலவுகின்றன. 9-ஆம் நூற்றாண்டென்று ஒரு சாராரும், 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டென்று ஒருசாராரும் கூறுவர்.

கம்பராமாயணத்துக்குப் பின்னர் எழுந்த காப்பியங்களில் அதனோடு ஒப்பவைத்து எண்ணுவதற்குரியது வேறொன்றுமில்லை. இராமாயண வெண்பா என்றதொரு பழைய நூல் ஏட்டுச் சுவடியில் உள்ளது.

சமீபகாலத்தில் சிலர் சில இராமாயணங்களை இயற்றியிருக்கின்றனர்.

## புராணங்கள்

புராணங்களுள் பாகவதம் இருவரால் தமிழில் இயற்றப்பட்டது. இருவரும் வேறு வேறு காலத்தவர். ஒன்றை இயற்றியவர் வேம்பத்தூர்ப் புலவராகிய செவ்வைச் சூடுவாரென்பவர். மற்றொன்று வரதராஜ ஐயங்காரென்பவரால் இயற்றப்பெற்றது. கூர்மபுராணம், மச்சபுராணம், விஷ்ணுபுராணம், கந்தபுராணம், விநாயகபுராணம், பிரமோத்தரகாண்டம், உபதேசகாண்டம், சிவதருமோத்தரம், சிவரஹசியம் என்பன புராணவகைகளிற் சேர்ந்தனவே யாகும்.

12-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற பெரியபுராணம் தமிழில் புதிதாக உண்டான காப்பியமாகும். அதனைப் பெருங்காப்பியமென்று கூறுவது பொருத்தமன்று. அதிலுள்ள வரலாறுகள் பலவாதலின் ஒரு தனித் தலைவனுடைய வரலாற்றை அமைத்துப் பாடும் காப்பியத்தைப் போன்ற விரிவு அதற்கு இல்லை. திருத்தொண்டர்களுடைய வரலாறுகளை விரித்துச் சொல்லும் அது பெரும்பாலும் இறைவன்பாலுள்ள அன்பின் வகைகளையே புலப்படுத்துகின்றது. அதனை அறமென்றேனும் வீட்டுக்கு நெறி என்றேனும் கொள்ளலாம். பின்னதே சிறப்புடையது. பொருளும் இன்பமும் அந்நூல் உணர்த்தவில்லை. சில சில இடங்களில் இன்பத்துக்குரிய நிகழ்ச்சிகளும் வருகின்றனவெனினும் அவை கவியினுடைய பாவிகமல்ல. இடைப்பிறவரலாக வந்தனவே யன்றி நூலின் திரண்ட பொருளுக்கு உதவுவன அல்ல.

பெரியபுராணம் சைவத் திருமுறைகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதன் செய்யுள்நடை ஒரு தனிச் சிறப்புடையது.

வீரசைவர்களுக்குரிய பிரபுலிங்கலீலை, வீர சிங்காதனபுராணம் என்பன தொடர்நிலைச் செய்யுட்களேயாயினும் பெருங்காப்பியங்களாகா.

இதிஹாச புராணங்களிலுள்ள கிளைக்கதைகள் சில தமிழில் காப்பியங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நளவெண்பா, நைடதம், அரிச்சந்திரபுராணம், குசேலோபாக்கியானம் முதலிய நூல்கள் இவ்வகையைச் சார்ந்தவையே. நளவெண்பாவின் பின் இரண்டடிகள் பலவிடங்களில் நின்று பயனின்மைக் குற்றத்துக்குரியனவாகும். நைடதம் சிறந்த காப்பியம்.

அதன் நடை மிக அழகியது. சீவகசிந்தாமணி முதலிய பழங்காப்பியங்களிற் கண்ட மரபை அந்நூலாசிரியர் நன்கு எடுத்தாண்டிருக்கிறார்.

## தல புராணங்கள்

இப்பொழுது தமிழில் உள்ள தொடர்நிலைச் செய்யுட்களிற் பெரும்பகுதி தலபுராணங்களாகவே இருக்கும். நாட்டில் சமய உணர்ச்சி அதிகப்படப்படத் தலவழிபாடும் அதிகமாயிற்று. தலச்சிறப்பைப் பலவழியினாலும் வெளிப்படுத்த எண்ணிய புலவர்கள் புராணங்களில் அமைத்து அழகுபடுத்தினர். ஆயினும் அப்புராணங்களைப் பெருங்காப்பியங்களென்று சொல்வது ஏற்புடைத்தன்று.

தலபுராணக் காதல் தமிழருக்கு மிக அதிகமாக இருந்தது. அதனால் ஒரு தலத்திற்கே பல புராணங்கள் உண்டாயின. சிதம்பரத் தல விஷயமாக மூன்றுக்கு மேற்பட்ட புராணங்கள் இருக்கின்றன. இங்ஙனம் அமைந்த புராணங்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன.

புராணக் காப்பியங்கள் பலவாயினும் அவற்றைப் பாடிய ஆசிரியர்களுடைய கவித்துவ சக்திக்கு ஏற்ப அவை சிறப்படைகின்றன. பரஞ்சோதி முனிவருடைய திருவிளையாடற் புராணமும், கருணைப்பிரகாசர் முதலிய மூவர் பாடிய சீகாளத்திப் புராணமும் இவற்றைப் போன்ற வேறு சில புராணங்களும் தமிழ் நயம் அறிவோர்களால் விரும்பிப் படிக்கப் படுகின்றன. திரிகூட ராசப்பக் கவிராயர், கவிவீர ராகவ முதலியார், எல்லப்ப நாவலர், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர், ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்னும் புலவர் பெருமக்கள் இயற்றிய புராண நூல்கள் உயர்தரமானவை.

## சரித்திரக் காப்பியங்கள்

அரசர் அன்பர் முதலியோர்களுடைய சரித்திரங்களை உரைக்கும் தொடர்நிலைச் செய்யுட்கள் சில தமிழிலே உண்டு. அவற்றிற் புனைந்துரையும் கற்பனையுமே அதிகமாக இருக்குமாதலின் முழுப் பகுதியும் சரித்திரத்தை அறிவதற்கு உதவும் என்று கொள்ளுவதற்கு இல்லை. பெரியபுராணம் பல அன்பர்களுடைய சரித்திரத்தைத் தொகுத்துக் கூறும் காப்பியமேயாகும். ஸ்ரீ ராஜ ராஜ விஜயம், வீரணுக்க விஜயம், குலோத்துங்க சோழ சரிதை, சீவல மாறன் சரிதை என்பன இத்தகையனவே. வைணவ ஆழ்வார்களது சரிதையைக் கூறும் குரு பரம்பரையையும் அரபத்த நாவலர் சரிதையையும் இவ்வகையிலே சேர்க்கலாகும்.

## மொழி பெயர்ப்புக்கள்

வடமொழியிலும் பிற மொழிகளிலும் உள்ள காப்பியங்களை மொழிபெயர்த்து அமைத்த நூல்கள் சில தமிழில் இருக்கின்றன. மனு சரிதை, வசு சரிதை யென்பன தெலுங்கிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டவை. இவை இன்னும் புத்தக உருவத்தில் வெளிவரவில்லை. பிரபு லிங்க லீலை கன்னடத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது வடமொழிக் காதம்பரியை மொழிபெயர்த்து ஒரு புலவர் தமிழ்ச் செய்யுட்களாக்கியிருக் கின்றார். யாழ்ப்பாணத்து அரசகேசரி யென்பவர் இரகுவமிசத்தைத் தமிழ்ப்படுத்தினர்.

## புதுக் காப்பியங்கள்

இக்காலத்தில் பலர் தொடர்நிலைச் செய்யுட்களை இயற்றிவருகின் றனர். தலபுராணங்களையும் பிரபுக்கள் சரிதைகளையும் சிலர் இயற்றியிருக் கின்றனர். ஆங்கிலத்திலுள்ள மில்டனது 'பாரடைஸ் லாஸ்ட்' (Paradise Lost) என்பதைச் சுவர்க்க நீக்க மென்னும் பெயரால் ஸ்ரீமான் வெள்ளக் கால் சுப்பிரமணிய முதலியாரவர்கள் மொழிபெயர்த்திருக்கின்றனர். அவர் அகலிகையின் வரலாற்றை அகலிகை வெண்பாவென்னும் தொடர்நிலைச் செய்யுளாக அமைத்துள்ளனர்.

காலஞ்சென்ற புரொபஸர் சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய மனோன்மணீயம் நாடகக் காப்பியமாகும். அஃது ஆங்கில முறையைப் பின்பற்றி எழுதப்பெற்றது.

இராமநாதபுரம் மகா வித்துவான் பாஷா கவிசேகரர் ஸ்ரீ ரா. ராகவையங்கா ரவர்கள் வடமொழிச் சாகுந்தலத்தை மொழிபெயர்த்திருக் கின்றனர். பாரியின் வரலாற்றைப் பாரிகாதை யென்னும் தொடர்நிலைச் செய்யுளாக்கி யிருக்கின்றனர்.

இவற்றில் பழையகாலத்து மரபும் நடையும் விரவியிருக்கின்றன.

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாஞ்சாலி சபதம் இசைப்பாட்டுக் கலந்த தொடர்நிலைச் செய்யுள். அவர் தமக்கென வாய்த்த இணையற்ற கவித்துவத்தினால் புதிய புதிய கவியழகுகளையும் கருத்துக்களையும் அதிற் காட்டியிருக்கின்றார்.

தமிழில் முற்காலத்திலும் பிற்காலத்திலும் உண்டான தொடர் நிலைச் செய்யுட்களை எடுத்துக் கூறப்புகுந்தால் அவை கணக்கின்றி விரியும். அவற்றுட் பெருங்காப்பியங்களாகக் கொள்ளக்கூடியவை மிகச் சிலவே யாகும்.

# VII

# பழமையும் புதுமையும்

## பண்டைக்காலக் காப்பியங்களின் வளர்ச்சி முறை

இதுகாறும் ஆராய்ந்த செய்திகளால் தமிழில் தொன்று தொட்டே பொருட்டொடர் நிலைச் செய்யுட்களும் அவை சம்பந்தமான இலக்கண நூல்களும் விரிந்திருந்தன வென்பது வெளியாகும். இன்சுவையும் நன்னடையும் வாய்ந்த செய்யுட்களையுடைய பழங்காப்பியங்கள் பல வழக்கொழிந்தன. தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்த தொடர்நிலைச் செய்யுட்களின் பெயர்கூட நம்மால் அறியப்படவில்லை. ஆயினும் அப் பழம் பேரிலக்கண நூலில் அமைந்த விதிகளின் வாயிலாக அவ் விதிகள் அமைந்திருந்த இலக்கியங்கள் அந் நூலுக்கு முற்பட்டே வழங்கின வென்பதும் அவை பல்வேறு வகைப்பட்டுப் பல்கினவென்பதும் கொள்ளக் கிடக்கின்றன.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோற்றியவற்றுள்ளும் பல இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தில. இப்பொழுது பெயரளவில் உணரப்படும் பழங் காப்பியங்களில் முன் வரிசையைச் சேர்ந்தனவாக இராமாயணம், பாரதம், தகடூர் யாத்திரை யென்பவற்றைக் கூறலாம். அவற்றிற் சில சில செய்யுட்களை யன்றி நூல்கள் முற்றும் கிடைத்தில. அவற்றின் பின் எழுந்த காப்பியங்களுள் முற்றும் கிடைத்தவை சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாகும். படித்து அனுபவிப்பதற்கு உரியனவும் நமக்குக் கிடைப்பனவுமாகிய காப்பியங்களுள் இவையே முந்தியவை. எனவே, இப்பொழுது வழங்கும் காப்பியங்களின் வளர்ச்சி முறையை வகுப்பதற்கு முதலில் உதவுவன இவ்விரண்டுமே யாகும். இவையிரண்டும் கடைச்சங்ககாலத்தை அடுத்தே தோன்றினமையின் இவற்றின் சொற்பொரு ளமைப்பினால் அக்கால இலக்கியங்களின் சொற்பொரு ளமைப்பின் போக்கை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம்.

இவ்விரண்டன் பின்னர் வருவன ஜைனசமயக் காப்பியங்களாகிய பெருங்கதை, சிந்தாமணி, சூளாமணி என்பன. அவற்றின் பின்னர் வருவன பாரத வெண்பா, கம்பராமாயணம், பாகவதம், பெரிய புராணம் என்பன. அவற்றின் பின் வந்தவை புராணவகைகளும் பிற காப்பியங்களும் ஆகும். தமிழ்க்காப்பிய நடையைப் பின்பற்றி இந்நாட்டிற்கு வந்த பிற

மதத்தினரும் அவர்களைச் சார்ந்தோரும் தங்கள் தங்கள் சமய சம்பந்தமான வரலாறுகளை அமைத்து நூல்களை இயற்றியிருக்கின்றனர். உமறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணமும், வீரமாமுனிவரென்னும் பெஷிப் பாதிரியார் ஆக்கிய தேம்பாவணியும் கிருஷ்ணபிள்ளை பாடிய இரட்சணிய யாத்திரிகமும் இவ்வகையைச் சார்ந்தனவே.

## சிலப்பதிகாரக் காப்பியச் சிறப்பு

சிலப்பதிகாரத்தில் தமிழுக்கு உரிய சிறப்பியல்புகள் பல அமைந்துள்ளன. செவ்விய நடையும் பொருட்செறிவும் உயர்ந்த பாவிகமும் அந்நூலின் தனிச் சிறப்புக்கள். ஒரு சார்பாக விஷயங்களைத் திரித்துக் கூறும் இயல்பு இளங்கோவடிகள்பால் இல்லை. மூன்று நாட்டையும் மூன்று மன்னர்களையும் அவர் கோடுதல் இன்றி ஒப்பப் புகழ்கின்றார். மூன்று காண்டங்களாகத் தம் நூலை வகுத்து ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வொரு காண்டத்துள் வருணிக்கும் செவ்வியை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றார். மூன்று தமிழைப் பற்றியும் கூறும் தகுதி அவர்பால் இலங்குகின்றது.

இளங்கோவடிகள் ஜைனசமயச் சார்புடையவரே யென்பதற்குரிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்தில் இலை மறை காய்போலக் காணப்படுகின்றன. ஆயினும் அவர் பிற சமயங்களில் விரோத உணர்ச்சி பூண்டவரல்லர். அவருடைய காப்பியக் கோயிலிலே நுதல் விழி நாட்டத்து இறையவன் எல்லாக் கடவுளினும் முன்னே நிற்கிறான். இந்திரவிகாரம் ஏழையும் கோவலன் வலம் செய்து செல்லுகிறான். ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்த திருமாலும் மாலிருஞ் சோலை மலைப்பெருமாளும் கோவலனுடைய மதுரைப் பிரயாணத்துக் கிடையே காட்சி தருகின்றனர். இந்திரனது பெருமையும் பிற தேவர்களுடைய பெருமையும் அங்கங்கே கூறப்படுகின்றன. காய்தல் உவத்தல் இன்றி நடுநிலை வழி நின்று காப்பியம் இயற்றப் புகுந்த இளங்கோவடிகளுடைய பெருமையை வேறு எப்புலவர் பெருமையோடும் ஒப்பிடுதல் ஏற்புடையதன்று. திருவள்ளுவரும், கம்பரும் நடுநிலை நின்று கவி பாடுபவர்களாதலின் அவர்களை இவ்வடிகளோடு ஒருங்கெண்ணலாம். புதுமைக் கவியாகிய சுப்பிரமணிய பாரதியார்,

> "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
> வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
> பூமிதனில் யாங்கணுமே கண்டதிலை
> உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை"

என்று பாடுகின்றார். இம் மூவரையும் ஒருசேர வைத்துப் பாராட்டுதற்குக் காரணம் இம் மூவரும் நடுநிலைவழி நின்று நூல் இயற்றிய பெருமையே போலும். பிற புலவர்களுடைய சமயத்தை வரையறுத்துக் கூறும் ஆராய்ச்சியாளர் இம் மூவர் சமயத்தையும் வரையறுக்க இயலாமல் தம் தம்

சமயத்தைச் சார்ந்தவரென்று இன்னும் வாதிட்டுக்கொண்டிருத்தலே இதற்கு ஓர் அடையாளமாகும்.

## மணிமேகலையின் அமைப்பு

இளங்கோவடிகளோடு நண்புடையோரும் நல்லிசைப் புலமை வாய்ந்தவருமாகிய சீத்தலைச் சாத்தனார் தம்முடைய மணிமேகலையிலே சமய உணர்ச்சியை மிகுதியாகக் காட்டியிருக்கின்றார். அந்நூலின் பின்காதைகள் முற்றும் புத்தசமயக் கொள்கைக்கு உயர்வு கற்பிக்கவே எழுந்தன. இளங்கோவடிகளும் கவுந்தியடிகள் கூற்றாக ஜைனசமயக் கொள்கைகளை வெளியிடினும் இத்துணை வன்மையும் பகையுணர்ச்சியும் அவற்றிற் காணப்படவில்லை.

கூலவாணிகன் சாத்தனார் தம் சாதியினராகிய வணிக மரபினர் யாவரையும் உயர்ந்த நிலையில் வைத்துக் கதை அமைக்கின்றார். அவர் காப்பியத்திலுள்ள வணிக மாதர் கற்புக்கரசியராகவும் சிறந்த குணமுடைய வராகவும் திகழ்கின்றனர். பிற சாதி மாதர்களிற் பலர் கற்புநெறி வழு வியவராகவும் கணவராற் கைவிடப்பட்டவராகவும் அமைகின்றனர்.

மணிமேகலையின் நடை சிலப்பதிகாரத்தினும் எளிமை வாய்ந்தது. சில பொழுது வருணனைகளும், கூற்றுவகைகளும் மனத்தைக் கவரும் முறையில் அமைந்துள்ளன. காரண காரியங்களுடன் ஒரு விஷயத்தைக் கதா பாத்திரத்தின் கூற்றாக அமைத்துக் காட்டுவதில் அவர் வல்லவர். சில பகுதிகள் இக்காலத்து மாணாக்கர்களுக்கும் விளங்கும் வண்ணம் அத்துணை எளிய நடையில் அமைந்துள்ளன.

எனினும் சில இடங்களில் சிலேடை, தொனி முதலியவை காணப் படும். இவை பிற்காலத்துக் காப்பியங்களில் அளவிறந்தனவாக உள்ளன. சமயக் கொள்கைகளை மணிமேகலை ஆசிரியர் விரித்துக் கூறினும் பிற்காலத்து நூல்களைப்போல ஒவ்வொரு காதையிலும் அவற்றைப் புகுத்திப் புகுத்திப் பொது நிலையில் இருந்து சுவை நுகர விரும்புவாருக்குத் தடை விளைவிக்க வில்லை. அதன் முற்பகுதிகள் காப்பியச் சுவையை அனுபவிப்பார்க்குப் பெரு விருந்தாக அமைந்தன. அந்நூலைப்போலவே சிந்தாமணியையும் சூளாமணியையும் கூறவேண்டும்.

## பெருங்கதைச் சோலை

பெருங்கதையோ விரிந்த கதையமைப்பை உடையதாதலின் பல வகையான செய்திகளையும் கூறுவதற்கு நிலனாக விளங்குகின்றது. அதன் நடை சிறிது கடினமாக இருப்பினும் அதன்கண் அமைந்த பல சிறந்த

செய்திகளையும் முறைகளையும் வேறு எந்த நூலிலும் காண்டல் அரிது: தமிழருடைய துரதிருஷ்டமே அந்நூலின் மூற்பகுதியையும் பிற்பகுதியையும் இழப்பதற்குக் காரணமென்று சொல்லவேண்டும்.

பெருங்கதையில் அமைந்த நடையைச் சிலமுறை படித்துப் பழகிவிட்டால், மிகவும் கம்பீரமாக விஷயங்களை விரித்துக்காட்டும் அதன் ஆசிரியரின் பேராற்றலை நாம் வியவாமல் இருக்கமுடியாது. மயிர் வினைஞன் மயிர் களைவதை விரித்துக் கூறுவதற்கு ஒரு காதையும், பந்தாடலுக்கு ஒரு காதையும் கூறும் அப்பெரும்புலவர் கைப்பட்ட சிறிய நிகழ்ச்சியும் அவருக்கென வாய்த்த கவிச் சுவையிலே ஊறி வெளிவருகின்றது. சில அரும்பதங்கள் அதன்கண் அமைந்திருப்பதனால் யாவரும் அதனை உணர்ந்து அனுபவிக்க இயலாவிடினும் தமிழ் நயம் அறியப்புகுவார் பெருங்கதைச் சோலையிலே புகுந்து அதன்கண் கமழும் மலர்களையும் கனியும் பழங்களையும் நுகர்தல் மிகவும் அவசியமாகும்.

ஜைனசமயக் காப்பியமேயாயினும் அதன்கண் ‘பிடிக்குப் பிடி நமச்சிவாயமா’கச் சமயக் கருத்துக்கள் குறுக்கிடுவதில்லை. உதயணன் அராந்தாணத்தை வலஞ்செய்வதாக உள்ள பகுதியில் அருகன் கோயில் வருணிக்கப்படுகின்றது. அப்பிரிவிற்கூடக் கொங்குவேளிர் ஒரு பழங் கோயிலை நம் கண்முன் நிறுத்துகின்றார். அந்தக் கோயில் வருணனையை யாவரும் அறிந்து மகிழ்வதில் என்ன தடையிருக்கிறது?

## சிந்தாமணியில் தொடங்கிய விருத்த யாப்பு

சிந்தாமணிக்குப் பின் தமிழ்க் காப்பிய உலகில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. சங்ககாலத்திலும் அதனைச் சார்ந்து சில காலத்திலும் புலவர்களால் எடுத்தாளப்பெற்ற ஆசிரியப்பாவைக் கவிஞர் கைவிட்டனர். ஓசை நயத்திலும் சந்தத்திலும் மனம் புகுந்தது. வடமொழி நூல்களில் பல வேறு வகையாக வழங்கும் யாப்புக்களைப் போலத் தமிழிலும் பலவகையான விருத்தங்களிலே நூலமைக்கும் வழக்கம் ஆரம்பமாயிற்று. ஓரேமாதிரி அகவற் பாக்களிலே கதையைச் சொல்வதைப் புலவர்கள் விரும்பவில்லை.

சிந்தாமணி விருத்தக் கவித்திறத்தைக் காட்டாவிடினும் விருத்த யாப்பானது காப்பியவகையில் புகுந்ததற்கு உதாரணமாக விளங்குகின்றது. ஜைனசமயத் துறவியாகிய திருத்தக்கதேவர் பெருங் கதையிலிருந்து சொற் பொருள்களைப் பலவிடங்களில் எடுத்துப் பயன்படுத்துகின்றார். அவர் பழங்கதையாகிய சீவகன் வரலாற்றை விரித்துக் காப்பியமாக்கினார். சமயக் கருத்துக்களைச் சில இடங்களில் சிறிதளவு சொல்லிப் போதுகின்றார்.

## சமய உணர்ச்சியும் காப்பிய கதியும்

நீலகேசி முதலிய ஜைன காப்பியங்களைக் காப்பியங்களாகக் கருதுவதைக் காட்டிலும் சமய நூலாகக் கருதுவதே ஏற்புடையதாகும். அக்காலத்திலிருந்தே சமய உணர்ச்சி மிகுதியாகக் கவிஞர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதனால் கடவுள்வாழ்த்து முதல் இறுதி வாழ்த்துவரையில் இடம் வாய்த்தபோதெல்லாம் தத்தம் சமயக் கருத்துக்களைப் புகுத்தி அமைக்கத் தலைப்பட்டனர்.

வடமொழியிலுள்ள அலங்கார இலக்கணங்கள் தமிழில் வரவே சிலேடை முதலிய சொல்லணிகளும் பல்கின. கடினமான நடையும் திரிபு யமக விசேடங்களும் மடக்கு முதலிய சொல்லலங்காரங்களும் சந்தங்களும் காப்பியத்தைத் தம்முடைய போக்கிலே இழுத்துச் சென்றன. அதனால் கவிஞனுடைய பாவிகம் வரவர இழுக்குற்றது. சிறந்த கருத்துக்களைப் பொது நிலையிலிருந்து சொல்லவேண்டிய கவிஞன் ஒருபாற் கோடுவானாகிச் சமயப் பிணக்கின் வழியே சென்று பிற மதங்களைக் கண்டிக்கவும் தலைப்பட்டான்.

பிற்காலத்தில் எழுந்த புராணங்களுள் அவ்வச் சமயத்தின் சிறப்பைக் கூறுவதோடு அமையாமல் பிற சமயங்களை வைது இன்புறும் அமைப்பும் காணப்படுகின்றது.

பொருட்சுவை வரவரக் கலங்கியது. அவசியமற்ற இடங்களிலும் சிருங்கார ரஸத்தை மிதமிஞ்சிக் காப்பியத்திலே இயைத்தனர் சிலர். அடி முதல் நுனி வரையில் பக்திரஸத்தையே பெரிதாக்கிக் காப்பியங்களை நிரப்பி வந்தனர் சிலர். ஒழுக்கமுறைகளை அறிவுறுத்த வந்த காப்பியங்கள் வெறும் சிருங்கார வருணனைகளும் சொல்லடுக்குக்களும் மலிந்தனவாயின.

கம்பராமாயணம் இந்தக் கூட்டத்தினிடையே சேராமல் தனிச் சிறப்போடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. அதிலும் யமகத்திரிபுகளும் அவசியமற்ற சிருங்காரமும் சில இடங்களில் அமைந்தனவாயினும் சுவைப் பெருங்கடலில் அவை இருக்கும் இடமே தெரியாமல் பதுங்கிக் கிடக்கின்றன.

## வருங்காலக் காப்பியம்

எளிய நடை, இனிய கதை; ஆழ்ந்த பாவங்கள், மகா கவியின் மனோபாவத்திலன்றிப் பிறரால் எட்டிப் பிடிக்க முடியாத கற்பனைகள் ஆகிய இவை அமையும் காப்பியம் ஒன்று இருந்தால் அதுவே இக்காலத்திற்கு மிகவும் பொருந்துவதாகும். மேல் நாட்டாருடைய கூட்டுறவினால் கவித்துவத்

தைப்பற்றிப் புதிய புதிய கருத்துக்களை நாம் அறிகிறோம். மனிதனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நாடகங்களை ஆங்கில மொழியிற் காண்கின்றோம். சொல்லைக் காட்டிலும் பொருள், யாப்பைக் காட்டிலும் கருத்து, கதையைக் காட்டிலும் கதையின் லக்ஷியம் சிறந்திருக்கவேண்டும்.

இனிமேல் காப்பியம் செய்யப்புகுவார் பழமையிலுள்ள சில முறைகளை மாத்திரம் கைக்கொள்ளலாம். உயர்தர இலக்கியங்களோடு சேர்க்கப்பெற்று வழங்கும் மேனாட்டு நாவலைப்போன்ற கதையமைப்பை யுடைய காப்பியங்களை இயற்றலாம். புதுப் புது யாப்பைக் கைக்கொள்ள லாம். சிருங்காரம், பக்தி என்பவற்றையன்றி வேறுள்ள ரஸங்கள் தெளி வாகப் புலப்படும்படி காப்பியங்கள் இயற்றலாம். மனோதத்துவ ஆராய்ச்சி மலிந்துவரும் இந்நாளில் மக்களின் மனோபாவத்தை அறிந்து அமைக்கும் எவ்வகை இலக்கியமும் சிறப்படைகின்றது. சிறு கதை, நாவல், நாடகம் முதலியவைகளில் 'மனோபாவத்தையும் அதன் பல வேறு மாறுபாட்டு விசித்திரங்களையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து விரித்துச் செல்லும் அமைப் பையே அறிஞர்கள் விரும்புகின்றனர். காப்பியத்திலும் மனோபாவத்தைச் சித்திரித்துக் காட்டும் பகுதிகள் தலைமை பெற்றிருக்கவேண்டும்.

பழைய கதைகளையும் பழைய உவமைகளையும் பழைய அணிகளையும் விட்டுவிடுவதனால் குறையொன்றும் இல்லை. அந்தப் பழமையின் விளைவாக உண்டான நூல்கள் அளவிறந்தன தமிழில் இருக்கின்றன. நூற்றுக் கணக் கான புராணங்கள் செவ்விய நடையும் அணியமைதியும் பொருந்தித் தேடுவாரற்று மூலையிலே கிடக்கின்றன. அங்ஙனம் அவை இருத்தற்குக் காரணம் அவ்வத் தலத்தைக் கைலாயத்தோடும் வைகுந்தத்தோடும் ஒரு நிகர்த்ததாகத் தூக்கி வைத்துப் பேசிக் கட்டுக்கதைகளைக் கோத்து அமைத்த அவற்றின் பொருளமைதியைத் தமிழர் விரும்பாமையே ஆகும். ஊர் அபிமானமும், சமய அபிமானமும் கவிஞர்களுடைய பரந்த நோக்கத்தைச் சிறைப்படுத்தி விட்டமையால் அவர்கள் வாக்கிலே அமைந்த நயங்களும் பிறர் கண்ணிற் படாமற் போயின.

புதுக் காப்பியங்கள் இயற்றுவார் புராணங்கள் வழக்கொழிந்த மையையும் வழக்கொழிந்து வருவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இப் பொழுது வழங்கிவரும் சில காப்பியங்களும், புராணங்களும் இன்னும் சில காலத்தில் மற்றவற்றைப்போலவே வழக்கொழிந்துவிடும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆதலின் காலம் பழமையடைந்தாலும் நூல் புதுமையழகோடு விளங்கும்படிக் காப்பியம் அமையவேண்டும். சிலப்பதிகாரமும் கம்பராமா யணமும் கால வெள்ளத்திலே அமிழா. எப்பொழுதும் அவை மேலே மிதந்துகொண்டே இருக்கும்.

நாகரிக விரிவினால் மனிதனுடைய கருத்துக்களும், சுவையுணர்ச்சி யும், கற்பனா சக்தியும் விரிந்திருக்கின்றன. ஆதலின் புதுக் கவிதை இயற்று

வாருக்குப் பொருட் பஞ்சம் இல்லை.

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
கூறுவதில் மாண்பொன் றில்லை"

என்று முரசறையும் புதுமைக் கவியின் உபதேசத்தை நாம் உணர்ந்து புதுக்காப்பியங்களை அமைக்கவேண்டும். பழமை மரபும் ஏற்றவிடங்களில் தழுவவேண்டும்.

இங்ஙனம் பழமையும் புதுமையும் கலந்து மிளிரும் காப்பியங்களே இனி வருங்கால இலக்கியங்களாக இலங்கும் தகுதி வாய்ந்தவை யாகும்.

# இப்புத்தகம் எழுதத் துணையாக இருந்த நூல்கள்

## தமிழ்

1. அகலிகை வெண்பா
2. அணியிலக்கண விஞவிடை—*விசாகப்பெருமாளையர்*
3. அரிச்சந்திர புராணம்
4. ஆதிபருவத்து ஆதிபருவம் (*கையெழுத்துப்பிரதி*)
5. இலக்கண விளக்கம்
6. இறையனாரகப் பொருள்—உரை
7. உதயணகுமாரகாவியம்
8. உபதேச காண்டம்
9. ஐங்குறுநூறு
10. கணக்கதிகாரம் (*கையெழுத்துப்பிரதி*)
11. கந்தபுராணம்
12. கந்தரலங்காரம்
13. கம்பரந்தாதி
14. கம்பராமாயணம்
15. களவியற் காரிகை
16. காதம்பரி
17. கார்நாற்பது
18. காரேட்டு
19. குசேலோபாக்கியானம்
20. குருபரம்பரை
21. குவலயானந்தம்
22. குறுந்தொகை
23. கூர்மபுராணம்
24. கோவிலன் கதை
25. சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்—*டாக்டர் உ. வே. சாமிநாதையர்*
26. சங்கரவிலாசம்
27. சந்திராலோகம்
28. சாஸனத் தமிழ்க்கவி சரிதம்—*ராவ் ஸாஹேப் மு. இராகவையங்கார்*
29. சிதம்பரப் பாட்டியல்
30. சிலப்பதிகாரம்
31. சிலப்பதிகாரம்—அடியார்க்கு நல்லார் உரை

32. சிலப்பதிகாரம்—அரும்பதவுரை
33. சிவதருமோத்திரம்
34. சிவரகசியம்
35. சீவகசிந்தாமணி—உரை
36. சீவலமாறன் கதை (கையெழுத்துப்பிரதி)
37. சுவர்க்க நீக்கம்
38. சூளாமணி
39. செந்தமிழ்
40. செவ்வைச் சூடுவார் பாரதம்
41. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
42. சேக்கிழார் புராணம்
43. சொக்கநாதருலா
44. தக்கயாகப்பரணி—உரை
45. தண்டியலங்காரம்
46. தண்டியலங்காரம்—பழைய உரை
47. தண்டியலங்கார ஸாரம்—*தி. ஈ. ஸ்ரீனிவாஸ ராகவாசாரியார்*
48. தமிழ்நெறிவிளக்கம்
49. தமிழ்மொழியின் வரலாறு—*வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி*
50. தமிழ்விடுதூது
51. தனிப்பாடற்றிரட்டு
52. தனியூர்ப் புராணம்
53. தாயுமானவர் பாடல்
54. திருக்குறள்—உரை
55. திருத்தணிகையுலா
56. திருமுருகாற்றுப்படை
57. திருவாரூர்க் கோவை
58. திருவிளையாடற்புராணம்
59. திவ்யப்பிரபந்தம்
60. தேவாரம்
61. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி—*ராவ் ஸாஹேப் மு. இராகவையங்கார்*
62. தொல்காப்பியம்—மூலம்
63. தொல்காப்பியம்—பொருள்—இளம்பூரணம்
64. ,, ,, நச்சினார்க்கினியர் உரை
65. ,, ,, பேராசிரியர் உரை
66. தொன்னூல்
67. நம்பி அகப்பொருள்
68. நல்லாப்பிள்ளை பாரதம்
69. நவநீதப் பாட்டியல்
70. நளவெண்பா
71. நன்னூல்—சங்கர நமச்சிவாயர் உரை
72. நன்னூல்—மயிலைநாதர் உரை
73. நன்னூல்—மூலம்
74. நாககுமார காவியம் (கையெழுத்துப்பிரதி)
75. நாலடியார்

76. நீலகேசி
77. நீலகேசி—உரை
78. நெடுநல்வாடை
79. நேமிநாதம்—உரை
80. நைடதம்
81. பதினோராந் திருமுறை
82. பரணர்—வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
83. பரிபாடல்
84. பழைய காஞ்சிப் புராணம் (கையெழுத்துப்பிரதி)
85. பன்னிருபாட்டியல்
86. பாகவதம்
87. பாஞ்சாலிசபதம்
88. பாண்டிமண்டலசதகம்
89. பாரதவெண்பா
90. பாரிகாதை
91. பிரபந்தத்திரட்டு (கையெழுத்துப்பிரதி)
92. பிரபந்த தீபம் ( ஷை )
93. பிரபுலிங்கலீலை
94. பிரமோத்தரகாண்டம்
95. பிரயோகவிவேகம்
96. புறத்திரட்டு
97. புறநானூறு
98. புறப்பொருள் வெண்பாமாலை
99. பெரியபுராணம்
100. பெருங்கதை
101. பொருட்டொகை நிகண்டு
102. மச்சபுராணம்
103. மணிமேகலை
104. மலைபடுகடாம்
105. மனோன்மணீயம்
106. மாவிந்தம் (கையெழுத்துப்பிரதி)
107. மாறனலங்காரம்—உரை
108. முத்துவீரியம்
109. மேருமந்தரபுராணம்
110. யசோதரகாவியம்
111. யாப்பருங்கலக்காரிகை
112. யாப்பருங்கலவிருத்தி
113. வச்சணந்திமாலை
114. வசுசரிதை (கையெழுத்துப்பிரதி)
115. வரதராசையங்கார் பாகவதம்
116. விநாயகபுராணம்
117. வில்லிபுத்தூரார் பாரதம்
118. விஷ்ணுபுராணம்
119. வீரசிங்காதனபுராணம்
120. வீரசோழியம்—உரை

## வடமொழி நூல்கள்

1. அக்கினிபுராணம்
2. ஏகாவளி
3. காவ்யப்பிரகாசிகை
4. காவ்யமீமாம்ஸை
5. காவ்யாதர்ஸம்
6. காவ்யாலங்காரம்—பாமஹர்
7. ஷை —வாமனர்
8. சிருங்காரதிலகம்
9. நாட்டியசாஸ்திரம்—பரதர்
10. ஸரஸ்வதீகண்டாபரணம்

—oo—

## ENGLISH

1. Aristotle on the Art of Poetry
2. Essay on Gunadya and Brhat Katha by Lacote
3. History of Alankara Literature by P. V. Kane
4. A History of Indian Literature by Herbert H. Gowen D. D.
5. History of Sanskrit Poetics by S. K. De vol. I & II
6. Introduction to Dasakumara Charitam by Mr. Kale
7. Introduction to Kavyadarsa - Edited by V. Narayana Iyer
8. Introduction to Kavyalankara of Bhamaha by B. N. Sarma and Baldev Upadyaya
9. Introduction to the Edition of Kavyaprakasa of Mammata Bhatta with the Sanketa Commentary of Manikyachandrasuri
10. Introduction to the Edition of Rudrata's Srngara Tilaka and Ruyyaka's Sahrudayalila by Dr. R. Pischel
11. Journal of Oriental Research, Madras
12. Manimekhalai in its Historical Setting by S. K. Aiyengar
13. The Commentary of Dhammapada (Pali)
14. The Foundation of Indian Poetry and their Historicel Development by J. Nobel Ph. D.
15. Some aspects of Literary Criticism in Sanskrit by Dr. A. Sankaran, M. A., Ph. D.
16. Some Problems of Indian Literafure by M. Winternitz, M. A., Ph. D.
17. Sanskrit Drama by A. B. Keith

—oo—

# சிறப்புப் பெயர் அகராதி

[ஆசிரியர், நூலாகியவற்றின் பெயர்கள்மாத்திரம் இதிற் காணப்படும்]


அக்காரக்கனி நச்சுமனார், 101
அக்கினி புராணம், 15, 66, 99
அகத்தியம், 8, 10, 11, 14, 16, 68
அகத்தியர், 8, 10, 14, 33, 34, 36
அகத்தியர் பாட்டியல், 34
அகநானூறு, 80
அகலிகை வெண்பா, 137
அகஸ்தியபட்டர், 133
அஞ்சனகேசி, 123, 131
அடியார்க்கு நல்லார், 11, 12, 24, 38, 44, 63, 65, 70, 72, 76, 79, 81, 86, 92, 107, 111, 115, 120, 121, 127
அணியதிகாரம், 30, 31
அணியியல், 24-6, 73, 87, 104
அணியிலக்கண வினாவிடை, 32
அதிகமான், 120
அப்பாசாமி சாஸ்திரியார், 117
அப்பைய தீக்ஷிதர், 32, 55
அம்பிகாபதி, 28
அமிதசாகரர், 18, 22
அமிர்தபதி, 131
அரங்கநாதக் கவிராயர், 133
அரசகேசரி, 137
அரபத்த நாவலர் சரிதை, 136
அரிச்சந்திரபுராணம், 135
அரிஸ்டோடல், 7, 46
அருணகிரிநாதர், 32, 133
அருணிலைவிசாகர் பாரதம், 132
அருங்கலான்வயம், 130
அரும்பதவுரை, 120
அரும்பதவுரை யாசிரியர், 12, 38
அவிநயம், 16, 21
அவிநயனார், 34, 52
அனபாயன், 29, 30
ஆதிபருவத்து ஆதிபருவம், 133
ஆதிவாயிலார், 12
இந்திரகாளியம், 34
இந்திரகாளியார், 34
இரகுவமிசம், 137
இரட்சணிய யாத்திரிகம், 138
இரத்தினேசுவரர், 100
இராகவையங்கார், மு ,14, 28, 137
இராகவையங்கார், ரா. 81
இராசபவித்திரப் பல்லவதரையர், 16
இராமசரிதம், 43
இராமாயணம், 43-5, 90, 92, 108, 113, 118-20, 128, 132, 133, 135, 138
இராமாயண வெண்பா, 135
இராமாவதாரம், 133
இராஜசிம்மன், 119
இராஜசேகர மகாகவி (ராஜசேகரன்), 4, 100
இலக்கணவிளக்கம், 22, 23, 31, 36
இளங்கோவடிகள், 38, 68, 115, 120, 139, 140
இளம்பூரணர், 12, 42, 46, 75, 79
இறையனார்களவியல் (இறையனாரகப் பொருள்), 23, 31, 111
உதயண குமாரகாவியம், 117, 126, 131
உதயணன் கதை, 48, 95, 112, 115, 116, 118, 123
உபதேசகாண்டம், 135
உமறுப்புலவர், 138
எல்லப்பநாவலர், 136
ஏகாவலி, 4
ஐங்குறுநூறு, 58, 80
ஒட்டக்கூத்தர், 30, 95, 99
கச்சியப்பசிவாசாரியார், 85
கச்சியப்பமுனிவர், 85, 86, 136
கடியநன்னியார், 20
கண்டனலங்காரம், 32
கணக்கதிகாரம், 31
கதாஸரித்ஸாகரம், 118
கந்தபுராணம், 81, 85, 90, 135
கந்தரலங்காரம், 32
கபிலர், 34
கம்பர், 37, 86, 89, 90, 92, 95, 97, 101, 128, 133, 139
கம்பரந்தாதி, 101
கம்பராமாயணம், 81, 87, 90, 92, 128, 133-5, 138, 142, 143
கயவாகு, 120
கருணைப்பிரகாசர், 136
கல்லாடனார், 34
கலித்தொகை, 80
கலியாணன்கதை, 48, 117, 118, 123
கவிமயக்கறை, 21
கவிராஜ மார்க்கம், 27
கவிவீரராகவ முதலியார், 136
களவியற்காரிகை, 32
காக்கைபாடினியம், 17-9
காக்கைபாடினியார், 17, 18
காதம்பரி, 137
கார்க்கிய சூத்திரம், 56

கார்நாற்பது, 87
காரிரத்ன கவிராயர், 31
காரெட்டு, 87
காரைக்காலம்மையார், 96
காலகேசி, 123, 131
காவ்யப்பிரகாசிகை, 65, 108
காவ்ய மீமாம்சை, 3, 4, 100
காவ்யாதர்சம், 22, 27, 29, 30, 50, 104
காளமேகம், 97
காளிதாஸர், 116
கிராதார்ஜுனீயம், 116
கிருஷ்ணபிள்ளை, 138
குசேலோபாக்கியானம், 81, 135
குண்டலகேசி, 95, 113-6, 122-5, 130, 131
குணநூல் 11, 12
குணவீரபண்டிதர், 35
குமாரசம்பவம், 116
குருபரம்பரை, 136
குலோத்துங்கசோழ சரிதை, 47, 136
குலோத்துங்கன் II, 30
குலோத்துங்கன் III, 35
குவலயானந்தம், 32, 93, 105
குறுந்தொகை, 17, 80,
கூர்மபுராணம், 77, 135
கையனார், 19, 34, 52
கொங்குவேளிர், 141
கோவிலன்கதை, 121
கோவூர் கிழார், 34
சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும், 10, 11, 16, 35
சங்கயாப்பு, 20
சங்கரநமச்சிவாயர், 82, 127
சங்கரவிலாசம், 86
சந்திராலோகம், 32
சமயதிவாகர வாமனமுனிவர், 131
சயந்தம், 11, 12
சரஸ்வதிகண்டாபரணம், 93, 99
சாகுந்தலம், 137
சாந்திபுராணம், 126, 131
சாமிநாதையர், உ. வே. டாக்டர், 10, 36, 60, 75, 117, 122, 127, 128
சாணைத்தமிழ்க்கவி சரிதம், 28, 35, 47
சிசுபாலவதம், 116
சித்திர மீமாம்ஸை, 55
சிதம்பரப்பாட்டியல், 35, 77, 94
சிதம்பரபுராணம், 35
சிருங்கார திலகம், 66
சிருங்காரப் பிரகாசம், 66
சிலப்பதிகாரம், 11-3, 38, 43, 44, 63, 68-70, 74, 76, 81, 86, 87, 92, 107, 112-5, 120-22, 126, 127, 134, 138-40, 143
சிவஞானமுனிவர் (சிவஞான சுவாமிகள்), 86, 101, 136
சிவதருமோத்தரம், 135
சிவரஹஸியம், 135
சிறுகாக்கைபாடினியம், 19
சிறுகுரீயுரை, 47
சின்னமனூர்ச்சாஸனம், 119
சீகாளத்திப்புராணம், 136
சீத்தலைச்சாத்தனார், 120, 122, 139, 140
சீத்தலையார், 34
சீவகசிந்தாமணி (சிந்தாமணி), 38, 41, 44, 46, 66, 81, 84, 87, 92, 112-6, 126-8, 130, 131, 134, 136, 138, 140, 141
சீவலமாறன் கதை, 47, 136
சீறாப்புராணம், 138
சுந்தரம்பிள்ளை, 137
சுந்தரமூர்த்திநாயனார், 84, 85
சுப்பிரமணிய தேசிகர், 29
சுப்பிரமணியபாரதியார், 137, 139, 143
சுப்பிரமணிய முதலியார், வெள்ளக்கால், 137
சுவர்க்கநீக்கம், 137
சூடாமணிப்புலவர், 114
சூரியநாராயண சாஸ்திரியார், வி. கோ. 55, 96
சூளாமணி, 81, 84, 92, 116, 117, 126, 130, 131, 134, 138, 140
செந்தமிழ், 60
செய்யுளியல், 20
செயிற்றியம், 11, 12
செயிற்றியனார், 12, 62
செவ்வைச்சூடுவார், 135
சேக்கிழார், 84
சேக்கிழார்பிள்ளைத்தமிழ், 54
சேந்தம்பூதனார், 34
சேரன் செங்குட்டுவன், 120
சொக்கநாதருலா, 35
த்வன்யாவலோகம், 60, 61
தக்கயாகப்பரணி, 30, 39, 95-7, 128
தக்காணியம், 21
தகடூர்யாத்திரை, 43, 44, 90, 112, 113, 119, 137
தசரூபகம், 65
தண்டியலங்காரம், 5, 22, 24, 26-32, 39, 43, 48, 49, 51-3, 55, 57, 65, 72, 73, 76, 80, 81, 84, 91, 94, 98, 101, 104-10
தண்டியலங்காரஸாரம், 6, 32, 63, 75, 78
தண்டியாசிரியர் (தண்டியலங்கார நூலாசிரியர்), 9, 22, 27, 30, 31, 39, 52, 53, 56, 65, 70. 71, 78, 93, 98, 100, 108
தத்தாத்திரேயப் பாட்டியல், 35
தந்திரவாக்கியம், 47
தம்மபதம், 125

தமிழ்நெறிவிளக்கம், 8, 23
தமிழ்மொழியின் வரலாறு, 58
தமிழ்விடுதூது, 37, 75, 83, 99, 101, 103, 109, 114
தாயுமானுர், 101
தாளவகையோத்து, 31
திரிகூடராசப்பக் கவிராயர், 136
திரிபுவனவீரன், 35
திருக்குருகைப்பெருமாள் கவிராயர், 31
திருக்குறள், 3, 67, 72, 103, 107
திருக்கோவையார், 74
திருத்தக்கதேவர், 37, 46, 84, 87, 89, 127, 134, 141
திருத்தணிகையுலா, 114
திருத்தொண்டத்தொகை, 84, 85
திருத்தொண்டர்புராணம், 85
திருநாராயணையங்கார், 60
திருப்பாவை, 60
திருமுருகாற்றுப்படை, 39
திருவள்ளுவமாலை, 34
திருவள்ளுவர், 3, 139
திருவாசகம், 76
திருவாய்மொழி, 60
திருவிருத்தம், 60
திருவிளையாடற்புராணம், 80, 136
திவாகரம், 104
துர்விநீதன், 127
தேம்பாவணி, 138
தேரிகாதை, 124, 125
தொல்காப்பியப்பொருளதிகார ஆராய்ச்சி, 14, 56, 57
தொல்காப்பியம், 6-8, 10, 12-7, 19-21, 26-8, 31, 33, 41, 42, 44-6, 49-61, 63-5, 67-70, 75, 79, 80, 82, 90, 103, 105, 111-3, 119, 120, 137
தொல்காப்பியனுர் (தொல்காப்பியர்), 6, 14, 16, 18, 19, 25, 43, 46-8, 50, 52-7, 59, 63-6, 82, 113, 137
தொன்னூல், 23
தோலாமொழித்தேவர், 130
நச்சினுர்க்கினியர், 18, 33, 38, 41, 43, 44, 46, 48, 87, 90, 112, 113, 127
நத்தத்தர், 19
நந்திவர்மன், 132
நம்பிகாளியார், 96
நம்மாழ்வார், 31
நல்லாப்பிள்ளை, 133
நல்லாறனுர், 20
நவநீதநடனுர், 35
நவநீதப்பாட்டியல், 35
நளவெண்பா, 135
நற்றிணை, 79
நன்னூல், 16, 37, 82, 113, 127
நாககுமார காவியம், 117, 126, 131
நாட்டிய சாஸ்திரம், 9, 11, 53, 65
நாரத சரிதை, 131
நாலடி நாற்பது, 16
நாற்கவிராசநம்பி, 87
நிகண்டு, 96
நிருத்தம், 54, 58
நீலகேசி, 40, 81, 84, 115, 117, 123-6, 131, 141
நெடுநல்வாடை, 87
நேமிநாதம், 24
நைடதம் (நைஷதம்), 116, 135
பத்துப்பாட்டு, 40, 113, 114
பதஞ்சலி, 54
பரஞ்சோதி, 35
பரஞ்சோதிமுனிவர், 136
பரணர், 34, 58, 64
பரதசேனுபதீயம், 11, 12
பரதம், 11
பரதமுனிவர் (பரதர்), 9-11, 53, 62, 65
பரிமாணனுர், 20
பரிமேலழகர், 66, 67, 103
பருப்பதம், 117-9
பல்காப்பியம், 16
பல்காப்பியனுர் 16, 34
பல்காயம், 17
பல்காயனுர், 17
பழையகாஞ்சிப்புராணம், 133
பன்னிருபடலம், 10, 21, 34, 82
பன்னிருபாட்டியல், 31, 33-5, 71, 72, 93
பனம்பாரனுர், 18, 20
பாகவதம், 81, 82, 135, 138
பாஞ்சாலி சபதம், 137
பாட்டியல்மரபு, 33
பாடலனுர், 20
பாண்டவசரிதம், 43
பாமஹர், 9, 46, 47
பாமஹாலங்காரம், 27
பாரதம், 42-5, 81, 82, 86, 90, 108, 112, 113, 118-20, 128, 132, 133, 138
பாரதம்பாடிய பெருந்தேவனுர், 119
பாரதவெண்பா, 44, 92, 132, 138
பாரவி, 116
பாரிகாதை, 81, 137
பிங்கலகேசி, 123, 131
பிரபந்தத்திரட்டு, 36
பிரபந்ததீபம், 36
பிரபுலிங்கலீலை, 81, 135, 117
பிரபோத சந்திரோதயம், 65
பிரமோத்தரகாண்டம், 135
பிரயோகவிவேகம், 29, 82
பிருகத்கதை, 45, 127
புத்தமித்திரர், 22
புராணசாகரம், 117, 118
புராணத்திருமலைநாதர், 35

புறத்திரட்டு, 120, 124, 128, 131
புறநானூறு, 59, 60, 80
புறப்பொருள் வெண்பாமாலை, 14, 32, 82
பூதபுராணம், 15
பெரியபம்மம், 20
பெரியபுராணம், 40, 84, 135, 136, 138
பெரியமுப்பழம், 21
பெருங்கதை, 38, 48, 81, 86, 92, 111, 112, 116, 126, 127, 134, 138, 140, 141
பெருங்குன்றூர் கிழார், 34
பெருஞ்சேரல் இரும்பொறை, 120
பெருந்தேவனார், 22, 116, 119, 132
பெஷி, 138
பேராசிரியர், 4, 7, 11-6, 18, 19, 26, 33, 41-4, 46, 48, 49, 52-4, 57-9, 61, 62, 64-6, 74, 79, 103, 108, 112-4, 117, 119
பொருட்டொகைநிகண்டு, 114
பொருளதிகாரம், 31
போதியார், 122
போலி அகத்தியம், 112
போஜராஜன், 66, 93, 99, 100
மகாபாரதம், 119
மகாபாஷ்யம், 54
மச்சபுராணம், 135
மணிமேகலை, 5, 9, 38, 40, 48, 76, 81, 92, 112-6, 121, 122, 127, 134, 135, 138-40
மணிமேகலை துறவு, 121
மதிவாணர் நாடகத் தமிழ்நூல், 11, 12
மம்மடர், 65, 108
மயிலைநாதர், 16, 113
மயேச்சுரர், 20
மலைபடுகடாம், 39, 45
மனுசரிதை, 137
மனோன்மணீயம், 137
மாககவி, 116
மாணிக்கவாசகர், 32
மாதவி, 120
மாபுராணம், 15 16
மாபூதனார், 34
மார்க்கண்டேயனார் காஞ்சி, 45
மாவிந்தம், 133
மாறனலங்காரம், 31, 32, 39, 48, 50, 51, 53, 55, 57, 59, 65, 72, 75, 80, 81, 83, 90, 92, 94, 98-100, 103, 105-7, 109
மில்டன், 137
மீனாட்சிசுந்தரம்பிள்ளை, 86, 136
முத்துசாமி ஐயங்கார், 32
முத்துவீரியம், 23
முத்துவீருப்புலவர், 23
முறுவல், 11, 12
மேகசந்தேசம், 39, 76
மேருமந்தரபுராணம், 126, 131
யசோதரகாவியம், 117, 126, 131
யாப்பருங்கலக்காரிகை, 22, 36
யாப்பருங்கலம், 22, 103, 108
யாப்பருங்கல விருத்தி, 13-7, 19, 20, 24, 25, 42-7, 49-53, 73, 77, 81, 87, 92,
யாப்பியல், 20
யாஸ்கர், 54, 58
ரகுவம்சம், 116
ரஸகங்காதரம், 61
ரஸதரங்கிணி 61
ரஸமஞ்சரி, 61
ருத்திரடர், 47, 99, 100
ருத்திரபட்டர், 66
வச்சணந்தி, 35
வச்சணந்திமாலை, 34-6, 77, 94
வச்சத்தொள்ளாயிரம், 127
வசுசரிதை, 137
வரதராஜ ஐயங்கார், 135
வரந்தருவார், 86
வளையாபதி, 113-6, 128, 130
வாமனகாரிகை, 98
வாமனாசாரியார், 75, 98, 99, 131
வாய்ப்பியனார், 20
வாருணப்பாட்டியல், 35
விசாகப்பெருமாளையர், 32
வித்தியாநாதர், 100
விநாயகபுராணம், 58, 135
விம்பசாரகதை, 122, 123
வியாசபாரதம், 133
வில்லிபுத்தூரார், 86
வில்லிபுத்தூரார்பாரதம் (வில்லி பாரதம்), 87, 133
விளக்கத்தார்கூத்து, 49
விஷ்ணுபுராணம், 135
வீரசிங்காதனபுராணம், 145
வீரசோழன், 22
வீரசோழியம், 13, 15, 22, 25-8, 31, 39, 49, 50, 55, 56, 65, 66, 68, 70, 72, 74, 77, 82, 88, 92, 95, 98, 102-8, 115
வீரணுக்கவிஜயம், 47, 136
வீரமாமுனிவர், 23, 138
வெண்பாப்பாட்டியல், 35
வேங்கடராஜுலுரெட்டியார், 34, 58, 64
வைசியபுராணம், 114, 121, 125, 128, 130
வைத்தியநாததேசிகர், 22
வையாபுரிப்பிள்ளை, எஸ். 32
வொர்ட்ஸ் வொர்த், 1
ஸ்ரீநிவாஸராகவாசாரியார், தி. ஈ. 32
ஸ்ரீராஜராஜவிஜயம் .47, 136
ஸ்ரீஹர்ஷகவி, 116
ஷெல்லி, 1
ஹோமர், 45

Printed at the 'TAMIL KADAL' Press, G. T., Madras.

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI
6465a